# தமிழரசு

ஏப்ரல் 1-30, 2001 ரூ.10




ஆறு -
தரை நடையானால் உரைநடை
தாவிக் குதித்தால் அருவி

# பொருளடக்கம்

## கவிதைகள்


தவம் - கவிஞர் சிற்பி ........ 2

தாய்ப் பல்லாண்டு - கவிஞர் பொன்மணி வைரமுத்து ........ 17

சாமக் கோடாங்கி - கவிஞர் ஈரோடு தமிழன்பன் ........ 25

பாலூட்டும் தாலாட்டு - கவிஞர் காமகோடியன் ........ 33

என்னை முன்வைத்து எல்லோருக்கும் சொல்வது - கவிஞர் கோலாகல ஸ்ரீநிவாஸ் ........ 48

குருவி மனம் - கவிஞர் வசந்த் செந்தில் ........ 49

பயம்! - கவிஞர் புவியரசு ........ 55

கவிச்சொல் - கவிஞர் மு. மேத்தா ........ 64

நடுப்பகற் கனவுகள் - கவிஞர் இளந்தேவன் ........ 69


## கட்டுரைகள்


புதிரான புதுமை - இரா. கலைக்கோவன் ........ 3

உடம்பு எனும் மொழி - இந்திரன் ........ 18

இந்திய மொழிகளில் நாவல்கள் தோற்றம் - அசோகமித்திரன் ........ 22

கலை என்னும் ஊடகம் - தங்கர்பச்சான் ........ 53

கருத்து சுதந்திரம் - வெங்கட் சுவாமிநாதன் ........ 56

என்னைச் செதுக்கிய சிற்பிகள் - தி.க. சிவசங்கரன் ........ 76

புகழ் வேட்டை - அ.ச. ஞானசம்பந்தன் ........ 79


## சிறு கதைகள்


அகலிகைக் கல் - சு. சமுத்திரம் ........ 10

செண்பகயட்சி - ஜெயமோகன் ........ 26

ஓடாத பிள்ளையாரும், ஓடிய காவேரியும் - பிரபஞ்சன் ........ 35

புயலுள்ள நதி - பா. செயப்பிரகாசம் ........ 42

சிராப்பள்ளி - மா. அரங்கநாதன் ........ 50

விடுதலை(ளை) - இந்திரா பார்த்தசாரதி ........ 65

போணி - சிவசங்கரி ........ 71

குமாரவனம் - பாவண்ணன் ........ 84

நிறவேற்றுமை - சா. கந்தசாமி ........ 90



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
பங்குனி – சித்திரை
ஏப்ரல் 1–30, 2001
மலர் : 32 இதழ் : 19 & 20
விலை ரூ.10

# தவம்

தூக்கிப் போட்டு விடலாமா குப்பையில்
விரிசலும் கீறலுமான மனத்தை?

போடலாம் தான்
அதற்கு ஒரு மூலை உண்டு
- தனிமை

போதும் இந்த ஓலங்கள்
அடரும் ஓசைகள்
உடையும் கோஷங்கள்

ஓடு. ஓடு
ஓடிப் போய்த்
தொலைத்துக் கொள் உன்னை
மகரந்தம் மூச்சடைக்கும்
வனங்களின் இதயத்துக்குள்..

அரசமரமே கிடைக்காவிட்டாலும்
ஆலமரம் இல்லாவிட்டாலும்
ஒரு வேலமர முள் நிழலில்
ஒதுங்கி இரு

மௌனத்தின் கூர் முனையில்
பிரபஞ்சங்களை ஒடுக்கு

புத்தனாகா விட்டாலும்
சித்தனாகா விட்டாலும்
சுத்தனாகலாம்

இப்படிக் கற்பனையில்
நகர் நீங்கி, ஊர் நீங்கி
வனம் தேடி
மலையேறிப் போனேன்

பேரால நிழலில்
பெருகும் அமைதியில்
கண்மூடித் தவம் கொள்ள...

வயலின்களின் அழைப்பு,
தபேலாக்களின் ஓசை....
'எங்கெல்லாம் தேடுவ தோ?'
பாடல் கிழித்தது மௌனத்தை

உச்சி மலை மீதிருந்து
ஒரு மலைவாசி இறங்கிக் கொண்டிருந்தான்
அவன் தோளில் தொங்கிற்று
'டேப் ரிகார்டர்'.



● கவிஞர் சிற்பி

*ஓவியம்* : மருது

# புதிரான புதுமை



இரா. கலைக்கோவன்

தமிழ்நாட்டுக் கலை வரலாற்றில் தலைமையிடம் பெறத் தகுதியுடைய வேந்தர்களாய் நால்வரைக் குறிப்பிடலாம். அவர்களுள் இருவர் பல்லவர். இருவர் சோழர். ஏறத்தாழ கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சோழப் பெரு வேந்தர் கோச்செங்கணான் தமிழ்நாட்டுத் திருக்கோயில் வடிவமைப்பில் புதிய சிந்தனைகளை விதைத்த முதற் கலைஞர். நிலத்தளவில் அமைந்த கோயில்களை. வெற்றுத் தளத்தின் மீதேற்றி மாடக் கோயில்களாக்கி மகிழ்ந்த அம்மன்னரின் சாதனைக்குச் சான்றாய் இன்றும் அக்கட்டுமானத்தில் பல திருக்கோயில்கள் காணக் கிடைக்கின்றன.

தமிழ் மண்ணில் செங்கல் இல்லாமல். சுண்ணாம்பு இல்லாமல். மரம் இல்லாமல், உலோகம் இல்லாமல் கல்லிலே கோயிலெடுத்த முதற் பெருமையைப் பல்லவ அரசர் மகேந்திரவர்மர் பெறுகிறார். விசித்திர சித்தரென்றும். சித்திரகாரப் புலியென்றும் கல்வெட்டுகள் அழைத்து மகிழும் இப்பெருமகனின் கைவண்ணத்தில் எழுந்த குடைவரைகள் அவர் காலத்துக் கலைத்திறமும் வளர்நிலையும் காட்டுமாறு கண்சிமிட்டுகின்றன. பெருந்தூண்களும் தாமரைப் பதக்கங்களும். தோரண வடிப்புகளும் சுவரளாவிய சிற்பங்களும் என அவர் காலத்துக் கலை மலர்வுகளை மகேந்திர விஷ்ணுகிருகம். லலிதாங்குர பல்லவேசுவர கிருகம். சத்துரு மல்லேஸ்வராலயம். அவனிபாஜன பல்லவேசுவரம் ஆகியவற்றில் கண்டு மகிழலாம்.

கல்கண்ட இடத்தில் கோயிலெடுத்த நிலையை மாற்றி.

ஓவியம் : பத்மவாசன்

எடுக்க விரும்பிய
இடத்திற்குக் கற்களைக்
கொணர்ந்து, கட்டுமானம்
செய்து கலை மரபில்
புதியதோர் உத்தியைக்
கையாண்டவர் அத்யந்த
காமரென்று அறியப்படும்
ராஜசிம்மப் பல்லவர்.
காற்றும் மழையும்
காலத்தின் கைகளும் கூடக்
கலைக்க முடியாது
தோற்றுப்போன கடற்கரை
வளாகச்
சிம்மேசுவரங்களும்,
பல்லவர்களைப்
பூண்டோடு அழிக்கும்
நோக்கோடு படை நடத்தி
வந்து காஞ்சிக்
கோட்டையைக்
கைப்பற்றிய சளுக்கிய
விக்கிரமாதித்தரின்
சிந்தனை கலைத்து, அவர்
காதலாகிப் போகும்படி
கனவுகள் வளர்த்த
கச்சிப்பேட்டுப்
பெருங்கற்றளியும்
அந்நயன மனோகரர்
இந்நாட்டுக் களித்திருக்கும்
கலை மேருகள். இந்த
விநாடிவரை அந்தக் கலை
இமயங்களின் அத்தனை
அழகுகளையும் எந்த
மொழியிலும் யாரும்
வடிக்கவில்லை.

இராஜராஜீசுவரம்,
தஞ்சாவூரைத் தமிழ்நாட்டுக்
கலை வரலாற்றில் தலை
நிமிரச் செய்த தன்னிகரற்ற
பெருங்கோயில்.
தென்கிழக்கு
ஆசியாவிலேயே
இப்படியோர் எழிற்கோயில்
எழுந்ததில்லையெனக்
கலையறிஞர்கள் வியந்து
போற்றும் இருநூற்றுப்
பதினாறடி உயர விமானம்!
இரண்டு கோபுரங்கள்;
ஈரடுக்குச் சுற்றுமாளிகை.
வரலாற்று ஏடுகளில் இந்திய
அளவில் 'மகா'வாகக்







கருதப்படும் நான்கு பேரரசர்களுள் ஒருவரான இராஜராஜர் எழுப்பிய இந்தக் கருங்கல் கட்டுமானந்தான், தமிழர்கள் மிகப்பெரும் பொறியியல் அறிஞர்கள் என்று பிரிந்தானியக் கலைக் களஞ்சியத்தை எழுத வைத்துள்ளது. 'தட்சிண மேரு' என்றும், 'தேவாலயங்களின் சக்கரவர்த்தி' என்றும் பொருத்தமுறப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் பெருமைக்குரிய திருக்கோயிலைக் கண்டு வியக்காதவரும் காண விரும்பாதவரும் இந்தக் காசினியில் இல்லை. இதை எழுப்பிய நித்த வினோதர்தான் எத்தனை பேராற்றலாளர்! பெரிதினும் பெரிது நினைத்து, பெருமைக்கே கோயிலெடுத்த அந்தப் புகழ்வேந்தின் கட்டுமானம் மட்டுமின்றி, வாழ்க்கையும் கூடப் புதிரான புதுமைதான்.

அரிஞ்சயருக்கும் கல்யாணிக்கும் பிறந்து, அழகில் மன்மதனாய் விளங்கிய இரண்டாம் பராந்தகரின் இளைய புதல்வர் இராஜராஜர் நிலவே வடிவெடுத்து வந்தாற்போல, சங்கு சக்கர ரேகைகளுடன் இவர் பிறந்த போது, இனி ஆதிசேடனுக்குச் சுமை நாங்களே என நாணத்தோடு நாட்டியமாடினராம் நாகப் பெண்டுகள். காஞ்சிப் பொன்மாளிகையில் காற்றோடு கலந்த சுந்தரரின் ஆவி நீங்காப் பொன் மானாய் வானவன் மாதேவியும் வளர் தீப்புக, மணிமகுடம், மன்னர் யாரென்று கேட்டது. மக்களெல்லாம், 'அருமொழி தான் அரசர்', என்று அகங் குளிர விழைந்தும், அரசு ஒழுங்கின் அறமறிந்த அருமொழி, தந்தை வழிச் சிற்றப்பர்க்கு மகுடந்தந்தார். மதுராந்தகர் மன்னரானது இப்படித்தான். விட்டுக் கொடுத்த வித்தகரே தன்னைத் தொடர்ந்து அரியணை ஏறவேண்டும் என வழியமைத்த உத்தமர், பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு பதவி துறந்தபோது, அரியணை சிலிர்த்துக் கொண்டது. அதற்குத் தெரியாதா அடுத்து அமரப் போகும் அரிமா இந்த உலகத்தின் புதிரான புதுமையென்று?

கி.பி. 985! கிறிஸ்துவுக்கு முன்னும் கிறிஸ்துவுக்குப் பின்னும் என எத்தனையோ நூற்றாண்டுகள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றன. ஆனால்

கி.பி. 985! கிறிஸ்துவுக்கு முன்னும் கிறிஸ்துவுக்குப் பின்னும் என எத்தனையோ நூற்றாண்டுகள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றன. ஆனால் 985 வந்துபோன ஆண்டன்று. வாராது போல் வந்த மாமணியை அரியணையேற்றிய ஆண்டு. வரலாற்றுப் பக்கங்களில் காலம் மகிழ்ந்து குலாவி முத்தமிடத் தொடங்கிய முதலாண்டு.

985 வந்துபோன ஆண்டன்று. வாராது போல் வந்த மாமணியை அரியணையேற்றிய ஆண்டு. வரலாற்றுப் பக்கங்களில் காலம் மகிழ்ந்து குலாவி முத்தமிடத் தொடங்கிய முதலாண்டு. திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் இராஜராஜரை உரிமை கொள்ள உவந்து தவிக்கத் தொடங்கிய ஆண்டு. இந்த நிலத்தில் கலியால் படிந்த கறைகளையெல்லாம் அகற்றவென்றே அரியணைப் படிகளில் திருவடி பதித்த இராஜராஜருக்குப் பாற்கடலே குடையானது; வெற்றி, மரபு வழி வீடானது. தாமரைகளை மலர்விக்கும் எழுகதிரோனாய்க் கற்றறிவாளர் திருக்கூட்டத்தில் திகழ்ந்த இப்பேரரசர் பெருமையைப் பெருமைப்படுத்திய பெருந்தகை.

தமிழ்நாட்டின் திசை விளக்குகளாய்த் திகழும் திருக்கோயில்களில் இராஜராஜர் காலத்தில் வெட்டப்பட்ட இன்னோரன்ன கல்வெட்டுகள், இருபத்தொன்பது ஆண்டுகள் தமிழ் மண்ணையாண்ட இந்த இளநிலவின் இதயம் காட்டுகின்றன; வீரம் விளைந்த நிலத்தில் விவேகமும் விதைக்கப்பட்ட வித்தகம் கூறுகின்றன; பார்வை பட்ட இடமெல்லாம் புலிக்கொடி பறக்குமிடமான பக்குவம் பேசுகின்றன; சொல்லச் சொல்ல இமயமாய் வளரும் தரவுகளின் வரலாற்று வெளிச்சத்தில், 'மானுடம் வென்றதம்மா' என்று இம்மா மனிதரின் ஆட்சித் திறனை, மக்கள் நலம் நாடிய மாண்பின் உச்சத்தைக் கொண்டாடிக் கூத்திடுகின்றன. அந்தத் திருக்கூத்தின் முதலங்கம் அவர் வெற்றிகள்.

'இராஜராஜா தி கிரேட்' என்று வரலாறு போற்றுகிறதே, அந்த 'கிரேட்' என்ற சொல்லுக்குப் பல்கலைக் கழக அகராதி பல பொருள்கள் தருகிறது. அறிவாற்றலில் சிறந்த, அருந்திறல் வாய்ந்த, முதன்மையான வழக்கத்திற்கு மேற்பட மிகுதியான, உயர் பண்புத் திறங்கள் வாய்ந்த எனும் இப்பொருள்கள் அத்தனையுமே அருமொழிக்குப் பொருந்தும். ரீடர்ஸ் டைஜஸ்ட் வெளியிட்டுள்ள 'சரியான சொல்லைப் பயன்படுத்துங்கள்' என்னும் நூல், கிரேட் என்ற சொல்லுக்குப் பொருள் தரும்போது, சமுதாய நிலை கொண்டோ, சிறப்புத் திறமைகளால் சாதனைகள் படைக்கும் ஆற்றல் கொண்டோ, தனித்து அடையாளப்படுத்தப்படும் மேன்மை நிலையே, 'கிரேட்' என்று குறிப்பிடுகிறது.

தலையாய இந்திய வரலாற்றறிஞர்களுள் ஒருவரான பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் இராஜராஜரை கிரேட் என்றழைத்து, அப்படியழைக்க நேர்ந்தமைக்கான காரணங்களையும் அதற்கான விளக்கங்களையும் தம்முடைய ஈடிணையற்ற நூலான சோழர்களில் வரிசைப்படுத்தியுள்ளார். ஆற்றலும் அறிவுத் திறமும் வாய்ந்த அருமொழி அரியணை அமர்ந்ததும் சோழர்களின் பேராற்றலும் பெருஞ்சிறப்பும் நிரம்பிய நூற்றாண்டு தொடங்குவதாகவும், அருமொழி அரியணை ஏறியபோது சிறிய நாடாக இருந்த சோழநாடு அவர் ஆட்சியில் நன்கிணைக்கப்பட்ட விரிவான பேரரசாக வளர்ச்சியுற்ற தாகவும் கூறும் சாஸ்திரியார், இப்பேரரசு நன்கு வடிவமைக்கப்பட்டுத் திறம்பட நிர்வகிக்கப்பட்டதாகவும், பல களங்களைப் பார்த்த வலிய படை அப்பேரரசைக் காத்து நின்றதாகவும் சொல்கிறார். இக்காரணங்கள் யாவும் அருமொழியின் அரசியல் திறம் காட்டுவ தென்னவோ உண்மைதான். ஆனால் அத்திறம் மட்டுமா அவரைப் பெருமைக்குரிய பேரரசராய் அடையாளப் படுத்துகிறது? அல்லது அத்திறம் வாய்ந்த பேரரசர்கள் இராஜராஜருக்கு முன் தமிழ்நாட்டில் இருந்ததில்லையா?

முதலாம் ஆதித்தர் அரியணை அமர்ந்தபோதும் சோழ நாடு சிறியதொரு நாடாகவே இருந்தது. இன்னுஞ் சொல்லப் போனால் அப்போது 'சோழநாடு' என்ற வளையத்திற்குள் இருந்தவை தஞ்சாவூரும் சிராப்பள்ளியும் மட்டுமே. ஆதித்தரின் போர்த்திறமே தொண்டை நாட்டையும் கொங்கு நாட்டையும் சோழ நாட்டுடன் இணைத்தது. அவர் மகன் முதலாம் பராந்தகர் பாண்டிப் பெரு நாட்டையும், ஈழத் திருநாட்டையும் சோழப் பேரரசுடன் இணைத்தார். இந்த இருவராலும் வளர்ந்த பேரரசு தக்கோலத்தால் தடுமாறிய போதும், அதைக் கண்டராதித்தரும், இரண்டாம் பராந்தகரும் கருத்தாய் நின்று நேர் செய்தமையால்தான், காஞ்சிபுரம் அரண்மனையிலிருந்தவாறு, ஊரகம் கோயிலுக்கான திட்டங்களைச் செப்பேட்டு வழி உத்தமர் சீரமைக்க முடிந்தது. இந்தப் பெரு நிலப் பரப்பில்தான் இராஜராஜரின் ஆட்சி தொடங்கியது.

இராஜராஜரின் மெய்க் கீர்த்தியும், உலா இலக்கியங்களும், இராஜராஜரைத் தொடர்ந்து அரியணையேறிய சோழப் பெருவேந்தர்கள் வழங்கிய செப்பேடுகளின் மரபுவழித் தரவுகளும் இராஜராஜரின் தொடர் வெற்றிகளைப் பற்றிப் பரணிபாடுகின்றன. காந்தளூர்ச் சாலை, வேங்கி, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டபாடி, ஏழரை இலக்கம், முந்நீர்ப் பழந்தீவுகள், விழிஞம், உதகை எனத் தென்னாட்டின் பெரும் பகுதியை அவரது படைகள் வெற்றியால் வளைத்து எல்லைக் கோடுகளை நகர்த்திப் போட்டன. இது ஓர் அசுர சாதனைதான். ஆனால் இதை விடவும் பெரும் நிலப் பகுதியை வென்றவராயிற்றே இராஜேந்திரர்!

வெற்றிகள் மட்டுமே ஒரு மன்னரைப் பெருமைக் குரியவராக்குவதில்லை. வெற்றிகள் நிலையான வையுமல்ல. ஆனால் அந்த வெற்றிகளுக்கு முன்னும், பின்னும் அவற்றைப் பெற்றவர் நடந்து கொள்ளும் பாங்கே அவர் புகழுக்குப் புடம் போடுகிறது. அசோகரின் தடங்களைப் புரிந்து கொண்டால் அருமொழியின் பயணம் விளங்கிவிடும். அவர் தொடங்கிய எந்தப் போரும் 'நாடு பிடிக்க' நடத்தப்பட்டதன்று. சோழர் தூதுவன் சிறைப் படுத்தப்பட்டதால் கேரளம் தாக்கப்பட்டது. 'உதகையைத் தீ உய்த்த உரவோன்' என உலாப்பாடுமளவிற்கு



அப்போரில் கடுமையிருந்தது. வெற்றி கண்ட ஊரைப் பேய்க் களமாக்குவதும், அவ்வூர் நிலங்களை விளைய முடியாதபடி களரும் திடலுமாக்குவதும் தமிழர் மரபுதான். அதைப் புகழ்ந்து பாடுவதும் சங்க வழக்குதான். மரபொட்டியே, மரபு மீறலுக்குத் தந்த தண்டனை தான் உதகை எரிப்பு என்றாலும் அருமொழிக்கு அதில் மகிழ்ச்சியில்லை. அதனால்தான் பின்னுலாக்களில் பேசப்படும் உதகை, அவருடைய மெய்க்கீர்த்தியில் இடம் பெறவில்லை. உதகையின் எதிரொலியில் காந்தளூர்ச் சாலையும் கொல்லமும் கொடுங்களூரும் புலிப்படை கண்டு புனிதமாயின.

தக்கோலப் பாடத்தால் தற்காப்பு நோக்கில் மேலைச் சளுக்கியர் தாக்குதல் தவிர்க்க, கங்கபாடி, நுளம்பபாடிப் போர்கள். வழியில் சிக்கியவை குடமலை நாடும் தடிகை பாடியும் உரிமைப் போர்களால் வாடிய வேங்கியில் சக்திவர்மரை அரியணை இருத்தவே இராஜராஜரின் ஆந்திரப் படையெடுப்பு.

அடைக்கலமாய் வந்து அய்யாற்று வளாகத்து வட கயிலாயம் கோயிலுக்கு அள்ளியள்ளி வழங்கிய சக்தியின் தம்பிக்கு மகட்கொடை தந்து வேங்கி உறவை வலிமைப் படுத்தியது இராஜராஜரின் இராஜதந்திரம். அந்த ஈடுபாட்டில் விழுந்ததுதான் கலிங்கம். உறவுக்கு உதவப் போய் உட்கொள்ளப்பட்ட அந்நாடு வேங்கிக்கு வரவு. எதிரிகளைத் தாங்கிட நினைப்பார்க்கோ சோழர்களால் காட்டப்பட்ட தர்ஜனி.

ஏழரையிலக்கத்துக் கைகளால் வேங்கி பற்றப் படாதிருக்கப் பாற்கடலை மந்தர மலை கடைந்தது போல் மேலைச் சளுக்கிய படையை நிலைகுலையச் செய்து சத்யாஸ் ரயனை எறிந்து இராஜஸ்ரயனான இப்பெருமகனின் யானைகள், தங்கள் கொம்புகளால் கீறி விளையாடிய கீற்றுக் கோடுகள் துங்கபத்திரைக் கரையின் மணல்மேடுகளில் இராஜேந்திரர் காலத்திலும் காணப் பட்டதாகக் கரந்தைச் செப்பேடுகள் களித்துரைக்கின்றன.

முக்கூட்டாய் இருந்த பாண்டிய, சேர, ஈழ அரசர்களை முறியடித்தது தவிர்க்க முடியாதது. தமையரும் தந்தையும் கொண்ட வெற்றியை

> **இந்த வெற்றிகளெல்லாம் வெறியால் பெற்றவையல்ல. எல்லைகளை விரித்துக் கொள்ளும் விழைவால் விளைந்தவையல்ல. மக்கள் நலம், நாட்டு நலம் கருதியும் அடைக்கலந் தேடிய அக்கம் பக்கத்து அரச மரபுகளுக்கு அன்புடன் உதவியும் பெறப்பட்டவை.**

இழப்பதுவோ வீரம்? நாட்டைச் சூழ நிற்கும் எதிர் அரண்களைத் தம் அரண்களாய் மாற்றிக் கொள்வதுதானே விவேகம்! கரைத்து விடலாமெனக் கைசேர்த்துக் கொண்டவர்களைக் காலம் நோக்கிக் கருகச் செய்த அரசியல் வல்லமையும், சிங்கங்களை அவ்வவற்றின் குகைகளிலேயே சந்தித்து வெற்றி கொண்ட வீரத் திருவும் இராஜராஜரின் வரலாற்று முத்திரைகள்.

இந்த வெற்றிகளெல்லாம் வெறியால் பெற்றவையல்ல. எல்லைகளை விரித்துக் கொள்ளும் விழைவால் விளைந்தவையல்ல. மக்கள் நலம், நாட்டு நலம் கருதியும் அடைக்கலந் தேடிய அக்கம் பக்கத்து அரச மரபுகளுக்கு அன்புடன் உதவியும் பெறப்பட்டவை. இந்த வெற்றிகளைத் தாம் பெற்றதாகச் சொந்தம் கொண்டாடாத பெருந்தன்மை இராஜராஜருடையது. தஞ்சை கொண்ட கோப்பரகேசரியும், தொண்டை நாடு பரவின இராஜ கேசரியும், மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரியும், மதுரை கொண்ட இராஜகேசரியும் முற்சான்றுகளாயிருந்தபோதும், தலை கொண்டதைப் புகழ் விளக்காய்த் தூக்கிப் பிடித்த தமையனாரின் தம்பிதானென்ற போதும், வெற்றிகளைத் தமக்குரிமையாக்கிக் கொள்ளாமல், தாமே பெற்ற பீடுகள் போல் பகட்டிக் கொள்ளாமல், அது மரபுதானென்ற போதும், அதிலிருந்து விலகித் தம்முடைய திருவடி தேடிவந்து தவமிருந்த வெற்றி மகளைத் தம் பெரும்படைக்கே மணமுடித்த மாண்புமிக்கவர் இராஜராஜர். பெருமைகளைக்கூட, தலைவரென்பதால் அவை தமக்குரியன என்றாலும், பெற்றுத் தந்தவர்களுக்கே விட்டுக் கொடுத்த தகைமையாளர். அதனால்தான் அவர் வெற்றி வரிசையை இலக்கணம், மெய்க் கீர்த்தி எனக் கொண்டு சட்டமிட்டுப் பார்த்தது.

இந்த மண்ணையாண்ட வேறெந்த மன்னரின் மெய்க் கீர்த்தியிலும் இடம் பெறாத சிறப்புகள் சில இராஜராஜரின் மெய்க் கீர்த்திக்குச் சீர்மை சேர்க்கின்றன. திருமகள் அவரைப் பிறப்பிலேயே மணந்து உரிமையானவர். பெருநிலச்

செல்வியோ அருமொழியின் ஆற்றலுக்குத் தன்னைத் தந்தவர். ஒன்று, பிறப்போடு தொடர்புடைய உரிமை. மற்றொன்று வாழ்வோடு உரிமை பூண்ட பெருமை. இந்த இருவரும் தமக்கே உரிமை பூண்டனர் என்பதை மனங்கொண்டதால் தான், அந்த உரிமைக்குப் பெருமை சேர்க்கவும், அதை உண்மையாக்கவும் காந்தளூர்ச்சாலை தொடங்கிச் செழியரைத் தேசு கொள்ளவும் அரசு வளர்த்தார் அருமொழி.

பிற மெய்க்கீர்த்தியாளர்கள் தாம் வென்ற நாடுகளுடன், தோற்ற மன்னர்களின் பெயர்களையும் கீர்த்தியாக்கிக் களித்தபோது, இராஜராஜர் நாடுகளின் பெயர்களை மட்டுமே வரலாற்றுத் தேவை கருதி வரிசையாக்கினார். மெய்க்கீர்த்தியில் இரண்டு இனப் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. சிங்களர், செழியர். இங்கும் மன்னர்கள் சுட்டப் பெறவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது. ஈழமும், மதுரையும் சோழ இரத்தத்தோடு தொடர்புடையன. இராஜராஜரின் கொள்ளுப் பாட்டர் காலத்திலிருந்து இந்த இரண்டு இனத்தாருடன் தொடர்ப் போர்கள். இழந்தவை ஏராளம். இருந்த போதும் உறுத்திய நினைவுகளால் இனங்குறிக்கப்பட்டதே தவிர, ஏளனமோ, எக்களிப்போ எள்ளளவுமில்லை. மாறாக, 'முரட்டெழில் சிங்களர்' என்றும், 'தேசு கொள்ளப்பட்ட செழியர்' என்றும் மிகுந்த மரியாதையுணர்வுடன்தான் இவ்விரு இனங்களும் குறிக்கப்படுகின்றன.

தன்ம பாலனை வெம்முனை அழித்து, மகிபாலனை வெஞ்சமர் வளாகத்து அஞ்சுவித்தருளி, அவர்தம் பெண்டிர், பண்டாரம் கொண்ட முதல் இராஜேந்திரர், மானாபரணன் பசுந்தலை பொருகளத்தரிந்து, வீரகேரளனை முனைவயிற் பிடித்துத் தன் ஆனைக்கிடுவித்து, அத்திவாரணக் களிற்றால் அவரை உதைப்பித்தருளி, வீரசலாமேகன் தவ்வையைப் பிடித்துத் தாயை மூக்கரிந்த முதல் இராஜாதிராஜர், சாமுண்டராயன் சிரத்தினை அறுத்து, அவர் மகள் நாகவையை முகத்தொடு மூக்கு வேறாக்கிய வீர ராஜேந்திரர் என வெற்றியின் ஈட்டத்தால் விளைந்த வன்முறைப் புகழ்பாடும் மெய்க் கீர்த்திகளின் முன்னே, சிங்களர், செழியர் எனத் தோற்றவர்களைக்கூட, தொடர்ந்து துன்பப்படுத்தி சூரிய வம்சத்தின் குருதி குடித்தவர்களைக்கூட, மதிப்பு விளி தந்து பெருமை கொள்கிறது அருமொழி கண்ட திருமகள் மெய்க்கீர்த்தி.

'தன் எழில் வளர் ஊழி'! எத்தனை தன்னம்பிக்கை இராஜராஜருக்கு அவருக்கு முன்னர் வேறுயாரும் பெற்றிராத தன்னம்பிக்கை. அந்தத் தன்னம்பிக்கைக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. திண்திறல் வென்றித் தண்டொரு காரணம். மனங்கொண்ட உரிமை உண்மையாக உதவியது அந்தப் பெரும் படைதானே! அரசனுக்கு எழில் அவன் வீரமும் வெற்றிகளுந்தான்! தொட்டதெல்லாம் விளங்கிய வீரம் இராஜராஜருடையது. நினைத்ததெல்லாம் முடித்த நித்த வினோதராக அவர் அமைந்ததற்கு அந்த வீரமும், அதன் பின்புலமாக வெற்றிகளையே விளைவித்த அவர் படையும், அந்த வெற்றிகளுக்கு அடித்தளமிட்ட அருமொழியின் விவேகமும் ஒன்றன்பின் ஒன்றாய் விசுவரூப மெடுப் பதைத்தான், 'எழில் வளர் ஊழி'யெனும் வாமன வார்த்தைகள் வாகாய்ப் படம் பிடிக்கின்றன.

வீழ்நாள் படாமை நன்றாற்றின் என்ற வள்ளுவச் சிந்தனையில் விளைந்தது தான், 'எல்லாயாண்டும் தொழுதக விளங்கும் யாண்டே' என்னும் தொடரமைப்பு. தொழத்தக்க அளவில் ஆண்டுகள் விளங்க வேண்டுமானால், அந்த ஆண்டுகளில் நடந்த ஆட்சி எப்படியிருந்திருக்க வேண்டும்! அந்த ஆண்டுகளின் ஒவ்வொரு திங்களும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு நாளும் எத்தனை பயனுள்ளவைகளாக மலர்ந்திருக்க வேண்டும்! பயனுள்ள நாள்களையே பயந்த ஊழியென்பதால் தான் அது எழில் வளர் ஊழியாய் அமைய முடிந்தது.

ஊழிக்குப் பதின்மூன்று பொருள்கள் தருகிறது, மதுரைத் தமிழ்ப் பேரகராதி. அவற்றுள் வாழ்க்கையும் ஒன்று. தம் வாழ்க்கையை வீர வாழ்க்கையாய், வீழ்நாள் இலாத வாழ்க்கையாய், மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்படும் வாழ்க்கையாய் அமைத்துக் கொண்டதால்தான் இராஜராஜரால், அதை எழில் வளர் வாழ்க்கையாய் வினைத் தொகையாக்க முடிந்தது.

**"ஸ்வஸ்தி ஸ்ரீ**
**திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்**
**தனக்கே உரிமை பூண்டமை மனக்கொளக்**
**காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி**
**வேங்கை நாடும் கங்க பாடியும்**
**நுளம்பபாடியும் தடிகை பாடியும்**
**குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்**
**முரட்டெழில் சிங்களர் ஈழமண் டலமும்**
**இரட்ட பாடி ஏழரை இலக்கமும்**
**முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்**
**திண்திறல் வென்றித் தண்டாற் கொண்டதன்**
**எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்**
**தொழுதகை விளங்கும் யாண்டே**
**செழியரைத் தேசுகொள் ஸ்ரீ கோ இராஜ கேசரி**
**வர்மரான ஸ்ரீ இராஜராஜ தேவர்க்கு யாண்டு"**

# அகலிகைக் கல்

**- சு. சமுத்திரம்**

எல்லாம் அடங்கிய தாவரசங்கமமே, நித்திரையில் ஒடுங்கிப் போனதுபோல் தோன்றுமே ஒரு நேரம்... இடம், பொருள், ஏவல் என்ற முப்பரிமாண தாக்கங்களைக் கடந்த காலவுதிர் காலம்... அந்த நேரத்தில் ஆயாவிற்கு வழக்கம்போல் விழிப்புத் தட்டிவிட்டது. ஐந்தாறு நிமிடங்கள் முந்தியும், பிந்தியும் வரும், இந்த இரண்டு மணியளவிலான நேரம் மற்றவர்களுக்கு அந்த நேரம் அன்றைய இரவுக் கணக்கு. ஆனால், ஆயாவிற்கோ அது இருள்கவிந்த ஒரு நாளின் துவக்கம்... ஒரு நாளிற்கு பகல்தான் துவக்கம் என்பது ஆயா மறந்துபோன அல்லது மரத்துப்போன நினைவுகளில் ஒன்று.

இளையவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், முதியவர்களுக்கு ஒரு மாதிரியாகவும் தூங்க விடாமல், அதே சமயம் முரண்பட வருமே வயது கோளாறு... அந்தக் கோளாறு ஆயாவை நெருங்க முடியவில்லை. ஒவ்வொரு இரவும் பத்து மணியளவில் ஆயா தூங்கப் போவாள். அந்த அடுக்கு மாடி வீடுகளின் உள், வெளி விளக்குகளின் கூச்சப்பிரகாசம் ஆயாவின் விழிகளை ஊடுருவி கண்ணுக்குள் புகமுடியாது. தொலைக் காட்சிகளின் விதவிதமான ஒளிபரப்பு கூச்சல்களும் ஆயாவின் தூக்கத்தை அசைத்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், அவையே தனது தாயின் தாலாட்டுப் போலவே கேட்கும். இந்த பின்னணியே அவளை உடனே தூங்க வைத்துவிடும். படுத்த ஐந்தாவது நிமிடம் தன்னை இழந்த தன்மைக்குப் போய்விடுவாள். உடல் களைப்பும், மனக் களைப்பும் கனவுகளை துரத்திவிடும். ஒரு வினாடி படுத்து மறுவினாடி விழிப்பதுபோல் ஆயாவிற்கு தோன்றும். இந்த இரண்டு நேரத்திற்குமான இடைவெளி எப்போதுமே அவளுக்கு இரண்டு மூன்று நிமிடங்கள் மாதிரிதான்.

ஆயா, ஒரு நிமிடம் நினைவற்றவளாய் கிடந்தாள். மனமற்றுப்போன அருவ நிலை. ஆனால் எங்கயோ விலகி நின்ற அவள் மனம் மறுநிமிடம் தலைக்குள் பால் வாரியாக ஓடியது. நெஞ்சுக்குள் ஆவின் பாலாக பெருக்கெடுத்தது. கசிந்த உறைகளாக பயமுறுத்தியது. முன்னெச்சரிக்கை அவள் உடலைக் தூக்கி 'ட' வடிவில் மடித்து வைத்தது.

பக்கத்திற்கு ஒன்றாக இரண்டடுக்காய் தோன்றும் அந்த அடுக்குமாடி கட்டடத்தின் தளத்திற்கு இட்டுச் செல்லும் வலது பக்க ஏணிப்படிக்கு கீழ் உள்ள 'பொந்தில்' இருந்து ஆயா வெளிப்பட்டாள். கீழ் தளத்தில் உள்ள இரண்டு வீட்டுக்காரர்களும் வீசிப் போட்டிருந்த பிய்ந்து போன கார் டயர், சைக்கிள் டியூப், ஒயர் கம்பிகள், அறுந்துபோன கயிறுகள், கிழிந்து போன துணிகள், துருப்பிடித்த ஆணிகள், நைய்ந்து போன சூட்கேஸ்கள், வேலைக்காரப் பெண்கள் விட்டுவிட்டு போகும் துடைப்பங்கள் போன்றவற்றுடன் தட்டு முட்டு சாமானாக படுத்தெழுந்த ஆயா, இப்போது தவழ்ந்து தவழ்ந்து அந்தப் பொந்துக்கு வெளியே வந்தாள். குனிந்தபடியே உள்ளே கையை நீட்டி தலையணையாகிப் போன சைக்கிள் டியூபை அந்த இருளில் ஒரு அனுமானத்தோடு தொட்டு, ஒரு ஓரமாக தள்ளிவிட்டாள். பள்ளி கொள்வதற்கு படுக்கையான கோணிப்பையைச் சுருட்டி எதிர்ப்பக்கமாக வைத்தாள். ஒரு திருப்தியோடு தலையை மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டே எழுந்தாள்.

பின்னர் எழுந்த வேகத்திலேயே அந்தத் திண்ணைப் பகுதிப் போன்ற இடத்திலிருந்து வெளியே வந்து அந்த வளாகத்தின் ஒரு ஓரமாக உள்ள கைபம்பை கத்த விட்டபோது, அது இரும்புத் துகள்களோடு கண்ணீர் சுரந்தது. கிட்டத்தட்ட ஒப்பாரிப் போன்ற சத்தத்தை எழுப்பியது. அப்போது பார்த்து அண்டை வீட்டு சேவல் ஒன்று கூவியது... கோழிப்பண்ணை நடத்துகிற ஒருவர் கொண்டுவந்துள்ள விதவிதமான சேவல்களில் இது ஒரு தங்கச் சேவல். பொழுது விடிந்ததென்று கூவுகிறதோ இல்லையோ,- ஆயாவின் காலடிச் சத்தமும், பைப் சத்தமும் கேட்டு விட்டால் போதும். எப்போது வேண்டுமென்றாலும் கூவும்.

ஆயா முகத்தைக் கழுவிக் கொண்டு, குறுகிக் கிடந்த உடம்பை ஆசுவாசப் படுத்திய படியே மீண்டும் அந்த ஏணிப் பொந்தருகே வந்தாள். உள்ளே ஒரு மூலையில் வைக்கப்பட்ட அலுமினிய பாத்திரத்தை தரதரவென்று இழுத்து வெளியே கொண்டு வந்தாள். குண்டா மாதிரியான சுமாரான

பாத்திரம். அதன் விளிம்புகள் பின்பக்கமாய் வளைந்து பள்ளப்பகுதியை தாராளமாய் காட்டும். ஆயா, அதற்குள் கையை விட்டு சாவகாசமாக துலாவினாள். பிறகு வேகவேகமாக கைகளால் தடவினாள். தூக்குப் பை அகப்பட வில்லை. காதறுந்த பையானாலும் அதற்குள் இருந்த பிளாஸ்டிக் உறைக்குள் அறுபது பால்கார்டுகள் வைக்கப் பட்டிருந்தன. பையை காணவில்லை. ஒருவேளை தட்டுமுட்டு சாமான்களில் முடங்கி போயிருக்கலாம்... அந்தப் பாத்திரம் கவிழாமல் அதெப்படி முடங்கும்?



ஆயா அந்த இருட்டில் வயதான வாத்தாய் நடந்து, வைத்திலிங்கம் என்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட இரண்டாம் நம்பர் வீட்டு கதவிற்கு மேலே உள்ள மின் சுவிட்சை ஆள்காட்டி விரலால் அழுத்தியபோது மஞ்சள் விளக்கு அவள் தலைக்குமேல் ஒளிவட்டமாக காட்சி காட்டியது. கூடவே அந்த வீட்டு கதவு மெள்ள மெள்ள திறந்தது. சுவரை விட்டு ஓரடி இடைவெளியில் நின்ற அந்த கதவிற்கு பின்பக்கம், ஒரு ஆண் தலையும், பெண் தலையும் வெளியே எட்டிப் பார்த்தன. திருடர்களுக்கு பயந்தது போன்ற திருட்டுத் தலைகள். பின்னர் ஆயாவை மட்டுமே பார்த்துவிட்டு அந்தக் கதவை உடைப்பதுபோல் பக்கவாட்டில் இழுத்துப் போட்டுவிட்டு வைத்திலிங்கமும் அவரது மனைவியும் வெளிப்பட்டார்கள். அந்தம்மா நைட்டியை மார்புக்கு மேலே தூக்கிக் கொண்டு லேசாய் ஊதினாள். அய்யா முடிச்சவிழ்ந்த லுங்கியை கட்டிக் கொண்டே, ஆயாவை முறைத்தார். ஆயாவை எப்படி திட்டலாம் என்று யோசிப்பது போல் இருவரும் வாய்களை லேசாக அகலப்படுத்தி 'அழகு' காட்டுவதுபோல் நின்றார்கள். அந்தம்மா பேசப்போவதாக நினைத்து இவரும், இவர் பேசப்போவதாக நினைத்து அவளும் சிறிது இடைவெளி நேரம் கொடுத்தபொழுது கடைசியில் வைத்திலிங்கமே வாய்திறந்தார்.

"ஏய் கிழவி எதுக்காக காலிங்பெல் அழுத்துனே?"

அப்போதுதான், ஆயாவிற்கு தனது விரல்களில் ஒன்று செய்த தவறு புரிந்தது. ஆள்காட்டிவிரல் சுவிட்சை அழுத்தியபோது, மோதிர விரல் அழைப்பு மணியை அழுத்தியிருக்கிறது. ஆயா அத்தனை விரல்களையும் எதிரிகளை உதறுவதுபோல் உதறியபடியே "தெரியாம அய்யா, தெரியாம" என்று இழுத்தபோது அந்தம்மா விளக்கம் கேட்டாளா அல்லது கொடுத்தாளா என்பதை கண்டுபிடிக்க முடியாதபடி கத்தினாள்.

"என்னது தெரியாமல்? பக்கத்துல வீடு இருக்கிறது தெரியலையா... நடு ராத்திரி என்கிறது தெரியலையா? நாங்க தூங்குறது தெரியலையா? தெரியாமத்தான் கேட்கிறேன். எதுக்காக காலிங் பெல்லை அடிச்சே?"

"பால்கார்டு இருக்கற பையை தேடுறதுக்காக லைட்ட போட்டேன். தெரியாத்தனமா அது பெல்லையும் அடிச்சிட்டாபோல மன்னிச்சிடு மவராசு"

"என்னத்த மன்னிக்கிறது?"

அந்தம்மா அவளை மன்னிக்கப்போவதில்லை என்பதுபோல் பார்த்தபோது அந்த வீட்டுக்கு எதிர்வீட்டு கதவும் தானாய் திறப்பதுபோல் திறந்து கொண்டது. எதிர்வீட்டுகாரர்களின் இளைய அதே சமயம் உயர்தர பதிப்புகள் போல் இன்னொரு ஜோடி... அந்தப் பெண் தூக்கக் கலக்கத்தில் கண்களை இடுக்கியபடியே ஆயாவைப் பார்த்தாள். அவள் வீட்டுக்காரர்

ஓவியம் : மணியம் செல்வன்

எதிர்வீட்டுக்காரரை கேள்வி பாவனையில் நோக்கினார்? இதற்குள் வெளியே ஊத வேண்டிய விசிலை உள்ளே ஊதிக்கொண்டே காக்கி யூனிபார காவலாளி ஓடிவந்தார். அப்போதுதான் காக்கி உடைகளை களைந்துவிட்டு லுங்கி கட்டி படுத்தவர்- மீண்டும் காக்கியை போட பத்து நிமிடம் ஆகிவிட்டது. ஒண்ணாம் நம்பர் காரர் கத்தினார்.

"சார் கத்தறாங்க. அது உனக்கு கேக்கலியா? கொல நடந்தாக்கூட பத்து நிமிசம் கழிச்சுதான் வருவியா?"

ஒண்ணாம் நம்பர்காரி குறுக்கிட்டாள்.

"வாட்சுமேன் போறாரு பாவம். முதல்ல இந்த கிழவிக்கு ஒரு வழி பண்ணுங்க. ஏணிபொந்துக்குள்ள அபசகுனமா படுத்துக்குறாள். காலங்காத்தால இது முகத்துலதான் முழிக்க வேண்டியிருக்கு. இதுக்கு எதாவது ஒரு வழி பண்ணனும். நாளைக்கே மண்டையப் போட்டா யாரு பொறுப்பு? அசோசியேஷன் கிட்ட கேட்கணும். சந்தா பிடிக்க மட்டும் மாசாமாசம் வராங்க. எல்லாம் எட்டாம் நம்பர் பொண்ணு கொடுக்கற இளக்காரம்.

இரண்டாம் நம்பர்க்காரியும் வாய்வுட்டாள்.

"தேவைன்னா அந்த கவிதாவே ஆயாவை அவ வீட்டுக்குள்ளே வெச்சுக்கலாமே. இந்த கிழவியை ஏவி ஏன் நம்ம கழுத்த அறுக்கிறாள்"

"சரி..சரி..போய்த் தூங்கலாம். சின்ன விஷயம் இது. காலையில் பேசி தீர்த்துக்கலாம்"

ஒண்ணாம் நம்பர்க்காரி அதே நம்பர் கணவனை சாடினாள்.

"என்ன நீங்க... இந்த ஆயாவ ஒரு பிளாட்காரி மாதிரி நினைச்சு பேசறீங்க. தீர்க்கறது என்ன தீர்க்கறது தீர்த்துக்கட்டனும். முரளி சார்! உங்களத்தான் இவரு எப்பவுமே எடக்கு மடக்கானவரு. நாளைக்கு நீங்க அசோசியேஷன் தலைவர்கிட்டே பேசி இந்த அம்மாவை வெளியேத்தனும்".

அடுத்தவனை உசத்தியாக நினைத்த மனைவியை தாழ்த்தியாக பார்த்த லுங்கிக்காரர், அவளை அங்கேயே திட்டித் தீர்க்கப்போனார். ஏய்! என்று கூடச் சொல்லிவிட்டார். அந்த ஆத்திரத்தில் கண் முன்னால் நின்று காணாமல் போன எதிர்வீட்டுக்காரர் இருமிவிட்டார். அதை வைத்து மீண்டும் அவர்களை அடையாளம் கண்டு கொண்ட லுங்கிக்காரர் மனைவியை முறைத்தபடியே பல்லைக் கடித்து சொல்லைப் பிடித்தார். இதை புரிந்து கொண்ட எதிர்வீட்டுப் பெண் நல்லா வாங்கிக்கட்டணும் என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள். எதிர் வீட்டுக்காரி சிலசமயம் இவளுக்கு மாமியார் இல்லாத குறையை போக்குகிறவள். விரைவில் போகவில்லை என்றால் எதிர்வீட்டுக்காரரின் கோபம் அடங்கிவிடும் என்று அனுமானித்தது போல் ஒண்ணாம் நம்பர்காரி தாங்கள் அந்த நம்பர்க்குரியவர்கள் என்பது போல் கணவனின் கைகளை பிடித்து உள்ளே கொண்டு போனாள். ஆனாலும், சண்டை நடக்கிறதா என்பதுபோல் உள்ளே போய் ஒரு தடவை திரும்பி கதவை சாத்துகிற சாக்கில் இன்னொரு தடவை இரண்டாம் நம்பர்க் காரர்களை பார்த்துவிட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் பல்லைக் கடிப்பதை ரசித்துப் பார்த்தாள். அவளும் அவர் கணவரும் படுக்கை அறைக்குப் போனார்களா அல்லது கதவுக்கு பின்னால் நின்றார்களா என்பது தெரியவில்லை.

அதற்குமேல் பொறுமை காக்க முடியாத ஒண்ணாம் நம்பர்க்காரர் உள்ளேபோய் மனைவியை ஒரு பிடி பிடிக்க வேண்டும் என்ற கோபாவேசத்தில் அவளை வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டே போய்விட்டார். அப்போதும் அந்தம்மா எல்லாம் அந்த எட்டாம் நம்பர்காரியால... காலையில் இருக்கு சேதி. அவள கீழ இறக்கி கேக்கதான் போறோம்" என்று ஆயாவை பார்த்து ஒரு முறைப்போடு சொல்லிவிட்டு கணவன் இழுத்த இழுப்புக்கு பின்வாங்கிப் போனாள். காவலாளியும் ஆயாவை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு ஓடினார். கேட்டில் சந்தேகத்துக்கு உரியவர்கள் வருகிறார்களா என்பதை பார்ப்பதற்காக அல்ல காக்கி யூனிபாரத்தை கழட்டிப் போடவேண்டும். ஒரே அரிப்பு.

ஆயாவிற்கு 'எட்டாம் நம்பர் என்ற சொல்லைக் கேட்டதும் அந்த நம்பர்க்குரிய கவிதா நினைவுக்கு வந்தாள். கூடவே, மகிழ்ச்சியும் குதிபோட்டது. நேற்று மழை பலமாக பெய்தது. அந்த அடுக்குமாடி கட்டப்பட்ட லட்சணத்தில் ஏணிப்படி பொந்துக்குள்ளும் தண்ணீர் பெருக்கெடுக்கும் நிலைமை. உடனே ஆயா அந்த தூக்குப்பையை எடுத்து எட்டாம் நம்பர்காரியிடம் கொடுத்தது இப்போதுதான் நினைவுக்கு வந்தது. அவளிடம்தான் ஆயா பால்கார்டு விநியோகிப்பில் செலவு போக மிச்சம் பிடித்த ஓராண்டுகால உழைப்பான ஆயிரம் ரூபாயை கொடுத்து வைத்திருக்கிறாள்.

**"அடுக்கு மாடி வீடுகளின் உள், வெளி விளக்குகளின் கூச்சப்பிரகாசம் ஆயாவின் விழிகளை ஊடுருவி கண்ணுக்குள் புகமுடியாது. தொலைக் காட்சிகளின் விதவிதமான ஒளிபரப்பு கூச்சல்களும் ஆயாவின் தூக்கத்தை அசைத்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், அவையே தனது தாயின் தாலாட்டுப் போலவே கேட்கும். இந்த பின்னணியே அவளை உடனே தூங்க வைத்துவிடும்."**

ஆயா அந்த ஏணிப்படிகளில் இரண்டிரண்டாக தாண்டினாள். பல்புகள் அலங்கார வளைவுகளுக்கு வைக்கப்பட்டிருந்தாலும் அவை மூழிகளாக கிடந்தன. முன்பு ஓரிரு சமயங்களில் சில்லரை திருடர்களுக்கு இந்த விளக்குகளே வழிகாட்டியதாக பழிபோடப்பட்டு, அவை நிரந்தரமாக முடக்கி வைக்கப்பட்டன. ஆயாவிற்கு படியேற ஏற மூச்சிறைத்தது. மூக்குப்புயல் நுரையீரலை வாய்வழியாக வெளியே இழுத்துப் போடுவது போன்ற வாதை. சிறிது நேரத்தில் அதே மூக்கு தொண்டைக்குள் சிக்கிக் கொள்வது போன்ற திணறல். ஆனாலும், இளைப்பாறவோ, களைப்பாறவோ நேரமில்லை. ஏடாகூடம் நடக்கும்முன்பே அங்கே போய்விட வேண்டும்.

ஆனாலும், ஆயாவின் மனோ வேகத்திற்கு உடல் வேகம் ஈடுகொடுக்க முடியவில்லை. முதல் தளத்திற்கு வந்தவள் மேலும் இரண்டு மாடிகளை எப்படி கடப்பது என்று அண்ணாந்து பார்த்தாள். யோசித்தபோது பழைய நினைவுகள் மலர்ந்தன. அந்த படிக்கட்டு போய் திருக்கழுக்குன்ற மலை படிக்கட்டுகள் தரிசனம் தந்தன. அந்த கோயிலுக்கு அவள் போனபோது பிள்ளைத்தாச்சி. பத்தாண்டுகாலமாக உருவாகாத பிள்ளை வேண்டுதலின் பேரில் கருவாயிற்று. அந்த வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக அப்போதைய இளம்பெண்ணான இந்த ஆயாவும், அவள் கணவனும், திருக்கழுக்குன்ற மலைப்படிகளில் ஏறியபோது இவளால் வயிற்றுச் சுமையோடு எளிதாக ஏறமுடியவில்லை. உடனே இவள் ஆம்பிடையான் அந்த படிக் கட்டுகளில் ஏறிக் கொண்டிருந்த குருக்களைச் சுட்டிக் காட்டினார். இவளைப் போலவே வயிறு துருத்திய குருக்கள் ஒவ்வொரு படிக்கட்டிலும் நேராக நடந்து அதன் ஓரத்தில் மறுபடிக்கு ஏறி பின்னர் எதிர்பக்கமாக நடந்து... இப்படி ஏறுவது தெரியாமல் நடந்ததை காட்டினார். இவளும் அப்படியே நடந்தாள். கணவனின் தோளில் கை போட்டிருந்ததால் களைப்பு வந்தாலும், இளைப்பு வரவில்லை.



ஆயா, இந்த மல்லிகை வாசனை நினைவுகளோடு இரண்டாவது மாடி தளத்திற்கு வந்து விட்டாள். சிறிது நின்று மூச்சு விட்டாள். உடனேயே அவளுள் எழுந்த அந்த மல்லிகை வாசனை, துர்வாசனை ஆயிற்று. அவளை கோயிலுக்கு கூட்டிக் கொண்டு போனவன் அதற்குபிறகு ஏழெட்டு ஆண்டுகளில் ஆயாவிற்கு கோவிலாகிவிட்டான். அவனைப் போலவே முகத்தோற்றம் கொண்டவளும், குல தெய்வமான கடல் தெய்வத்தின் பெயர் வைக்கப்பட்டவளுமான, மகள் மச்சகாந்தியை ஒரு தூசுபடாமல் வளர்ப்பதற்காக, கடலோர ஏலத்தில் மீன் வாங்கி, சாலையில் கூறுபோட்டு விற்றது, மீன் வாடிக்கையாளரான ஒரு அதிகாரி மூலம் குடிசை மாற்று வாரியத்தில் ஒரு வீடு கிடைத்தது, அதே வீட்டில் ஒரு படித்த பையனுக்கு தன் மகளை கட்டிவைத்து வீட்டோடு மாப்பிளையாக்கியது, அந்த மாப்பிளைக்காரன் ஏதோ தொழில் துவங்குவதற்கு வங்கி கடனுக்காக ஆயாவிடம் வீட்டை தன் பெயருக்கு எழுதி வாங்கியது, பிறகு அதை ஒரு போக்கிரிக்கு விற்றது, தட்டிக் கேட்ட ஆயாவை, மகள் கணவனுக்கு ஒத்தாசையாக பிடித்துக் கொள்ள, மருமகன் தன் பல்லை உடைத்து விட்டு வெளியேறியது, வீட்டை வாங்கிய அந்த போக்கிரி தன்னை தட்டுமுட்டுச் சாமான்களோடு வெளியே தூக்கிப் போட்டது, அங்கிருந்து இடறி இடறி இந்த இடத்திற்கு வந்தது, இப்போது படித்த மகள் பூக்காரியாகவும், வெள்ளையும் சொள்ளையுமான அந்தப் பயல் கடலைக்காரனாகவும், கோவளம் கடற்கரையில் அலைவதாக கேள்விப்பட்டது- இவை அத்தனையும் ஆயாவிற்கு மெய்யாய், புதுக் கதையாய் கண்கொத்திப் பாம்பாய் பிராண்டின.

ஆயாவிற்கு மீண்டும் கடமை கண்ணாகியது. கால்களில் கைகளை ஊன்றி ஊன்றி நான்காவது மாடிக்கு எப்படியோ வந்துவிட்டாள். எட்டாம் நம்பர் கதவின் பக்கவாட்டுச் சுவரில் தனக்கு அத்துபடியான அழைப்பு மணியின் சுவிட்சை நான்கு விரல்களை மடக்கிக் கொண்டு நீட்டி வைத்த ஆள்காட்டி விரலால் தொடப்போனாள். அதை அழுத்த வேண்டியது தான் பாக்கி. ஆனாலும், சாக்கடிப்பதுபோல் அந்த விரலை மடக்கிக் கொண்டாள். இந்த எட்டாம் நம்பர் பொண்ணு அறியாதவள். கல்யாணம் ஆகி நாலைந்து மாசமே இருக்கும். ஒரு தடவை தன் கணவன் திரும்பிப் படுத்துக் கொள்வதாக ஆயாவிடம் கையறு நிலையில், யாரிடமாவது சுமையை இறக்கி வைக்க வேண்டும் என்கிற முறையிலோ என்னமோ சொல்லிவிட்டாள். முதல் மாதம் அப்படி இல்லை என்றும் அவள் பின்னுரையாகச்

சொன்னாள். உடனே ஆயா ஒரு வைத்தியம் சொன்னாள். அதுவும் போனவாரம்தான் சொல்லிக் கொடுத்தாள். அதாவது கொதிக்கிற பாலில் இரண்டு பச்சை முட்டைகளை உடைத்து பாலுக்குள் கொட்டி அதை இரு டம்ளர்களில் மேலும் கீழுமாக ஆற்றி முட்டை கூழாகி பாலுக்குள் இரண்டற கலந்தவுடன் அதை அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்றாள். ஒரு மணி நேரத்திற்கு அவனை நோண்டக் கூடாது என்றும் ஒரு நிபந்தனை.. போட்டாள். மறுநாளுக்கு மறுநாள் ஆயாவை பார்த்த அந்தப் பெண் கவிதா நாணிக்கோணிச் சிரித்தாள். ஆயா அவளை கண்ணால் கேட்டபோது "இப்ப எல்லாம் அவரு என்னை திரும்பி படுக்க விடமாட்டேங்காரு" என்றாள் சிரிப்பும் கும்மாளமுமாய்.

ஆயா, மீண்டும் அந்த சுவிட்சை தொடப்போனாள். ஆனாலும் ஒரு தடங்கல். யோசித்துப் பார்த்தாள். நேற்றுப் பெய்த மழையில் இளம்பனி வீசும் நேரமிது. அவளுக்கு தெரிந்து அதுதான் 'அதற்கு' இதமான வேளை. இந்தச் சமயத்தில் அந்த சின்னஞ்சிறுசுகளின் தூக்கத்தைக் கலைப்பது கருவை கலைப்பது மாதிரி. ஆனாலும், நேரம் கரைஞ்சிகிட்டே போகுதே. அந்தப் பாழப் போற லாரி ரெண்டரையிலிருந்து காலை அஞ்சு மணிக்குள்ள எப்ப வேணுன்னாலும் வரலாம். இதே மாதிரி பகல் பன்னிரெண்டு மணியிலிருந்து மூணு மணி வரைக்கும் எந்த நிமிசத்துலயும் வரலாம். வரும்போது இல்லாட்டி ஏடாகூடம் தான். இந்நேரம் ஒருவேள அது வந்துட்டுப் போயிருக்கலாமே. என்ன பண்ணலாம்...

ஆயா பதைபதைத்தாள். படபடத்தாள். வலது கையை சுவரை நோக்கி நீட்டுவதும், நீட்டிய கையை மடக்குவதுமாக அல்லாடினாள். அதற்குள் அண்டைவீட்டின் இன்னொரு சேவல் கூவிவிட்டது. அது புதிய வரவான வெள்ளைச் சேவல். நீட்டி முழக்கி கூவாமல், கட்டு அண்ட் ரைட்டாக கூவக்கூடியது. அடக் கடவுளே இந்நேரம் பால் கொண்டு வந்திருக்க வேண்டுமே. இல்லாட்டி அந்த சிநேகித சேவல் கூவாதே.

ஆயா, ஆபத்துக்கு பாவமில்லை என்று மனதை திடப்படுத்திக் கொண்டு அழைப்புமணி படம் போட்ட நீண்ட சுவிட்சை விரலால் தொட்டுவிட்டாள். அதற்குள் உள்ளே இருந்து செல்லமான சிணுங்கல்கள் கேட்டன. விடாப்பிடியும் கொடாப் பிடியுமான உறவுப் பிடிகளின் உரசல் சத்தங்கள் சன்னசன்னமாய் கூடி ஒருமையாய் கலவையான வலுத்துப்போன முக்கல் முனங்கல்கள். ஆயாவிற்கே வெட்கம் பிடுங்கித் தின்றது. ஒரு கணம்தான் மறுகணம் கடமை நினைவுக்கு வந்தது. ஆனாலும், அழைப்பு மணியை அழுத்தவில்லை. அந்த சின்னஞ் சிறிசுகளுக்கு இடையேபோய் அவள் கரடியாய் நுழைந்துக் கொள்ள விரும்பவில்லை.

ஆனாலும் ஆயாவுக்கு ஒரு ஆறுதல். எப்படியும் வழக்கம்போல் டெப்போ பையன் வந்திருக்க மாட்டான். முழு மாசத்துக்கு சம்பளம் வாங்குனாலும் மாதத்துல ஒரே ஒரு தடவ பதினாறாம் தேதி மட்டுமே வருவான். அன்றைக்குத்தான் பணம் வாங்கிட்டு புதுகார்டுகளை எல்லாருக்கும் கொடுப்பான். பழைய கார்டுகளை வாங்கி அவனே அத்தனை துளைகளிலும் குத்திக் கொள்வான். இன்றைக்கு பதினாறாம் தேதி இல்ல. பால் லாரியில வர ஆயிரம் டிரேய் தட்டுகள்ள முன்னூற ராக்கப்பனோ, அல்லது குப்பனோ கீழே எடுத்து வைப்பாங்க. வாடிக்கை ஆட்களுக்கு டிரேகளை ஒதுக்கி வைப்பாங்க. எல்லாருடைய கார்டுகளும் அவங்களுக்கு அத்துபடி. ஆளுக அதுல இருக்கற உறைகளை எடுத்துக்கணும். சில சமயம் அனுப்பற இடத்துலேயே பேஜாரு நடக்கும். நாலைஞ்சு பாக்கெட்டுங்க காணாம போயிடும். அப்பல்லாம் கடைசியா போற ஆளோட தலைச்சுமை குறையும்... தல சும குறைஞ்சி மனச் சும வந்துடும்.

"மூக்குப்புயல் நுரையீரலை வாய்வழியாக வெளியே இழுத்துப் போடுவது போன்ற வாதை. சிறிது நேரத்தில் அதே மூக்கு தொண்டைக்குள் சிக்கிக் கொள்வது போன்ற திறைல். ஆனாலும், இளைப்பாறவோ, களைப்பாறவோ நேரமில்லை."

ஆயா அழைப்பு மணியை அழுத்தாமலே அந்த தளத்தில் இருந்து அவசர அவசரமாக கீழ்நோக்கி நடந்தாள். ஏணிப்படிகளை இடது கையால் பற்றிக் கொண்டு அவற்றில் கையை வளையம் போல் வைத்துக் கொண்டு படிகளில் தாவி தாவி, கைவளையம் அந்த கம்பிகளில் உருள, உருள கால்கள் அதற்கு இணையாக நடக்க நடக்க கீழ்தளத்திற்கு வந்து, கேட்டு வாசல் வரைக்கும் ஓடினாள். பிறகு தனது தலையிலே மென்மையாக அடித்துக் கொண்டு மீண்டும் அந்த ஏணிப்பொந்திற்கு வந்து அதன் ஓரத்தில் இருந்த குண்டா பாத்திரத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். ஒரு கொழுத்த பிள்ளையை அணைப்பதுபோல் பக்கவாட்டில் கைகளை நீட்டி அணைத்தபடியே ஓடாக்குறையாக நடந்தாள். நடக்காத குறையாக ஓடினாள்.

டிப்போ சாலைக்கு ஆயா வந்தபோது வழிப் போக்கர்களும், வாக்கிங் ஆசாமிகளும் ஆயாவை பொழுதுபோக்காய் பார்த்தார்கள். கவிழ்ந்து நடக்கும்ஆமையை நிமிர்த்தி வைத்தது போன்ற கூன்

போட்ட உடம்பு. அந்த ஆமையிலும் நட்சத்திர ஆமைபோல். காய்ப்புகளும். தேமல்களுமான உடம்பு... பரட்டைத்தலை. ஒடுங்கிபோன வயிற்றை துருத்திக் காட்டுவது போன்ற முரட்டுச் சேலையின் இரட்டை மடிப்புகள்.

ஆயா டிப்போவில் ஒருத்தன் இருப்பதை பார்த்ததும் மகிழ்ச்சிதான். ராக்கப்பனா, குப்பனா என்று தொலைநோக்காய் பார்த்தாள். வயதாகிப்போன கண்கள் பின்வாங்கின. இரண்டுபேருல எவன் இருந்தாலும் சரிதான். ராக்கப்பன் 'சவுக்கியமா ஆயான்னு' கூட கேக்காமல் அவளோடு பங்கை எடுத்துக் கொடுப்பான். குப்பன் அவளுடைய நேற்றைய ராத்திரியை விலாவாரியா விசாரிச்சுட்டு அனுதாபமா உம் கொட்டுவான். பாத்திரத்தைர ஒரே மூச்சுல தூக்கி அவள் தலையில வைப்பான். சிலசமயம் வேடிக்கையா அவளோட இரண்டு கையையும் பிடிச்சு அந்தப் பாத்திரத்தின் ரெண்டு பக்கமும் உயரத் தூக்கி வைப்பான். அந்த சைக்கிள்காரி நின்னா " உனக்கு இப்படி உதவட்டுமான்னு கேப்பான்". உடனே அவள் "கரிமூஞ்சி ஆசையை பாரு" என்று செல்லமாக சிணுங்குவாள். எல்லாருக்கும் சிரிப்பு வரும். கசிவுகளால் மெலிந்து போன பாலுறைகளின் ஆதங்கம் கூட காணாமல் போய்விடும்.

ஆயா ஓடோடினாள். டிப்போ பக்கத்தில்போனதும் அவளுக்கு மூச்சு வாங்கியது. அது நிலைப்பட்டதும் ஏறிட்டுப் பார்த்தாள். அவளுக்கு ஒரு ஏமாற்றம். ஆனாலும் அது அதிர்ச்சியாகவில்லை. டிப்போக்காரன் அத்தி பூத்தது போல் நின்றான். ஒரு சினிமா நடிகர் படம் போட்ட பனியன் சட்டை போட்டிருந்தான். காக்கா மாதிரியான சாய்வு பார்வை. அவன் கால்மாட்டில் மூன்று டிரேய்கள். வழக்கம்போல் மேல்நோக்கி தோன்றாமல் உள்ள்டங்கி கிடந்தன. ஆயாவை பார்த்ததும் அவன் கத்தினான்.

"எவ்வளவு நேரமா உனக்காக காத்திருக்கிறது? ஏன் லேட்டு? இப்படிதான் தினமும் வர்றியா.?"

"இல்ல சாரே! ரெண்டரை மணிக்கே பர்ஸ்ட்ல வந்த பர்ஸ்டுல போறது நான்தான். இன்னிக்குப் பார்த்து நான் கார்டுங்கள கொடுத்து வச்ச வீட்டுக்கதவு மூடிக் கிடக்கு. உன்ன காக்க வைக்கக் கூடாதுன்னுதான் ஓடி வந்தேன்".

" சரி சரி டிரேய காலிபண்ணி சீக்கிரமா கொடு. லாரி வருகிற நேரம்."

"இதோ ஆச்சுப்பா."

ஆயா அந்த மூன்று டிரேகளில் உள்ள உறைகளை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி எண்ணி பாத்திரத்திற்குள் போட்டாள். அறுபது உறைகளுக்கு பதிலாக ஐம்பத்திநாலுதான் கணக்கிற்கு வந்தன. ஆயா மீண்டும் அந்த பாத்திரத்தில் இருப்பதை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி எண்ணி கீழே வைத்தாள். அப்போதும் ஐம்பத்துநாலுதான். பதப்படுத்தப்பட்ட பால் உறையில் மூணக்காணோம். ஒரு லிட்டர் கொண்ட கொழுப்பு சத்து பாலுலயும் ரெண்டக் காணோம். ரெண்டுக்கும் மத்தியா இருக்கற நிலைப்படுத்தப்பட்ட பால் உறையில ஒண்ணக் காணோம். ஆக மொத்தத்துல ஆறக் காணேம்..

ஆயா அருகே டிப்போ கிளார்க் நிற்பதாக அனுமானித்து ஏறிட்டுப் பார்த்தாள். அவனைக் காணாதபோது அக்கம்பக்கம் பார்த்தாள். அவனோ தெருவில் ராக்கப்பனை வழிமறித்து பேசிக் கொண்டிருந்தான். ஆயாவிற்கு சிறிது தெம்பு. ராக்கப்பனை வைத்தே நியாயம் கேட்கலாம்.

ஆயா இடறிய ஒரு காலை இழுத்துப் போட்டுக் கொண்டே அவர்கள் பக்கம் போனாள்.. எதையோ பேசிக் கொண்டிருந்த அவர்கள் பேசி முடியட்டும் என்பதுபோல் காத்திருந்தாள். அவர்கள் பேச்சை நிறுத்துவதாக இல்லை. இவளுக்கு அப்போதே கேட்கவில்லை என்றால் தலை வெடித்து மூளை சிதறிவிடும் போல் இருந்தது. இடைமறித்தாள்.

" ஏம்பா டிப்போ சாரே! மொத்தம் ஆறு உளறங்க குறையுது. மூணு உறையில பால் கசிந்து பாதிதான் இருக்குது. இன்னப்பா இதெல்லாம்?"

" இதுக்குத்தான் நீ முன்னாலேயே வந்திருக்கணும். யாரோ வாடிக்கைக்காரங்க உன் டிரேயில இருந்து எடுத்துட்டுப் போயிருப்பாங்க."

"எங்க ஆளுங்க அப்படிப்பட்ட ஆளுங்க இல்ல நயினா. அடுத்தவங்க உறையில கைவச்சுக் கூட பார்க்க மாட்டாங்க. அப்படிப்பட்ட சனங்க. நீ தெனமும் வந்தால்தானே உனக்கு இது தெரிஞ்சிருக்கும். ஆடிக்கும் அமாவாசைக்குமா வந்தா..."

"ஓகோ... அப்படியா சட்டம் பேசறியா? சரி. கார்டுங்க இருக்கா எடு."

உண்மையின் ஒளிப்பாதையில்
நம்பிக்கை வைத்து அதைப் பின்
பற்றிச் செல்லுங்கள். அந்த
ஒளியே கருமேகத்திலிருந்து
விடுபட்ட சந்திரனைப் போல்
உலகம் முழுவதும்
பிரகாசிக்கின்றது.

— புத்தர்

"அதான் சொன்னேனே. அங்க வெச்சுட்டேன்னு போய் எடுத்துக்கினு வரட்டுமா"

" உனக்காக நான் காத்திருக்க முடியாது. நீ என்னை நம்பாட்டா நான் உன்னை நம்பனுமா?"

**"எதிர்ப்பக்கம் போனாலும் வம்பு... லாரி பக்கம் போனாலும் வம்பு... என்ன செய்யலாம் என்று யோசித்தவளின் தலைக்குகையில் மங்கியதோர் வெளிச்சம்..."**

"சரி உங்கார்டுங்கள நான் கேக்கல. போய்த் தொலை. சும்மா பினாதிட்டு நிக்காதே. அதோ பால் லாரி வருது. டிரைவர் வீட்டுக்கு இன்னைக்கு விருந்தாளிங்க வராங்களாம். ஒன் பாலுல இன்னும் ரெண்டு லிட்டர் போயிடும். சீக்கிரமா காலிபண்ணு."

" அப்ப என்னதான் செய்யனுங்கற?"

என்ன செய்வியோ தெரியாது. இன்னும் அஞ்சு நிமிசத்துல நீ கார்டுங்கள காட்டணும். அதோ தொலைவுல லாரி தெரியுது பாரு. அது வருமுன்னால காட்டனும். இல்லாட்டா இதுங்கள எல்லாம் எடுத்து லாரியில ஏத்திடுவேன்.''

ஆயா, ராக்கப்பனிடம் முறையிடுவதற்காக ஏறிட்டுப் பார்த்தாள். அவன் எப்போதோ நழுவிவிட்டான் என்பது அப்போதுதான் அவளுக்கு உறைத்தது. அவளுக்கு கை, கால்கள் ஆடின. காதுகள் குடைந்தன. கண்கள் எரிந்தன. ஆறுபேருக்கு எப்படி ஜவாப் சொல்வது அத்தன கார்டுகளும் அடுக்கு மாடி கார்டுங்க. அந்த கார்டுங்க சாக்குலதான் அவள் அங்க தங்கியிருக்காள். இன்னைக்கு வேற கசமுசா. ஒருத்தருக்கு கொடுத்துட்டு இன்னொருத்தருக்கு கொடுக்காட்டா அந்த எலி வளையில இருக்க முடியாது. அதோட அது நியாமும் இல்லை. ரெண்டுவாட்டி அரையரை லிட்டரா கொடுக்கறதுக்கு இருபது ரூபா கொடுக்காங்க. எல்லாருமே பாலுக்கு காத்திருப்பாங்க. ஏன் இன்னிக்குப் பார்த்து எல்லாமே என் தலையிலவுழுது.

ஆயா தனக்குள்ளே புலம்பிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். ஆயா கோவிலாகிப் போன கணவனை திட்டினாள். மகளாகப் பிறந்த மச்சகாந்தியை திட்டினாள். மாப்பிளையாகிப் போன அடாவடிப் பயலை திட்டினாள். கவிதாவையும் திட்டப்போனாள். ஆனால் நாக்கைக் கடித்துக் கொண்டாள். இந்தச் சமயத்துல ஏற்படுற வயித்தெறிச்சல் அந்த சின்னஞ்சிறுசை ஏதாவது செய்துடக் கூடாது. மாதம் முள்ளங்கி பத்தையா எழுநூறு ரூபாய் வரைக்கும் வரும். எல்லாரும் சொல்லிவச்சப்பள அவள நிறுத்திட்டா எங்க போறது எப்படி போறது.

டிப்போக்காரனுக்கு ஒருவேளை இரக்கம் வந்ததோ என்னமோ? ஒரு வேளை அதே வருகிற அந்த லாரி டிரைவரிடம் அவள் போட்டுக் கொடுத்துடக் கூடாது என்று நினைத்தானோ என்னமோ? கருணை பரவசமாய் ஆயாவுக்கு அறிவுரை சொன்னான்.

ஆயா, அந்த பாத்தி ரத்தை இழுத்து தலையில் தூக்கப்போன போது லாரி நெருங்கிவிட்டது. எதிர்பக்கம் போனாலும் வம்பு... லாரி பக்கம் போனாலும் வம்பு... என்ன செய்யலாம் என்று யோசித்தவளின் தலைக்குகையில் மங்கியதோர் வெளிச்சம்... உடனே அவள் சாலையில் இருந்து ஒருபொந்தை காட்டியபடியே சிறிது தூக்கலாக உள்ள பிளாட்பாரத்தில் அந்த பாத்திரத்தை எடுத்து வைத்து அதை தரதரவென்று இழுத்து இழுத்து டிப்போவுக்கு பின்னால் வைத்துவிட்டு அவளும் அங்கே ஒளிந்து கொண்டாள்.

எதிர்ப்புறம் உள்ள பச்சை இலைமயப் பின்னணியில் மஞ்சள் பூ கொத்துகளை சரவிளக்குளாய் காட்டிக் கொண்டிருந்த வாகை மரத்தில் ஆயாவிற்காக காத்திருந்த காகங்களுக்கு அவளை காணாததில் ஏமாற்றம். அந்த இளைத்த கிழவியிடம் மட்டுமே தலைக்கு மேல் பறந்து, பாத்திர விளிம்புகளில் தைரியமாக உட்கார்ந்து பாலுறைகளை லாகவமாக கொத்தி குடிக்கலாம். காத்திருந்த காகங்கள் அங்குமிங்குமாக பறந்துவிட்டு இதோ மாதிரி ஒரு மீன்கார, வடைக்கார கிழவி எவளாவது கிடைக்காமலா போவாள் என்ற அனுமானத்தில் பறந்து போயின.

இதற்குள் பால் லாரி வந்தவிட்டது. இருபக்கமும் சாலைகளை அடைத்து தக்காரும் மிக்காரும் இல்லாமல் அனைத்து வாகனங்களையும் ஓரங்கட்டச் செய்து, உருமியபடியே வந்து நின்றது. அந்த உருமலின் பின்னணியில் லாரிக்காரனும், டிப்போக்காரனும் பேசுவது ஆயாவுக்கு சத்தமாகவே கேட்டது.

"டிரைவரண்ணே! போனவாரம் எங்க தாத்தா செத்தாரே. அவருக்கு இன்னிக்கு பாலு.

ஆயா, தனக்கு யாரோ பாலூத்துவது போல அசைவற்று தரைக்குப்போய் குத்துக்காலிட்டு அகலிகைக் கல்லாய் கிடந்தாள்.

# தாய்ப் பல்லாண்டு

• கவிஞர் பொன்மணி வைரமுத்து

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
இல்லாண்ட பெண்ணாள் மணித்தாயே! உன்
தாய்மை மண்ணிற்குத் தனிக்காப்பு!

கருத்தாங்கி மகவைக் கண்மணியாய்க் காத்திருந்து
தானே வளர்க்கின்ற தாய்மைக்குப் பல்லாண்டு!
உருத்தாங்கி வந்தமகன் ஒருநூறு பிழைசெயினும்
உயிர்கொடுத்துக் காக்கின்ற உயர்ந்தவளே
பல்லாண்டு!
வருத்தம் பல உறினும் வயிற்றில் பிறந்த உயிர்
வாடாமல் ஆளாக்கும் வல்லவளே பல்லாண்டு
அருத்தம் தன்வாழ்வில் மகப்பேறால் வந்ததென்று
ஆனந்தம் கொண்டாடும் அன்னைக்குப்
பல்லாண்டு!

பதவிபல பெறினும் விருதுபல உறினும்
பாசம் கனிந்திருக்கும் தாய்மைக்குப் பல்லாண்டு!
நிதமும்புகழ் பெறினும் நிர்வாகம் மேற்கொளினும்
நேசம் நிறைந்திருக்கும் நித்திலமே பல்லாண்டு!
அதிகாரம் கொண்டு அகிலம் வளர்த்திடினும்
அன்பு வளர்த்திருக்கும் அன்னைக்குப் பல்லாண்டு!
புதியதோர் உலகம் உருவாக்கும் போதினிலும்
பொறுமை காத்திருக்கும் தாய்மைக்குப் பல்லாண்டு!



கள்ளிப்பால் ஊற்றிக் கருவழிப்பார் மத்தியிலே
பெண்மகவைக் கொண்டாடும் தாய்மைக்குப்
பல்லாண்டு!
பிள்ளைப்பால் ஊட்டுதற்குப் பிறபால் பிழையென்று
தாய்ப்பால் ஊட்டுகின்ற தாய்மைக்குப் பல்லாண்டு!
துள்ளிவரும் பிள்ளைக்குத் தொட்டிலிட்டுத் தாலாட்டுத்
தானே பாடுகின்ற தாய்க்கிங்கு பல்லாண்டு!
வெள்ளிப்பால் நிலவை வேடிக்கை காட்டியிங்கு
வீரக் கதைசொல்லும் அன்னைக்குப் பல்லாண்டு

எந்திர யுகத்தில் எத்தனையோ பணிநடுவில்
இதயம் தொலைக்காத தாய்மைக்குப் பல்லாண்டு!
இந்திர லோகத்து ஏற்றங்கள் வந்தாலும்
பிள்ளைவரம் பெரிதென்னும் பெரியவளே
பல்லாண்டு!
வந்தனை செய்தாலும் நிந்தனை செய்தாலும்
வாரிசை வாழ்த்துகின்ற அன்னைக்குப் பல்லாண்டு!
இந்திய மண்மகிமை எத்திசையும் உயரக்
காரணமாயிருக்கும் கருணைக்குப் பல்லாண்டு!

• • •

*ஓவியம் : ஷ்யாம்*

# உடம்பு எனும் மொழி

• இந்திரன்



ஓவியம், சிற்பம் ஆகியவற்றில் தமிழர்களுக்கென்று தனியான ஒரு அழகியல் இருக்கிறது. மனித உடம்பு பேசும் மொழியில் சாரமாக எது இருக்கிறதோ அதைக் கைப்பற்ற தமிழ்ச் சிற்பிகள் சதாகாலமும் முயன்று வந்துள்ளனர். இன்றைய நாளில் தற்கால ஓவியர்களும், சிற்பிகளும் முன்னேறிய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, உலகின் பல்வேறு திசைகளிலிருந்து கலைவெளிப்பாடு குறித்த பல்வேறு சிந்தனைகளைப் பெறுகிறார்கள். இது அவர்களது கலை வெளிப்பாட்டின் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டே போகிறது. அதே நேரத்தில் மனித உடம்பு பேசும் மொழியைப் பற்றிய தமிழ்த்தனமான ஒரு புரிதல் எனும் அடையாளத்தை அழித்துவிடும் அபாயமும் குறைந்ததாக உள்ளது.

**உடம்பு : மேலைப் பார்வை கீழைப் பார்வை**

மேலை உலகம், கீழை உலகம் எனும் பேசும் முறை இன்று மாறி வடக்கு உலகம், தெற்கு உலகம் எனும் பேசும் முறை வழக்கில் வந்துவிட்ட இந்தக் கால கட்டத்திலும் கூட கலையைப் பொறுத்தமட்டிலும் இவை இரண்டிற்கும் வேறுபாடு இருக்கவே செய்கிறது.

எடுத்துக்காட்டாக மேலை ஓவிய/சிற்ப மரபுகளில் பறக்கும்

*ஓவியம் : தனபால்*

உருவங்களைக் காட்ட வேண்டுமானால், மனித வடிவங்களுக்கு இரண்டு சிறகுகளைப் பொருத்திக் காட்டினால்தான் அது பறக்கும் உருவம் என்று தெரியப்படுத்தும் முறை பரவலாக உண்டு. கோதிக் கலை முறையைச் சார்ந்த தேவாலயங்களில் இதனைக் காணலாம்.

ஆனால் அதே நமது தமிழ்நாட்டுச் சுவரோவியங்களை எடுத்துக் கொண்டால் அதில் கின்னரர்களும், கிம்புருடர்களும் இசைக் கருவிகளை இசைத்தபடி வானில் பறந்து செல்வதைச் சித்தரிக்கையில் அவர்களுக்கு இறக்கைகள் எதையும் தமிழர்கள் தரவில்லை. காரணம் உடம்பை படுத்துக் கொண்டு நீந்துவது மாதிரி அமைக்கும் முறையிலும், கால்களை நீச்சலில் உதைப்பது மாதிரி தூக்கிய நிலையில் அமைப்பதிலும் மூலமாகவே



ஓவியம் : இராமன்

தமிழர்கள் அவர்கள் பறக்கின்றனர் என்று காட்டி விடுகின்றனர். இதனையே நான் தமிழ் அழகியல் என்று குறிப்பிடுகிறேன். இத்தகைய போக்கை அஜந்தாவில் 17வது குகையில் தீட்டப்பட்டிருக்கும் பறக்கும் கந்தர்வர்கள் எனும் ஓவியத்திலும் காணலாம். எனவே மனித உடம்பு சொல்லும் மொழியை கீழைத்தேயத்தவர் பார்க்கும் முறைக்கும், மேலைத் தேயத்தவர் பார்க்கும் முறைக்கும் வேறுபாடு உண்டு. இந்த மாறுபாடு அந்தந்த பண்பாட்டின் பின்னணியில் முடிவு செய்யப்படுகிறது.



ஓவியம் : ராசவேலு

**உடம்பின் இயக்கம்**

உடம்பு என்று குறிக்கிறபோது மனித உடம்பை மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உடம்புகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டே பேசுகிறோம். புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் இருக்கும் சித்தன்னவாசல் ஓவியங்கள், தஞ்சாவூரில் உள்ள சுவரோவியத்தின் நடனமாடும் நங்கை, காஞ்சிபுரத்திற்கு பக்கத்திலுள்ள திருப்பருத்திக் குன்றம் சமணக்கோயிலின் சுவர் சித்திரங்கள் ஆகிய அனைத்திலும் உடம்பின் இயக்கம் குறித்த சிறப்பான புரிதலைக் காணலாம்.

திருப்பருத்திக் குன்றத்தில் பிறக்கும் தீர்த்தங்கரரை கரத்தில் வாங்கிக் கொள்ளும் அரசி, அப்படியே திரும்பி மறுபுறத்தில் நிற்கும் அரசரிடம் கொடுப்பது போல ஒரு அசைவையே ஓவியத்தில் நிகழ்த்திக் காட்டி உள்ளனர். இது மார்ஷல் டுஷாம்ப் (MARSHAL DUCHAMP) எனும் மேலை ஓவியன் ''படியிறங்கும் நிர்வாண நங்கை'' (DESCENDING NUDE) எனும் ஓவியத்தில் செய்து காட்டிய 'இயங்கும் ஓவியம்'

(ACTION PAINTING) என்பதைக் காட்டிலும் சிறந்த கலை சாதனை என்றே நான் சொல்லுவேன்' இவற்றைச் சரிவர பதிவு செய்து உலகெங்கும் பரவும் வகை செய்கிறபோது உலக அளவில் இவற்றைக் கலை அறிஞர்கள் கண்டு வியக்க இயலும்.

தஞ்சாவூரில் சுவரோவியத்தில் இருக்கும் நடனநங்கை ஓவியத்தைக் காண்கிற போதும் இதை உணரலாம்.

### ஓவிய வெளிப்பாட்டில் 'இறைச்சிப் பொருள்'

தமிழ் அழகியலின் அடிப்படை சொல்ல வரும் செய்தி, வெளியே விளங்கித் தோன்றாமல் இலைமறை காயாக, கலைப்படைப்பின் உட்கிடையாக வைத்துச் சொல்லுதல் ஆகும். இதில் மிகை நாடகத் தன்மை இன்றி மிக நுட்பமாக செய்தி சொல்லப்பட்டுவிடும்.

இதற்கான மிகச் சரியான உதாரணம் சங்க இலக்கியம் தோறும் பரவி இருக்கும் 'இறைச்சிப் பொருள்' அல்லது 'உள்ளுறை உவமம்'. இன்றைக்கு தமிழில் பிரபலமாகி இருக்கும் கவிதை வகையான, ஜப்பானிய கவிதை மரபான, 'ஹைக்கூ' இதற்கான சரியான உதாரணம். ஓவியத்திலும், சிற்பத்திலும் கூட இத்தகைய நுட்பமான செய்திப் பரிமாறலை, உணர்ச்சி வெளிப்பாட்டைத் தமிழர்கள் மேற்கொண்டனர். இத்தகைய நுட்பமான கலை வெளிப்பாட்டிற்கான ஒரு கருவியாக மனித உடம்பின் மொழியைப் புரிந்து வைத்திருந்தனர் நமது சிற்பிகள்.

### யதார்த்தத்தின் யதார்த்தம்

நமது சிற்பிகளும், ஓவியர்களும் மனிதர்களைச் சித்தரிக்கும் போது யதார்த்த வெளிப்பாட்டின் திசையைத் தேர்ந்தெடுக்காமல், அந்த யதார்த்தத்தின் சாரமாக எது இருக்கிறதோ அதையே தேர்ந்தெடுத்தனர். மேலைநாடுகளின் சிற்பிகளும், ஓவியர்களும் உடலமைப்பறிவைப் பெறுதல் வேண்டி உடம்பினை அறுத்து அதன் கூறுகளைப் புரிந்து கொள்ள முற்பட்டனர். ஓவியம் தீட்டுவதற்கென ஒரு 'மாதிரி'யை (Model) கண் முன்னால் அமர வைத்து அதனைப் பிரதி எடுத்துத் தங்கள் படைப்புகளைச் செய்கின்றனர். ஆனால் நமது மரபு அத்தகையது அல்ல.



*ஓவியம்* : இந்திரன்

உடலமைப்பறிவியலில் நமது சிற்பிகளும், ஓவியர்களும் காட்டிய அக்கறையைவிட அந்த உடலமைப்பின் ஊடாக ஓடும் ஒரு இசைலயத்தைக் (சுலவாஅ) கைப்பற்றுவதில் அதில் அக்கறை காட்டினர். சிற்பத்துக்குள் கண்ணுக்கு வெளிப்படையாகத் தோன்றாமல், உட்கிடையாகத் தெரியும் இந்த சந்தலயத்தை 'உயிரிசை' என்றே குறிப்பிடலாம். தமிழகத்தின் கலைச் சாதனையாகக் கருதப்படும் செப்புத் திருமேனிகளின் உருவங்களில் மனித உடம்பின் ஊடாக இந்த பிராண சந்தத்தையே வெற்றிகரமாகக் கைப்பற்றி இருக்கிறார்கள்.

ஒரு மனிதனை உருவ மாதிரியாக ஓவியனின் கண் முன்னால் உட்கார வைத்துவிடுகிறபோது இயக்கமற்றுப் போய் அவனது உடம்பு உயிர்த்துடிப்பை இழந்துவிடுகிறது. ஆனால் அதே மனிதன் இயங்கிக் கொண்டிருக்கும் போது உடலின் அங்க இணைப்புகளின் சம்பந்தம், தசைக்கட்டு, தசை நார்களின் இயக்கம் ஆகியவற்றை நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. இந்த புரிதலின் அடிப்படையில்தான் யதார்த்தத்தை மீறிய யதார்த்தங்களை நமது கலை முன்னோடிகள் சாதித்து இருக்கிறார்கள்.

ஆணின் வடிவமும், பெண்ணின் வடிவமும் கலந்து 'உமையொரு பாகன்' சிற்பத்தை உலோக வார்ப்படமாக வார்த்து எடுக்கிறபோது யதார்த்தத்தை மீறிய ஒரு புதிய யதார்த்தத்தை அவர்கள் சாதித்துக் காட்டி

இருக்கிறார்கள். இதைக்கண்டு அனுபவிக்க வேண்டுமானால் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள படிமக் கூடத்தில் நுழைந்தவுடன் காட்சி தரும் ‘அர்த்த நாரீஸ்வரர்’ சிற்பத்தைக் கண்டால் போதும். ஆணும், பெண்ணும் அந்த சிற்பத்தின் முகத்தில் அளவு குறையாமல் எந்த விகிதாசாரத்தில் அந்த சிற்பி கலந்து வெற்றிகண்டான் என்பதை அறிவியல் கூறமுடியாது. அது முழுக்க முழுக்க அந்த சிற்பிகளின் அழகியல் ஆளுமையின் வெளிப்பாடு. இதுவே தமிழ் அழகியல்.

ஓவியத்தமிழ் மரபு

ஓவியர்களைக் ‘கண்ணுள் வினைஞர்’ என்று பேசுகிறது மதுரைக் காஞ்சி. கண்ணால் பார்க்கப்படும் காட்சியைப் பிரதிபலிப்பவன் அல்ல ஓவியன். அந்த கண்ணின் உள்ளிருக்கும் மற்றொரு கண் மூலமாகக் காணும் காட்சியைப் பிரதிபலிப்பவனே ஓவியன். எனவேதான் அவன் ‘கண்ணுள் வினைஞன்’. தனக்கு முன்னால் ஒரு ஆணை அல்லது பெண்ணை அசையாமல் உட்கார வைத்துவிட்டு ஓவியம் தீட்டுபவன் அல்ல பழந்தமிழ் ஓவியன். ஓவியம் தீட்டும் செய்தியைப் பேசுகிறபோது,



“உள்ளக் கிழியில்
உருவெழுதி”

– என்று பேசுகிறது பழந்தமிழிலக்கியம். கண்முன்னால் காணும் காட்சியை ஓவியக் கித்தானில் தீட்டாமல், வெளிக்காட்சியை மனத்திரையில் ஓவியமாகத் தீட்டிக்கொண்டு அதன்பிறகு அதனை ஒரு புறக்காட்சியாகத் தீட்டும் செயல்பாட்டையே பழந்தமிழிலக்கியம் பேசுகிறது.



ஒலியின் அடிப்படையாகக் கொண்ட மொழி தோன்றுவதற்கு முன்னால், உடம்பின் மூலம் பேசும் மொழி, தோன்றியிருக்கிறது. இந்த உடம்பின் மொழியை மிகச் சிறந்த ஒரு வெளிப்பாட்டுக் கருவியாக வளர்த்துள்ளனர் நமது கலை மேதைகள் என்பதை தமிழகம் முழுவதும் காணக் கிடைக்கும் கலைப்படைப்புகள் சான்று சொல்கின்றன. மனித உடம்பின் மூலமாக மிக நுட்பமாகப் பேசும் தமிழர்களின் கலை வெளிப்பாட்டு மரபை நமது தற்கால ஓவியர்களும், சிற்பிகளும் எந்த அளவுக்குப் புரிந்து கொள்ளுவார்களோ அந்த அளவுக்கு அவர்களது படைப்பு சிறக்கும். தமிழகத்தின் தற்கால ஓவியம்/ சிற்பம் உலக அரங்கில் ஒரு உன்னதமான இடம் பெறும்.

• • •



# இந்திய மொழிகளில் நாவல்கள் தோற்றம்

அசோகமித்திரன்

ஓவியம் : மகி

முதல் நாவல்கள் பற்றிக் கருத்தொற்றுமை எளிதில் காணப்படுவதில்லை. ஆங்கிலத்தில் முதல் நாவலாகச் சிலர் 'பமேலா' என்ற நவீனத்தைக் குறிப்பிட்டாலும் அதே நேரத்தில் முதல் யதார்த்தப் புனைகதை நவீனமாக 'டாம் ஜோன்ஸ்' நாவல்தான் என்றும் கூறப்படுகிறது. 'பமேலா' நாவலை எழுதிய சாமுவேல் ரிச்சர்ட்ஸன் அதற்கு ஒரு மாற்றுத் தலைப்பாக 'வெர்ச்சூ ரிவார்டட்' (நன்னடத்தைக்கு வெகுமானம்) என்று வைத்ததே 'டாம் ஜோன்ஸ்' எழுதிய ஹென்றி ஃபீல்டிங் தன்னுடைய நாவலைக் கேளிக்கை மிகுந்ததாக எழுதினார் என்றும் கூறுவதுண்டு டாம் ஜோன்ஸ் நன்னடத்தையின் எடுத்துக்காட்டாகச் சித்திரிக்கப்பட வில்லை.

இவ்விரு நாவல்களுக்கு முன்ன தாகவே டேனியல் டெஃபோ இரு நாவல்கள் எழுதியிருக்கிறார். ஆனால் நாவலுக்குச் சமூகச் சித்திரிப்பும் யதார்த்தத்தன்மையும் இலக்கணமாக அமைக்கப்பட்டிருப்பதால் தமிழில்கூட காலத்தால் முன்னர் எழுதப்பட்ட ஒரு கவிதை 'நாவல்' முதல் தமிழ் நாவலாகக் கருதப்படுவதில் தயக்கமிருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் நாவல்கள் எழுதப்படுவதும் பிரசுரமாவதும் அவை படிக்கப் படுவதும் மறக்கப் படுவதும் விசேஷ கவனம் அல்லது சிந்தனைக்கு உரியதாக நினைக்கப் படுவதில்லை. அதாவது இவை சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாகிவிட்டன. நிகழ்ச்சி என்று கூறுவதுகூட மிகை. வெயில், காற்று, காலைச் சூரியன், அமாவாசை இருட்டு போல இவை எப்பதிவும் ஏற்படுத்தாது நடந்து விடுகின்றன. ஆனால் ஒரு காலத்தில் நாவல் என்ற இலக்கிய வகை இந்திய மொழிகளில் இல்லாதபோது அவற்றின் தோற்றம் எவ்வளவு சிக்கல் மிகுந்ததாயிருந்தது என்று அறியும்போது பிரமிப்பாக இருக்கிறது.

ஒரு முக்கிய காரணம் இலக்கியம் என்பதே செய்யுள் வடிவத்தில்தான் இருந்தாக வேண்டும் என்ற எண்ணம் காலம் காலமாக ஊறிப்போயி ருந்ததைக் கூறலாம். உரைநடை சில குறிப்பிட்ட பயன்களுக்காக மட்டுமே பயன்படுத்துவது என்றிருந்தது. இலக்கியம் தரும் கற்பனை அனுபவத்திற்கு உரைநடை உரிய தாகக் கருதப்படவில்லை.

ஒவ்வொரு மொழியிலும் ஒரு தனி மனிதரின் சாதனையாக நாவலின் தோற்றத்தைக் கூறிவிட முடியாது. உரைநடை, குறிப்பிட்ட பயன்களுக் காகப் பயன்படுத்துவது என்பது போல நாவலும் ஒரு குறிப்பிட்ட பயனுக்காகத் தோற்றம் கொண்டது எனக் கூறலாம். இதற்கு வங்காள அனுபவம் விளக்கமாக அமையக்கூடும்.

உரையாடல் தவறாது இடம்பெற்றது. அவரே அந்த முதல் நூலில் சில உரையாடல்களை வங்காள மொழியில் தந்திருந்தார்.

ஏறத்தாழ அதே காலத்தில் அதே கல்லூரியில் இந்தி, உருது மொழிகளுக்கும் பாடநூல் தயாரிப்பு தேவைப்பட்டது. இதை ஜான் கில்கிரைஸ்ட் என்ற இன்னொரு பாதிரியார் நிகழ்த்தினார். இவர் உருது மொழி வல்லுநர்களை நாடிப் பல ஊர்கள் சென்றார் என்று தெரிகிறது. டில்லியிலிருந்து கிழக்கே லக்னோ, அயோத்தி வரை இந்தி-உருது பேசப்பட்டாலும் ஊருக்கு ஊர் மொழி சிறுசிறு நுணுக்கமான வேறுபாடுகள் கொண்டதாயிருந்தது. கில்கிரைஸ்ட் நாடிய மொழி வல்லுநர்கள் சமஸ்கிருதம், பாரசீகம், ஆங்கிலம்

முயற்சியில் கிறித்துவப் பாதிரியார்கள் ஈடுபட்டார்கள். மதமாற்றம் அவர்களுடைய விரதங்களில் ஒன்று என்பதால் விவிலியம் மொழி பெயர்க்கப்பட்டதில் வியப்பில்லை. தமிழ் வரையில் ஜான் பன்யன் படைத்த 'பில்கிரிம்ஸ் பிராக்ரஸ்' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு உருப்பெற்றது.

கிறித்துவ மதம் பரப்பவென உரைநடை இந்தியாவில் முதலில் தோன்றினாலும் ஏறத்தாழ அதே கால கட்டத்தில் பத்திரிகைகளும் தோன்றத் தொடங்கியதால் உரைநடை வளர்ச்சி மேலும் வலுப்பெற்றது வங்காள மொழியில் 1818ல் முதல் செய்தித்தாள் தொடங்கியதாகத் தெரிகிறது. இதைத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்குள் ராம்மோகன் ராயின் 'சம்பாத கௌமுதி'

> **ஒவ்வொரு மொழியிலும் ஒரு தனி மனிதரின் சாதனையாக நாவலின் தோற்றத்தைக் கூறிவிட முடியாது.**

வில்லியம் கோட்டைக் கல்லூரிக்கு வில்லியம் காரி என்ற கிறித்துவப் பாதிரியார் வங்காள மொழி ஆசிரியராக 1801ல் நியமிக்கப்பட்டார். பிரதானமாக ஆங்கிலேயர்களுள் இந்திய மொழி மற்றும் கலாச்சாரம் பற்றிய பரிச்சயம் ஏற்படுத்துவது வில்லியம் காரியின் பொறுப்பாக இருந்தது. இந்திய மொழி மற்றும் கலாச்சாரம் பற்றிப் பாடம் நடத்தத் தகுந்த பாட நூல்கள் இல்லை. சில மொழி வல்லுநர்களை அழைத்துக் கட்டுரைகள், கதைகள், உரையாடல்கள் ஆகியவற்றைக் காரி பாதிரியார் வங்காள உரைநடையில் மொழி பெயர்க்கச் செய்தார். சமஸ்கிருதம் மட்டுமல்லாத வேறு மொழிகளி லிருந்தும் அவர் இந்த வங்காள மொழி பெயர்ப்பை ஊக்குவித்தார். அவர் முயற்சியால் 1801ம் ஆண்டிற்குரிய 'பிரதாப ஆதித்யச் சரித்திரம்' என்ற நூல் வங்காளத்தில் தோன்றியது. இதுவே வங்காள மொழியின் 'முதல் சரித்திர நாவல்' என்று கூடக் கூறியவர்கள் உண்டு. காரி பாதிரியார் ஊக்குவித்த படைப்புகளில்

ஆகிய மொழிகளிலிருந்து உருது மொழியாக்கம் செய்ததோடு, புதியதாகவும் சில படைப்புகளை உருவாக்கியதாகத் தெரிகிறது. காரி பாதிரியார் வங்காள மொழி மட்டுமல்லாது வேறு இந்திய மொழிகளுக்குப் பாட நூல்கள் தயாரிப்பதிலும் ஈடுபட்டார். காரி பாதிரியார் சமஸ்கிருத மொழியைப் பிரதான, ஆதார மொழியாகக் கொண்டு அதிலிருந்து வங்காளம், மராத்தி மொழிகளில் உரைநடைப் பாடநூல்கள் அச்சிட வைத்தார். கோல்கத்தா நகரத்தின் புறநகர்ப் பகுதியில் செராம்பூர் எனும் இடத்தில் அவர் நிறுவிய அச்சகத்திலிருந்து வெவ்வேறு இந்திய மொழிகளில் உரைநடைப் படைப்புகள் வங்காளம் மட்டுமன்றி இதர வட இந்தியப் பிரதேசங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டன.

இவ்வாறுதான் இந்திய மொழிகளில் உரைநடை எழுத்து வடிவில் பதிவு செய்யக்கூடிய வகையில் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது: அநேகமாக எல்லா மொழிகளிலும் இம்

மற்றும் பவானிசரஸ் பானர்ஜியின் 'சமாச்சார் சந்திரிகா'வும் 1822ல் தோன்றிவிட்டன.

மெக்காலே துரையின் கல்வி யறிக்கை 1835ல் இந்திய நாட்டிற்குப் புதியக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியதோடு ஆங்கிலம் படிக்கக்கூடிய இந்தியரிடம் ஒரு பண்பாட்டு மாற்றத்துக்கும் காரணமானது. ஒரு புறம் மிலேச்ச மொழி, மிலேச்ச மனப்பான்மை என்று மிகுந்த வெறுப்பு நிலவிய போதும் அதே நேரத்தில் ஆங்கிலேயர்களும் ஆங்கில மொழியும் விரும்பத் தக்கதாகவும் உணரப்பட்டது. ஆங்கில மொழி செல்வாக்குக்குரியதாயிற்று.

சென்னை, கோல்கத்தா, மும்பை போன்ற நகரங்களில் மத்தியதர வர்க்கம் பெருகத் தொடங்கியது. ஆங்கில மொழிப் பரிச்சயத்தோடு ஆங்கில மொழி இலக்கியங்களுக்கும் விசேஷ வரவேற்பு இருந்தது. ஷேக்ஸ்பியர், டானியல் டெஃபோ, வால்டர் ஸ்காட் போன்றோர் படைப்புகள் ஆர்வத்துடன் படிக்கப் பட்டன. வட இந்திய மொழிகளில்,

குறிப்பாக வங்காளத்தில் இந்த ஆர்வம் உள்ளூர் மொழிகளில் புனைகதைப் படைப்புகள் முயற்சி செய்யப்படக் காரணமாயின. தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் படைப்பாளிகள் இந்த முயற்சியில் சற்றுத் தாமதமாகவே இறங்கினர். தமிழ் வளர இரு காரணங்கள். இலக்கணத் தமிழ் பண்டிதர்கள் வசமிருந்தது. தமிழ் மொழியில் பரிசோதனைகள் மிகுந்த சந்தேகத்துடன் எதிர்கொள்ளப்பட்டன. இரண்டாவது, சற்றுத் தீவிரமானது. படித்தவர்கள் மத்தியில் தமிழுக்குரிய கௌரவம் தரத் தயக்கம் இருந்தது. தமிழை இளப்பமாகக் கூட எண்ணியிருக்கிறார்கள்.

படித்தவர்கள் பெருகிவந்ததால் படிப்பதற்கான நூல்களின் தேவையும் அதிகரித்தது. சொந்த மொழி படிப்பதைவிட ஆங்கிலத்தில் படிப்பதே விரும்பப்பட்டது. மேலும் சமூக அந்தஸ்தோடுப் பொருளாதார ரீதியிலும் ஆங்கிலம் படிப்பது சலுகைக்குரியதாயிற்று. ஆனால் என்னதான் ஆங்கிலத்தில் படித்தாலும் அவை உணர்த்தும் அனுபவங்களைப் பூரணமாகப் பெற முடியாது என்றும் தெரிந்து விட்டது. எவ்வளவுதான் 'ஐவன்ஹோ' சுவாரசியமாயிருந்தாலும் அந்த நாவலும் கதாநாயகனும் அன்னியமாகத் தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. அதே நேரத்தில் இந்தியப் பின்னணியில் ஏராளமான வீரர்களும் பாத்திரங்களும் காலம் காலமாக இந்திய உணரப்பட்டது. முதல் இந்திய மொழி நாவலாக 'துர்கேச நந்தினி' என்ற படைப்பை நாவல் வடிவத்தில் 1865ல் பங்கிம் சந்திர சாட்டர்ஜி படைத்தார்.

தமிழ்நாட்டில் உரைநடைப் படைப்புகள் படைக்கப்பட எல்லா வாய்ப்புகளும் இருந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் தமிழ் நாடெங்கும் பல பள்ளிகள் ஆங்கில மொழிப் படைப்புகளை அறிமுகப் படுத்தியதால் தமிழ் மொழியிலேயே புனைகதை படைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் நிச்சயம் பலருக்குத் தோன்றியிருக்க வேண்டும். அச்சக வசதி இருந்தது ஒரு கூடுதல் வாய்ப்பு. சமஸ்கிருதத்திலிருந்து பல படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. ஆனால் உரைநடை இலக்கியமாகவும் கருதப்படக்கூடும் என்ற பொது எண்ணம் ஏற்படவில்லை. நீண்ட கதைப் பாடலை நவீனம் அல்லது நாவல் என்று ஒரு சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது. வித்துவான் சேஷையங்கார் திருவிதாங்கூர் (இன்றைய கேரளத்தின் ஒரு பகுதி) நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். அவர் குடும்பத்தில் பெருந்துக்கம் விளைவிக்கும் வகையில் அவருடைய பதிமூன்று வயது மகள் தன் கணவனை இழந்தாள், "என் அருமை மகள் ஒரு விதவையாக வாழ்ந்து அவமதிப்புக்கும் அவமானத்துக்கும் உள்ளாகி வாழ்க்கை முழுதும் துன்பத்தை அனுபவிக்கும் அனுபவம் அவரை ஒரு இலக்கியப் படைப்புக்கு உந்துகிறது. அதுவே 'ஆதியூர் அவதானி சரிதம்' இது இப்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்தபோது 'முதல் தமிழ் நாவல் என்று குறிப்பிடப்பட்டாலும் சேஷையங்கார் அதை 'நவீனமாக இயற்றிய கட்டுரைக் கதை' என்றே குறிப்பிடுகிறார். இது 1875ல் வெளியாகியிருப்பதால், காலத்தால் 'பிரதாப முதலியார் சரித்திரம் நூலுக்கு முந்தையது. 'ஆதியூர் அவதானி சரிதம்' நூலை சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆஷல் என்ற ஆய்வாளர் ஒரு கட்டுரையில் பெயர் சொல்லாது குறிப்பிடுகிறார். அவர் அதை நாவலாக ஏற்கவில்லை. இன்று இந்தப் படைப்பு நூல். வடிவத்தில் கோவை விஜயா பதிப்பகம் வெளியீடாகக் கிடைக்கிறது. இந்த நூல் புத்துயிர் பெற்றதற்கு முக்கிய காரணமானவர்கள் இலக்கிய இரட்டையர்கள் என்று அறியப்படும் சிட்டி (பெ.கோ. சுந்தரராஜன்) மற்றும் சோ. சிவபாத சுந்தரமாவர். நூலை நல்ல முறையில் அறிமுகப்படுத்தி, இதுவே தமிழின் முதல் நாவல் என்று நிறுவ முயன்றிருக்கின்றனர். அவர்களுடைய முக்கிய வாதம் விக்ரம் சேட் என்றவர் 1990களில் 'கோல்டன் கேட்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கதையைப் பலப் பதினான்கு வரிக் கவிதைகளில் படைத்திருக்கிறார். இது நாவலாக ஏற்கப்பட்டதோடல்லாமல் பல

> **இந்தியப் பின்னணியில் ஏராளமான வீரர்களும் பாத்திரங்களும் காலம் காலமாக இந்திய இலக்கியங்களில் இருந்திருக்கிறார்கள்.**

இலக்கியங்களில் இருந்திருக்கிறார்கள். உரைநடைப் புனைகதை வடிவத்தில் இல்லை என்பது தவிர எழுதப் படிக்கத் தெரியாத மக்களிடையே கூட ஏராளமான கதைகள் புழக்கத்தில் இருந்தன. கதைகள் புனைவதில் இந்தியர் எவருக்கும் பின்தங்கிய தில்லை என்பதும், புதிய இலக்கிய வடிவமாக நாவல் என்று இந்திய மொழிகளில் படைக்கப்பட வேண்டும் என்றும் ஒரு சிலராலாவது விதவை என்ற நிலையை அடைந்து விட்டது எனக்குத் தீராத கவலையாக நேர்ந்து விட்டது", என்று அவர் ஒரு முறை கூறியிருக்கிறார். சமூக சீர்திருத்தம் தனிநபர் துயரத்திலிருந்தும் அநீதியிலிருந்தும்தான் உருக் கொள்ளத் துவங்குகிறது. சேஷையங் கார் மிகுந்த தீரத்துடன் பலத்த எதிர்ப்புகளுக்கும் இழப்புகளுக்கும் இடையே தம் மகளுக்குப் புதுவாழ்வு அளிக்க முயலுகிறார் - இந்த இலக்கியப் பரிசுகளும் பெற்றிருக்கிறது. 'கோல்டன் கேட்' ஒரு நாவல் என்றால் 'ஆதியூர் அவதானி சரிதம்' ஒரு நாவலாக ஏற்கப்பட்டாக வேண்டும்.

இந்த வாதத்தில் நியாயமில்லை என்ற கூற முடியாது அல்லவா?

□ கவிஞர் தமிழன்பன்

# சாமக்கோடாங்கி

ஊரின் உடம்பு
வெதுவெதுப் படையக்
குடுகுடுப்பை
ஒரு மூலையில் தொடங்கியது,
ஒலிக்க.
சாமக்கோடாங்கி
வருகிறான்

பழுக்கத் தாமதித்த
காய்கள் பயப்படுகின்றன
செடிகொடிகள் காம்புகளில்
குறைப் பிரசவங்கள்.

குடுகுடுப்பை ஓசை
கூடுகளில் நுழைகிறது
கிழிந்த உறக்கத்தின் வழியாக
மலங்க மலங்கப்
பார்க்கின்றன பறவைகள்.

நள்ளிரவின் மீது
நடந்து வருகிற கோடாங்கி
நாவில்
உச்சாடனமாகும் நல்லகாலம்
கறுப்பு நிறத்தில்
கடக்கிறது வாசல் வாசலாய்

மக்களின்
மங்கலான பேச்சுக்குள்
பயத்தை விதைத்தபடி
மயானம், மண்டையோடு
மை, மாந்திரிகம்
நுழைகின்றன

மலையாள பகவதி
ஓசைவிழுது பிடித்து
ஊருக்குள் இறங்குகிறாள்.

வாய்பிளக்கும் வார்த்தைகளுக்குள்
ஜக்கம்மாவின்
மிரட்டும் கண்கள் இமைபிளந்து
ஏறிட்டுப் பார்க்கின்றன.

வாய்கட்டப்பட்ட
நாய்களின் கண்களில் குந்திய
நாழிகைகள்
நடுங்குகின்றன.

காற்று
குடுகுடுப்பை ஓசையோடு சேர்ந்து
ஊளையிடுகிறது.
இருளின் அடிவயிற்றை
அச்சம் பிசைகிறது.

கோடாங்கியின்
சட்டை ஒட்டுகளைப்
பிய்த்து எறிகிறாள் மலையாள பகவதி.

'நல்லகாலம் வருகுது
நல்லகாலம் வருகுது'
அவன் நாக்கைப்
புரட்டி எடுக்கிறாள்.

சாமக் கோடாங்கியின்
முண்டாசைக் கிழித்துச்
சாட்டையாய்ச் சுழற்றும்
அக்கம்மா பார்வையில்
இஞ்சி முளைக்குது
எலுமிச்சை பழுக்குது.

நிர்வாணமான
சாமக் கோடாங்கி நெற்றியில்
முத்தம் கொடுக்கிறாள் பகவதி.



சிவக்கச் சிவக்க
ஓசையைச் சுட்டெடுத்த
குடுகுடுப்பையை
வெடுக்கென்று கழற்றி
வீசியெறிந்தாள்.

ஜக்கம்மா கையில்
சாமக்கோடாங்கி
உடுக்கை யாகிறான்
அம்மணமான அவன்உடம்பு
துடிக்க
துடிக்கிறது.
'குடுகுடுகுடு'
ஓசை மடிந்து.

ஊரின் நல்ல காலம்
மீண்டும்
குடுகுடுப்பையைத் தேடுகிறது
சாமக்கோடாங்கியைத்
தேடுகிறது.

• • •

*ஓவியம்* : கோபுலு

# செண்பகயட்சி

ஏ.ஸி. ஓடிக் கொண்டிருந்தது. எனினும் அறைக்குள் புழுக்கமாக உணர்ந்தாள். கனத்த திரைச்சீலைகளுடன் சன்னல்கள் மௌனமாக உறைந்து நின்றன. சோபாக்கள் தரையில் பாரமாக அழுந்தி அமர்ந்திருந்தன. டீபாயில் குடித்து மிச்சம் வைக்கப்பட்ட நீரில் கூட அலைகளேயில்லை. தண்ணீரும் கண்ணாடியாக மாறிவிட்டது போலிருந்தது. அந்த அறைநிலையைத் தாங்கமுடியாமல் ராகினி எழுந்து சென்று ஜன்னல் திரையை விலக்கினாள். கனத்த கண்ணாடிக்கு அப்பால் சாம்பல் நிறத்தால் வரையப்பட்ட ஓவியம் போல நிலாவொளி பரவிய தோட்டம் தெரிந்தது. குளிர்ந்த கண்ணாடியில் கன்னங்களை அழுத்தியபடி உற்றுப் பார்த்தாள். வெளியே வாழைமரங்களின் இலைகள் பளபளவென்று அசைந்தன. மாமரத்தின் நிழல் வட்டமாக தடாகம் போல தரையில் விழுந்து கிடந்து மெல்லத் ததும்பியது. அப்பால் நிலவொளி நேரடியாக விழுந்து கிடந்த மண்பாதை உலோகத்தாலான ஒரு பட்டை போல ஒளிவிட்டது. அதில் இருந்த சிறு சிறு கூழாங்கற்கள் கூட விசித்திரமான முப்பரிமாணத்துடன் தெரிந்தன. ஒரு சருகு நிலவொளியை துழாவியபடி சுழன்றிறங்கி மண்ணில் படிந்து அமைந்தது.

நிலவொளியின் எல்லைக்கு அப்பால் மரக் கூட்டங்கள் நிழலாகி அடர்ந்து மெல்ல இறுகி, இருளாக மாறி, பரந்து கிடந்தன. அந்த ஆலமரத்தடியில் ஒரு பழைய கற்பீடம். அதில் மூக்கும் முலையும் தேய்ந்து போன புராதனமான ஒரு கற்சிலை. நல்ல கருங்கல் சிற்பம்தான். ஆனால் காலாகாலமாக மழையிலும் வெயிலிலும் நின்று நின்று அது சொரசொரவென்றாகி விட்டிருக்கிறது யானையின் தோல்போல.

ராகினி அதைப் பார்க்கவில்லை. வந்து எட்டு நாளாகியும் பயணியர் விடுதியின் எல்லையை விட்டு செல்ல நேரவில்லை. ஒரு வேளை பார்க்காததனால் தான் இப்படி மனம் மீண்டும் மீண்டும் அந்த இடத்திற்குச் செல்கிறதா என்ன?

பழைய விடுதி. முன்பொரு காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு உறவுள்ள ஏதோ நிலப்பிரபுவின் அரண்மனையாக இருந்திருக்கிறது. பெயர்கூட ரவி சொன்னான். மறந்து விட்டது. பேருடன் 'வீர' என்ற அடைமொழி உண்டு. இத்தனை பெரிய அரண்மனையை கட்டி இதன் அறைகளை முழுக்க பொன்னாலும் பெண்ணாலும் நிரப்பி வைப்பதற்கு கண்டிப்பாக வீரம் தேவைதான். வந்த முதல்நாள் அவளுக்கு அந்த இடமே பிடிக்கவில்லை. மிகப்பெரிய தோட்டம் பராமரிப்பு இல்லாமல் புதர்களும் சருகுகளும் மண்டிக் கிடந்தது. அதனூடே ஒற்றையடிப் பாதைகள் விழுந்து கிடந்தன. மரங்களில் கொடிகள் அடர்ந்து ஏறி கிளைகளையெல்லாம் சுற்றி வரிந்திருப்பது பீதியூட்டு வதாக இருந்தது.

"என்ன ரவி இது? பயமா இருக்கே?" என்றாள்.

☐ ஜெயமோகன்

"என்ன பயம்? பிஸினஸ்ல டென்ஷன் வரும்போது இன்னைக்கு சிட்டில உள்ள எல்லா பெரும்புள்ளிகளும் இங்கேதான் வராங்க. மினிஸ்டர்ஸ் கூட வராங்க. நான் எஸ்.ஆர்.கெயை முதல்முதலா பார்த்ததே இங்க வச்சுதான்"

ஆனால் அறைகள் சுத்தமாகவும் நவநாகரீக வசதிகளுடனும் இருந்தன. தோட்டம் வேண்டு மென்றேதான் அப்படி விடப்பட்டிருக்கிறது என்று புரிந்தது. மிகப்பெரிய தேக்கு மரக்கதவுகளும், உட்கார்ந்தால் உறுத்தும் சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய கனத்த இருக்கைகளும் தான் பழைமையை நினைவு றுத்தின.

முதல் இரு நாட்கள் ரவி பதற்றமாக இருந்தான். செல்போனில் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தான். இரவில் அவள் கண்விழித்து எழுந்து அவனைப் பார்த்த போது மௌனமாக புகை பிடித்தபடி இருப்பதைக் கண்டாள்.

"என்ன இது, ராத்ரி இந்நேரத்தில்?"

"பிரபாகர் இந்நேரம் வந்திருப்பான். ஃபிளைட் ராத்ரி பனிரெண்டு மணிக்கு. கூப்பிடுவான்"

''கூப்பிட்டா பேசறது. படுங்க".

''படுத்தா தூக்கம் வரலை"

அவள் ஒன்றும் சொல்ல வில்லை.

"உனக்கு நிலைமை புரியவில்லை. இப்ப இந்த ஆர்டர் கிடைக் கலைன்னா..."

அவள் உதடுகளை அழுத்திக் கொண் டாள்.

"உனக்கு அக்கறையே இல்லையா?"

"அப்படியில்லை..."

''பின்னே? நான் இப்படி கஷ்டப் படறதெல்லாம் எனக்காக இல்லை. உனக்கும் குழந்தைகளுக்கும் சேர்த்துத்தான்..."

அவள் திரும்பிப்படுத்துக் கொண்டாள்.

"உன்னோட இந்த பாவனை இருக்கே... ஐ ரியலி ஹேட் இட். என்னமோ பெரிய இவ மாதிரி. ஓவியம், இசை, இலக்கியம். இவுங்க பெரிய இன்டலக்சுவல், சொஃபிஸ்டிகேடட். மத்தவன்லாம் வியாபாரி. சங்கீத கச்சேரில ஏப்பம் விடறவன். நான் சம்பாதிக்காட்டி நீ பாட்டு கேட்க மாட்டே தெரிஞ்சுக்கோ. ரோட்ல நின்னுட்டுதான் பாடுவே..."

அவள் வேண்டுமென்றே தூக்கம் வந்தது போல சீராக மூச்சுவிட ஆரம்பித்தாள்.

காலையில் ரவி அவளிடம் "எல்லாம் மானேஜரிட்ட சொல்லியிருக்கேன். ரெஸ்ட் எடுத்துக்கோ. நான் போயி ஒரு ஃபேக்ஸ் அனுப்பிட்டு வரேன்" என்றான்.

அவன் காரை எடுத்து திருப்பி தூசும் இலைச்சருகுகளும் பின்னால் பறக்க புகைசீறிப் போவதை அவள் கைகட்டி நின்று பார்த்தாள். சோம்பலுடன் நடந்து அறைக்குள் போய் பல்தேய்க்க ஆரம்பித்தாள்.

கதவு தட்டப்பட்டது. உள்ளே வரச் சொன்னாள். டிராலியை தள்ளியபடி சந்தனக்குறி அணிந்த பனிரண்டு வயது பையன் வந்தான். இனிமையான முகம்.

"மேடம், பெட்ஷீட் மாத்தணும்"

"மாத்திக்கோ"

அவன் திறமையாக படுக்கையுறைகளை மாற்றினான். குப்பைக் கூடையை சுத்தம் செய்தான். பரபரவென்று அறையைப் பெருக்கி துடைத்தான். அவள் முகம் கழுவிவிட்டு வந்து சோபாவில் அமர்ந்து ஹிண்டுவை எடுத்துப் பிரித்தாள்.

''மேடம் காபி வேணுமா?"

"கொண்டு வா"

பிளாஸ்குடன் உடனே வந்து விட்டான். காபி சுமாரான சூடுடன் இருந்தது.

**மாமரத்தின் அடியில் சென்று நின்று கொண்டு தன் கைவிரல்களைப் பார்த்தாள். அவற்றில் கூர்நகங்கள் எழுகின்றனவா? வாயில் விஷக்கோரைப் பற்கள் விரிகின்றனவா?**

"உன் பெயரென்ன?"

"சுகுமாரன்"

"படிக்கலையா?"

"அஞ்சாம் கிளாஸ் பாஸ். ஆனா வீட்டில வசதி இல்லை. அப்பா செத்து போயிட்டார். ஒரு தங்கச்சி மூணாம் கிளாஸ் படிக்கிறா".

"நீ நாயரா?"

"ஆமாம் என்றான் பையன் சிரித்தபடி. அப்பா பேர் ராமச்சந்திரன் நாயர்"

"எப்படிச் செத்துப் போனார்?"

"ரொம்பக் குடிப்பார்" பையன் தயங்கினான். "அவரை யட்சி அடிச்சதா சொன்னாங்க".

அவள் காலைத்தூக்கி சோபாவில் வைத்தாள் சிரித்தபடி "யட்சியா?" என்றாள்.

"ஆமாம் மேடம். இதோ இங்க பக்கம்தான். செம்பக யட்சி. அந்தப் பக்கம் ராத்திரி யாரும் போகமாட்டாங்க. அப்பாவோட உடல் அங்க தான் கிடந்தது. வாயிலயும் மூக்கிலயும் எல்லாம் ஒரே ரத்தம்".

"அப்படியா?" என்றாள். பையனின் தீவிரபாவம் அவளை சிரிக்க விட வில்லை.

"இதோ இந்த ஒற்றை யடிப்பாதை வழியாப் போனா ஒரு பெரிய ஆலமரமும் குளமும் வரும். அதன் அடியில்தான் செம்பகயட்சி பிரதிஷ்டை. பயங்கரமான எடம்".

மதியம் ரவி போன் செய்த போது அதைச் சொன்னாள். "ரவி இங்க பக்கத்தில் ஒரு யட்சி இருக்கா, தெரியுமா?"

"உளராதே. அங்க ஏதாவது ஃபோன் வந்ததா?"

"இல்லை ரவி. உண்மை. இங்க ஒரு பையன் இருக்கான். அவன்தான் சொன்னான். பேரு செண்பக யட்சி!"

"சரி; அதைப்பத்தி ஒரு கவிதை எழுது. நான் எப்படியும் எஸ்.ஆர்.கெயை கூட்டிட்டு வந்திருவேன் இன்னைக்கு. வேற யாராவது அங்க இன்னைக்கு ரூம் போட்டிருக்காங்களா?"

அவள் "ஒரு நிமிஷம்" என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியே வந்து "சுகு, சுகு" என்று கூப்பிட்டாள்.



ஓவியம் : ஆதிமூலம்

பையன் ஓடி வந்தான்.

"யாராவது புதிசா இன்னைக்கு ரூம் போட்டிருக்காங்களா?"

"ஆமா மேடம். எர்ணாகுளம் பார்ட்டி"

"ரவி, யாரோ, எர்ணாகுளம் பார்ட்டி ரூம் போட்டிருக்காம்..."

"சனியன். இது வேற கழுத்தறுப்பு. நீ அது யாருன்னு பாத்து வச்சுக்கோ. எவனாவது பத்திரிகைக்காரனா இருந்தா வம்பே வேண்டாம்... கெட்ட காலம் முத்தி கிடக்கு..."

**அவள் மூச்சிரைத்து தள்ளாடினாள். அப்போது மனதை மயக்கும் செண்பக மணம் மெல்ல காற்றில் பரவ ஆரம்பித்தது. அது செண்பக மணம் னெ உணர்ந்ததும் அவள் முகம் துடித்தது.**

ராகினி பக்கத்துக் கதவைத் திறந்தாள். குளிர்ந்த காற்று பீரிட்டு உள்ளே புகுந்து அவள் உடைகளைப் பறக்க வைத்தது. மெல்ல கல்திண்ணையில் இறங்கினாள். அந்த வாசலை அதுவரை அவள் திறக்கவேயில்லை. அந்த வழியில் யாராவது நடமாடி வெகு நாளாயிருக்கும் போலிருந்தது. சருகுகள் அழுந்தி நொறுங்கின. நிலவொளியில் இறங்கிய போது முதலில் எதுவுமே தெளிவாகத் தெரியவில்லை. மொத்தையான பிம்பங்களாக இருந்தன. பிறகு அப்பிம்பங்கள் துல்லியப்பட்டன. மெல்ல மரங்களின் இலைகளை தனித்தனியாகப் பார்க்க முடிந்தது. தன் உடல்மீது நிழல்கோலம் அலைபாய்வதை கைகளை தூக்கியபோது கண்டு கொண்டாள்.

திரும்பி தன் அறையைப் பார்த்தாள். அங்கிருந்து பார்க்கும் போது என்ன தோன்றும்? யட்சி நடமாடுவது போல. இனம்புரியாத மனக்கிளர்ச்சியுடன் அவள் சிரித்துக் கொண்டாள். மனத்தின் தவிப்பில் அப்படியே எழுந்து பஞ்சு போல பறக்க வேண்டும் போலிருந்தது. மாமரத்தின் அடியில் சென்று நின்று கொண்டு தன் கைவிரல்களைப் பார்த்தாள். அவற்றில் கூர்நகங்கள் எழுகின்றனவா? வாயில் விஷக்கோரைப் பற்கள் விரிகின்றனவா?"

பயணியர் விடுதியின் பின்புறம் நிரந்தரமாக மூடப்பட்ட பல ஓட்டுக் கட்டடங்கள் இருந்தன. சில இடிந்து சரிந்த நிலையில் காட்டுக் கொடிகளால் இறுக்கப்பட்டு நின்றிருந்தன. அதுதான் அந்தபுரம் போலும். வீரமார்த்தாண்ட உதயரவிவர்மனின் மனைவிகள், ஆசைநாயகிகள், தாசிகள், அலிகள் எல்லோரும் அங்குதான் அடைபட்டு வாழ்ந்திருக்க வேண்டும்.

அவர்களில் ஒருத்தி தன் காதலனுடன் கள்ள உறவு கொள்ளும் போது இன்னொரு ஆசைநாயகியால் காட்டிக் கொடுக்கப்பட்டாள். உதயரவிவர்மனின் வாளின் ஒரே வெட்டில் அவளும் அவள்மீது இருந்த காதலனும் தலைதுண்டிக்கப் பட்டார்கள். நிறைவேறாத காமத்தால் அவள் யட்சியானாள்.

பௌர்ணமி இரவுகளில் பூரண அலங்காரத்துடன் அவள் சாலையோரத்து மரத் தடியில் நிற்பாள். அவளைக் கண்டு காமம் கொள்ளும் வழிப் போக்கனை தன்னுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட ஆலமரத்தடிக்கு இட்டுச் செல்வாள். ஆலமரத்தடி ஒரு மலர் மஞ்சமாக மாறியிருக்கும் அப்போது, மனதை மயக்கும் செண்பக மலர்களினாலான மஞ்சம். அதில் அவனை துய்த்து தன் தணியாத ஆசையை பூர்த்தி செய்ய அவள் முயல்வாள். காமத்துடன் அவள் உடலைத் தழுவும் வழிப்போக்கனின் கைகள் அவள் முதுகை அணைக்கும்போது அது உட்குடைவாக இருப்பதை கண்டு கொள்கின்றன. பீதியில் அப்படியே உதறி உதறி அவன் மரணமடைய அவள் காமவெறியுடன் எழுந்து, மார்பில் அறைந்து விஸ்வரூபம் கொண்டு அலறுகிறாள். அந்த ஊளை அரண்மனைச் சுவர்களை அதிரடிக்கிறது. அலறியழுதபடி இரவெல்லாம் ஊரைச் சுற்றி வந்தபிறகு மீண்டும் தன் மரத்தடிக்குத் திரும்பி அமர்கிறாள். மீண்டும் காத்திருக்கிறாள்.

எத்தனை உக்கிரமான கதை. ராகினி பெருமூச்சு விட்டாள். இந்த மாதிரி நிலவும் அமைதியும் நிரம்பிய இரவில் யதார்த்தங்கள்தான் அபத்தமாக மாறித் தெரிகின்றன. மரத்தடியில் அமர்ந்து கொண்டாள். அவளைமீறி பலவிதமான ஞாபகங்கள் மனதை நிரப்பின. அழவேண்டும் போல இருந்தது. ஆனால் அழுகை வரவில்லை. வெறுமே நகத்தை மட்டும் கடித்துத்துப்பிக் கொண்டிருந்தான்.

ஹரியின் அறையில் விளக்கு எரிந்தது. அவள் எழுந்து நின்று கவனித்தாள். அவனை அங்கிருந்து பார்க்க முடியவில்லை. அறைக்குள் அவன் சுற்றி வருகிறான். டாய்லட் போகிறான். அவன் தூங்கவில்லை. அவனும் தூங்கவில்லை என்ற எண்ணம் அவளுக்கு மெல்லிய உவகையை அளித்தது. அவனும் அவள் நினைத்த பழைய விஷயங்களையெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கக் கூடும். ஒருவேளை அவன் கண்கள் சற்று ஈரமாகியிருக்கலாம். இல்லை, ஆண்கள் அழுவதில்லை. பெண்கள் அழுகிறார்கள். அழ முடியும் பெண்கள் அதிர்ஷ்டசாலிகள். விளக்கு அணைந்தது. மறுபடியும் படுத்துக் கொண்டுவிட்டான். ஆனால் தூங்க மாட்டான். ஆமாம்...

பதிவேட்டில் ஹரிகுமார் என்ற பெயரையும் விலாசத்தையும் பார்த்தபோதே அவளுக்குப் புரிந்து விட்டது. பதைபதைப்புடன் தன் அறைக்குத் திரும்பி விட்டாள். உடனே ரவிக்கு போன் செய்து வரவேண்டாம் என்று கூறிவிட வேண்டும் என்று பதற்றம் கொண்டாள். செல்போனில் பாதி எண்களை ஒற்றிய பிறகுதான் குரூரமான ஒரு சிரிப்புடன் வேறுமாதிரி எண்ண ஆரம்பித்தாள். ஆமாம்; இழப்பதற்கு அவளுக்கு ஏதுமில்லை.

குளிக்கையில் உடைமாற்றுகையில் மனம் முழுக்க நிரம்பியிருப்பது துயரமா, வன்மமா, மறைமுகமான ஓர் உவகையா என அவளால் பிரித்தறிய முடியவில்லை. தன் மிகச்சிறந்த தோற்றத்தில் கூடத்தில் சோபாவில் கால்மேல் கால்போட்டு அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். கார் வந்து நின்று, டிரைவர் வெளியே வந்து, கதவைத் திறப்பதை ஓரக்கண்ணால் பார்த்தாள். ஹரி தடித்திருந்தான். மேலும் சிவந்திருந்தான். விளிம்பில்லாத மூக்குக் கண்ணாடி அணிந்து காதோரம் நரையுடன் ஷூக்கள் ஒலிக்க நடந்து படியேறினான். டிரைவருக்கு உத்தரவுகள் தந்தபடி வந்தவன் அப்படியே நின்றுவிட்டான்.

''ஹலோ, எதிர்பாராத சந்திப்பு'' என்று அவள் ஆங்கிலத்தில் சொன்னாள்.

"ஆமாம்" என்றான். முகத்தில் அந்த சிறு கோணல் மெல்ல மெல்ல சரியாயிற்று. செயற்கையான, மிகையான உற்சாகத்துடன் ''எப்படி இருக்கே? எங்கே மிஸ்டர் ரவிச்சந்தர்?" என்றான்.

"வெளியே போயிருக்கிறார்"

"பிஸினஸ் எல்லாம் பரவாயில்லையா?"

"போகுது. நான் அதிகம் கண்டுக்கிறதில்லை. உங்க வைஃப் வரலையா?"

"நோ. நோ. இது ஒரு பிஸினஸ் டிரிப் மட்டும்தான். இங்க ஒரு எஞ்சினியரை நான் என்டர்டெய்ன் பண்ணணும். பிஸினஸ், யு நோ?"

அவளும் சிரித்து, ''நான் இங்க ஒரு மந்திரிய என்டர்டெய்ன் பண்ணணும் தி ஸேம் பிஸினஸ்" என்றாள்.

அவன் அறை பட்டவன் போல பேச்சிழந்து நின்று விட்டான்.

''ரிஜிஸ்டர்ல உன் பேர் பார்த்தேன். நீதான்னு தெரிஞ்சிட்டது. எப்பிடியிருக்கே ஞாபகம் இருக்கான்னு பார்க்கலாமான்னுதான்..."

"ஞாபகம் இல்லாம... மறக்க முடியுமா?"

"மறந்துடுன்னு லெட்டர் எழுதினே"

"அது வந்து... அப்ப என்னால ஒண்ணும் முடியலை. அப்பா ஒரே பிடிவாதமா... அதான்..."

"என்ன இது ஹரி? நான் சும்மா ஜோவியலா கேட்டேன். பழைய விஷயங்களை நான் எப்பவோ விட்டாச்சு. ஒகே.ஸி. யூ... எத்தனை நாள் இருப்பே?"

"ரெண்டு நாள்... இல்லை சில சமயம்..."

"டேக் இட் ஈஸி" என்று சிரித்தபடி தன் அறைக்குள் வந்தாள். கதவைத் தாழிட்டுவிட்டு கண்மூடி சில கணங்கள் நின்றிருந்தாள். ஏசி இயந்திரம் தலைக்குள்ளும் உறுமுவது போலிருந்தது.

பகல் முழுக்க அறையை விட்டு வெளியே போகவேயில்லை. ஏதும் படிக்கவில்லை. வாக்மேன் இருந்தும் பாட்டும் கேட்கவில்லை. சோபாவில் விழுந்து கிடந்தாள். உடம்பு முற்றிலும் செயலற்று விட்டது போலிருந்தது. மனம் ஒரு நினைவிலிருந்து இன்னொன்றுக்கு என தாவிச் சென்றபடியே இருந்தது. ஏன் எனக்கு எந்த நிலையிலும் கண்கள் ஈரமாகவேயில்லை?

மாலையில் போன் வந்தது. ரவிதான். ''ராகினி இன்னைக்கும் பெரிய மீன் சிக்காது. பாஸ்கரன்டே பேசிட்டேன். நாளைக்கு கட்டாயம்ங்கிறான். பாப்பம், இல்லையா?"

"ஆமா"

''நான் அனேகமா வரமாட்டேன். வந்தா பார்ட்டி கூடத்தான். உனக்கு போர் அடிக்குதா?"

"இல்லையே"

''அடிச்சா அந்த யட்சியே சரியான ஜோடி"

அவள் சிரித்தாள் ''வெல் ரவி. அப்ப வச்சிடட்டுமா?"

''பக்கத்து ரூம்காரன் யார்?"

''யாரோ தெரியலை. பத்திரிகையோ அரசியலோ இல்லை. வியாபாரி தான்"

**பௌர்ணமி இரவுகளில் பூரண அலங்காரத்துடன் அவள் சாலை யோரத்து மரத் தடியில் நிற்பாள். அவளைக் கண்டு காமம் கொள்ளும் வழிப் போக்கனை தன்னுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட ஆலமரத்தடிக்கு இட்டுச் செல்வாள்.**

"பரவாயில்லை"

பிறகு எழுந்து குளித்து உடை மாற்றிக் கொண்டாள். கண்ணாடியில் தன்னை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டாள். கழுத்து தடித்திருக் கிறது. இடுப்பு அகன்றிருக்கிறது. ஆனால் முகம் அப்படியேதான் இருக்கிறது. ஹரியின் நினைவு வந்தது.

கதவைத் திறந்தவன் அவளைக் கண்டதும் ஒரு கணம் துணுக் குற்றான்.

"வரலாமா?" என்றாள்.

"கட்டாயமா. வா வா"

உள்ளே அவன் ஒரு சிறு சுய உபசரிப்பின் தொடக்கத்தில் இருந்தான். குவளையில் செந்நிற திரவம் மெல்ல நலுங்கியது.

"ஹாவ் எ சிப்"

"நோ நோ நோ. அது மட்டும் தான் இதுவரை பழக்கமாகலை..." என்றாள் சிரித்தபடி.

"வேற எல்லாம்?" என்று அவளை கூர்ந்து பார்த்தான்

அவள் சிரித்தாள். அவன் அவளுக்கு கோலா ஊற்றிக் கொடுத்தான். சியர்ஸ் சொல்லி சாப்பிட்டார்கள்.



சம்பிரதாயப் பேச்சினூடாக அவள் யட்சி பற்றிய கதைக்கு வந்து சேர்ந்தாள் "எத்தனை பயங்கரம் இல்லை? அழகு. ஆனால் உடம்பு உள்ளீடில்லாம ஓடு மாதிரி..."

"அதைவிட பயங்கரம் நிறைவேற வாய்ப்பே இல்லாத அந்தக் காமம்தான் யுகயுகமா அப்படியே காத்திட்டிருக்கிறதுன்னா ரொம்ப பயங்கரம், இல்லையா?"

"பேய்க் கதைகளில எல்லாம் இந்த அம்சம் கண்டிப்பா இருக்கும். நிறைவேறாத ஆசைகள்தான் நரகம்னு ஒரு பழமொழி கூட உண்டு மலையாளத்திலே"

"அப்படியா?"

அவள் டம்ளரை உள்ளே கிடந்த எஞ்சிய ஐஸ் துண்டங்களுடன் மெல்ல கிணுகிணுவென ஆட்டினாள்.

அவன் அவளையே பார்த்திருந்து விட்டு எழுந்து அவள் கரங்களைப் பற்றினான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் அவளை இலேசாக அணைக்க முற்பட்டபடி "என்னை மன்னிச்சிடு" என்றான்.

"ரொம்ப லேட்டாயிட்டது" என்றாள்

"அதுக்கென்ன?" என்றான்

"அப்படின்னா..."

"அதில்லை..."

"நீ ஒண்ணும் இப்ப கற்புக்கரசியா இல்லையே. ஒரு நாள் இருந்திட்டுப் போனா என்ன அப்டீங்கிறியா?"

அவன் சற்று சீண்டப்பட்டான் "ஆமா. அதுதானே உண்மை?"

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்து திடமாக "அப்ப ஒரு பிராஸ்ட்டியூட்டைவிட நான் உனக்கு எப்பிடி மேலானவ?" என்று கேட்டாள்.

"என்னை டீஸ் பண்ணத்தான் வந்தியா?"

"நாலு வருஷம் பழகிட்டு இது மட்டும் பண்ணலை. அதுதான் உனக்கு ஒரு குறையா இருந்திருக்கும். ஐயோ விட்டிட்டோமேன்னு. இல்லையா?"

அவன் திரும்ப அமர்ந்து நிதானமாக சிரித்தபடி "ஒரு டிராமாவுக்கு திட்டமிட்டு வந்திருக்கே போல" என்றாள்.

"நான் விட்டிட்டு வந்திடறேன். என்னால முடியலை" அவள் குரல் தழைந்தது.

"உளறாதே"

"என்னால முடியலை ஹரி. நான் விட்டிட்டு வந்திடறேன். உன்கூட எங்க வேணா வரேன். எனக்கு ஒரு வேலை மட்டும் தேடிக் கொடுத்திடு. பிளீஸ்".

அவன் அதை எதிர்பார்க்கவில்லை. அவளையே உற்று பார்த்தான். அவள் விசும்பி விசும்பி அழுவதைப் பார்க்கும் தோறும் அவனுக்கு கோபம்தான் ஏற்பட்டது.

"அதெல்லாம் நடக்காத காரியம். ரவிச்சந்தர் ஒண்ணும் ஏமாளி இல்லை"

"பிளீஸ், என்னால முடியலை, பிளீஸ் ஹரி..."

"நீ உன் ரூமுக்குப் போ"

அந்தக் குரலில் இருந்த உறுதி அவளை அதிர வைத்தது. விழி விழிய அவனைப் பார்த்தபிறகு முந்தானையால் முகத்தைத் துடைத்தாள்.

"பத்து வருஷத்தில நீ நிறைய விஷயம் கத்துக்கிட்டாச்சு" என்றான் ஹரி. "எஸ்.ஆர்.கெ. கிட்டே இதை காட்டினால் எக்ஸ்போர்ட் விஷயம் ஆர்டர் ஆயிடும்"

"தாங்க்ஸ்" என்றபடி அவள் எழுந்தாள்.

"என்னோட அழைப்பு அப்படியேதான் இருக்கு. இன்னைக்கு நீ இந்த ரூம்ல தங்கலாம்" அவன் அவள் கண்களை உற்றுப் பார்த்து சிரித்தபடி சொன்னான்.

அவள் ஏதோ சொல்ல வாயெடுத்து பேச்சை விழுங்கி திரும்பி நடந்தாள்.

குளிர்ந்த காற்றில் மரக்கூட்டங்களில் இருந்து இரைச்சல் எழுந்தது.

ராகினி பெருமூச்சுடன் ஹரியின் சன்னலைப் பார்த்தாள். அங்கு மீண்டும் வெளிச்சம் வரும் என எதிர்பார்ப்பவள் போல ஒருவேளை அவன் அவள் அறைக்குச் சென்றிருப்பானா? திரும்பிச் செல்ல ஒரு எட்டு எடுத்து வைத்தவள் கனலை மிதித்தவள் போல திடுக்கிட்டு திரும்பி ஓடினாள்.

மரக் கூட்டங்களினூடாக சென்ற பாதையில் நிலவொளி வெள்ளிநிறத் தூண்களாகவும் கம்பிகளாகவும் சரிந்து மண்ணில் ஊன்றியிருந்தது. அவள் மூச்சிரைத்து தள்ளாடினாள். அப்போது மனதை மயக்கும் செண்பக மணம் மெல்ல காற்றில் பரவ ஆரம்பித்தது. அது செண்பக மணம் என உணர்ந்ததும் அவள் முகம் துடித்தது. மார்பில் கை வைத்து பெருமூச்சு விட்ட பிறகு மீண்டும் நடந்தாள்.

இடிந்த கல்படிகள் நான்கு பக்கமும் பரவிய சிறு தடாகமொன்று தென்பட்டது. அதில் நிலவு அசைவின்றி மிதக்க அலைகள் நிலவுப் பிம்பம் மீது நகர்ந்தன. கல்விளிம்பில் நீரின் அலைகள் மோதும் மெல்லிய ஒலி கேட்டது. நீர் தீட்டப்பட்ட இரும்புத் தகடு போலிருந்தது. அருகே பிரம்மாண்டமான ஆலமரம் ஒன்று இலைகள் சிலுசிலுக்க நின்றது.

ராகினி குளத்தை அணுகி படிக்கட்டுகளில் கால் வைத்தாள். பாசி மெத்தென்று வழுக்கியது. கட்டை விரல்களை ஊன்றி நின்று நீரை நோக்கிக் குனிந்தாள். நீரின் கரிய ஆழத்தில் அவளுடைய பிம்பம் அசைந்தாடியது. மிகுந்த சிரமத்துடன்தான் அதை கவனித்துப் பார்க்க முடிந்தது. மூக்கும் முலையும் தேய்ந்து போன யானைத்தோல்போல கரிய சொரசொரப்புள்ள யட்சி சிலை அது.

திடுக்கிட்டு அவள் நிமிர்ந்த போது எதிரே தன் நீர்பிம்பம் நெளிந்து நெளிந்து காற்றில் மிதந்து செல்வதை கண்டாள். அது போகுமிடம் அவளுக்குத் தெரிந்திருந்தது.

# பாலூட்டும் தாலாட்டு

❑ கவிஞர் காமகோடியன்

கவிதைக்குக்
கருப்பொருள் தேடினேன்;
வானமும் - வண்ண
நீலமும் - என்னைப்
பாடு என்றது
காதலும் - காந்த
மலர்களும்
கவிதை கேட்டன;
கூதலும் - பனிக்
கொஞ்சலும் - எங்கள்
கூடலைப் பாடு என்றன.

நீரின் முகவரிகள்
நெளிந்து நெளிந்து - அருகில்
அலைந்து அலைந்து
நீட்டோலை வாசி என்றது;
மினுக்கட்டாம் பூச்சிகள் - இன்னும்
மினுக்கட்டுமா என்றது;
வட்டமடித்துக்
கொட்டமடிக்கும்
சிட்டுக் குருவியெல்லாம் - எங்களுக்கு
பட்டமளித்து
பாட்டும் தா! என்றது.
உயர உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி பருந்தாகாது;
பட்டம்: இன்று தம்பட்டம் தான்
நீங்களே அடித்துக் கொள்ளுங்கள்
என்றேன்;

ஏற்கனவே; என் கனவே;
கதியென்று வந்த தெல்லாம்
பாற்கடலைக் கடைவதுபோல்
படுத்தி எடுத்தன;

என்ன செய்வது!
கவிதை நூலில்
என்ன நெய்வது?
ஒரே குழப்பம்!
இட மாற்றம் செய்தால்
தடு மாற்றம் தீருமென
தரையிறங்கினேன்;

நிலா நேரம்; நடுத்தரக்
குடும்ப வீதி; ஒரு வீடு;
சென்னையில் திண்ணை;
வியந்தேன்; அமர்ந்தேன்;

சேலைத் தொட்டில் - அதனுள்
ஒரு கலச மின்னல்; - தனது
கனகக் கால்களை
உதறி உதறிக்
கதறிக் கதறி கவிதை கேட்டது!



ஓவியம் : மருது

தாய் வந்தாள்; தாலாட்டினாள்;
ஆராரோ.... ஆரிரரோ - என்று
அமுதூட்டினாள்;
இறைவா!
இப்பாட்டை நிப்பாட்டி விடாதே!
தாலாட்டுக் கேட்டு - வெகு

நாளாகி விட்டது;
அழுகையும் பாடலும் தொடரட்டும்;
வேண்டினேன்...

இறைவி பாடினாள்...

காது தோதாக
கவன ஈர்ப்பு செய்தது;
ஆராரோ முடித்த அன்னை
வார்த்தைக்குள் வந்தாள்;

'தாலாட்டே பாலூட்டுமே!- தமிழ்த்
தாலாட்டே பாலூட்டுமே!
தாய்ப்பாலைப் போலுனக்கு
தாய்த்தமிழும் வாய்த்ததனால் - உனை
முத்தமிடும் முத்தமிழில்
சத்துணவும் இருப்பதனால்
தாலாட்டே பாலூட்டுமே! -
தமிழ்த்
தாலாட்டே பாலூட்டுமே!'

அடடா...
ஆரம்ப வரிகளே
ஆனந்த வரிகளாய்
என்னை வருடின;
பாடல் கேட்டு - அந்தப்
பனிப் பூச்சியின்
அழுகை சற்று குறைந்தது;
எனக்கு அழுகை
வந்து விட்டது;
பாட்டு பாதியில்
நின்று விட்டால்....!

நல்ல வேளை
அன்னை தொடர்ந்தாள்;

''அம்மா' என்றால்
அமுதம் பொழியும் - அது
'மம்மி'யில் இல்லையடா!
'அப்பா' என்றால்
கவிதை மலரும் - அது
'டாடி'யில் இல்லையடா!
தொற்றிய நோய்போல்
பற்றிய மோகம்
தோரணை காட்டுதடா!

நமக்குள் நாமே
அந்நிய வேடம்:
நாடகம் ஏதுக்கடா';

ஆகா...
கடும் பசிக்கு
கனத்த சாப்பாடு;
திசைமாறும் தமிழருக்கு
இசை ஞானத் தாலாட்டு; சுகித்தேன்:

தாய் தொடர்ந்தாள்....

'ஞான விஞ்ஞானம்
மருத்துவ மெல்லாம்
தமிழில் இருக்குதடா!
இலக்கிய இன்பம்
இது எங்கும்
கிடைப்பதும் இல்லையடா!

பாரதி கண்ட
வள்ளுவன் கம்பன்
இளங்கோ தெய்வமடா!



தெய்வதம் பேசும்
பைந்தமிழ் வாசம்
தமிழரின் சுவாசமடா!'

என் சுவாசத்தை
இலக்கியப் படுத்திய அன்னை;

மாமன் அடித்த
மல்லியப் பூச் செண்டையும்
அத்தை அடித்த
அரளிப்பூச் செண்டையும்
அகற்றி; தாலாட்டை
அடிதடியிலிருந்து மீட்டினாள்;

தொடர்ந்தாள்....

'ஷேக்ஸ்பியர்; ஷெல்லி
அறிவினை அள்ளி
அனைத்தையும் நாம் ரசிப்போம்;

தெள்ளிய தமிழில்
தேன் சுவை சொல்லி
அவரையும் ரசிக்க வைப்போம்!

தன்மொழி யருமை
தானறிந்தால் தான்
தாய் மொழி வாழுமடா!

மண்ணும் மொழியும்
கண்ணும் கண்ணும்!
கண்ணே கண்மணியே - இது
அன்னையின் பொன் மொழியே!'

பாடல் முடிந்தது: சேய் தூங்கியது!
தாய் தூங்கப் போனாள்!
நான் விழித்துக் கொண்டேன்;
கோடான கோடி - தமிழ்க்
குழந்தைகளுக்காக....!

● ● ●

# ஓடாத பிள்ளையாரும் ஓடிய காவேரியும்

□ □ □ பிரபஞ்சன் □ □ □

ஆட்டோ செல்வராஜு தான் அப்படி ஒரு அறை இருப்பதை எனக்குச் சொன்னான். பெரிய மொட்டை மாடி. அதில் ஒரு விசாலமான அறை. சமையல் அறை. குளியல் அறை. தண்ணீர் மாடிக்குச் சுலபமாக வரும். தண்ணீர். கங்காப் பிரவாகம். சுவையோ. இளநீர் தோற்றுப் போகும். என்றெல்லாம் தரகன் சொன்னானாம். அவன் சொன்னதில். பத்துசத வசதி இருந்தால் கூடப் போதும் என்று செல்வராஜு சொன்னான்.

மொட்டை மாடி. தனி அறை. தனிவழி என்பதே எனக்கும் போதுமானதாக இருந்தது. தண்ணீர். அந்தப் பட்டணத்தில் தேவைக்குக் கிடைத்தால். அது சாதா வசதி அல்லவே. சொர்க்க வசதிதான். அறை எங்கே என்றதற்கு. ஆபீஸ் அன்னதாதா ரங்கலட்சுமி தெருவில் இருப்பதாகச் சொன்னான். அது என்ன 'ஆபீஸ்' என்றதற்கு. வெள்ளைக்காரனிடத்தில் முதல் முதலாக ஆபீசில் வேலைக்குப் போன ரங்கலட்சுமியின் பிராபல்யத்துக்காகத் தெருவுக்கு வந்த பெயர் என்றான். அந்தப் பெயர் என்னைக் கிளர்ச்சி செய்தது. முதல் முதலாக ஒரு ஸ்திரி ஆபீஸ் உத்தியோகத்துக்கு. காலில் செருப்பு போட்டுக் கொண்டு. ஜட்கா வண்டியில். ஊரார் வியந்த அல்லது பொறாமையோடு பார்க்கக் கம்பீரமாகப் போவது என் மனசில் தோன்றியது. அது என்ன அன்னதாதா என்றதுக்கு. ரங்கலட்சுமியின் அப்பா. பினாகமுதலி பெரிய வள்ளலாகவும். அடையா நெடுங்கதவம் கொண்ட தன் வீட்டுக்கு வருவோர்க் கெல்லாம் அன்னம் பாலித்ததின் அழியாத நினைவில் அந்தப் பெயராம் என்றும் செல்வராஜு சொன்னான்.

அறையை உடனே பார்க்க ஆசைப்பட்டேன். அவன் ஆட்டோவிலேயே என்னை அழைத்துக் கொண்டு போனான். ஆட்டோ மட்டுமே போகக் கூடிய சின்னச் சந்துதான். அதுவும் ஊருக்குச் சற்றுத் தள்ளிய அல்லிக்குளம் பகுதியில்.

'ஏரியா ஒரு மாதிரின்னு சொல்வாங்களே. செல்வராஜு. அடிதடி. வம்பு. வழக்குன்னு ஆட்கள் திரிவார்களாமே' என்றதற்கு அவன் தத்துவார்த்தமாகப் பதில் சொன்னான்.



வீட்டுக்கார அம்மாளிடம் சாவியைக் கொடுத்தோம். மீன் வறுபடும் வாசனை வந்தது. குளத்து மீன் வாசனை. குரவையாக இருக்கும்.

நான் வீதிக்கு வந்து விட்டேன். செல்வராஜூ மட்டும் தனியாகப் போய் அந்த அம்மாளிடம் பேசிவிட்டுத் திரும்பினான்..

'என்னவாம்?'

'வாடகையெல்லாம் ஓ.கே. உன் ஒழுக்கத்துக்கு உத்தர வாதம் கேக்குது அந்த அம்மா'

'எனக்கு என்னாலயே உத்தர வாதம் கொடுக்க முடியாதே.'

லாட்ஜில் இறங்கிக் கொண்டு, 'ரொம்ப நன்றிப்பா... என்னைக் காப்பாத்தினதுக்கு.' என்று சொன்னேன்.

'பாம்புகிட்டே இருந்தா'

'பின்னே....?'

அது ஒரு அனுபவம். என் நண்பரும் ரசிகருமான சாமி என்றழைக்கப்படும் நாராயணசாமி ஒரு நாள் என் அறைக்கு வரும்படி ஏற்பட்டது. திகைத்துப் போன அவர், 'இது என்ன' என்றார்.

'என் வீடு. வானத்துப் பறவை களுக்குக் கூடு. மனிதர்களுக்கு வீடு'

'இது வீடும் இல்லை. அறையும் இல்லை.. அறை என்றால் ஜன்னல்? வெளிச்சம்?'

'எந்த ஏரியாவில்தான் நூறுசதம் சத்தியவான்களும், யோக்கியர்களும் வாழ்கிறார்களாம்? நமக்குள்ளே மிருகங்கள் இல்லையா? மனிதர் களைக் காட்டிலும் அதி விஷ ஜந்துக்கள் இருக்கிறதா?' என்றான்.

வீட்டுக்கார அம்மாள் கதவைத் திறந்தாள். மத்திம வயசு. மசாலா வாசனையுடன், என்னைக் கண்ணால் அளவெடுத்தபடி விபரம் கேட்டுக் கொண்டு சாவியைக் கொண்டு வந்து கொடுத்தாள். விசாலமான மாடிதான். நூறு வேட்டிகள் காயப்போடலாம். மத்தியில் இருந்தது அறை, நீள வாக்கில். ஜன்னலைத் திறந்ததும் காற்று தலைமுடியைக் கலைத்தது. ஏதோ ஒரு கோயில் கோபுரம் தெரிந்தது.

'சிவன் கோவில்' என்றான். 'கூடிய சீக்கிரமே, சீத்தா, நம்ம கோயிலையும் நம்பர் ஒன்னா மாத்திக்காட்டறேன்' என்றான்.

'எப்படி இருக்கார், பிள்ளையார்?'

'அவருக்கு என்ன? வெள்ளிக்கிழமை சுண்டலும், தினம் வாழைப்பழமும் சாப்பிட்டுக் கொண்டு அமர்க் களமாக இருக்கார்.. இப்ப எல்லாம் கொஞ்சம் காசும் உண்டியல்ல விழும். அவர் தேவைக்கு அவர் சம்பாதிச்சுக் குவார். நமக்குக் கவலை இல்லை.'

கட்டைச் சுவரில் சாய்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தோம். ஒரு ஜோடிக் காக்கைகள் சற்று தூரத்தில் வந்து உட்கார்ந்து, எங்களைப் பார்த்துத் தலையை ஒரு பக்கம் சாய்த்து, நிதானித்துப் பறந்து சென்றன.

'என்ன நினைச்சிருக்கும் அந்தக் காக்காய்கள்?' என்று கேட்ட செல்வராஜூ தானே பதிலையும் சொன்னான்.

'இவ்ளோ காலமா, இவன்களோட பழகறோம். இன்னும் இந்தப் பயல்களை நம்பமுடியல்லையேன்னு நினைச்சுக்குமோ என்னமோ...'

## தாஜ்மஹால்



**வட்டநிலா புவிவீழ்ந்ததுவோ? - ஷாஜகான்**
**வடித்த கண்ணீரின் முதல் துளியோ?**

**கம்பதாசன்**

ஓவியம் : மனோகர்

அவர் சொன்னது உண்மைதான். என் வாடகைச் சக்திக்கு ஏற்ப அதுதான் பிடித்திருந்தது. ஜன்னல் இல்லை. ஒரு வெண்டிலேட்டர் மாத்திரம் மிகவும் மேலே கூரையை ஒட்டி இருந்தது. அதில் கதவை எத்தனை முறை திறந்து வைத்தாலும், அதுவாகச் சாத்திக் கொள்ளும். அதன் வழிக் காற்று வரச் சாத்தியம் இல்லை. வரும் காற்றும், யாரோஒரு கவிஞன் சொன்னது போல, தாசி வீட்டுக்கு முதல் முறை போக நேர்ந்த சம்சாரியைப் போலத்தான் தயங்கியபடி வரும். அறைச் சுவரில் வண்ணம் இற்றுச் கழன்று, ஒடுக்கு விழுந்த அலுமினியப் பாத்திரம் போல் இருந்தது. கட்டில் மட்டும் போடுமாறு அறையின் விஸ்தீரணம் அமைந்திருந்தது. ஒரு மேசைக் குட்டி. அதில் அருகில் ஒரு நாற்காலிக் குட்டி...

'இந்த அறையில் எப்படி வாசம் செய்கிறீர்கள்?'

'செய்கிறேனே. இதுவும் இல்லாமல் பிளாட்பாரத்தில் மக்கள் வாழத்தானே செய்கி றார்கள்.'

'உஸ்... உதவாத பேச்சு? இது அறை அல்ல. காய்கள் பழுக்கப் போடும் கிடங்கு. இதில் எப்படிப் படிக்க? எழுத? மேசையிலிருந்து பார்த்தால், ஒரு வேம்பு பூத்துச் சொரிவதைப் பார்க்க வேண்டாமோ? வெளிச்சம், வளர்ப்பு வீட்டில் நாய் நுழைவது போல, ஓடி வர வேணாமோ? உடனே கிளம்புங்கள்.'

'எங்கே'

'என் இருப்பிடத்துக்கு. தெரியுமோ. அது பழங்கால அரண்மனை. இன்றைய ஜெமீன்தார், எனக்கு இரண்டு அறைகளை ஒழித்துக் கொடுத்திருக்கிறார். சுற்றி ஒரே காடு மயம்தான். ஆலமரம் என்ன, வேப்பன், நுனா என்ன, மா என்ன? தோப்பு. தோப்புக்குள் வீடு. மா மரங்களில் இருந்து குயில்கள் கூவுவதைச் சற்று யோசித்துப் பாருங்கள்...'

எனக்குக் குயிலோசை, காதில் குத்தல் எடுத்தது. என்ன அழகான சொற்றொடர், தோப்புக்குள் வீடு. சொன்னவர், என் மேல் மிகுந்த அன்புள்ளவர். நான் இப்படிப்பட்ட அறையில் வாழ்வதை உண்மையாகவே விரும்பாதவர். வருத்தப்பட்டு அழைக்கிறார். அடுத்த வாரமே, அறையைக் காலி செய்துவிட்டுப் புறப்பட்டேன். என் உடமைகள் ஆட்டோவுக்குள் அடங்குபவை. அவைகளில் பெரும் பகுதியும் புத்தகங்கள். சாமியும் என்னை அழைத்துக் கொண்டு போக



வந்திருந்தார். செல்வராஜு ஆட்டோவை ஓட்டிக்கொண்டு என்னுடன் வந்தான்.

பகுதிக்கு ஜெமீன்தார் காலனி என்று பெயர். ரயில் நிலையத்தை ஒட்டி இருந்தது, எங்கள் மாளிகை. சாயங்கால வெயில் எலுமிச்சை நிறத்தில் இருந்தது. மாளிகையின் வாசலின் படிகள் இடிந்திருந்தன.

'பார்த்து வாங்க' என்றார் சாமி.

சாமி சொன்னது பொய் இல்லை. மரங்கள் தோப்பு மாதிரி அடர்ந்து செழித்திருந்தன. பறவைகளின் மாலை நேர உரையாடலைக் கேட்க முடிந்தது. தீனி வேட்டைக்குச் சென்ற இடத்து அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டதாக இருக்கலாம். அவரவர்களுக்கு அவரவர் உலகம். அவரவர் கவலைகள். பொக்கையும் போறுமான நீண்ட நடை பாதையைக் கடந்து, பெரிய வரவேற்பு அறையையும் கடந்து, ஒரு அறைக்கு வந்து சேர்ந்தோம்.

'இதுதான் உங்கள் அறை'

அறை என்பது உபசார வழக்கு. ஒரு ஒற்றைப் படுக்கை அறை வீட்டை அதற்குள் வைத்துப் பொட்டலம் கட்டலாம். எண்ணினேன். எட்டு ஆள் உயர ஜன்னல்கள் இருந்தன. வாசல் கதவு, ஒரு யானை தாராளமாகப் புகுந்து வரலாம்படி இருந்தது. நாலு வயிறு உப்பிய மோஸ்தர் மின்விசிறிகள். மிக்க வருத்தமுடன் முனகியபடித் தம் கடமையைச் செய்து கொண்டி ருந்தன.

'அறை எப்படி?'

'எதேஷ்டம். ஜெமீன்தார் எங்கே இருக்கிறார்?'

'பக்கத்துத் தெருவில். புழங்கும் படியாக அரண்மனையில் இரண்டு அறைகள் தான் இருக்கு. மற்ற பகுதி விரிசல் விட்டு, ரொம்ப மோசமான நிலையில் இருக்கு. இந்த மழைக்காலம் தாங்காது என்கிறார்கள்.

புத்தகக் கட்டுகள், படுக்கை இவைகளை ஒரு மூலையில் வைத்தோம்.

'பக்கத்தில் தான் டீக்கடை'

நாங்கள் டீக்கடைக்குப் போனோம். வழக்கமான சின்ன டீ கடை. நீளமாக இரண்டு பெஞ்ச். இரண்டும் நிரம்பி இருந்தன. ஒரு பெஞ்சில் இருந்து, அழுக்கு வேஷ்டி, கைவைத்த பனியன், அதன்

மேல் ஒரு சிட்டைத் துண்டு. பரட்டைத் தலை. விபூதி குங்குமத்தோடு தோற்றம் கொண்ட ஒரு வயது மனிதர் எங்களை நோக்கி வந்தார். அவர் இடக்கையில் ஒரு டீ கிளாஸ் இருந்தது.

சாமி. அவரை எங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

'சார்தான் அரண்மனை ஜெமீன்தார். இவர்தான், நான் சொன்னேனே. என்னோடு தங்கப் போறவர்னு'

'வரனும். பேஷா தங்கிக்கலாமே. சும்மா கிடக்கிற இடம். உங்களையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ரொம்ப சந்தோஷம்'.

அந்த வார்த்தைகளின் மிருதும், சொன்னவிதமும் என்னைக் கவர்ந்தது. பெரிய மனிதத் தோரணை மிக இயல்பாக வெளிப்பட்டது.

நான் நன்றி சொல்லிக் கொண்டேன். அவர் புறப்பட்டுப் போன பின், சாமி, 'ரொம்ப தங்கமான மனுஷன். வாடகைன்னு நான் கொடுத்தா வாங்கிக்குவார். ஒரு நாள் கூட அவர் கேட்டதில்லை. வறுமை பிச்சுத் திங்கறது. பணம் வாங்கறபோது, ரொம்பக் கூசிப் போவார்.

சங்கு சுட்டாலும் வெண்மை தரும். ஜெமீன்தாரிடம் பரம்பரையாக வந்து சேர்ந்த கத்தி ஒன்று இருக்கிறதாம். பெரிய பட்டாக் கத்தி. பல போர்களைக் கண்ட ஆயுதம். ஆனால், இப்போதைக்கு அதனால், வெங்காயம் கூட நறுக்க முடியாது.

செல்வராஜு விடை பெற்றுப் போனான்.

ஒரு பழைய காலத்து, வேலைப்பாடு மிகுந்த நாற்காலியை ஜன்னல் ஓரம் நகர்த்தி அமர்ந்தேன். நாலு கால்களில் ஒன்று சற்றே ஆடியது. சமாளித்து அமர்ந்தேன். ஜன்னல் வழியாக இருளில், எழுதிய ஓவியம் போல மரங்கள் தெரிந்தன. கரகரத்த மர அசைவுகள். அரண்மனையே முதுமைச் சுமையால் அழுந்திவிட்ட பெருமூச்சு போல் எனக்குத் தோன்றியது. வீடுகள் சிரிக்கும், அழும், கம்மென்று சில வேளை இருக்கும். குளிக்காது, மூன்றுநாள் தாடியோடு காணப்படும் வீடுகள் உண்டு. இது படுக்கையில் கடைசி நேரத்தில் கிடக்கும் நோயாளியின் முகம்.



குளிக்க வேண்டும் போல் இருந்தது. மாலையும் குளிக்க வேண்டும் எனக்கு. சாமி அறைக்குப் போய், குளியல் அறைக்கு வழி கேட்டேன். நடைபாதையைச் சுற்றி, அதன் மறுபக்கத்தில், சற்று தூரத்தில் இருந்த ஒரு கட்டிடத்தைக் காட்டினான்.

நான் துண்டு, சோப்புடன் புறப்பட்டேன்.

'எதுக்கும் கையைத் தட்டிக் கொண்டு, சத்தம் எழுப்பிக் கொண்டு போங்கள்'

'எதுக்குச் சத்தம்?'

'இல்லை. புல், மரங்கள், செடிகளுக்கிடையே குறுக்காகச் சனியன்கள் படுத்துக் கிடக்கும்'

'எது படுத்துக் கிடக்கும்?'

'அதான், பாம்புகள். ஆனால், கடிக்கிறதில்லை. ஜெமீன்தாரின் தாயாருக்கு, அவர் காலத்து ஒரு நாகம், கையில் அடித்துச் சத்தியம் பண்ணிக் கொடுத்ததாம்.'

'லைட் இருக்கும் இல்லியா?'

'இல்லை. பகலில் தானே குளியல்? விளக்கு எதுக்கு? ராத்தியில், அவசரம்னா, இப்படி, மரத்தடியிலேயே போகலாம். இந்தக் காட்டில் யார் பார்க்கப் போறார்கள்?'

புல்த் தரையை மிதித்து. நடக்கவே பயமாக இருந்தது. மரக்குச்சிகள் எல்லாம் நெளிவது போலவே தோன்றியது. எந்தச் சின்னச் சத்தமும் 'புஸ்' என்ற சீறலாகவே காதில் விழுந்தது.

ஒரு வழியாகக் கதவைத் தொட்டுவிட்டேன்.கதவு திறந்து கொண்டது. பூட்டு. தாழ்ப்பாள் எதுவும் இல்லை. கண்ணைக் கூர்மையாகப் பழக்கப்படுத்தி. வாளியை அடையாளம் கண்டேன். அவசரம் அவசரமாக. தரையைச் சுவர் ஓரத்தைப் பார்த்தபடியே குளித்தேன். மூடிய கதவு தானாகவே. திறந்துகொண்டது. கைலியைக் கட்டிக்கொண்டு ஓடி வந்து அறைக்குள் புகுந்தேன்.

கண்ணாடி முன் நின்று தலைவாருகையில். தப்பு செய்துவிட்டோமோ என்ற நினைப்பு வந்தது. முதலில் இடத்தைப் பார்த்துவிட்டு முடிவு செய்திருக்க வேண்டும். வார்த்தைகளை மட்டுமே நம்புவது பிசகு என்கிற அனுபவ ஞானத்தையும் பெற நான் கொடுக்க வேண்டிய விலை பெரிதாக இருக்குமோ?

சாமி. இட்லி வாங்கி வந்திருந்தார். சாப்பிடும்போது கேட்டேன் அவர் சொன்னார்.

'' இந்த தோட்டத்துக்கே நாகப் பூங்கான்னுதான் பெயராம். மூத்த ஜெமீன்தார்கள் எல்லோர்க்கும் நாகராஜன்னுதான் பேர் இருக்குமாம். பாம்பு அவர்களுக்குக் குல தெய்வம்''

'' ஆனா. இப்படி இருட்டுலயோ. பகல்லையோ மிதிச்சா தெய்வம் கடிக்காமே இருக்குமா?'

'' பாம்புக்குப் போய்ப் பயப்படறீங்களே...'

' பயம் மட்டும் இல்லை. ஒரு வகையான அருவருப்பு.'

கதவைச் சாத்திக்கொண்டேன். படிக்கலாம் என்று ஒரு புத்தகம் எடுத்துக்கொண்டு. படுக்கையை விரித்தேன். தலையணையைத் தூக்குகையில். ஒரு முழம் நீளத்தில் ஒன்று நெளிந்து ஓடியது. பார்த்துக்கொண்டிருக்கும்போதே. கதவுக்குக் கீழ் இருந்த தண்ணீர் ஓடும் சந்தின்வழி அது மறைந்தது. நான் சாமியின் அறைக்குப் போனேன். எழுந்து லைட்டைப் போட்டு சாமி. என்ன என்றார். சொன்னேன்.

'குட்டிப் பாம்பா? அப்படீன்னா. அதனோட தாய் தந்தை எல்லாம் இங்கதான் இருக்கனும்.'

'இல்லை. இரவு தூங்க முடியாமல் போகும் போலிருக்கே'

''கவலைப்படாதீர்கள். மேலேபாருங்கள். மரப்பலகைச் சட்டம் போட்ட விதானம். அங்கதான் நிறைய இருக்கும்னு ஜெமீன்தார் சொல்லி இருக்கார். ஆனா. கடிக்காது. சத்தியம் செய்திருக்கு ஜெமீன்தார் அம்மாவுக்கு.'

நான் மீண்டும் அறைக்கு வந்தேன்.

ஜாக்கிரதையாய் படுக்கையை உதறிப் போட்டேன். தாய்.தந்தை யாரும் இல்லை. விளக்கை அணைக்காமல் படுத்துக் கொண்டேன். கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். தூங்கக் கூடாது என்று நினைத்தேன். ஆனால் தூங்கிப் போனேன். பிறகு திடுமென விழித்துக் கொள்வேன். படிக்க விருப்பம். அர்த்தம் மூளையில் ஏறவில்லை. என்னை நான் சபித்துக் கொண்டேன். ஒரு வழியாக விடிந்தது. சட்டையைப் போட்டுக் கொண்டு அரண்மனையை விட்டு வெளியே வந்தேன். நேராகச் செல்வராஜின் வீட்டை நோக்கி நடந்தேன். ஒரு டீக்கடையில். டீ சாப்பிட்டுக்கொண்டே. நடந்ததைக் கேட்டான் செல்வராஜு.

'நைட். இன்னிக்கு ராத்திரி. வேற இடத்துல நீ படுக்கிறே'

பிள்ளையார் கோவில் மணி ஒன்றுதான் என்னை நிதம் எழுப்பியது. செல்வராஜுதான். மணியை ஒலிப்பான். நான் மாடியில்வந்து உலகத்தைப் பார்த்தேன். உலகம் உறங்கிக் கொண்டிருந்தது.எதிர் வீட்டில் காவேரி இன்னேரம் எழுந்திருப்பாள். காபிப் போடும் வேலையிலிருந்து அவள் நித்தியப்பணி தொடங்கி இருக்கும். என் வீட்டுக்கு நேர்ப்பின்னால் இருந்தது. செல்வராஜின் பிள்ளையார் கோவில்.

செல்வராஜு பிள்ளையார் கோவில் உரிமையாளரானது ஒரு தற்செயல். சேட்டு மூலை. மார்வாடிக் கடைகளின் வரிசையால் ஆனது. அதனால் அப்பெயர். சேட்டு மூலைக்கு. முனையில். ஒரு பெரிய அரச மரம். நிழலில் ஆட்டோக்காரர்கள் ஸ்டாண்டு போட்டிருந்தார்கள். அரசமரத்தடி மேடையில். மரத்தை ஒட்டியபடி ஒரு கல் பிள்ளையார் இருந்ததைச் செல்வராஜு கண்டிருக்கிறான். ஒரு மண்குதிரை. சில ரிஷி பொம்மைகள் என்று சின்னச் சின்ன பொம்மைகள் பிள்ளையாரை மறைத்திருந்தன. என்னமோ யோசனையுடன். இடத்தைச் சுத்தம் செய்தான். எதிர்வீட்டுச் சேட்டு அம்மாளிடம் குடம் வாங்கி. இடத்தைக் கழுவி விட்டான். சாயங்காலம். பார்வதியை அழைத்துக்கொண்டு வந்து. கோலம் போடச் செய்தான். இரவே. அவன் அறிந்த குருக்கள் ஒருத்தரைப் பார்த்துச் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டான்.

அடுத்தக் கிழமை வெள்ளிக் கிழமையாய் அமைந்தது. குருக்கள் வந்து. சுவாமியை. நீராட்டி. புஷ்ப மாலைகள் போட்டு. முறைப்படி விபூதி அணிவித்து. மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்தார். கேலி பேசிய ஆட்டோ தோழர்கள். பயபக்தியோடு திருநீறு வாங்கி நெற்றியில் இட்டுக்கொண்டார்கள். அன்று சாயங்காலம். மறுநாள் காலை யிலிருந்து. செல்வராஜே முதலில்

சூடம் கொளுத்தி, ஒழுங்காகப் பூஜை செய்யத் தொடங்கினான். பிள்ளையார் குறித்த அகவல் புத்தகம் வாங்கிப் பாராயணம் செய்து கொண்டான். நாளடைவில், தலைமுடியும் தாடியும் வளர்ந்து, சற்றேறக்குறைய ஒரு சாமியாரைப் போலத் தோற்றம் கொடுக்கத் தொடங்கினான் செல்வராஜு.

பிள்ளையாருக்கு ஒரு பெயர் கொடுக்க வேண்டிய ஸ்திதிக்குக் கோயில் வளர்ச்சி அடைந்தது. உண்டியல் வாங்கி, பலமான சங்கிலி போட்டுப் பிணைத்தான். செல்வராஜுக்கு ஆட்டோ சாமி என்று பெயர் ஏற்பட்டது. ஒரு நாள் அவன் ஆட்டோவில் பிரயாணம் செய்த போது, என்னைத் தெரிந்து கொண்டு, பிள்ளையார் விஷயத்தைச் சொல்லி பிள்ளையாருக்கு ஒரு பெயர் வேண்டும் என்றான். பலபேரைச் சொன்னேன். கடைசியில் ஆட்டோ செல்வ சக்தி விநாயகர் என்ற பேரைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டான். விநாயகருடன் அவன் ஆட்டோ மற்றும் செல்வராஜ் என்கிற அவன் பெயர் எல்லாம் இணைந்ததில் மிகுந்த சந்தோஷம். நானும் ஒரு நாள் போயிருந்தேன். ஆட்டோ செல்வ சக்தி விநாயகர் ஆலயம், உபயதார் மற்றும் உரிமை : ஆட்டோ செல்வராஜு என்று போர்டு, கிளையில் தொங்க அதன் கீழே பிள்ளையார் மினுமினுப்போடு விளங்கினார். எனக்காகச் சூடம் கொளுத்தி, 'வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும், வெற்றி முகத்து விநாயகனைத் தொழப் புத்தி மிகுந்து வரும்..' என்று பாடலைச் சொல்லி, ஆரத்தித் தட்டை நீட்டி, விபூதி கொடுத்தான்.

ஒரு நாள் கேட்டேன்.

'உன் நோக்கம் என்ன? எதுக்கு உனக்குக் கோயில்?'

'தெரியலை, சீத்தா. மனசுக்குத் திருப்தியா இருக்கு.'

காலை ஐந்தரை தொடங்கி ஏழு வரை கோயில். அப்புறம் ஆட்டோ பிழைப்பு. சாயங்காலம் ஏழு முதல் ஒன்பது வரை கோயில். அப்புறம் வீடு என்று வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். உண்டியலில் காசு சேரவும், அதைப் பாதுகாக்க என்றே, சப்பாணியாக இருந்த ஒருத்தனை நியமித்துக் கொண்டான்.



என் புதிய அறைக்குப் பின்னாலேயே இருந்தார் ஆட்டோ விநாயகர். முன்னால் இருந்தாள் காவேரி. கணக்கு சம்பந்தமான அரசு உத்தியோகத்தில் இருப்பதாகச் செல்வராஜு சொல்லி இருந்தான். ஒரு வயதானவர் அந்த வீட்டில் இருந்தார். காவேரியின் தாத்தா என்றிருந்தேன்.

'இல்லை கணவர்' என்றான் அவன்.

எனக்கே அது உண்மையாக இருக்கும் என்பதை நம்ப விரும்பவில்லை. ரொம்ப வருத்தமாக இருந்தது. ஒரு பெரிய கதை இருக்கிறது காவேரியிடம். எல்லோரிடமும் குறைந்தபட்சம் ஒரு கதை இருக்கிறது.

சரியாக ஏழு நாற்பத்தி ஐந்துக்கு அவள் மாடிக்கு வருவாள். வெயிலில் கூந்தலை உலர்த்துவாள். எட்டு ஐந்து வரைக்கும் மாடியில் இருப்பாள். என் மாடியில் நானும். நான் நிற்பது அவளுக்குத் தெரியும். ஒரு முறை கூட, அவள் என் பக்கம் திரும்பியது இல்லை. என் ஸ்திதி. என் பார்வை அவளைத் தொந்தரவு செய்ததாகவே இல்லை. ஒரு பேப்பர் வெயிட் மாதிரி, அவள் கட்டி வைத்திருக்கும் கொடிக்கயிறு மாதிரி, என்னை அவள் பாவித்தாள். ஆனால், எனக்கும் அது பொருட்டில்லை. நான் பார்ப்பது முக்கியம். பார்க்கப்படுவது அல்ல.

எட்டு நாற்பதுக்கு குடை, கஞ்சி போட்ட காட்டன் புடவையோடு ஆபீஸ் கிளம்புவாள். தாத்தா – தாத்தா தான் – பத்து மணிக்குக் காக்காய்க்குச் சோறு வைப்பார். மாடியில், கைப்பிடிச் சுவரில் காக்கைகள் அவருக்கெனக் காத்திருக்கும்.

வெயிலில் ஊறுகாய்ச் சீசாக்கள், வடகம், பயறு வகைகள் காய்ந்தபடி இருக்கும். எள் காய்ந்தால், எண்ணெய்க்கு ஆகும். எலிபுழுக்கை காய்வது எதற்காக?

சென்ற சில தினங்களுக்கு முன்தான், முதல் நாள் காவேரியை நான் வெயில் காய்ந்த தினுசில் பார்த்தது. காலை வெயிலின் ரேகைகள், பாம்புகளாய் நெளிந்தன. தந்தை, தாய், பிள்ளைப் பாம்புகள் என்று நிறைய பாம்புகள்

வானத்திலிருந்து மாடியில் வீழ்ந்து. எல்லாம் காவேரியிடம் போய்ப் பிணைந்து கொண்டன. பிளவுபட்ட நாக்கை உடையதால் பிணாகம்.

கூந்தலில் நீர்ப் பொடிகள் பற்றி எரியும் வைரத் துகள்கள். புகை எழ ஜொலிக்கும் முடித் தீ. எப்போது மாடிக்கு வந்தாலும். பார்வையை கனகாம்பரத் தொட்டியில் பதித்தாள் அவள். நாலு தொட்டிகள் இருந்தன. இரண்டில். இளவயலட் நிறப் பூக்கள் பூக்கும் செடிகள் இருந்தன. ஒன்றில் வெள்ளைச் சிதறலுடன் கூடிய பச்சை அகன்ற இலைச் செடி. ஒன்றில் கனகாம்பரம். மஞ்சள் கனகாம்பரம். கனகாம்பரச் செடி இலைகள். அந்த முதல் நாளில். அரச இலைகளாக மாறியது. எனக்குத் திகைப்பூட்டியது. சதா ஆரவாரம் செய்து. கவனம் ஈர்க்கும் அரசிலைகள்.

மாலை ஏழு மணிக்கு செல்வராஜு. ஒரு முழு பாட்டிலுடன் என்னைப் பார்க்க வந்திருந்தான். ரொம்ப முக்கியமான விஷயம் என்றால் பாட்டிலுடன் வருவது அவன் வழக்கமாக இருந்தது. பையில் நிறைய நொறுக்குத் தீனிகள் இருந்தன. பானம். தொண்டையை பட்டுத் துணிபோல் படிந்து வருடி இறங்கியது. அவன் சொல்லத் தொடங்கினான்.

போன பௌர்ணமியின் போது. அவன் மாமியார் காலமானாள். கருமாதி முடிந்தது. அந்த அம்மாளுக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் ஹேமவதி. ஆறு வயசும். இரண்டு வயசும் ஆன குழந்தைகளை விட்டுச் செத்துப் போனாள். குழந்தைகளின் தந்தை. உடனே மறுகல்யாணம் பண்ணிக் கொண்டான். கிழவி. குழந்தைகளைத் தன் பராமரிப்பில் வைத்துக் கொண்டாள். இரண்டும் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் பள்ளிகளில் படித்தார்கள். வீட்டைப் பார்த்துக் கொள்ளவும் ஆள் இல்லை. யோசித்தாளாம். வேறு வழியில்லை. இருக்கும் வாடகை வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு. மாமியார் வீட்டோடு போய்விடுவது உசிதம். வீடு சொந்தவீடு. இரண்டாவது பெண் பார்வதிக்குத் தான். அதுதான் அவன் மனைவிக்குத் தான் அது சேரும். குழந்தைகளையும் பார்த்துக் கொள்ளலாம். கடவுள் அவனுக்குத் தான் குழந்தைப் பேறை அருளவில்லையே...

'சரி. செய். மாமியார் வீட்டோடு போய்விடுவதுதான் நல்லது.'

'அதுதான் பிரச்னை'

ஆட்டோ செல்வ சக்தி விநாயகர் கோவிலுக்கும். மாமியார் வீடு இருக்கும் பழவக்காரன் சாவடிக்கும் இடையே இப்போது இருபத்தேழு கிலோமீட்டர். தினம் கோயில் சம்ஸ்காரங்கள் பண்ண முடியாது. அவ்வளவு தூரத்திலிருந்து வந்து போக முடியுமா?'

'என்ன பண்ண யோசித் திருக்கிறே?'

'கோயிலை விற்றுவிடலாம் என்று முடிவு பண்ணி இருக்கேன்.'

''கோயிலை விற்றுவிடுவதா?'

'செய்தால் என்ன? பிள்ளையார் கொஞ்சம் கொஞ்சமாக. பிரபலமாகிக் கொண்டிருக்கிறார். போன வாரம் எம்.எல்.ஏ. காரில் வந்து இறங்கிக் கும்பிட்டுப் போனார். லோக்கல் எஸ்.ஐ. பெண்டாட்டி வாடிக்கைக் காரி. உண்டியிலும். தினம் சுமாரா இருபது இருபத்தைந்து விழுது. செவ்வாய். வெள்ளியில் நாற்பது. அம்பது தேறும்!

சிங்கார வேலு சக ஆட்டோ டிரைவர். கோயிலை வாங்கிக் கொள்ளத் தயார். செல்வராஜு. ஐயாயிரம் கேட்டிருக்கிறான். சிங்காரம். ரெண்டாயிரத்தில் நிற்கிறான்.

'நான் என்ன செய்யவேணும். செல்வராஜு?'

'சிங்காரத்தை வரச் சொல்றேன். பஞ்சாயத்து பண்ணி. மூவாயி ரமாவது வாங்கிக் கொடுக்கணும்.'

மறுநாளே சிங்காரம் வந்தான்.

'நீங்களே சொல்லுங்க சார். மூலைக்கு மூலை பெட்டிக்கடை மாதிரிக் கோயில் வந்துடுச்சு. பிள்ளையார் கோயிலுக்கு. பரீட்சை நேரத்தில் தான் சார் மரியாதை. அம்மன் கோயில்னா. பரவாயில்லை'

''பிள்ளையார்பட்டிக் கோயில் எப்படி?' என்றான் செல்வராஜு.

'பிள்ளையார்பட்டியும். ஆட்டோ விநாயகரும் ஒன்னா. சார்?'

செல்வராஜு சப்தம் போட்டுச் சொன்னான்.

'சீத்தாபதி. பிள்ளையார் ஊரெல்லாம் பால் குடிச்சுதே. எல்லாப் புள்ளையாரும் அரை டம்ளர். ஒரு டம்ளர் பால் குடிச்சப்போ. என் புள்ளையார். ஒன்றரை லிட்டர் பால் குடிச்சாரே. அதை மறக்கலாமா?

செல்வராஜு கசங்கிய ஒரு தமிழ் மாலைப் பத்திரிகையை எடுத்து வெளியே போட்டான். அதில் ஆட்டோ விநாயகர் படமும். வரிசையில் நிற்கும் பக்தர்களும். 'ஒன்றரை லிட்டர் பால்குடிக்கும் சூப்பர் பிள்ளையார்' என்ற தலைப்பும் காணப்பட்டன.

கடைசியில் இரண்டாயிரத்து ஐநூற்றுக்கு விலை படிந்தது.

'நான் பிள்ளையார் பெயரை மாற்றப் போறேன்' என்றான் சிங்காரம்.

'பொருள் இனி உன்னோடது. உன்னை நான் கேட்க முடியுமா? ஆனா. பிள்ளையார் மவுசைக் காப்பாத்தனும்.'

அடுத்த வாரமே பணமும் பிள்ளையாரும் கைமாறினார்கள். 'ஆட்டோ சிங்கார விநாயகர்' என்று ஒரு புதிய போர்டு போட்டான் சிங்காரம். போகும் போது. அந்தத் தகவலைச் சொன்னான் செல்வராஜு.

'காவேரி காதலனுடன் போய் விட்டாளாம். தேடச் சொல்லி தாத்தா கேட்டுக்கொண்டாராம்.

'எனக்கு இதா வேலை?' என்று கேட்டான் செல்வராஜு. என்னிடம் அதோடு. 'அடிக்கடி பிள்ளையாரைப் போய்ப் பாரு. சீத்தா' என்றும் கேட்டுக்கொண்டான்.

"ஒவ்வொரு உயர் மத்தியதரக் குடும்பத்தின் கனவுகளிலும் கார்கள் வழுக்கி ஓடுகின்றன"

☐ பா. செயப்பிரகாசம்

நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு சின்னக் காரின் உயரம் தாங்கக் கூடியது.

ஒரு காரின் நீளம், அகலம், சோபிதம் என்பது அதன் விலை உயரத்தைப் பொறுத்தது. விலை உயரம், சக்திதாசன் என்ற குற்றவியல் நீதிபதியின் வருமான உயர அளவுகளோடு சம்பந்தப்பட்டது. இடுப்பில் தூக்கிவைத்துக் கொள்கிற மாதிரி சிறிய கார் என்றாலும் இந்த வருமானம் எல்லைகளுக்குட்பட்டது. எல்லையில்லாத அதிகாரிகளும் நீதிபதி களுமிருந்தார்கள்.

நாலு முழக்கிணறும் இருக்கிறது. நாற்பது முழக்கிணறும் இருக்கிறது. அதற்குத் தகுந்தபடி கயிறு உயரமும் இருக்கிறது. நாலு முழக்கிணறுக் குள்ள கயிறை நாற்பதுக்குள் இறக்கிவிட முடியாது. கார் வாங்குவதில் சக்திதாசனின் நிலை நாலுமுழக்கிணறாக இருந்தது.

கல்லூரி மாணவனான மூத்தவன் கதிர், இடையில் கொஞ்சம் அலம்பல் செய்தான். டாடா சுமோ, மாருதி எஸ்டீம், சபாரி என்று புதிய கார் வகைகளை முன்வைத்தான். பெரிய முதலீட்டில் வாங்கப்படுகிற எந்தப் பொருளும் மறு மூலதனமாக மாற்றப்பட வேண்டும். அரசு அலுவலகங்கள், பெரிய கம்பெனிகள் இங்கெல்லாம் ஒன்று போட்டால் பத்து எடுக்கிற இடமாக இருப்பதால் அளக்காமல் போடுகிறார்கள். இது மாதிரி வியாபாரப் போட்டியை மையமாகக்



ஓவியம் : மருது

# புயலுள்ள நதி

கொண்டதல்ல வீட்டுப் பயன்பாட்டுக் கான கார். அக்கம். பக்கம் விழாக்கள். திருமணம். சொந்தக்காரர் வீடுகள் என்று நகரத்துக்குள்அடக்கமாகப் போய்வர... சிறிய காரின் உபயோக முறைகள் ஏற்கெனவே வரையறுக்கப் பட்டுள்ளன.

வாகனப் பயிற்சி பெறும்வரை ஒரு வாகன ஓட்டி வைத்துக் கொள்வது நல்லது என்று முடிவானது. சக்திதாசன். மனைவி அமராவதி. மகன். மகள் இவர்கள் எல்லோ ருக்கும் பரிசோதித்துப் பார்க்கும் சோதனைக் கூடமல்ல புதிய கார்.

ஒவ்வொரு உயர் மத்திய தரக்குடும்பத்தின் கனவுகளிலும் கார்கள் வழுக்கி ஓடுகின்றன. சாலைகளில் வழுக்கி அவர்களின் சின்னச் சின்னக் கனவுகள் அம்புபோல் பறக்கின்றன. நொக்கல். நொறுங்கல் இல்லாமல். சிறு கீறல் கூட படாமல் கனவின் சிறு கூடாரத்தை மொத்த வடிவை வீடு கொண்டு வந்து சேர்க்க எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். சாலையில் சரளமாக இந்த கனவுப் பந்து உருண்டோடுகிறவரை. பழைய காரிலேயே பழகிக்கொள்ள முடிவெடுத்தார்கள்.

• • •

**வா**ழ்வின் ஒவ்வொரு திருப்பு முனையும். ஏதாவது புதிய பொருள் வாங்குகிற ஒரு புள்ளியில் தொடங்குகிறது.

வானத்திலிருந்து பாடல்களை இறக்குமதி செய்யும் ஒரு ஒலி வாகனம் டு.இன்.ஒன். அந்த ரேடியோ இருந்தால் நல்லது என்று பட்டது. இது தான் முதல் திருப்பம். அது நேஷனலா. பி.பி.எல் ரேடியோவா என்பதில் ஆளுக்கொரு யோசனை உருவானது. அப்போது சக்திதாசனின் அம்மா இருந்தார். இந்தத் தகராறு பெரிதாகப் போய். அவரவர் எல்லா நாகரீக ஆடைகளையும் உதிர்த்து விட்டு உச்சத்திற்குப் போய்க் கொண்டிருந்த போது. அம்மா. "உங்க ஆட்டைக்கு (விளையாட்டுக்கு) நான் வரலை" என்று விலகிப் போய் விட்டார். எதை வாங்கினாலும் மாப்பிள்ளையை விலை கொடுத்து வாங்குகிற மாதிரித்தான். அந்த விலை கூடுன பொருளை வாங்கிய பிறகும். கடைசிவரை. சீரும் செனத்தியும் போட்டுப் போட்டுப் பத்திரமாய் பாதுகாக்க வேண்டும் என்றாள்.

கடைசியில். சேதுராமன் மாமா வேலை செய்கிற "மிலிட்டரி கேண்டீனில்' அடக்க விலைக்குக் கிடைக்குமென்றும். வரி கிடையா தென்றும் அங்கேயே வாங்குவ தென்றும் முடிவெடுக்கப் பட்டது. ஒரு நீதிபதி ஸ்தானத்தில் இருப்பவருக்கு இப்படியெல்லாம் ஒரு யோசனை தோன்றுமா? இருபது ஆண்டு களுக்கு முன் சக்திதாசனுக்கு இப்படித்தான் யோசிக்க முடிந்தது. முடிவான அன்றைக்கு. ஒவ்வொரு வரும் சேதுராமன் மாமா கூடப் போக எக்குப் போட்டார்கள். "யாரும் வர வேண்டாம். நானே வாங்கி வந்து விடுகிறேன்" என்று சேதுமாமா போனார். நேஷனல் வந்தது.

ஒவ்வொரு புதிய பொருளும் வாங்குகிற போது. அது உச்சபட்சத் தேவையாகக் கருதப்படும். இனி வேறெந்தப் பொருளையும் கனவில் கூட வாங்கத் தேவையில்லை என்பதாகத் தோன்றும். ஆனால் அது ஒரு முடிவுறாத புள்ளி. அவ்வப்போது கோலத்தை நீட்ட புதிய புள்ளி தேவைப் படுகிறது.

அக்கம் பக்கம் எங்கும் மேல் நடுத்தர வர்க்கக் குடியிருப்புகள். அங்கிருந்த அந்தர வாசிகளின் சுவாசம் ஒரு குளிர்சாதனப் பெட்டிக்குள் (ஃபிரிட்ஜ்) பூட்டி வைக்கப் பட்டிருந்தது. எல்லா வீடுகளிலும் குளிர் சாதனப் பெட்டி உட்கார்ந்திருக்க. இந்த வீட்டில் மட்டுமே இல்லாதது வித்தியாசமாகப்பட்டது. வீடு முழுதும் வெறுமையாக இருக்க. வெறுமை முழுதும் கேள்விகளால் நிரம்பியிருப்பதாகத் தென்பட்டது.

"ஒரு நீதிபதி வீட்டில் ஃபிரிட்ஜ் இல்லையா?" புறப்பட்ட கேள்வி ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு தாவி குடியிருப்பு முழுதுமே கேள்வியாகி நின்றது.

ஒரு சுவையான தோசை ஒரு போதும் வார்க்கிற கையில் இல்லை. சுவையான முறுகலான தோசைக்கு அளவாகப் புளித்த மாவு. முன் தேவையாகும். இந்த முன் நிபந்தனை ஃபிரிட்ஜ் இல்லாத வீட்டில் மட்டுமே நிறைவேற்றப் படுவது. நிறைவேற்றப் பட்டால். தோசையின் முறுகல் வாசனை கதவு. சன்னல் வழியாக இறங்கி. பக்கத்து வீடு. கீழ்வீட்டு உயிர்களில் இணைந்து விடும். அடுத்தவரின் உயிரில் கலப்பது வடிவாய்க் கலக்கிற மாவின் பதமான புளிப்பில் வாழ்கிறது. அதிகம் புளிப்படித்து விடாமல் இருக்க ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அதன் மேல் மாவுப் பாத்திரம் வைக்க வேண்டும்.

கீழ் வீட்டிலிருக்கிற பத்து வயது மணிமாறன் அத்தை சுடுகிற தோசைதான் ருசியாயிருக்கிறது. என்று மேல் வீட்டிற்கு வந்தான். சன்னல். கதவுகள் வழியாக கீழிறங்கி.



தோசை வாசனை அவனைப் படிக்கட்டுகள் வழி மேலே வரவழைத்தது. அவனுடைய தங்கச்சி ஏழு வயது மாதவம்மா அவனைக் கொடுக்குப் பிடித்தபடி மேலே வந்தாள்.

“நீ என்னம்மா, தோசை சுடுறே?”

“‘ஏன் அத்தை நல்லாச் சுடுறாங்களாக்கும்?”

“முதல்ல நீ நல்லாச் சுடுறதுக்குப் பாரு”

தனது தாயிடம் கட்டளைகள் வைத்தான்.

“நீ ஒங்க அத்தை கிட்டயே சாப்டுக்கோ.. தோசைக்கு மட்டும் அங்க போறது, மற்றதுக்கெல்லாம் இங்க வர்றதுங்கற வேலையெல்லாம் இனிமே வச்சிக்கிறாதே.'' மணிமாறனின் அம்மா, பொய்க் கோபமாய் விரட்டியடித்தாள்.

பால்க்கார லட்சுமியம்மா, இட்லிக்கார செண்பகம் என்பது போல் தோசைக்காரஅத்தை என்றாகி விட்டது.

பிறகு சக்திதாசன் வீட்டுக்கும் ஃபிரிட்ஜ் வந்தது. ஃபிரிட்ஜ் என்கிற உறை பனிப்பெட்டிக்குள் முழுக் காட்டி எடுக்கப்படுகிற எல்லாப் பொருட்களுக்கும் ஒரே சுவைதான் இருக்கும் என்பது அன்று உறுதியானது. தோசைக்கும் அதே சப்பென்று சுவை. பிறகு மணி மாறனும், மாதவம்மாவும் மேல் வீட்டுக்கு வருவது நின்று போனது.

• • •

**கா**லைச் சிற்றுண்டி மேசை மேல் வைக்கப்பட்டிருந்தது. சக்திதாசன், அமராவதி, அவரோட அம்மா, பிள்ளைகள் இரண்டு பேர் சேர்ந்து சாப்பிடுகிற ஞாயிற்றுக் கிழமை அது. கீழ்வீட்டு மணிமாற னோட அம்மா வந்தாள். இட்லி, இட்லியாக இல்லாமல், பலகை, பலகையாகப் பரிமாறப்பட்டுக் கொண்டி ருந்தது. மணிமாறனோட அம்மா ஒரு பக்குவம் சொன்னாள். “இது மாதிரிச் செய்ங்க அக்கா. மல்லிகைப்பூ ஒங்க கையில இருக்கும்” என்றாள்.

"அது மாதிரிச் செய் அமரா" என்றார் சக்திதாசன்.

"மிக்சியில் அரைத்த மாவில் இப்படித்தான் வரும்" அமராவதி விட்டுக் கொடுக்க வில்லை.

"அவங்கதான் சொல்றாங் கள்லே. ஒரு தடவை செஞ்சு பாரேன்".

"நான்தான் சொல்றேன்ல. அது வராதுன்னு" திருப்பினாள் அதே எரிச்சலோடு.

தட்டுகளுக்கு முன்னால் உட்கார்ந் திருந்த அத்தனை பேரின் முகமும், கல்லால் அடித்த மாங்காய் போல் சப்பழிந்து போனது. ஒரு சண்டையாக முற்றப் போகிறது என்றுணர்ந்த மணிமாறனின் அம்மா, மெதுவாக கீழே இறங்கிப் போய் விட்டாள்.

"எந்த விசயத்தையும் புதுசாக் கத்துக்கிறனுங்கிற புத்தியே ஒனக்கு இருக்காதா? நமக்குத் தெரியாதது ஆயிரம் இருக்கும்.

"இந்தா பாருங்க, எனக்கு புதுசாக் கத்துக்கிற முடியாது".

"ஏன் முடியாது?"

"அது அப்படித்தான். அவளுக்கென்ன நின்னபடியே சொல்லீட்டுப் போயிருவா"

படீரென்று எழுந்தாள். சாப்பாட்டு மேசையில் வைத்தது எல்லாம் அப்படியே இருந்தன.

அம்மா, கணவர், பிள்ளைகள் யாரைப் பற்றியும் கவலைப் படவில்லை. மனிதர்கள் என்று கூடப் பார்க்கவில்லை "நீங்களே சமைச்சுக் கோங்க. நீங்களே சாப்டுக்கோங்க. தேவைப்பட்ட துன்னா அவளையே சமைச்சுப் போடச் சொல்லிச் சாப்டுங்க."

எழுந்து போய் விட்டாள்.

சடக் சடக்கென்று மாறுகிற மனித குணங்களைக் கண்டதுண்டு. அவருடைய குறுகிய பழகும் வட்டத்திற் குள்ளேயே இதற்கான சாட்சியங்கள் நிறைய இருந்தன. எந்த முகாந்திரமும் இல்லாமல், தனது கோபம், தனது உணர்ச்சி, தனது அகங்காரம் தான் தான் எல்லாம் என்கிற ஒரு மனுசியை 20 வருஷமாகக் கண்டு கொண்டி ருக்கிறார். பிள்ளைகளும் அனுபவித் தார்கள்.

எத்தனை காலம் பழகிப் பதியமிட்டிருந்தாலும் அவளால் யாரையும் அந்தக் கணத்தில் வேரோடு தூக்கி வீசியெறிந்துவிட முடியும். நிறைய உறவுகள் இப்படி பலியாகிப் போயின.

அவர் எத்தனையோ தீர்ப்புகள் வழங்கியிருக்கிறார். ஆனால் சாந்த மான கணவராக இருக்க முடியவில்லை. பிரச்சினை வருகிறபோது, அவர் பதிலுக்கு பதில் வெடிக்கிறார். அப்படிச் சண்டை வெடிக்கிற நேரங்களில் பிள்ளைகள் வெளியே கேட்காமலிருக்க சன்னல் கதவுகளை யெல்லாம் அடைத்து விடுவார்கள். அந்த நாகரிகம் மூத்தவனுக்கு பத்து வயதான போதிருந்து பாலித்துவிட்டது. அவனுடைய பத்து வயதிலிருந்தே பிரச்னைகள் சூடு ஆகி, ஒருவரை ஒருவர் மூர்க்கமாக வார்த்தைகளால் தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டில் முன் அறையில் ஒரு மந்திர விளக்கு இல்லாமல் வீடே அருளற்றுக் கிடந்தது. தொலைக் காட்சி என்ற மந்திர விளக்கைப் பார்க்க கீழ் வீட்டிற்குத்தான் போக வேண்டியிருந்தது. அப்படிப்போன ஒருநாள் "எங்க பசங்க படிக்கிறாங்க. அப்புறமா டி.வி.போடலாம்" என்று மணிமாறனின் அம்மா திருப்பி அனுப்பிவிட்டார்கள். "அதுதான் அம்மாவுக்கு எரிச்சல்" என்றாள் சின்னவள்.

அளவான புளிப்பில் வார்க்கப் படுகிற ஒரு முறுகல் தோசையின் சுவையையும், ஒரு தொலைக்காட்சிப் பெட்டியையும் சமப்படுத்திவிட முடியாது.. தோசையில் ஒன்றிரண்டு சுவை காணக்கிடைக்கலாம். மூளையை வள்ளிசாய்க் காலி செய்து விடுகிற தொலைக்காட்சிக்கு இதுவரை வார்த்து வழங்கிய தோசைகள் ஈடாகாது.

எவ்வளவுதான் வேண்டப்பட்ட சொந்தமாக இருக்கட்டும். சின்னக் குழந்தைகள் அதற்காக சொந்த டி.வி.யைப் போல் பார்த்துவிட முடியாது. சிலநேரங்களில் இல்லையென்று சொல்லிவிடுகிற போது, சிறிசுகள் முகம் கொராவிப் போய்த் திரும்பும்.

இட்லித் தகராறு நடந்த அந்த வாரம் முழுதும் அமராவதி சாப்பிடவில்லை. அவள் அலுவலகம் போகுமுன் ஒரு காப்பி,மாலையில் அலுவலகத் திலிருந்து வந்த பின் ஒரு காப்பி என்று உண்ணா விரதத்தில் தீவிரமாய் இருந்தாள். அவளால் அப்படி இருக்க முடியும். இயல்பாய் ஏதாவது பேசப் போய் அது பிரச்சினையாகி விடக்கூடாதே என்று பிள்ளைகள் ஒதுங்கிக் கொண்டார்கள். இத்தனை வருஷங்களாய் அவளிடம் இல்லாத புதிய குணம் ஒன்று திடீரென முளைத்து நிற்கப் போவதில்லை. இத்தனை வருஷ குணம், அவர்களுக்குத் தெளிவாக பிடிமானப்பட்டிருந்தது.. கும்முட்டி அடுப்புப் போல், தகதகப்பாய் கோபாக்னியை தனக்குள்ளேயே வளர்த்துக் கொண்டிருந்தாள். யாருடனும் பேச்சு இல்லை.

ஓட்டலில் வாங்கி வருவது. சாப்பிடுவது என்று நாட்கள் கழிந்தன. அவள் தொடுவது இல்லை. முடியாத நிலையிலும் அவரது தாயார் ஏதாவது சாப்பாடு செய்து வைத்துக் கொண்டிருந்தார்.

அன்றைக்கு அலுவலகத் திலிருந்து வந்ததும் அமராவதி மயங்கி விழுந்து விட்டதாக பிள்ளைகள் சொன்னார்கள். கூட்டிக் கழித்துப் பார்த்தால் 25 வருச வாழ்வில் இருவரும் சேர்த்து வைத்த குப்பை மேடுதான் அதிகம் என்று சக்திதாசன் நினைத்தார். அர்த்த முள்ள எதையும், அந்தக் குப்பைமேட்டிலிருந்து எடுக்க முடியாது என்று தோன்றியது. ஒவ்வொரு வழக்குக்குள்ளும் புகுந்து ஆராய்வது போல், குடும்பப் பிரச்சினைகளின் இண்டு இடுக்குகளுக்குள்ளும் புகுந்து

ஆராய்வது நல்லது என்று தீவிரமாய் சிந்தித்தார்.

எத்தனைக் கண்பார்வைக்குறைவு. மூளை மழுங்கடிப்பு ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிட்டுப் போகட்டும். மற்றவர் எத்தனை தடைகள் வேண்டுமானாலும் விதிக்கட்டும்; ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி விடுவது என பேராய்வுக்குப் பின் முடிவு செய்தார். எல்லாத் தோரணை களுடனும். சிங்காரங்களுடனும் தொலைக்காட்சிப் பெட்டி அவர்கள் வீட்டு முன்ன றையில் வந்து உட்கார்ந்தது. இரவுச் சாப்பாடு வாங்கி வர ஓட்டலுக்குப் பையனிடம் சொல்லிக் கொண்டிருக் கையில். அமராவதி வந்து சிறு புன்னகையுடன் சான்னாள்.

" எனக்கும் சேர்த்து வாங்கிட்டு வரச் சொல் லுங்க''

• • •

புதிய கார். சத்த மில்லாமல் நடுச்சாமத்தில் வீட்டுமுன் வந்து நின்றது. விலை மதிப்புள்ள ஒரு சொத்து வருகிறபோது. கூட்டாளி சேர்ந்தபடி. சில சடங்குகள். சாத்திரங்களும் வருகின்றன. கம்பெனி யிலிருந்து கார் எடுக்க நல்ல நேரம் பார்க்கப்பட்டது. நள்ளிரவு 12 மணிக்கு எடுத்து வந்து நிறுத்த வேண்டுமென்று ஐயர் சொன்னார். கார் நிறுவனம் முந்தின நாளே கணக்கு.வழக்கு எல்லாவற்றையும் முடித்து. காரைத் திடலில் கொண்டு வந்து நிறுத்திவிட்டது. எப்போது வேண்டுமானாலும் எடுத்துப் போகலாம் என்றார்கள்.

தேங்காய் உடைத்து. கற்பூரம் கொளுத்தி பூஜை போடப்பட்டது. காரின் நெற்றியில் முதலில் உட்கார்ந்திருந்த சந்தனமும். திருநீறும். செந்துருக்கப் பொட்டும் பிறகு எல்லோர் நெற்றியிலும் ஏறியது.

கார் வந்த அன்றைக்கு சக்திதாசனின் அம்மா இறந்த நினைவு நாள்.

"இன்னைக்கு உங்கம்மா நினைவுநாள்'' என்றாள் அமராவதி; ஒருவரின் சாவு. இன்னொரு நல்வருகைக்கு காரணமாகி விடுகிறது.

"பாட்டி. ரொம்ப நாளா கார் வாங்கணும்னு ஆசைப்பட்டாங்

**இத்தனை வருஷங்களாய் அவளிடம் இல்லாத புதிய குணம் ஒன்று திடீரென முளைத்து நிற்கப் போவதில்லை. இத்தனை வருஷ குணம், அவர்களுக்குத் தெளிவாக பிடிமானப்பட்டிருந்தது.**

கப்பா. அதான் பாட்டி காரா வந்துட்டாங்க'' என்றான் மகன்.

தன் மகன் அரசாங்க அதிகாரியாகி. அரசாங்கக் காரிலே போய் வர வேண்டுமென்ற அப்படியொரு ஆசை அம்மாவுக்கு இருந்திருக்கும். அது நிறை வேறியதும். தன் மகனின் சொந்தக் காரில் உலாவர வேண்டும் என்ற கௌரவமான அடுத்த கட்ட ஆசை முளை விட்டிருக்கும். அடிமண்டிக் கிடந்த ஆசைகள். அவர்களின் மரணம் என்ற பாதாளக் கரண்டியால் மட்டுமே மேல் கொண்டு வரப்படுகின்றன.

"ஒங்க அம்மா நினைவா. காரை எடுத்திட்டு முதன் முதலா கோயிலுக்குப் போய்வரலாம்'' என்றாள் அமராவதி.

நீதிபதியாக இருந்தபோது மட்டுமல்ல. இப்போது ஓய்வு பெற்ற பிறகும் கூட.கோயில்.பக்தி. ஆன்மீகம். சாமியார் என்று தலை கொடுத்துக் கொண்டிருந்தவரில்லை. எல்லாவற்றுக்கும் மேலாய் நீதியின் கட்டளைகளுக்கு அவர் அடிபணிந்து போவதற்கே நேரம் சரியாக இருந்தது.

இத மாதிரிப் பூக்கிற சந்தோசங்களுக்கும். இன்பங்களுக்கும் நடுவில் நனைந்து நின்று எவ்வளவு காலமாகிறது. நீதிபதியாக ஓய்வு பெற்ற பிறகு வந்த பணத்தில் கார் வருவதும். வாழ்நாளின் மொத்த சேமிப்புக்குள் இவ்வளவு காலம் ஒளிந்திருந்த மகிழ்ச்சி அலைகள் வெளியே வருகிறபோது எதிர்கொள்வதும் நிறைவு தருகிறதுதானே.

'சரி' என்றார் சக்திதாசன்.

• • •

"நீ அப்படிச் சொன்னயா?'' சக்திதாசன் கேட்டார்.

"ஆமா நீங்க என்னைக்கு என்னைய வண்டிய எடுக்க விட்டீங்க?''

எதிர்க் கேள்வியே பதிலானது. ஊருக்குப் போனபோது அங்கே அண்ணன் பெண்களிடம் சொல்லி யிருக்கிறாள். அங்கிருந்து தொலைபேசியில் அவர்கள் கேட்டார்கள்.

"அத்தைய நீங்க காரைத் தொடவே விடறதில்லையாமே. மாமா?"

'நான் அப்படியெல்லாம் இல்லம்மா. ஒங்க அத்தை ஆபீசுக்கு போய்ட்டு வந்த நேரம் போக. மீதி நேரத்தில் நான் போனா உண்டு. இல்லேன்னா. அதுவும் இல்லே. அதுவும் அவ கொடுத்துத்தான் நா எடுத்திட்டுப் போறேன்மா''

**மானிடம் என்றொருவாள்**

'மானிடம்' என்றொரு வாளும்–அதை
வசத்தில் அடைந்திட்ட உன்இரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் – இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்.

–பாரதிதாசன்

" அதையேதான் அத்தை ஒங்க பேர்ல சொல்றாங்க".

"நீங்க கருணை காட்டிக் கொடுக்கறீங்களாம். ஏன் மாமா இப்படிச் செய்றீங்க?" அவளுடைய அண்ணன் பிள்ளைகள் உரிமையாகக் கேட்டார்கள். அவர்கள் கேட்பார்கள்.

இது போல் வேறு சிலரிடமும் பேச்சு போயிருக்கிறது.

கார் இப்போது பயன்பாட்டி லிருந்து மாறி உரிமை சம்பந்தப் பட்டதாக மாறிவிட்டது.

"ஏன் அப்படிச் சொன்னே?"

"எனக்கு சொல்றதுக்கு. பேசற துக்கு ஒண்ணும் இல்ல பாருங்க"

மிகக் கடுமையான வார்த்தை களால் திருப்பினாள். "எப்ப போறேன்? வாரம் ஒருநாள் கார்ல போனா உண்டு. மத்த நாளெல்லாம் நீங்கதான் போறீங்க".

எப்போதும் மரியாதை அதிகாரத் தோடு சேர்ந்தே வருகிறது. ஆனால் குடும்பம் என்பது. அதிகாரம் உலா வரும் அலுவலகமல்ல. அலுவலகம் பணம். புகழ். பயம் என்ற முக்கோண பிரதிபலிப்புகளைக் கொண்டது அது. அவருடைய அறிவுப் பெருக்கை விட. பதவிக்குள் துலங்கிய அதிகார வெளிச்சத்துக்கே மதிப்பளித்தார்கள். ஓய்வுக்குப் பின் எல்லாமே இறங்கு திசையாகிப் போகும் என்பதற்கு குறைந்துவிட்ட பொது நிகழ்ச்சிகள் அடையாளம். மேலே மேலே ஏறிக் கொண்டிருந்த அவருடைய பொது நிகழ்ச்சிகளின் 'கிராப்' இப்போது வள்ளிசாகக் கீழிறங்கியிருந்தது.

நிகழ்ச்சிகளுக்குப் போகையில் அவர் ஆட்டோவில் போய் விடுவார். அமராவதி அலுவலகத்திலிருந்து காரில் திரும்புகையில் நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்குப் போய்க் கூட்டி வரவேண்டும். நிகழ்ச்சி முடிய நேர மெடுக்கும். காத்திருப்பு அவளுக்குச் சித்திர வதையாகத் தொடர்ந்து அமைந்தது.

"ஆட்டோவில் போய்ட்டு ஆட்டோவில வந்திருங்க. என்னைய எதிர்பார்க்காதீங்க"

" எவ்வளவு செலவாகிறது?"

'இல்லைன்னா கார் ஏற்பாடு பண்ணச் சொல்லுங்க. கூட்டம் நடக்கறதுக்கு செலவழிக்கிறா னில்லே. அவனா செலவழிக்கிறான்? வசூல் பண்றான்"

"எல்லோர்ட்டயும் அப்படிச் சொல்ல முடியுமா?"

"சில நாளைக்கு ரெண்டு. மூணு இடத்துக்குப் போறீங்க? ஆட்டோ வுக்கு ஆனா ஆகிட்டுப் போகுது" எதிரில் இருந்து புறப்பட்ட பதில் அவருடைய கொதிப்பை விசிறிக் கொடுத்துக் கொண்டே இருந்தது.

"அதான். ஒனக்கு கார் இப்ப கௌரவமா மாறிப் போச்சு"

"ஒங்க கௌரவம் ஒண்ணும் எனக்கு வேண்டாம். ஆபிசில் எனக்கிருக்கிறதே போதும்".

" ஏன் நான் கார்ல போனா என்ன?" சடக்கென்று அவள் மறித்தாள்.

"இங்க பாருங்க. ஒங்க கார். ஒங்க வேலை. ஒங்க கார்ல நீங்களே போய்ட்டு வரலாம். எனக்கு இனிமே கார் வேண்டாம்".

கார் அவருடைய ஓய்வுக்குப் பின். ஓய்வூதியப் பணத்தில் வாங்கியது. அந்த இடத்தில்தான் அவள் அக்னி வீசுகிறாள். முதலில் அவள் சொந்தக்காரரை ஓட்டிக் கொண்டு அலுவலகம் போனபோது. பிரமிப்பான பார்வைகள் விழுந் திருக்கும். அலுவலகத்தின் அதிசயிப்பு. அவளது உயரத்தைச் சொல்லியிருக்கும்.

ஒரு நீதிபதியின் மனைவி என்ற உயரம் கூட அவளது அலுவல கத்தில் எவருக்கும் சாத்தியமில்லை.

"எல்லோரும் அவ ஆகிற முடியுமா? அவ வாங்கி வந்த அமைப்பு அப்படி" என்பதாகவே சக பணியாளர்களின் பேச்சு வெளியாகியிருக்கும்.

அமராவதி அலுவலகத்திற்கு காரில் போவது கௌரவமாக ஆகியிருந்தது. சக்திதாசனுக்குப் பயன்பாட்டுக்குரியதாக கார் இருந்தது. இன்னும் குடும்பத்திற்கு முழுதாய் ஆகவில்லை. அப்படித் தான் அவர் நினைக்கிறார்.

தகராறு தொடங்கிய நாள் முதல் கார் வெளியே நிற்கிறது. சக்திதாசன் வெளியில் வந்து பார்த்தார். அமராவதி அலுவலகம் போய் விட்டிருந்தாள்.

ஒரு மாதமாக கார் அங்கேயே நிற்கிறது. ஆட்டோவில் நிகழ்ச்சி களுக்குப் போய் வந்து கொண்டிருந்தார். யாரும் யாரோடும் பேசாமல் முரண்டு பிடித்துக் கொண்டிருப்பது போல் அவள் பஸ்ஸிலும். அவர் ஆட்டோவிலும் போய் வந்து கொண்டிருக் கிறார்கள். பக்குவம் அடைந்த பிள்ளைகள் ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

இரண்டு தனித்தனிக் குணங்களுக்கு நடுவே தானும் சடைத்துக் கொண்டு நிற்பது போல் கார் தனியாக நின்று கொண்டிருந்தது.

• கவிஞர் கோலாகல ஸ்ரீநிவாஸ்

# என்னை முன்வைத்து எல்லோருக்கும் சொல்வது...

எனக்காக சுவாசித்து
ஏகப்பட்ட நாளாயிற்று
சுவாசித்தாலும்
அது
புகையாய்த்தான் இருக்கிறது (சென்னையில்!)

என்னைக் கலந்து ஆலோசிக்காமல்
சூழ்ந்திருக்கிறது
வெளி

எந்த ரகசியத்தைச் சொல்ல
இந்தக் குருவி பறக்கிறதென்று
இன்னமும் தெரியவில்லை
எனக்கு

புருவங்களின் கீழ்
ஆழத்தின் ஆழத்தில்
விழிகளின் இறைப்பில் கிறீச்சிடுகின்றன
கனவின்
வெற்றுக் கமலைகள்

இருக்கை தேடி
அலைகிறது பாதம்

தெருவின் சிவப்பில்
நிற்கும்
காத்திருத்தல்
விசிலின் ஒலியில்
புறப்படும்
வாழ்க்கை

இதற்கு மத்தியிலும்
எப்போதேனும்
தென்பட்டு விடுகிறது வண்ணத்துப்பூச்சி

காற்றடிக்கிற போது - மெரினாவில்
நடனம் நிகழ்த்திவிட்டு
தரையைச் சேர்கிறது
இலை

தொலைதூரத்தில்
தேங்காய்க் கீற்றெனத்
தெரிகிறது
படகு

கருக்கல் இடையிலும்
மின்னல்!

• • •




ஓவியம் : மகி



## குருவி மனம்

எதிரிலிருக்கும்
மரத்தின் கிளைகளை
மறுத்து
என் வீட்டிற்குள்
வந்துவிட்டது
அந்த சிட்டுக் குருவி.

கூடு கட்டுமா
என்று பார்த்தேன்

குரலை மட்டும் தந்து
போய்ப் போய் வருகிறது.

• • •

## மரங்கள்

அழகைக் கூட்டுமென்றெண்ணி
வீட்டின் முன்
மரங்கள் வளர்த்தேன்

வளர்ந்த மரங்கள்
வாசலை
மறைத்துக் கொண்டன.

வாசலை மறைக்கிறதே
என்றெண்ணி
மரங்களை
வெட்டி எறிந்தேன்

அழகற்றதாகிவிட்டது
என் வீடு

என் வீடு
அழகானதா?
அழகற்றதா?
தெரியவில்லை
மரங்களைக் கேளுங்கள்

• • •

□ □ □

**கவிஞர் வஸந்த் செந்தில்**

□ □ □



ஓவியம் : சந்திரன்



# சிராப்பள்ளி

அங்கே போவதில் ஓர் அச்சம். நகரின் மிகப் பெரிய மருத்துவமனை. அயல்நாடுகளிலிருந்தும் பலர் வந்து பண்டுவம் பார்த்துச் செல்கின்றனர். பல தலைவர்கள் அங்கே காலஞ் சென்றிருக்கின்றனர். நாள்தோறும் அந்த கட்டிடத்தின் வெளியே குமுறி நிற்பவர் ஆயிரக் கணக்கானோர். வேட்டி கட்டிக்கொண்டு அவன் ஒருவனே அங்கு நின்றான். நாட்டின் சிறந்த மருத்துவர் ஒருவர் அங்கே அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அப்படித்தான் சொல்லப் பட்டிருந்தது.

அந்த மருத்துவர் ஓர் உளவியல் வல்லுநர். அந்தத்துறையில் தலை சிறந்தவராகப் பேசப்படுபவர். அப்படிப் பட்டவருக்கு பதினைந்து ஆண்டுகள் தொழிலாளியாகப் பணிபுரிந்து பின்னர் கீழ்நிலை எழுத்தராக பதவி யுயர்வு பெற்றிருக்கும் ஒருவன் எப்படி வேண்டப்பட்டவனாக ஆனானோ?

அவனது அலுவலகத்திற்கு வந்து போன அந்த மருத்துவருக்கு அவன் செய்த உதவி கிட்டத்தட்ட எடுபிடி வேலைதான். ஆனால் தனது நிலையை அவரிடம் விளக்கிச் சொன்னவிதம் மருத்துவரின் மனதில் நன்குபட்டிருக்கும்.

"நீங்க அடுத்த வெள்ளிக் கிழமை எங்க ஆஸ்பிட்டல் வாங்க – பேசுவோம். இது பெரிய விஷயம் இல்லே. கொஞ்சம் கவனம் செலுத்தினா போதும்"

அந்த டாக்டருக்கும் – பெயர் குமாரசாமி – இவன் முக்கியனமானவனாகத் தெரிந்ததற்கு காரணம் உண்டு. அடுத்த வெள்ளிக் கிழமை என்பது அவரைப் பொறுத்தவரை அவர் தாயாரின் நினைவுநாள். யாராவது ஒருவருக்கு ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ உதவி, காசு எதுவும் வாங்காமல், செய்து தருவது வழக்கம். தாயார் மீது மிகுந்த பக்தி இருக்க வேண்டும். இன்னொரு காரணம் இவனது நோய் அல்லது மன நோய் கூட தாயார் சம்பந்தப்பட்டது தான்.

அவன் எட்டாவது வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்டதற்கு கணக்குப் பாடத்தைத் தான் காரணமாகச் சொல்ல வேண்டும். கணக்கு ஆசிரியர் அவனை தீண்டத்தகாத ஒரு பொருளாகப் பார்த்தார். சீக்கிரமே மற்ற பாடங்களும் அந்த நிலையை அடைய, பள்ளிக்கூடம் "போ" என்று விரட்டியது. தூரத்து உறவினர் ஒருவர் "நீ மாடுகள் மேய்க்கலாமே" என்று ஆலோசனை கூறினார். மாடுகளும் விரட்டத்தான் செய்தன. தகப்பனார் போய்விட்டார். சாப்பாடு என்ற நிர்ப்பந்தம் எழ ஆரம்பித்தாயிற்று. தாயார் இவனை நம்பியிருந்தாள்.

□ மா. அரங்கநாதன்

*ஓவியம்* : வேதா

பதினொன்றாம் பிரிவின் கீழ் மராமத்துப் பணித்துறையில் தினக்கூலியாகச் சேர்ந்த அவன், பொறுப்புள்ளவனாகி, நூல் நிலையங்களில் ஏறி இறங்கி குறைந்தபட்ச சான்றிதழ் வாங்கி சில ஆண்டுகளில் கீழ்நிலை எழுத்தர் என்ற பதவி உயர்வு பெற்றபோது, அவன் தாயார் இல்லை.

இல்லையென்று சொன்னால் காலமாகி விட்டாள் என்று அல்ல. காணவில்லை என்ற செய்தி வந்து, அலறியடித்துக் கொண்டு, ஊருக்குப் போனால் உதவும்படியாக யாருக்கும் எதுவும் தெரியவில்லை. எல்லாருக்குமே அது வியப்பாகத் தானிருந்தது. அந்த ஊரில் உள்ள முப்பது வீடுகளிலும் அது பேசப்பட்டது. அவனால் செய்ய முடிந்ததெல்லாம் பக்கத்து ஊர்களிலுள்ள தெரிந்தவர்கள் வீடுகள் சென்று விசாரித்தது தான். அவர்கள் தங்கள் பங்கிற்கு இவனிடம் விசாரிக்க ஆரம்பித்தனர். ‘இப்படி இருக்கலாமோ – இப்படியும் இருக்கலாமே'' என்று யோசனை சொன்னார்கள். நாற்பதுகளில் வள்ளியூர் பக்கம் ஒருவர் வீட்டில் நடந்த இதுபோன்ற சம்பவம் பேசப்பட்டது. அவன் ஊருக்கு திரும்பவும் செல்லும் எண்ணத்தை விட்டுவிட்டான். வீட்டைப்பூட்டி பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்தான். அடுத்த நாளே பட்டணம் வந்து வேலைக்கு திரும்பிவிட்டான்.

“இப்ப அந்த சங்கடம் கொஞ்சங் கொஞ்சமா குறைகிற சமயம், புதுசா இது. காதுலே அம்மா கூப்பிடற சத்தம் கேக்குது. அம்மா குரல் தான். எனக்கு சந்தேகமேயில்லே – முத்து, முத்துக் கறுப்பா அப்படின்னு எப்படி கூப்பிடுவாளோ, அதே மாதிரி கேக்குது – காதிலே ஐயா''

‘‘காதிலே இல்லே – இங்க'' என்று சுட்டு விரலால் தலையைச் சுட்டிக் காட்டினார் டாக்டர் குமாரசாமி.

“இப்ப நான் என்ன செய்யணும் – மருந்து சாப்பிடணுமா''

‘‘மருந்து எதுவுமில்லே. அப்படித் தந்தாலும், அது தூக்கத்திற்கான மருந்தாகத்தான் இருக்கும். இது மனசு சம்பந்தப்பட்ட விஷயம்.''

“நல்ல மனசோட தானே நான் இருந்தேன். எனக்கு ஏன் இப்படி''

‘‘மனசே இல்லாம இருக்கணும் தம்பி – அதுக்கு என்ன வழின்னு சொல்லமுடியாது. காது, மூக்கு மாதிரி உறுப்பு இல்லே அந்த மனசு. இப்ப என்னையே எடுத்துக்கோ – எங்க அம்மா அகால மரணம். உன் விஷயத்திலே அம்மா காணாமப் போயிட்டாங்க. இதை மத்தவங்க விஷயத்தோட இணைச்சுப் பார்த்து கிடைக்கிற ஒண்ணுதான் வருத்தம். எல்லாருக்கும் இப்படி எதுவும் ஆகல்லே – நமக்கு மட்டும் இப்படி ஆய்ப் போச்சேன்னு நினைக்கிற போது, கோபம் வெறுப்பு எல்லாம் நிறைஞ்சு வேறு எதையும் சேராதபடி ஆக்கிப் போடுது பாரு, அதுக்குப் பேருதான் மனசு.

அது குண்டுச்சட்டிக்குள்ளேயே எல்லாம் பண்ணும் – கடவுள்னு கூட ஒண்ணைக் காட்டும். இப்ப அது இல்லாம தெளிவு ஏற்படணும்னா, புதுசா ஏதாம் வரணும். புதுசா வருதுங்கறது கடவுள் சமாச்சாரம். ஆமா – அது தானாகத் தான் தோன்றும். படிச்சு தெரிஞ்சுக்கவும் முடியாது. எப்படியோ அப்படித் தோன்றினா, மனசு இல்லாம ஆயிடும். அப்ப நாம அனுபவிக்கிறதை என்ன சொல்லலாம் தெரியுமா – அருள். கடவுளுக்குக் கூட அருளாளன்னு பேரு உண்டு. இல்லையா?

முத்துக்கறுப்பன் பேசாதிருந்தான். டாக்டர் தொடர்ந்து கூறினார்.

“இந்த விஷயத்தைத் தான் வெவ்வேறு விதமாக எல்லா இடத்துப் பெரியவங்களும் சொல்லி இருக்காங்க. அல்லது சொல்லப்பாத்திருக்காங்க. நம்ம இடத்திலே, இங்கே, மலை, காட்டுப் பகுதிலேயும் ஆறு, கடல்புரத்திலும் இருந்தவங்களும் இதைத்தான் எழுதிவைச்சிருக்காங்க...

அவன் ஏதோ குறுக்கிட முயற்சிக்கிறான் என்று தெரிந்த டாக்டர் கொஞ்சங்கொஞ்சமாக விஷயத்திற்கு வந்தார். ஒரு தாளில் முகவரி ஒன்றை எழுதிக் கொடுத்தார்.

“இந்த ஊர் போய், வா – ஆறுமணி நேரப்பயணம் தானே. நான் அடிக்கடி போய் வந்துகொண்டிருந்தேன். இவரைப் பார்ப்பதற்காக அல்ல. அம்மாவாகவும் ஆன ஒரு கடவுளின் கோவில் இருக்கிறது அங்கே. உன் விஷயம் போல என் சமாச்சாரமும் அதுதானே.அங்கே எதேச்சையாக இந்தப் பெரியவரைப் பார்த்தேன் – ஒரு ஐந்து நிமிட பேச்சுத்தான். எனக்கு நிம்மதி கிடைத்தது''.

முத்துக்கறுப்பன் முகவரியை வாங்கிக் கொண்டான். “கட்டாயம் போகிறேன்'' என்றான்.

நகரின் மிகப் பெரிய மருத்துவமனையின் டாக்டர் தன்னைப் பார்க்க வந்த அவனுக்கு காப்பி வேறு வரவழைத்துக் கொடுத்தார். அவன் நன்றி சொல்லி விடைபெறுகையில், கூறினார்.

“அவரைப் பார்ப்பதில் கஷ்டமில்லை. வீட்டின் திண்ணையிலேயே உட்கார்ந்திருப்பார். போகும் போது, இரண்டு முறுக்கு வாங்கிக் கொண்டு போ – வேறு எதுவும் வேண்டாம்''

பிரயாணிகள் ரயில் வண்டியில் தான் ஏறிச்சென்றான். இரவே அங்கு சென்றுவிடலாம். காலையில் பார்த்து விட்டு, உடனே புறப்பட்டால் அடுத்த நாளே திரும்பிவிடலாம்.

அந்தப் பெட்டியில் ஏறிய உடனேயே மீன் வாடை தூக்கி அடித்தது. அது சகிக்க முடியாதவாறு இருந்தது. பட்டணத்தில் அங்காடிப் பக்கம் செல்கையில் அவன் அதை தூரத்திலிருந்து அனுபவித்திருக்கிறான். இது அப்படியில்லை. குடல் வெளி வந்துவிடும் போல விரட்டியது. ரயில் நகர ஆரம்பித்துவிட்டபடியால் வேறு வழியில்லை.

மேலே பலகையில் ஒருவர் படுத்துக் கொண்டிருந்தார். கீழே பெஞ்சில் ஒரு கிழவியும் ஒரு பெண்ணும். கிழவி கண்ணை மூடிக் கொண்டிருந்தாள். பெஞ்சின் கீழே பனையோலைக் கூடையொன்றிருந்தது. அதிலிருந்து தான் கிளம்பிக் கொண்டிருந்தது.

மேலே படுத்துக் கொண்டிருப்பவர் இதில் எந்த அசௌகரியமும் இருப்பதாகக் காட்டிக் கொள்ள வில்லை. எதிர் இருக்கையில் அமர்ந்திருந்த ஒருவர் மட்டும் முகத்தைச் சுளித்துக் கொண்டி ருந்தார். அவர்தம் ஒத்துழைப்பு கிடைக்கும் என்ற தைரியத்தில் முத்துக்கறுப்பன் பேசினான்.

"ஏம்மா – நாலு பேரு உட்கார இடத்திலே இந்த மாதிரி அசிங்கியத்தை கொண்டாரலாமா – மத்தவங்களுக்கு தொந்தரவா இருக்கும்னு தெரியாது?"

கிழவி கண்ணை மூடிக் கொண்டு தானிருந்தாள். அந்தப் பெண் – மகளாக இருக்க வேண்டும். பதில் மிகவும் மரியாதை யாகச் சொன்னாள். "இல்லீங்க ஐயா – சல்லிசா கிடைச்சது. எங்க அம்மா வுக்கு வவுத்து நோவுங்க . கருவாடு கட்டாயமாக வேணும். அது மட்டும் தான் ஒத்து வருது. எனக்குக் கூட அதெல்லாம் வேண்டி யதில்லே. அடுத்த ஸ்டேசன் தான். இறங்கி ருவோம். பொறுத்துக்கிருங்க ஐயா"

இதற்கு மேல் கோபமாகப் பேசி தர்க்கம் செய்ய முடியாது. அடுத்த ஸ்டேஷனில் இறங்கியும் விட்டனர். வாசனை மட்டும் சிறிது நேரம் இருந்து மறைந்தது.

இன்னும் கிட்டத்தட்ட நான்குமணி நேரம் பயணம் செய்தாக வேண்டும். பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரும் ஒரு அரசுப்பணியாளர் என்று தெரியவர, இருவரும் தாராளமாகப் பேசுவதற்கு வாய்ப்பு இருந்தது. கருவாடு கொண்டு வந்த பயணிகளின் அநாகரீகத்தில் ஆரம்பித்து புதிய சம்பள விகிதங்கள் பற்றியும் அலசல் செய்தனர். ஆரம்பத்திலேயே இந்த வாடை சமாச்சாரம் மட்டும் இல்லையென்றால் ஒரு நல்ல தூக்கம் போட்டிருக்கலாம். சுகமான பிரயாணமாக இருந்திருக்கும் என்று நினைத்தான்.

ஸ்டேஷன் பக்கத்திலேயே குறைந்த வாடகையில் விடுதி யொன்றில் அறை எடுத்துக் கொண்டான். காலையில் அலுப்புத் தீரக் குளித்தான். எதுவும் சாப்பிடாமலேயே அவரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று தீர்மானித்த படியால், அப்படியே வெளியே வந்து, பலகாரக் கடையில் இரண்டு கைமுறுக்கு வாங்கிக் கொண்டான்.

"மரத்துச் சாமியாருக்குத்தானே" கடைக்காரர் தான், முறுக்கைக் கட்டிக் கொடுத்தவாறு கேட்டார். "முறுக்குச் சாமியார்" என்று கூட அவருக்கு ஒரு பெயரிருக்கலாம். உள்ளூரில் கொஞ்சம் பிரபலமாகத் தானிருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான்.

"மனசே இல்லாம இருக்கணும் தம்பி - அதுக்கு என்ன வழின்னு சொல்ல முடியாது. காது, மூக்கு மாதிரி உறுப்பு இல்லே அந்த மனசு"

அப்படியும் சொல்ல முடியாது. ஆட்டோக்காரருக்கு இந்தச் சாமியார் பற்றித் தெரியவில்லை. கடைக்காரர் தான் சொன்னார் "ஆட்டோவிலே போங்க – இடம் ரொம்ப தூரம் இல்லே. தெரு முனையிலே நின்னு பார்த்தாலே தெரியும். ஓட்டுவீடு – வெளித் திண்ணையிலே உக்காந்திருப்பாரு – எதிராகவே ஒரு மரம் இருக்கிற வீடு"

அவன் அப்படித்தான் ஆட்டோ பேசி அதில் சென்றான். அதிக தூரமில்லைதான். தெரு முனை யிலேயே இறங்கிக் கொண்டான். மேடும் பள்ளமுமான தெரு. பத்து வீடுகள் தான் தேறும். தெருமுனையில் இறங்கிய உடனேயே ஓட்டுவீடு கண்ணில் பட்டது.

அந்த வீட்டின் எதிரே ஒரு மரம். அதன் அடிமரத்தில் புடவையோ, பாவாடையோ தெரியவில்லை. சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. நிச்சயமாக அது வேட்டி இல்லை.

அந்த வீட்டுத் திண்ணையில் அவர் தென்பட்டார். முதுபெருங்கிழவர் என்று சொல்ல முடியாது? தூரத்தில் அவன் நடந்து வரும்போதே பார்த்திருக்க வேண்டும்.

"என்ன – குமாரசாமி அனுப்பிச் சானா"

வாய் நிறைய சிரிப்பு. அவருடைய சிரிப்பு அவனை ஏதோ நினைவில் தள்ளியது. அந்தச் சிரிப்புடன் தான் பல காலம் பழகியதாய் தெரிந்தது. அந்தச் சிரிப்பிற்காகத்தான் தான் இத்தனை காலமும் அலைந்து திரிந்ததாகவும் எண்ணம் தோன்றிற்று.

அவரது கால்களைத் தொட்டு வணங்குவது மரபு என்று நினைத்தான். ஆனால் அவர் உட்கார்ந்த நிலை அதற்கு சாதகமாக இல்லை. அவர் தான் பேசினார்.

"குமாரசாமி எப்படி இருக் கான்? எங்கோ மேக்கத்தி நாடு போய் இன்னும் படிக்கணும்னு சொன்னானே – சுத்து வட்டாரத்திலே கண்ணுக் கெட்டற திசை வரைக்கும் பாத்துப் படிக்காதையா அங்க போய் படிக்கப் போறான் – நல்ல பிள்ளைக – கையிலே என்ன முறுக்கா – அதையும் சொல்லிட்டானா – கொண்டா இப்படி உக்காரு"

அவன் கையிலிருந்த பொட்ட லத்தை வாங்கிப் பிரித்து, முறுக்கைப் பிட்டு, ஒரு துண்டை வாயில் போட்டு மென்றார். பிறகு நல்லாயிருக்கு – ஆனா கொஞ்சம் மீன் வாடை அடிக்குது – இப்படி உக்காரு" என்றார்.

• • •

□ தங்கர்பச்சான்

ஒரு கைக்குழந்தையாக இந்தியாவுக்குள் குறிப்பாக தமிழகத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன் நுழைந்த திரைப்படம் இப்போது எப்படி வளர்ந்திருக்கிறது? அதாவது வளர்க்கப்பட்டிருக்கிறது? அதன் வளர்ச்சியில் நமக்கெல்லாம் மகிழ்ச்சியா? அதன் செயல்பாடுகள் நமக்குள் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன?

உலகின் கடைக்கோடியில் எங்கோ ஒரு மூலையில் கண்டுபிடிக்கப்பட்டு ஒரே நேரத்தில் பல நாடுகளாலும் வரவேற்று உபசரித்து ஏற்றுக் கொள்ளப்பட்டது சினிமா. கண்டு பிடிக்கப்பட்ட சில ஆண்டு இடைவெளியிலேயே நமக்கு அறிமுகமாகி விட்ட சினிமாவின் வளர்ச்சி நமது நாட்டில் இன்றைக்கு எப்படி இருக்கிறது? பிற நாடுகளில் சினிமாவின் வளர்ச்சி எவ்விதமாக இருக்கிறது?

இந்தியாவில் பல மாநிலங்களுக்கும் ஒரே நேரத்தில் நுழைந்த சினிமா அங்கெல்லாம் மனித இனத்தால் எவ்விதங்களில், எதற்காக எப்படி எல்லாம் கையாளப்படுகிறது? நம் தமிழ்நாட்டில் தமிழ் சினிமாவாக நாம் அதை எப்படி எதற்காக கையாளுகிறோம்? தமிழ் சினிமாவின் நிலை, அதன் பயணம், பயன்பாடு இன்று எந்த அளவில் இருக்கிறது?

இதையெல்லாம் தெரிந்து கொள்ள நாம் வெகுநேரம் யோசிக்க வேண்டிய அவசிய மில்லை. ஏனெனில் நமக்கெல்லாம் சினிமா என்றாலே அது வெறும் கதையை மட்டும் சொல்லக்கூடிய பல சமயங் களில் கதைகூட தேவைப்படாத வெறும் பொழுது போக்கு வியாபாரப் படங்கள் தானே?

ஆனால் சினிமா என்பது வெறும் பொழுதுபோக்கும் வியாபாரமும் தானா இல்லை? இல்லை சினிமா என்கிற அந்தப் புதுவகைமொழி அந்தந்த காலக்கட்டத்தில் அந்தந்த மக்களுக்குரிய கலாச்சாரத் தையும், இலக்கியத்தையும் கலையையும் உள்ளடக்கியது.





ஓவியம் : மனோகர்

சினிமா என்கிற இந்த புதுவகைமொழி அந்தந்த மக்களுக்கான கலாச்சார அரசியல் பின்னணியை உள்வாங்கி யார்யாருக்கெல்லாம் எப்படி எப்படி வேண்டுமோ அவ்விதம் தன்னை உருமாற்றி புதுவடிவம் கொடுக்கக்கூடியது. உலகம் முழுவதும் திரைக்கலை ஒரே நிலையில் இருக்கச் செய்யாமல் வெவ்வேறு நிலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஓடுகிற நீர்மட்டம் மாதிரி வெவ்வேறு வடிவங்களாகவும், வெவ்வேறு உருவங்கள் உருவகங்களாகவும், வெவ்வேறு பொருட்களாகவும் மாற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

ஆனால் நாம் அந்தத் திரைக்கலை நம் கையில் கிடைத்த உடன் நம் வாய்வழியாக உருவாக்கப்பட்ட நமது புராணங்களையும், இதிகாசங்களையும், அதன் வளர்ப்பில் வார்த்தெடுக்கப்பட்ட அதே வகைசார்ந்த பல்வேறு குழந்தை படைப்புகளையும், பிரதிபலிக்க கதை சொல்வதற்காகவே அதை பயன் படுத்தினோம். தெருக்கூத்து வடிவத்தையும் அதன் கிளை வடிவமான நாடகத்தையும் திரைக்கலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

எந்த ஒரு விசித்திரத்தையும் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்ப்பதில் நமக்கு இணையாக யாரும் இருக்க முடியாது. நாலரை நிமிடமாக நமக்கு முதலில் காண்பிக்கப்பட்ட சினிமாவை நான்கு மணி நேரமெல்லாம் நிகழும்படி உருவாக்கி 'வளர்ச்சி' அடைந்தோம். நூறு பாடல்களைக் கொண்டிருந்த கதை முறையை ஒரு நிலையில் முப்பது

நாற்பது பாடல்களாக்கி இன்று குறைந்தது ஆறு பாடல்களையாவது கொண்டு கதை சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதைத் தலையாட்டி, உம்கொட்டி, உம்கொட்டி தூங்கி எழுந்து, தூங்கி எழுந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நம் பயணம் நீரோட்டமாக இல்லை. அது குழம்பிப்போன குட்டையாக நாற்றமெடுத்தது. நமக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஏனெனில் நாம்தான் அதை உணவாகவும், காற்றாகவும் உண்டுமகிழ பழகிவிட்டோமே. குழம்பிப்போன அந்தக் குட்டையை உள்ளே வந்து சரிசெய்ய நினைப்பவர்களை ஆரம்ப நிலையிலேயே விரட்டியடித்து, அவர்களுடைய உடைமைகளையும் பிடுங்கிக்கொண்டு துரத்தி வருகிறோம்.

நூறு ஆண்டுகள் கடந்தும் இன்னும் சினிமா என்பது மக்களுக்கான கலை என்பதைக்கூட புரிந்து கொள்ளாமல், புரிந்தும்கூட மக்களைத் தங்கள் பிடியிலிருந்து விடுவிக்க விரும்பாத நிலைதானே உள்ளது? தாமஸ் ஆல்வாஎடிசன் கண்டுபிடித்த சினிமா என்கிற இந்த அற்புத மொழி, இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் சங்கங்களாக உருவெடுத்து வியாபாரிகள் கையில் சிக்கி தவியாய் தவிக்கிறது.

ஆனால், மற்ற நாடுகளில் திரைப்படங்களுக்கான சாத்தியங்களை உணர்ந்திருக்கின்றார்கள். இதே திரைக்கலையை பயன்படுத்தி அவர்களும் கதைப் படங்களை உருவாக்கி வியாபாரம் செய்கிறார்கள். அதோடு விவரணப்படங்கள், குறும் படங்கள், பரிசோதனைப்படங்கள் என தீவிர சினிமாக்களையும் படைத்துக் கொண்டேயிருக் கிறார்கள். அங்குள்ள மக்களும் அதனதன் பங்களிப்பு பற்றியும் அறிந்திருக்கிறார்கள்.

ஆனால் நாம்?

ஜெர்மன் நாட்டிலிருந்து இங்கு வந்து மூன்று மாதங்கள் தங்கியிருந்து சினிமா ஆய்வை மேற்கொண்டு, எனக்கும் நண்பராகிப் போன ஜெர்மன் நண்பர் என்னிடம் கேட்டார். “ உங்கள் சினிமாவுக்கு இன்னும் உங்கள் மக்களைப் பற்றிப் பேசகற்றுக் கொடுக்கவில்லையே. மக்களைப் பற்றிப் பேச கற்றுக் கொடுக்காத அந்த எதிரி யார்? மக்களை தங்களின் சதிவலைக்குள் சிக்க வைத்திருப் பவர்கள் யார் யார்?”



“இல்லை, ஏன் அவர்கள் மேலேயே பழி போடுகிறீர்கள்? நானும்தான் திரைக்கலைப் படைப்பாளியாக இருக்கிறேன். இப்படி நீங்கள் சொல்வது என்னையும் குற்றவாளி யாக்குகிறது.. மற்ற மொழிகள் மாதிரி எத்தனையோ நல்ல படைப்புகள் தமிழிலும் வந்து கொண்டுதானே இருக்கிறது? அது அடையாளம் கண்டு கொள்ளப்படாமல் போனதால் மறுபடியும் இன்னொன்று உயிர்ப்பிக்கும் முன் அந்தக் கலைஞன் துவண்டு விரக்தியடைந்து போகிறான். தவறெல்லாம் படைப்பவனிடம் இல்லை. என்ன சொல்லியும் திருந்தாத எங்கள் மக்களிடத்தில்தான்...” என்றேன் நான்.

எதற்குமே கோபப்படாத அவருக்கு வந்த கோபம்அரிதானது..

“இது நல்ல சினிமா, இது மோசமான சினிமா, இது அரிய சினிமா என்பதை நீங்கள் உங்கள் மக்களுக்குச் சொல்லிக்கொடுக்க எந்த விதமான முயற்சிகளை எடுத்தீர்கள்? உங்க ளுடைய பத்திரிகைகளும் தொலைக் காட்சிகளும் சிறிதளவு அக்கறை யாவது அதில் செலுத்தியிருக்கிறதா? உங்கள் குழந்தையை நீங்கள் எப்படி வளர்க்கிறீர்களோ அதற்குத் தகுந்த மாதிரிதானே அது வளரும்? உங்கள் மக்களை உங்கள் சினிமா கலைஞர்கள் எப்படி வளர்த்தார்களோ அப்படித்தானே அவர்களும் வளர்ந்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் மக்களைக் குறை சொல்ல உங்களுக்குத் தகுதி யில்லை..” என அந்த 27 வயது இளைஞர் எனது முகத்தில் அறைந்தார்.

வெறும் பொழுது போக்குக்கு மட்டும்தான் நமது சினிமா என சொல்லி நாமும் சரி, மக்களும் சரி நூறு ஆண்டு களை கடந்து வந்துவிட்டோம். சினிமா என்பது வெறும் பொழுது போக்கு சாதனமா?

இல்லை. அது நமது கலாச்சாரம், மொழி, இலக்கியம், பண்பாடு, அரசியல், உணர்வுகள் என எல்லாவற்றையும் உள்ளடக்கிய, அவற்றைச் சரியாக வெளிப்படுத்த பயன்படவேண்டிய ஊடகம் என்பதே உண்மை. இது நம் மக்களால் எப்போது உணரப்படப் போகிறது? அல்லது அவர்களுக்கு எப்போது உணர்த்தப்படப் போகிறது? இதுதான் சமூக அக்கறை கொண்ட சினிமா கலைஞர்களின் ஆதங்கக் கேள்வி.

# பயம் !



பாதுகாப்பின்மைக்குப் பிறந்த பயம்
எப்போதும் எங்கும்
என்னைப் பின் தொடரும்
நிழலாய் ஒட்டிக் கொண்டு.....

உச்சி வெளிச்சத்திலும்
காலடியில் பதுங்கிக் குத்தும்
முள்ளாய்.....

படுக்கும் போதும் தலைமாட்டில்...
விளக்கணைத்தால்
விரிந்து நிறையும் அறை முழுதும்...

கண் கிறங்கும்போது
அத்தனையும் சுருங்கி
இமைகளுக்குள் பாய்ந்து
உள்ளொடுங்கி ஒளியும்
ஜாடிக்குள் பூதம் போல...

அடிபட்டு மருத்துவ மனையில்
கண் விழித்தபோது
கண்டேன் கால்மாட்டில்
கண்ணிமைக்காமல்
என்னைப் பார்த்தபடி...

மனைவி மக்கள் உற்றார் உறவினர்
நண்பர்கள் வந்தபோதும்
நகராது என் காலடி விட்டு...

மருத்துவர் வரும்போது மட்டும்
சற்றே ஒதுங்கும்
ஒரு மரியாதையாய்...

செத்தால்தான்
உடன்கட்டை ஏறும்
என்று சொன்னார்கள்!

• • •

• கவிஞர் புவியரசு

ஓவியம் : மருது

வெங்கட் சுவாமிநாதன்



# கருத்து சுதந்திரம்

ஓவியம் : மகி

ஃப்ரான்ஸில் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரு தத்துவ தரிஸிகளைப் பற்றிய ஒரு ஸ்வாரஸ்யமான விஷயம். ரூஸோவுக்கு அன்று நாகரீகம் என்று பேணப்பட்டவற்றின் மீது மிகுந்த அவநம்பிக்கை. அவற்றைப் பற்றியெல்லாம் மிக காட்டமாக கேள்வி எழுப்பினார். நாகரீகம் என சொல்லப்பட்டது முதிராது தம் இயல்பான வாழ்க்கை வாழ்ந்த ஆதி சமூகத்தின், இயற்கையோடு ஒட்டிய இயல்பான வாழ்க்கையை அவர் சிறப்பித்துப் பேசினார். இவையெல்லாம் அவருக்கு நிறைய எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொடுத்தன. அவரது காலத்தே வாழ்ந்த, அவருக்குச் சற்று மூத்த வயதினரும், ஃப்ரான்ஸின் இன்னுமொரு தத்துவ ஞானியுமான வால்டேரும் அவர் காலத்திய மத அநுஷ்டானங்களை, நம்பிக்கைகளை கேலி செய்தவர் தான். அவ்வகையில் அவர் நாஸ்திகராகக் கருதப்பட்டாலும் அவர் தெய்வ நம்பிக்கை உள்ளவர். அவருக்கும் கூட, ரூஸோவின் சிந்தனைகள் உடன்பாடு இருந்ததில்லை. அவர் சொன்னார். "நீங்கள் சொல்வதையெல்லாம் பற்றி நினைக்கும் போது, நானும் நான்கு கால்களில் நகரும் ஜீவனாகி விட்டேனோ என்று தோன்றுகிறது. (I felt like I was crawling on all my fours) அதாவது நம்மை யெல்லாம் அவர் மிருக வாழ்க்கைக்கு தள்ளுகிறார் என்று குற்றம் சாட்டினார். இருப்பினும் ரூஸோவின் குரல் நெறிக்கப்படுவது அவருக்குப் பொறுக்க வில்லை. அவர் சொன்னார்: "நீங்கள் சொல்வது எதனுடனும் எனக்குச் சற்றும் உடன்பாடில்லை. ஆனால் உங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு பூரண சுதந்திரம் உங்களுக்கு உண்டு. அந்த உரிமை உங்களிடமிருந்து பறிக்கப்படுமா னால் அதை எதிர்த்து என் உயிரைப் பணயம் வைத்து உங்கள் உரிமைக்காகப் போராடுவேன்" என்று.

கருத்து சுதந்திரத்தில் இவ்வளவு தீவிரம் கொண்ட நாடாக ஃப்ரான்ஸ் இருந்த காரணத்தால் தான், எல்லா சிந்தனைத் துறைகளிலும், எல்லா கலை இலக்கியத் துறைகளிலும் முதலில் ஐரோப்பாவிற்கும் பின் அதன் வழியாக உலகம் முழுதுக்கும் தலையாய வழிகாட்டி யாக ஃப்ரான்ஸ் நாடு நேற்று வரை இருந்து வந்துள்ளது. இன்றும் தான் என்று எனக்குச் சொல்லத்

தோன்றுகிறது. பணபலத்தாலும் அதன் வழி பெற்ற விளம்பர. அதிகார பலத்தாலும் அமெரிக்கா உலகத்திற்கே தன்னை நாட்டாண் மைக்காரனாக நினைத்துக் கொண்டு. மற்றவர்களையும் அதை அங்கீகரிக்க நிர்ப்பந்திப்பது. இன்றைய நிலையானாலும். 'இது புதுப்பணக்காரன் கொண்டாடும் பவிஷு. உனக்கு ஏது சரித்திரமும் பண்பாடும்? என்று தான் ஃப்ரான்ஸ் தன் மனதுக்குள் கருவிக் கொள்கிறது.

ரூஸோ கதை பழைய கதை அல்ல. போன நூற்றாண்டுக் கதை. அது ஒரு தொடர்ந்த மரபு. உயிருள்ள மரபு. இன்னும் ஒரு சுவாரஸ்யமான நேற்றைய சம்பவத்தைச் சொல்லி மேலே செல்லலாம். அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தின் போது. ஸார்த்ர் அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத் திற்கு எதிரான ஃப்ரான்ஸ் அரசு கையாண்ட அடக்குமுறைகள். வன்முறைச் செயல்களுக்கு எதிராக பேசியும் எழுதியும் வந்தார். அல்ஜீரிய பிரச்சினைக்கு ஒரு முடிவு காண்பதற்கென்றே அழைக்கப் பட்டு. குடியரசுத் தலைவரான டிகால்க்கு ஆலோசனை கூறப்பட்டது. அரசாங்கத்திற்கு தொல்லைதரும் ஸார்த்ர் கைது செய்யப்பட்டு அவர் வாயை அடக்க வேண்டும் என்று. டிகால் அதை ஏற்கவில்லை. மறுத்து விட்டார். அவர் சொன்னார். Sartre is also France. How can I arrest France? இது ஃப்ரான்ஸில் ஒரு அரசியல்வாதியை விட. குடியரசுத் தலைவனைவிட தத்துவ ஞானி களையும் எழுத்தாளர் களையும் பெரிதாக மதிக்கும். அவர்களை நாட்டின் கௌரவச் சின்னங்களாக போற்றும் நாடு அது. கருத்து சுதந்திரமே தனது ஜீவ அடையாளமாகக் கருதும் நாடு. சுதந்திரமான கருத்து வெளிப்பாடு இல்லை யெனில். குகை வாழ் மனிதராகவே இன்னும் இருந்திருப் போம். அதிலிருந்து கொஞ்சம்கூட நகர்ந்திருக்க மாட்டோம்.

இதெல்லாம் சரி. இதெல்லாம் சொல்றதுக்கும் படிக்கிறதுக்கும் நல்லாத்தான் இருக்கு. நம்ம சரித்திரமே வேறே நம்ம மண் வேறே. இதெல்லாம் நடைமுறைக்கு சாத்தியம் என்பது நாம் வெளிச் சொல்லிக் கொள்ளாத நடைமுறை. நமக்கு இதில் அசௌகரியங்கள் பல உண்டு. நாம் நம்மைப் பற்றி வளர்த்துக் கொண்டிருக்கும் பிரதிமைகள் உடையும் நாம் ஊதிப் பெருக்கிக் கொண்டுள்ள பிம்பங்கள் உடையும் என்ற பயம் நமக்கு உண்டு. எந்த மாற்று அபிப்ராயமோ. எதிர்ப்புக் குரலோ எழுந்து விடக்கூடாது என்ற கவலை நமக்கு. நம்மில். நம் பலத்தில் நமக்கு நம்பிக்கை இல்லை. ஓர் ஊசி முனை போதுமாக இருக்கலாம். யார் கண்டது? பலூன் என்றும் தன் பூதாகாரத்தை இழந்து விடக்கூடும். "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று சொன்ன நக்கீரன் பரம்பரை என்று நாம் சொல்லிக் கொண்டாலும் இதை ஒரு மேற்கோளாகத் தான் வைத்திருக்கிறோம். அதற்கு மேல் நாம் இதற்கோ நக்கீரன்களுக்கோ கௌரவமும் ஜீவனும் தரத் தயாராயில்லை. "நமக்கு ஏன் வீண் வம்பு? நம்ம பாட்டை நாம் பார்த்துக் கொண்டு போவோம் என்று நக்கீரர்கள் வாய்மூடிகளாக. அதிகார 'ஆமாம் சாமி'களாகி விட்டார்கள். நக்கீரர்கள் இல்லையாதலால் சிவனுக்கும் நெற்றிக் கண்ணின் அவசியம் இல்லாது போய் விட்டது. நெற்றிக் கண்ணைத் திறந்தால். சிவனும் நக்கீரனுக்கு எதிராக இன்னுமொரு நக்கீரனாக மாறியிருக்க வேண்டும் அது நம் வரலாற்றில் சொல்லப்படவில்லை. சிவன். அதிகார பீடம். பலவான். தன் அதிகாரத்தைத் துறந்து. பலத்தைத் துறந்து. வாதமிடத் தயாரானதாக நமக்கு வரலாறு இல்லை.

சிவனின் நெற்றிக்கண் இன்று பலரூபங்களை எடுக்கிறது. எழுத்தாளருக்கு அது மகா நாட்டுத் தீர்மானங்களாகிறது. 1958-59-இல் என்று நினைக்கிறேன். சரியாக ஞாபகம் இல்லை. திருச்சி எழுத்தாளர் மாநாடு. அகிலன். சுகி சுப்பிரமணியன் முதலியோர் கலந்து சிறப்பித்த மாநாடு. அது நிறைவேற்றிய தீர்மானம் "தமிழ் படைப்பாளிகளின் எழுத்துக்களைப் பாராட்டாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவற்றை விமர்சித்து கண்டனம் செய்யும் பண்பாடற்ற காரியங்களை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது". இப்பரந்த உலகப் பரப்பில் எந்த எழுத்தாளர் கூட்டமாவது. எந்த சமூகத்திலாவது இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவருமா அது நிறைவேற்றப் படுமா என்பது சந்தேகம். இந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்ட காலத்தில் அகிலனின் 'பாவை விளக்கு' கல்கி பத்திரிக்கைக்கு இலட்சக்கணக்கான வாசகர்களைப் பெற்றுத் தந்தது. அகிலனை தமிழ் எழுத்தாள ரிடையே பெரும் வெற்றியும் புகழும் பெற்ற நட்சத்திர எழுத்தாளராக உயர்த்தியது. அப்போது அகிலனின் பிராபல்யத்தையும் வெற்றியையும் இலக்கியத்தரத்தின் அளவு கோலாக அங்கீகரிக்க மறுத்தவர்கள் க.நா.சுப்பிரமணியமும். இ.அ. செல்லப்பாவும். இந்த ஒரு சிலரின் எதிர்ப்பு. இலட்சோப இலட்சம் வாசகர்களின் ஆரவார கோஷங் களை மீறி அகிலனை தள்ளாட வைத்து விட்டது போலும். இது தமிழ்நாடு. இதே இழையில் நம் அண்டை வீட்டைப் பற்றிச் சொல்லலாம். நம் குடும்பத்தின் சகோதரர்கள் வாழும் வீடு டெல்லியில் ஒருமுறை எம்.கோவிந் தனின் தலைமையில் நடந்த மலையாள எழுத்தாளர் சந்திப்பிற்குச் சென்றிருந்தேன். அந்நாட்களில் அச்சந்திப்பிற்கு வந்திருந்த எழுத்தாளர்கள் பெரும்பாலும் இளம் வயதினர் - 70க்களில். அங்கு

ஒருவரை ஒருவர் மிக தாராளமாக விளாசிக் கொண்டிருந்தனர். " நீ பண்ற தப்பு நீ நிறைய எழுதறதுதான். இவ்வளவு நிறைய எழுதினால் எப்படி தரமாக எழுதமுடியும்? நீ எழுதுவதைக் குறைத்துக் கொள். அதுதான் நீ உருபடறதுக்கு வழி" என்று முகுந்தனைப் பார்த்து ஸி.ராதாகிருஷ்ணன் சாடினார். வேடிக்கை என்னவென்றால் அந்நாட்களில் ஸி.ராதாகிருஷ்ணன் தான் நம்மூர் ஜெயமோகன் மாதிரி எழுதித் தள்ளிக் கொண்டிருந்தார். இவ்வளவுக்கும் ஒரு Observatoryயில் வேலை வேறு. Science Reporter-க்கும் எழுதுவார். முகுந்தனைவிட அதிகம் இப்படித் தான் அன்றைய கூட்டமே நடந்தது. சரமாரியாக கணைகள் எல்லாத் திசைகளிலும் பாய்ந்தன. இவர்கள் என்ன ஜன்ம விரோதிகளோ என்று தோன்றிற்று. ஆனால் கூட்டம் முடிந்ததும் அவர்கள் தோள் மேல் கைபோட்டு. முதுகைத்தட்டி. சிரித்துக் குலவிக் கொம்மாளம் இட்டதைப் பார்க்க வேண்டும்! இந்த சமூகம் தான் இந்திய பரப்பில் எல்லாத்துறைகளிலும். உலகப் பரப்பில் சினிமாவிலும் தன் இருப்பை ஸ்தாபித்துள்ளது.

ஸூயல் போரின் போது பிரிட்டனின் கொள்கை களைக் கண்டித்து. இங்கு வந்து இந்திய பிரஜையான ஜே.பி.என்.ஹால்டேன் ஓர் இடத்தில் எழுதியிருந்தார். என் ஞாபகம். அவர் மனைவியும் ஓர் விஞ்ஞானி. அவருக்கு ஒரு வருத்தம். அவர் பங்கு கொண்ட கருத்தரங்குகளில் அவர் சமர்ப் பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரை களுக்கு எவ்வித எதிர்வினையும் எழுதுவது கிடையாது. பாராட்டியோ கண்டித்தோ எதுவும் வருவதில்லை. இது அவருக்கு மிகுந்த சோர்வையும். ஏமாற்றத்தையும் தருவதாக இருந்தது. காரணம் என்ன? தன் கட்டுரைகளின் தகுதியின்மையா? அல்லது தான் பெண் என்பதா? கடைசியாக ஒரு கருத்தரங்கில் அவர் வாசித்த கட்டுரை. கடுமையான தாக்குதலுக்கு இரையானது கிழி கிழி என்று கிழித்துத்தள்ளப்பட்டு விட்டதாம். அப்போது தான் அவர் மனைவிக்கு தானும் ஒரு பொருட்படுத்தப்பட வேண்டிய இதுநாள் வரைய அலட்சியத்தை மீறி வளர்ந்து விட்ட விஞ்ஞானியாகி விட்டதாக சந்தோஷம் அடைந்தாராம். ஹால்டேன் சொன்ன கதை இது.

1970க்களின் ஆரம்பத்தில் நான் மிகுந்த சர்ச்சைக்குள்ளாகி யிருந்தேன். எல்லோருடைய பகைமையையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டிருந்தேன். தமிழ் எழுத்தாளர்கள் பெரும் பாலோர் எனக்கு எதிராக ஒன்று சேர்ந்தார்கள். இவ்வளவுக்கும் நான் வெளியிட்ட கருத்துக்கள் ஏதும் புதியன அல்ல. அவை நம் பழைய மரபில் ஏற்கனவே இருந்தவை தான் என பின்னர் தெரிந்து கொண்டேன். இடைக்காலத்தில் மறக்கப்பட்டவை. ஆனால் நான் அக்கருத்துக்களை வெளியிட்ட காலத்தில். என் பொதுப்புத்தி பூர்வமான எதிர்வினை யாகத் தான் அவை என் மனத்தில் பதிந்தன. என் படிப்பாலும். என் அநுபவத்தாலும் நான் எனக்காகத் தேர்ந்து கொண்டவற்றைத் தான் சொன்னேன். என் இயல்பில் எனக்குத் தோன்றியவை அவை. படிப்பறியாத பாமரன் கூட 'படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவிலா' என்று கேட்பான். ஆனால் நம் தமிழ் எழுத்தாளர் பெருந்தககைகள் விஷயமே வேறு. ராமாயணம் படிப்பது வேறு. அவனால் பெருமாள் கோயிலை இடிக்க முடியாதா என்ன? பெருமாள் கோயில் என்ன? எந்தக் கோயிலையும் இடித்துக் காண்பிக்கலாமே! என்றார்கள். எனவே எல்லோரும் எனக்கு எதிராக ஒன்று சேர்ந்தார்கள். என் கருத்துக்கள் அவர்கள் ஒவ்வொரு வரையும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் காயப்படுத்தியிருக்கின்றன. ஆகவே அவர்கள் எல்லோரும் என்மீது வன்மம் காட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. சாக்கு கிடைத்தது. எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள்.(ganged up) என் கருத்துக்களை யாரும் எதிர்கொள்ளவில்லை. அவர் களுக்குத் தெரிந்தது ஒரே ஒரு கோஷம். 'இரண்டும் வேறே வேறே' ராமாயணம் படிக்கலாம் கோவிலையும் இடிக்கலாம் என்பதே. இது வரைக்கும் இதற்குமேல்



**சங்க காலம் வரை 'தமிழர்' நள்ளிரவை நடுநாள் அல்லது நடுநாள் யாமம் என்றே குறித்தனர். நண்பகலைப் பகல் என்றனர். ஒரு நாள் மறுநாளிலிருந்து பகுத்துக்காட்டும் எல்லையாதலால், அது பகல் எனப்பட்டது. இச்சொல் வழக்குகள் தமிழரின் நாட்கணிப்பைத் தெளிவாகக் காட்டுகின்றன.**

அவர்கள் ஏதும் சொல்லிவிட வில்லை. என் கருத்துக்கள் நம் மரபில் வந்தவை. நம் புராண சாஸ்திரங்களில் உள்ளவை. பொதுப் புத்திக்குத் தோன்றுபவை. இவ்வளவும் நம் எழுத்தாளர்களுக்கு இடைஞ்சலாக அவர்கள் பிரதிமைகளை உடைப்பனவாக இருந்தன. எல்லோரும் ஒன்று கூட (அவரவர்க்கு ஒரு பிரத்யேக காரணம் இருக்கக்கூடும்) ஒரே குரலில் எதிர்க் கோஷம் போட்டால் (அதற்கும் அவர்களது பிரத்யேக காரணங்களுக்கும் சம்பந்தம் இல்லை) அது சமூகக் குரலாகி அதற்கு ஒரு நியாயம் கற்பிக்கப்பட்டது. Crowds and power என்ற புத்தகத்தில் Elias Canetti இதைப்பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். சைனாவில் கலாச்சாரப் புரட்சி வருடங்களில் நடந்த மக்கள் நீதிமன்றங்கள் (Peoples Courts) இந்த கும்பல் மனப்பான்மையை வெகு சாமர்த்தியமாக பயன்படுத்தியது கட்சியும் அரசும்.

தமிழ் நாட்டில் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம் என்பது ஒரு மரபாக வளர்க்கப்படுவதில்லை. ஏதோ ஒரு தனிமனிதர் தன் எதிர்ப்புக் குரலை எழுப்பலாம். இதன் காரணமாக அந்த மனிதர் தனிமைப்படுத்தப்படுவார். அவர் கருத்துக்கள் வாதங்களாக மறுக்கப்படாமல், உதறப்பட்டு சமூக நிந்தனைக்கு இரையாவார். எனக்கு சட்டென நினைவுக்கு வருபவர் எஸ். வையாபுரிப் பிள்ளை. வையாபுரிப்பிள்ளைகள் எல்லாம் தமிழ் சமூகத்தில் விதிவிலக்குகள் நம் மரபு.. பரவலான மரபான . அதிகாரப்பூர்வமான கருத்துக்க ளோடு ஒத்துப்போதல் அதிகாரத் திற்கு அடி பணிதல். தனி மனிதனாக எந்த எதிர்ப்புக் குரலையும் அதிகாரத்திற்கு எதிராக பெரும் பான்மைக்கு எதிராக எழுப்ப மறுத்தல். தயங்குதல் தான். பயப்படுதல் தான். நம் மரபு.

இன்றைய தமிழ் சமூகத்தில், மிகச் சிறந்த கவிஞராக புகழும் பிரபல்யமும் பெற்றுள்ள ஒருவர் எழுதியுள்ள கவிதைகள் எனப் படுபவை எதுவும் கவிதை யாக எனக்குப் படவில்லை என்று பல உதாரணங்களோடு வாதித் திருந்தேன். அவரது விசாலமான படிப்பை, மதமாச்சரி யங்கள் கடந்த குணத்தையும் பாராட்டியிருந்தேன். என்னை மறுத்து, அவரது கவிதைகள் கவிதைகள் தாம் என உதாரணங்களை எடுத்துக்காட்டி என் வாதங்களை முறியடித்து ஒரு பெரும் எதிர்ப்புப்புயல் வீசும் என எதிர்பார்த்தேன். ஏனெனில் இன்றைய தினம் அவருக்குத்தான் பெரும் ஜனத்திரளான ரசிகர் கூட்டம் நிறைந்த செல்வாக்கும் - பல தரப்புகளிலிருந்தும் பெற்றவர். வாழ்க்கையில் வெற்றியின் சிகரத்தில் உள்ளவர். ஆனால் அப்படி ஏதும் நிகழவில்லை. நான் எழுதியது சரிதான் என்று ஒரு சிலர் (இத்தகைய ஏற்பு இவர்களி டமிருந்து வரும் என்று எதிர்பாரா இடங்களிலிருந்து) சொன்னதாக காற்றில் வந்த செய்தி எனக்குக் கிடைத்தது. பொறுப் பேற்காத, வாதிடப் படாத முடிவுகளை (ஏற்பையும், மறுப்பையும்) நான் மதிக்கத் தயாராயில்லை. என் கட்டுரை ஒரு மின் இணையத்திலும் பரப்பப் பட்டது என்றும், அதிலும், ஏதும் மறுப்புக்கள் வரவில்லை என்றும் எனக்குச் செய்தி சொல்லப்பட்டது. அவரை மிகப் பெரும் கவிஞராகக் கொண்டாடும் இலட்சக்கணக்கான ரசிகர்களில் ஒரே ஒருவர், ஒரு பல்கலைக் கழக முனைவர் தான் எதிர்வினை காட்டியிருந்தார். நான் வாதிட்ட எதற்கும் அவரிடமிருந்து மறுப்பில்லை. பிரஸ்தாப கவிஞரின் கவிதை எதையும் எடுத்து இது கவிதை அல்லவா? என்று அந்த முனைவர் வாதிட முடியவில்லை. கவிதை அல்ல என்று நான் உதாரணித்த எதையும், அது கவிதை தான் என்று விளக்கிடவும் இல்லை. இந்த பல்கலைக் கழக முனைவர்/ ஆசிரியர் அவரது 1/2 பக்க எதிர் வினையில் அந்த முனைவர் எழுதியிருந்தது. எனக்கு ஒன்றும் தெரியாது. என் அபிப்ராயங்கள் மேலோட்ட மானவை (எப்படி என்றும் சொல்லவில்லை. அவரது ஆழமான கருத்து என்ன என்பதும் சொல்லப்படவில்லை) என்றும், நான் செய்வது வம்பளப்பு என்று எல்லாம் சொல்லி, கடைசியில் தமிழ்நாட்டு வழக்கம் போல் என் மீது சாதிக் குண்டாந்தடியை எடுத்து வீசி தன் கட்சியை முடித்திருக்கிறார். ஒரு முனைவரால், பல்கலைக்கழக ஆசிரியரால், ஒரு விமர்சகராக பவனிவர ஆசைகொண்டு முனைபவரால், அவரது ரசனைக்கு மிகச்சிறந்த கவிஞர் என்று கொண்டாடுபவரைப் பற்றி சொல்ல இவ்வளவுதான் முடிந்திருக்கிறது. ஏனென்றால் அது பரிதாபம். தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்களுக்கு இது ஒரு சோகம். தமிழ் நாட்டின் செல்வாக்கு மிகுந்த கவிஞருக்காக வழக்காட ஒருவர்கூட இல்லை. வழக்காடி யவரின் எதிர்வினையும் ஒரு கேலிக் கூத்தாயிற்று. முடிவு என்ன? கவிஞருக்கு மலர் மாலைகள் சூட்டிடத்தயார், ஆனால் அவர் கவிதைகளில் என்ன கவித் துவத்தைக் கண்டார்கள் என்று வாதிட யாரும் தயாராகவில்லை - இலட்சக்கணக்கில் உள்ள ரசிகர் திறனில்.

70-க்களில் நான் மிகுந்த சர்ச்சைக்கும், எதிர்ப்புக்கும் ஆளானேன் என்று சொன்னேன். அந்நாட்களில் நான் விடுமுறையில் கும்பகோணம் வந்திருந்தேன். ஒருநாள் (1973-ஜீலை மாதத்தில் என ஞாபகம்) எம்.வி.வெங்கட்ராம், தன் மூன்று நண்பர்களையும் அழைத்துக் கொண்டு என் வீட்டிற்கு வந்து அவர்களை அறிமுகப்படுத்தினார். தஞ்சை பிரகாஷ்,பிரபஞ்சன், பின் இருளாண்டி. அம் மூவரையும் அப்போதுதான் சந்திக்கிறேன்'. தெரிந்து கொள்கிறேன். மூவரும்



**கலைகளிலே மொழித் தொடர்பு கொண்ட கவின்கலைகள் இலக்கியம், இசை, நாடகம் ஆகிய மூன்றே என்று கண்டவர் தமிழர். இதனாலேயே அவர்கள் அவற்றை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூன்று தமிழ்களாகக் கண்டனர்.**

தஞ்சையிலிருந்து வந்திருந்தார்கள். வெகுநேரம் பேசிக் கொண்டிருந் தோம். பேசியது, புதியவர் மூவரும் தான். எம்.வி.வி. அறிமுகப்படுத்திய தோடு தன் காரியம் முடிந்தது என்று இருந்து விட்டார். பின் வருடங்களில் நாங்கள் அத்யந்த நண்பர்களானோம். பிரபஞ்சன் தஞ்சையை விட்டுப் போய் விட்டதால் நான் இருளாண்டி யுடனும், பிரகாஷுடனும் தான் அதிகம் பழக நேர்ந்தது. பின்னர் ஒருநாள் இருளாண்டி சொன்னார். "நாங்கள்அன்று வந்தது உங்களுடன் கடுமையாக சண்டை போடத்தான். எம்.வி. நான் அழைத்துக் போகிறேன். பின் உங்கள் பாடு" என்றார். ஆனால் எவ்வித தயக்கமோ, முஸ்தீஃபோ இல்லாது பேசினீர்கள். என்ன கேள்வி கேட்ட போதும் எவ்வித தற்காப்பு முனைப்பும் இன்றி, மூடி மறைக்க ஏதும் இல்லாது பேசினீர்கள். எங்கள் மனம் மாறிவிட்டது என்று சொன்னார். அவர்கள் மனம் மாற வாய்ப்பு இருந்தது. ஏனெனில் அவர்களது திறந்த மனது. Vested interests ஏதும் அவர்களுக்கு இல்லை . என் கருத்துக்களால் அவர்கள் பாதிக்கப் படவில்லை. Vested Interests உள்ளவர்கள், உண்மையை உணர்ந்தாலும் மனம் மாற வாய்ப்பில்லை. இங்கு நிகழ்வது கருத்துக்களின் மோதல் அல்ல. கருத்துக்களுக்கு எதிராக இருப்பது சுயபிம்பங்கள், கௌரவங்கள், Vested interests. சில வருடங்களில் இருளாண்டி மறைந்து விட்டார். இதன் பின், பிரகாஷும் மறையும் வரை என் எல்லாகாரியங்களிலும் பிரகாஷ் எனக்கு உறுதுணையாக என் பக்கமே இருந்தார். நான் அறிந்த வரை. இதுவரை வேறு எங்கிலும் நிகழாத ஒரு காரியமாக, என் எழுத்துக்களை மாத்திரம் பிரசுரிக்க என்றே, ஒரு பத்திரிக்கை வெளிக் கொணரவேண்டும் என்று பல வருடங்களாக என்னை நிர்பந்தித்து கடைசியில் அவரது தீவிர நிர்பந்தனைகளுக்கு என்னை அடிபணியவும் வைத்து விட்டார். நான் வால்டேரை நினைத்துக் கொள்கிறேன். ரூசோவுக்கு அவர் சொன்ன வாசகங்களை நினைவு கொள்கிறேன்.

என் புத்தகங்கள் வெளிவரும் ஒவ்வொருமுறையும் யார் என்னைப் பாராட்டுவார்கள் என்று நான் தேடிச் சென்றதில்லை. ஒவ்வொரு முறையும், அப்போது என்னுடன் சுமுகமான உறவு இல்லாத (சுந்தர ராமசாமி) என்னுடன் பகைமைக் காய்ச்சல் கொள்ள ஆரம்பித்திருந்த ( தருமு சிவராமு) என்னுடன் கருத்து மோதல்கொண்டிருந்த (சி.சு. செல்லப்பா) அல்லது சித்தாந்த ரீதியாக, என்னை எதிர்முனைக் காரனாக கண்ட (எஸ்.வி.ராஜதுரை) அல்லது எனக்கு முற்றிலும் அறிமுகமில்லாத ஆனால் அத்துறையின் தலைசிறந்த அறிஞராக நான் கருதிய (எல்.எஸ். ராஜகோபாலன்) வர்களிடமே கொடுத்து, 'என்ன வேண்டு மானாலும், என் புத்தகத்தைப்பற்றி எழுதி, நேரே பிரஸ்ஸுக்கு அனுப்புங்கள் எனக்குக் காட்ட வேண்டியதில்லை. என்று சொல்லியே என் புத்தகங்களுக்கு முன்னுரை பெற்றிருக்கிறேன். அவர்கள் என்ன எழுதியிருக் கிறார்கள் என்பது புத்தகம் வெளிவந்த பிறகு தான் எனக்குத் தெரியும்.

இதெல்லாம், இங்கு தமிழ் இலக்கிய சூழலில் ஒரு சுதந்திரமான கருத்துப் பரிமாறல் சிநேகங்களை, உறவுகளை பாதிக்காத ஒரு கருத்துப் பரிமாறல் வேண்டும். அத்தகைய சூழல் உருவாக வேண்டும் என்பதற் காகவே எனக்கு எதிர் முனையிலான கருத்துக்களை வலிய அழைக்குமுகமாக நான் செயல்பட்டேன். ஆனால் நான் இம்மாதிரி செயல்பட்டது ஒரு முன் மாதிரியாகவில்லை. யாரும் இப்படி ஒரு riskyயான காரியங்கள் செய்யத்

தயாராயில்லை. 'நீ செய்யற பைத்தியக்காரத் தனத்தையெல்லாம் நாங்களும் செய்யணும்னு இருக்கா என்ன?'' என்று அவர்கள் கேட்டது போல் இருக்கிறது.

"உங்கள் கவிதைகளைப்பற்றிய என் எதிர்மறையான கருத்துக்கள் தவறு என்று கருதும் பட்சத்தில், என் கருத்துக்களை பிரசுரித்து என் வெறுமையை நீங்கள் உலகிற்கு பறையறைவிக்கலாம்'' என்று சொன்ன பிறகும், என் கருத்துக்கள் முடக்கப்பட்டன. இதன் பிரசுரத்திற்கு சம்பந்தப்பட்ட கவிஞர்தான் தடை சொல்லியிருக்க வேண்டும் என்பது என் யூகம். ஏனெனில் பிரசுரகர்த்தரும் ஒரு கவிஞர். அவரது கவிதைகளையும் நிராகரித்த என்னை. "அன்புள்ள சகோதரர். என்றுதான் அவர் தம் கடிதங்களில் என்னை அழைப்பார். என் புத்தகங்களை அந்நாட்களில் விரும்பிக் கேட்டு, தரமாக அச்சிட்டுப் பிரசுரித்தவரும் அவர்தான். எனக்கு என தனியாக கொஞ்சம் அதிகம் ராயல்டியும் கொடுத்தார் - ராயல்டி கொடுப்பதே அதிசயமாக உள்ள தமிழ் பிரசுர உலகில்! இப்படியும், இச்சூழலில் விதி விலக்காக சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இவர்கள் மரபாவதில்லை. மரபுக்கு விதிவிலக்காகிப் போனவர்கள்.

மறுபடியும் வேறு ஒரு காட்சி.

டெல்லியில் ஒரு நாள் மாலை என் நண்பனுக்கு தெரிந்தவரின் பெண்ணின் நாட்டிய நிகழ்ச்சிக்கு சென்றிருந்தேன். புதிய அறிமுகம். எனக்கு அப்பெண்ணின் நாட்டியம் மிகவும் பிடித்திருந்தது. பெத்த பெரிய புள்ளிகளின் பேர் புகழினால் பாதிக்கப்படாத புதிய நுழைவு. பேர் பெற்ற நாட்டிய சிகாமணிகளின் ஆட்டங்களில் அதிருப்தி கொள்ள ஆரம்பித்த காலம் அது. தென்னாட்டின் மிகப் பெரிய நாட்டியப் பேரொளி பரதத்தை சினிமாத்தனமான லோக தர்மியினால் அசிங்கப்படுத்திக் கொண்டிருந்த காலம் வடக்கே கோலோச்சிக் கொண்டிருந்த (நியாயத்துடன் தனி தகுதியின் பலத்தினால் தான்) இன்னொருவர் தன் ஜதிகளின் வேண்டாத வேகத்தில் (அது அவருடைய திறனும் பலமும், அதனால்) கதக் நாட்டியத்திற்கு (கதக் நாட்டியத்தை ஒரு கலை வடிவமாக ஏற்றுக் கொள்ள என் மனம் மறுக்கிறது. இதைப் பற்றி வட இந்திய பத்திரிகைகளிலேயே ஆங்கிலத்தில் எழுதியுமிருக் கிறேன்) சவால் விடும் பாவனையில் இயங்கிக் கொண்டிருந்த காலம். இந்த ஜதியும் இந்த வேகமும் பரதத்தின் லட்சணத்தின் பாற்படுமா. இது பரதத்திற்கு தேவையா என்பது என் கேள்வி. இந்த பாதை மீறல்களையெல்லாம் தவிர்த்த ஒரு நாட்டிய வெளிப்பாடு பரதத்தின் சூசகமான குறிப்புணர்த்தும் மொழியில் (Suggestive Gestinal language) அழகான நளினமான சலனங்களில் நடனமாடியது அந்தப் பெண். அது எனக்கு பிடித்திருந்தது. நண்பனுக்குச் சொன்னேன். அங்கேயே. அரங்கத்திலேயே. "நான் இதைப் பற்றி எழுதப் போகிறேன். எனக்கு பிடித்திருக்கிறது'' என்று எழுதிக் கொடுங்கள் நான் இருக்கும் பத்திரிகைக்கு கொடுக்கிறேன். போடுகிறார்களா பார்க்கலாம்'' என்றான் நண்பன். கொடுத்தேன் பிரசுரமாயிற்று. அதன் பொறுப்பா சிரியர் என்னைப் பார்க்க விரும்புகிறார் என்று நண்பன் சொன்னான். நான் அவரைச் சந்தித்தேன். என் கட்டுரையில், மேலே குறிப்பிட்ட இருவேறு மீறல்களைப் பற்றியும் எழுதி யிருந்தேன். ஒன்று யாமினி கிருஷ்ணமூர்த்தியைக் குறிப்பது. அவர் யாமினி கிருஷ்ண மூர்த்தியின் பரம ரசிகர் என்பது பின்னர் தான் தெரிந்தது. யார்தான் யாமினியின் ரசிகராக மாட்டார்கள்! இருப்பினும், யாமினி பற்றிய என் விமர்சனம் தாங்கிய கட்டுரையை விரும்பிப் பிரசுரித்தது மட்டு மல்லாமல், என் கட்டுரைகளை விரும்பி வரவேற்பவருமானார். என் வாதங்கள், கட்சியாடல் அவருக்கு பிடித்திருந்தது. "சாமிநாதன் என்ன எழுதினாலும் போடலாம் கொண்டுவா." என்று என் நண்பனிடம் சொல்லியிருக்கிறார் அவர். நான் நிறைய எழுதினேன். அந்த நிறுவனத்தின் தினசரி வெளியீட்டிலும் (Patriot) வார வெளியீட்டிலும் (link) இவை இரண்டும் இடது சாரி பத்திரிகைகள். தமிழ்நாட்டு முற்போக்குகள் கவனத்திற்காக இதைச் சொல்கிறேன். இப்பத்திரி கைகள் எதுவும், எனக்கு அமெரிக்காவிலிருந்து பணம் வருகிறது என்றோ. நான் CIA agent என்றோ அவதூற்றைக் கிளப்பவில்லை. மாறாக. கால் எலும்பு முறிந்து $1^1/_4$ வருடம் படுத்த படுக்கையாக இருந்தபோது. நான் கையால் எழுதிய பிரதியையே அச்சுக்கு எடுத்துச் செல்வார்கள். ஒரு முறை ஆசிரியரே என் வீட்டிற்கு வந்து என் கையெழுத்துப்பிரதியை வாங்கிச் சென்றார். இத்தகைய வரவேற்பு தமிழ்நாட்டில் ஒரு சுதந்திர கருத்துரிமைக்குக் கிடைக்குமா? கிடைக்கும் காலம் வளமான காலமாக இருக்கும்.

பின்னர் நான் மிக விரிவாக எல்லா இந்திய நாட்டிய பத்திரிகைகளைப் பற்றியும் அவை பற்றிய நிறை/குறைகள் என் பார்வையில் என்ன என்பது பற்றியும் ஒரு monograph அளவுக்கான கட்டுரை எழுதியிருந்தேன். அது வட இந்திய பத்திரிகையிலேயே (Sunday Mail) வெளிவந்தது. அதில் கதக் பற்றிய என் விஸ்தாரமான விமர்சனமும் அடங்கியிருந்தது. அத்தோடு யாமினியும் இன்னும் பலரும். பின்னர் யாமினி பற்றியே ஒரு monograph எழுதினேன். அது இன்னம் பிரசுரமாகவில்லை. அதை மொழிபெயர்த்து தமிழிலாவது வெளிக் கொணர வேண்டும்.

பின்னர் 1990ல் என்று ஞாபகம். யாமினி கிருஷ்ணமூர்த்தி தன் டெலிவிஷன் தொடர் நிகழ்ச்சிக்கு (இந்தியக் கோவில்களையும் அதைச் சார்ந்து நாட்டிய வெளிப் பாடுகளையும் - 'நாட்டியாஞ்சலி என்று பெயரோ என்னவோ) நான் ஸ்கிரிப்ட் எழுத வேண்டும் என்று என்னை அழைத்துக் கேட்டார். "என்னைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு? நான் எழுதியது ஏதும் படித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டேன். அதற்கு யாமினி, என் நண்பனைக் காட்டி, "இவர் சொல்லியிருக்கிறார். அத்தோடு உங்கள் எழுத்துக்களையும் படித்திருக்கிறேன் என்று அவர் தன்னிடமிருந்த Fileகளை எனக்குக் காட்டினார். அவற்றில் அவரைப் பற்றி நான் விமர்சித்திருந்த கட்டுரைகள் இருந்தன. இது தமிழ் சூழலில் நடக்குமா? சாத்தியமா?

இங்கும் நான் சுட்டிக் காட்ட விரும்புவது, ஒருவர் தன்னைப் பாராட்டுகிறார் அல்லது கண்டனம் செய்கிறார் என்பது முக்கியமில்லை. நான் முன் சொன்ன முனைவரின் அரைப்பக்கத்தில், என்னைக் கண்டனம் செய்ததால் எனக்கு என்ன பாதிப்பு? அல்லது ஒன்றுமே சொல்லாது, கவிஞரின் ஸ்தானத்தை திரும்ப ஸ்தாபித்து விட்டதாக கற்பித்துக் கொண்டு அந்த முனைவர் மயங்குவதால் அந்தக் கவிஞருக்குத் தான் என்ன லாபம்? ஆகவே, கண்டனமோ, பாராட்டோ, ஒருவன் என்ன சொல்கிறான்? அவன் பார்வை என்ன. அதற்கான ஆதாரங்கள், வாதங்கள் என்ன என்பதே ஒரு சூழலின் ஆரோக்கியத்தையும் வளத்தையும் குறிக்கும். தமிழ்நாட்டில் பாராட்டு பவரும், பாராட்டப் படுபவரும் விரும்புவது எப்படியாகினும், தெரிந்தோ தெரியாமலோ, பாராட்டு. அதுபோதும், பேரங்கள் திகையும். உறவுகள் பலப்பட்டு விடும். ஷேக்ஸ்பியரில் ஒரு வரி உண்டு "Tell caezer that he is not a man to be flattered. And he will be highly flattered. தமிழ் நாட்டின் அறிவுலக, எழுத்துலக மேதைகளைப் பற்றி இப்படிச் சொல்லி விட முடியாது. "என்ன வேண்டுமானாலும் வாய்க்கு வந்ததைச் சொல்லிப் புகழுங்கள். மனுஷன் குளிர்ந்து போவான் "நம்பவும் செய்வான்" என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் ஒருவர் கவிஞரைப் புகழ்கிறார். அலங்காரங்கள் கணிசமாக இருந்த அந்தக் கவிதைகளை, "அலங் காரங்கள் அணிகலன்கள் இல்லாததே இவற்றின் சிறப்பு" என்று

**மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல் அறிவை வளர்த்துக் கொண்டு பயன்பெற வேண்டும்.**



**- பேரறிஞர் அண்ணா**

இதே வார்த்தைகளில் அல்ல. அவர் தரப்பிற்கு அவருக்குத் தெரிந்த அலங்கார வார்த்தைகளில் புகழ்ந்து தள்ளியிருந்தார். இது நம் சூழல்.

ஷேக்ஸ்பியர் போன்ற ஒரு உலக இலக்கிய சிகரத்தை, கிழி கிழியென்று கிழித்தார், இன்னொரு உலக இலக்கிய சிகரம். டால்ஸ்டாய். வள்ளலாரின் அருட்பாக்களை "இவை அருட்பாக்கள் இல்லை, மருட்பாக்கள்" என்றார் ஆறுமுக நாவலர். இக்கருத்துக்கள் தான் வரலாற்றின் பாதையிலிருந்து ஒதுக்கப்பட்டு விட்டனவே ஒழிய இந்த சிகரங்களும் மகான்களும் அல்ல. அவர்கள் யாரும் குறைபட்டுப் போகவில்லை. சிகரங்களாகவே இருக்கின்றனர். தகுதியுள்ளது நிற்கும். அல்லாதது மரணித்துப் போகும். இன்றில்லா விட்டாலும் நாளை. சாதி சொல்லி எதையும் என்றென்றைக்குமாக வீழ்த்தி விட முடியாது. அதிகார பலம் தந்து எதையும் என்றென் றைக்குமாக நிலைநிறுத்தி விட முடியாது.

எனக்கு இன்றைய தமிழ் இலக்கியத்தில் பலரைப் பற்றி சாதகமாகவும், பாதகமாகவும் சொல்ல நிறைய உண்டு, சாதகமானதோ, பாதகமானதோ. நான் என்ன சொல்கிறேன், எது பற்றி சொல்கிறேன். என் பார்வையும் வாதங்களும் என்ன என்பன தான் பார்க்கப்பட வேண்டுமே தவிர, அக்கருத்துக்கள் எதிர்கொள்ளப் பட வேண்டுமே தவிர. ஒரு பாதகமான கருத்தோ, அல்லது சாதகமான கருத்தோ, சம்பந்தப் பட்ட இலக்கிய கர்த்தாவின் முழுமையையும் அங்கீகரித் ததாகவோ, நிராகரித்ததாகவோ ஆகாது என்பதும் உணரப் படவேண்டும். இது மிக சாதாரண எளிய உண்மை. ஆனால் இன்றைய சூழலில் எளிய உண்மைகள் புரிந்து கொள்ளப்படு வதில்லை. நான் வெகுவாக மதிக்கும் ஒருவரைப் பற்றி நான் வேறுபடும், அக்கறை கொள்ளும் மாற்றுக் கருத்தைச் சொன்னதன் மாத்திரமே இதற்கு அர்த்தம். அவரது ஆளுமையின் முழுமையையே, அதன் சிறப்பையே முற்றாக மறுக்கிறேன் என்பதல்ல. மறுபக்கமும் புரிந்து கொள்ளப் படுவதில்லை. யாரிடமும் காணும் நல்ல அம்சங்கள் பற்றியும் எழுதுகிறேன். நான் மற்றவரிடம் மாறுபடும் அம்சங்கள் பற்றியும் எழுதுகிறேன். இப்படிப்பட்ட கருத்து வெளிப்பாடுகளும் பரிமாறல்களும்தான் நம் சூழலில் சகஜமாக வேண்டும். சாதாரண நிகழ்வுகளாக வேண்டும். இவை

அனைத்தும் செழிப்பான மரபாக வேண்டும். நான் சாட்சியாக இருந்த ஒரு சம்பவம் பற்றிச் சொல்ல வேண்டும். பல வருடங்கள் முன்பு. 70 களின் கடைசியிலோ அல்லது 80களின் ஆரம்பத்திலோ. டெல்லியில் ஸாகித்ய அகாடமியின் சார்பில் ஆஸ்திரேலிய - இந்திய கவிஞர்களின் சந்திப்பும். கருத்தரங்கும் நடந்தன. அக்கருத் தரங்கில் ஒரு இளம் கவிஞரின் பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. அவர் தமக்கு முந்திய கவிஞர்களின். தலைமுறையின் கவிதைகளிலிருந்து வேறுபட்டு தனிப்பாதை அமைத்துக் கொண்டது பற்றியும். தாம் வேறுபட்ட காரணிகளைப் பற்றியும் மிக விரிவாகப் பேசினார். அவர் வேறுபட்டதாகச் சொன்ன தலைமுறையைச் சார்ந்த. முதிய கவிஞர் Judith Wright என்பவர் தான் ஆஸ்திரேலிய கவிஞர் குழாத்திற்கு தலைவர். அவரும் கருத்தரங்கில் அமர்ந்து பங்கு கொண்டிருந்தார். அவர் முன்னிலையில்தான் அந்த இளம் கவிஞர் தன் கவிதைப் பர்தை தனியென சொல்லிக் கொண்டிருந்தார். இடைவேளை உணவிற்குப்பிறகு. அந்த இளம் கவிஞர் முன்னதாகவே கருத்தரங்கு நடந்த ஹாலுக்கு வந்து விட்டார். டெல்லி பத்திரிகையாளர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். நான் அருகில் இருக்கிறேன். அவரைப் பேட்டி காண விரும்புவதாகச் சொன்னார்கள். "ஏன் என்னிடம்? ஜூடித் ரைட்டைப் பார்த்துப் பேசினீர்களா?" என்று கேட்டார் அவர். "இல்லை. உங்கள் பேச்சு பிடித்திருந்தது. அதனால் உங்களிடம் வந்தோம்" என்றார்கள் நிருபர்கள். அதற்கு அந்த இளம் கவிஞர். "தவறு. நீங்கள் முதலில் அவரிடம் போங்கள். ஆஸ்திரேலிய கவிதை பற்றி முழுமையாக அறிய வேண்டு மெனின் அவரிடம் முதலில் போங்கள். அவர் கருத்துக்களை முதலில் பதிவு செய்யுங்கள். நான் அவரை மறுத்து பாதை பிரிந்து இருக்கலாம். ஆனால் அவர்தான் எங்கள் கவிதை மரபுக்கு முதல்வர் அவர் கவிதைகள் எங்கள் இலக்கியத்தைச் செழுமைப் படுத்தியுள்ளன. அவர் இல்லாமல் நாங்கள் இல்லை. முதலில் அவரிடம் சென்று பின்னால் என்னிடம் வாருங்கள்'' என்று சொல்லி அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டார்.

நான் பெரிதும் மதிக்கும் க.நா.சு.. சி.சு.செல்லப்பா இருவரிடமும். மாறுபடும் கருத்துக்களும் உண்டு. அவைபற்றியும் எழுதுவேன். எழுதியுமிருக்கிறேன். இதற்கு அர்த்தம் நான் இவர்களை நிராகரிக்கிறேன் என்பதோ. குறைவாக மதிக்கிறேன் என்பதோ அல்ல. இதேபோலத்தான் நான் வேறு யார்பற்றியும். மற்ற சந்தர்ப்பங்களில் வெளியிடும் எத்தன்மையான அபிப்பிராயங் களும் அவ்வவற்றின் இடத்தில் அவையவை இடம் பெறும். நான் மதிக்கிறவர்களைப் பற்றி. மரியாதை செலுத்துகிறவர் களைப்பற்றி நான் அவர்களுடன் மாறுபடும் அம்சங்களைப் பற்றி ஏதும் சொல்லி விடக்கூடாது என்பதும் இல்லை. நான் வேறு சிலரின் முழுமையில் மதிக்காதவர்களிடத்தில் காணும். கண்டு வியக்கும் அம்சங்களைப் பற்றியும் சொல்லிவிடக் கூடாது என்பதும் இல்லை. சமீபத்தில் மறைந்த ஒரு கவிஞர். தனது புத்திக்கூர்மைபற்றி. நேர்மை பற்றி ஒரு பூதாகரித்த பிம்பத்தை ஆசையுடன் வளர்த்துக் கொண்டவர். என்னுடன் சுமூகமாக இருந்த காலத்தில். என்னை கடிந்து கொண்டதுண்டு. என்னை நிந்தித்தவர்களின் நல்ல அம்சங்க ளையும் நான் சுட்டியபோதே. எழுதியபோது 'இதெல்லாம் சொல்லக் கூடாது. நம் கட்சியின் பலத்தைக் குறைக்கும்' என்று சொல்லி தடுப்பார்.

கோககோலா. பெப்ஸிகோலா போன்ற ஒரு கலவைத் திரவத்தை. செயற்கையாக படைக்கப்பட்ட. என்ன சொல்வது? Concoction-ஐ. உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் (பெய்ஜிங்-கிலும் காணலாம் பள்ள பட்டியிலும் காணலாம்) பரப்ப முடிந்திருக்கிறது. இளநீரையும். எலுமிச்சம் பழத்தையும் சந்தையிலிருந்தும் சிறுவர். இளம் வயதினர் மனதிலிருந்து அகற்ற முடிந் திருக்கிறது. அமெரிக்காவில் மைக்கேல் ஜாக்ஸன் போன்ற ஒரு ஜீவனின் ஆபாசக் கூச்சலையும் அசிங்கமான அங்க சேஷ்டை களையும் கலையென்று உலகம் முழுதும் பரப்புவதில் வெற்றி காண முடிந்திருக்கிறது. அதே அமெரிக்காவால். ஜப்பானிலும். செக்கோஸ்லாவேகியாவிலும் (தனக்கென்று ஒரு நாகரிகமும். நீண்ட கலை வரலாறும் படைத்த சமூகங்கள் தாம் இவை) கோடிக்கணக்கான இளம் மனதுகள் வெறிபிடித்து அலைய வைக்க முடிகிறது. மைக்கேல் ஜாக்ஸன் பெயரைச் சொன்ன மாத்திரத்தில். எந்த ஆபாசத்தையும். அசிங்கத்தையும் அமெரிக்காவால். ஒரு பிரம்மாண்ட. அசைக்க முடியாத ஓர் உலக சந்தையை உருவாக்கி தள்ளிவிட முடிகிறது. இது என்னை மலைக்க வைக்கிறது. இது என் புத்திக்கு ஏற்கவில்லை. புரியவில்லை. இதற்கு அர்த்தம் இந்த ஆபாசங்களை நான் அங்கீகரிக்கிறேன் என்பது பொருள் அல்ல. நான் நம்மூர் பிரபு தேவாவை கலைஞனாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் வேடிக்கை. பிரபு தேவாவிற்கு மைக் ஜாக்ஸன் என்றால் பக்தி. இந்த விடம்பனத்திற்கு நான் என்ன செய்யட்டும். எதையும் அதன் குணத்தில். அதன் எல்லைக்குள் கணித்து அறிய. அங்கீகரிக்க. நிராகரிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.



# கவிச்சொல்

□ கவிஞர் மு.மேத்தா

கற்றவன் என்ற
கர்வம் தகர்ந்தது
அந்த விவசாயி
கன்னடத்தில் எழுதப்பட்ட
கடிதத்தைக் கொடுத்து
வாசித்துக் காட்டச் சொல்லி
வணங்கிய போது!

•

விரும்புவதில்லை
பூக்கள்
வேர்களின்
விலாசம் சொல்ல...

•

விரும்பி எல்லாம்
வீட்டில்
வைத்துக் கொள்கின்றனர்
நாட்காட்டிகளையும்
ஆட் காட்டிகளையும்!

•

உடனிருந்த பூக்கள்
உதிர்ந்ததைப் பார்த்த பின்னும்
கொடியில் குதிக்கும்
மலர்கள்
குதூகலமாய்!

•

வாகனங்களுக்குத்
தெரியாது
உட்கார்ந்து வந்தவர்கள்
தன்னை எங்கே
ஓரங்கட்டு வார்கள்
என்று.

•

அதிகமாக
அழுது தொலைக்கிறது
அந்தக்
குடைக்கு யார்
குடைபிடிப் பார்?

•

உயிர் நண்பர்கள் தான்..
எவர் உயிர்
என்னும்
கேள்வி வரும் வரைக்கும்...

•

உதிர்ந்த இலைகள்
ஒப்பாரி வைத்தன
உதிர்த்த மரமோ
கவலைப் படாமல்
கம்பீரமாய் நின்றது.

•

காயம்பட்டவர்களின்
புண்களின் மீது
கவிதை எழுதாதே
தோழா!
களிம்பு தடவு!

• • •

*ஓவியம் :* நாகராஜன்

# விடுதலை(ளை)

☐ இந்திரா பார்த்தசாரதி

நீல வானம். இதமான வெயில். இளங்காற்று. புல்தரை. இயற்கை அருளில் தோய்ந்து, சிரிப்பை ஆடையாகவும், அணியாகவும் பூண்டு விளையாடும் குழந்தைகள்.

பெண்கள்.

ஆண்கள்.

அவர்களுக்குத் தெரிந்த எல்லா விளையாட்டுக் களையும் ஆடி முடித்தாகிவிட்டது.

'போகலாமா?' என்றான் ஒருவன். புறப்பட்டார்கள்.

'எந்த வழியாகப் போக வேண்டும்?' என்று கேட்டாள் ஒருத்தி.

'நேர்வழி', என்றான் கையில் தடி வைத்திருந்த ஒருவன்.

'இடப்பக்கமும், வலப்பக்கமும் இடர் வழிகள்' என்றான் இன்னொருவன்.

'வலப்பக்கம் தேய்ந்து வறண்டு போன வழி. இடப்பக்கத்தில் குகை இருக்கிறது'

'குகையா?'

'ஆமாம்.. அந்தக் குகை..'

'எந்தக் குகை.. ..?'

'சபிக்கப்பட்ட குகை...'

'புரியவில்லை...'

'இரவு விடிந்த போது, ஒருவரையொருவர் அடித்துக் கொண்ட மக்களை, ஒரு தேவதை சபித்துவிட்டது. என்கிறார்கள்'

'என்ன சாபம்?'

'நீங்கள் என்றென்றும் இருண்ட குகைக்குள்தான் இருக்க வேண்டுமென்று...'

'அவர்கள் என்ன செய்கிறார்கள்?'

'யாருக்குத் தெரியும்...?'

'போய்ப் பார்க்கலாமே....'

'வேண்டாம்... ஆபத்து...'

'நான் போகத்தான் போகிறேன்...'

அவனை, நாலைந்து பேர் தொடர்ந்து சென்றார்கள்.

இடப்பக்கம், நீண்ட வழி.

போய்க் கொண்டே யிருந்தார்கள்.

இருட்டி விட்டது.

'யார் எக்கேடு கெட்டுப் போனால் என்ன? நம் வழி போய்விடுவோம்,' என்றான் அவர்களிலொருவன்.

'நான் பார்த்துவிட்டுத் தான் வருவேன்,' என்றான் இன்னொருவன்.

'இருட்டி விட்டதே...'

'திரும்பிச் சென்றாலும் இருட்டில் தானே போக வேண்டும்...?'

'சரி... காலையில் போவோம்..'



ஓவியம் : சிவபாலன்

"இப்பொழுது..?

'இங்கேயே தங்குவோம்...'

'தேவதை வந்தால்...?

'வராது. இங்கு தேவதைக்கு அதிகாரமில்லை.'

'எப்படித் தெரியும்...?'

'நம்பிக்கை. நாம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதே அதனால் தான்.'

அவர்கள் அந்த இடத்தில் இரவைக் கழித்தார்கள்.

காலை. சூரியனின் வண்ணக் கவிதை கிழக்கு வானில் எழுதப் பட்டிருந்தது. புள்ளினங்கள் இரைதேடி கீதமியற்றிக் கொண்டிருந்தன.

'உலகம் அற்புதம்' என்றான் ஒருவன்.

'யாருக்கு நன்றி சொல்ல வேண்டும்?'

'இறைவனுக்கு...'

'நமக்கும்... நாம் இதை அற்புதம் என்று உணர்வதினால்..'

'சரி... குகை மனிதர்களைப் பார்க்கப் போகலாம்...'

'உலகத்தில் வாழக் கொடுத்திருக்க வேண்டும்...'

'பூமி என் படுக்கை... ஆகாயம் என் உத்தரம்..'

'சரி... குகை மனிதர்களைப் பார்க்கப் போகலாம்..'

எல்லாரும் மறுபடியும் நடக்கத் தொடங்கினார்கள்.

நடக்க நடக்க வழி தொடர்ந்தது. 'குகை ஒரு கற்பனையோ?' என்றான் ஒருவன்.

'இல்லை, இருக்கிறது.'

'முரண்றொடை...'

மற்றவர்கள் அவனைக் கடுமையாகப் பார்த்தார்கள். இந்த இடத்தில் இலக்கணம் ஓர் அபஸ்வரம் என்பதை அவன் உணர்ந்தான்.

'குகை.. குகை...' என்று ஒருவன் மகிழ்ச்சி ஆரவாரத்தில் கத்தினான்.

நீண்ட குகை, வாயை அகலத் திறந்து, 'வா வா' என்று அழைத்தது.

சுற்று முற்றும் பார்த்தார்கள். தேவதை இருக்கக்கூடுமோ?

தேவதை இல்லை.

'உள்ளே போகலாமா?'

'போகத்தானே வந்தோம்...'

இருட்டு. கரியை அள்ளிப் பூசினாற் போல் இருட்டு. பார்வையின் நிறம் இருட்டு. ஒருவர்க்குப் பின் ஒருவராய் நேர்க்கோட்டில் செல்ல முயன்றார்கள். தட்டுத் தடுமாறினார்கள்.

'சூரியன் இங்கு வர ஏன் பயப்படுகிறான்?

'மெதுவாகப் போங்கள். பழந்தின்னி வௌவால்கள் பறக்கக் கூடும்...'

'பழந்தின்னி வௌவால்கள் தாம், இந்தக் குகை நாட்டின் குடிமக்களோ?'

'இருக்கலாம். இருட்டில் தான் தலை கீழ் ஆட்சி நடக்கும்...'

'சபித்தது இருட்டுத் தேவதையோ?'

அவர்கள் பேசுவது எதிரொலித்தது.

'இருட்டில் போய்க் கொண்டேயிருந்தால்?'

'பழக்கமாகி விடும்.'

'அப்புறம் வெளிச்சம் என்றால் என்னவென்று மறந்துவிடும்'.

'இருட்டை நேசிப்போம்...'

'இருட்டே ஞானம்...' என்று சிரித்தான் ஒருவன்.

அவர்கள் மேலும் மேலும் நடந்து கொண்டே போனார்கள். அவர்கள் நடக்க நடக்க, குகை உருவாகிக் கொண்டேயிருப்பது போல், அவர்களுக்குத் தோன்றிற்று. ஆரம்பமும் முடிவும் ஒரே புள்ளியில் சந்திப்பது போல் அவர்களுக்குப் பட்டது.

'திரும்பி விடலாம்,' என்றான் ஒருவன்.

'எப்படி, எங்கே...?'

'சரியான கேள்வி...'

'வைத்த காலைப் பின்வாங்கக்கூடாது'

காலை எங்கே வைக்கிறேன் என்றே தெரியவில்லை.

'பேசாமல் நட...'

அவர்கள் மேலும் நடந்தார்கள்.

'புல்லைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது'

'சூரியனைச் சிறை பிடிக்கும் புல்'



'இப்பொழுது மலர்கள் சூரிய ஒளியில் குளித்துக் கொண்டிருக்கக் கூடும்'

'நம்மோடு வர மறுத்தவர்கள் ஆற்றில் குளித்துக் கொண்டிருப்பார்கள்'.

'சல சலத்து ஓடும் ஆறு'

'ஒற்றைக் காலில் தவம் செய்யும் கொக்கு...'

'காற்றலையின் சுருதியில் இழையும் குயிலின் சோகம்...'

'உலகே இன்பமயம்...'

அவர்கள் மேலும் பேசிக்கொண்டே நடந்து போனார்கள்.

'அதோ... ஏதோ மினு மினுக்கிறதே...' என்றான் ஒருவன்.

'ஆமாம்.. அதுதான் நாம் போக வேண்டிய இடமாக இருக்க வேண்டும்.'

'இதுவா அந்த இடம்..?'

அவர்கள் ஸ்தம்பித்து நின்றார்கள். ஒரு மெல்லிய திரை குறுக்கும் நெடுக்குமாக இருந்தது. உத்தரத்திலிருந்து ஒரு சின்ன விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. திசைக்கு அப்பால், உறைந்த நிலையில் நின்ற பலர், நிழலொளித் தோற்றங்களாகத் தெரிந்தனர். திரையில் அவர்கள் நிழல்கள் படிந்து, பூதங்களாய் ஆடின.

ஒருவன் திரைக்குப் பின்னால் எட்டிப் பார்த்தான்.

திடுக்கிட்டான்.

பலர் அங்கு உறைந்த நிலையில் இருந்தனர். அவர்களுடைய கால்களும் கைகளும் இரும்புச் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தன. கழுத்திலும், இரண்டு பக்கமும் திரும்ப முடியாத அளவுக்கு இரும்பு வளையம். வரிசையாக நின்று கொண்டிருந்த அவர்களால் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முடியாது. நேரே திரையில் தெரியும் நிழல்களைத் தாம் பார்க்க முடியும். அவர்களைப் பொருத்த வரையில், நிழல்தான் யதார்த்தம். ஒருவன் மேனி இன்னொருவனுக்குத் தெரியாது. மேலே தொங்கிக் கொண்டிருந்த விளக்கும், அவர்கள் கண்களுக்குத் தெரியாது. அது திரையில் இழைக்கும் கோலங்கள் தாம் தெரியும்.

இப்படியே அவர்கள் காலம் காலமாக நின்று கொண்டிருக்கிறார்களா?

எதிரே தெரியும் நிழல்களைப் பார்ப்பதுதான் அவர்கள் வாழ்க்கையின்

இலட்சியமா? வேறு என்ன செய்ய முடியும்?

அந்த தேவதை எவ்வளவு கொடூரமான உள்ளம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்! இது என்ன குரூர ஹாஸ்யம்!

அவர்களை அந்நிலையில் கண்டவன், பின்னால் திரும்பி மற்றவர்களையும் வரும்படி சைகை செய்தான்

அவர்களும் எட்டிப் பார்த்தார்கள். 'பாவம், விடுவிப் போமா? என்றான் ஒருவன்.

'தேவதையின் சாபம்' என்றான் இன்னொருவன்

'நம்மை ஒன்றும் செய்யாது...'

'எப்படித் தெரியும்?'

'நம்பிக்கை...'

'இவர்களுடன் பேசிப் பார்ப்போமா?'

'சரி, பேசு...'

ஒருவன் அவர்கள் அருகே சென்றான். அவர்கள் அவனைப் பார்த்ததாகத் தெரியவில்லை... அவர்கள் கண்கள் வெறுமையை நோக்கி நிலைக்குத்தி நின்றன

'யார் நீங்கள்?' என்றான் அவன். பதிலில்லை

'யார் நீங்கள்?' உரக்கக் கத்தினான். குரல் எதிரொலித்தது.

'நீங்கள் யார்?'... ஈனஸ்வரத்தில் அவர்களில் ஒருவன் கேட்டான்.

'உங்களை விடுவிக்க வந்திருக்கிறோம்'

'அப்படி என்றால்...'

'உங்கள் தளைகளைத் தகர்க்க...!

'அப்படி என்றால்...?'

'கையிலும் காலிலும் போட்டிருக்கிறதே அந்த இரும்புச் சங்கிலிகளை அகற்ற... கழுத்திலிருக்கும் வளையத்தைக் கழற்ற...'

'இவைகள் எங்களுடன் பிறந்தவை. எங்களைக் கொல்லவா போகிறீர்கள்..?

'இல்லை அவை உங்களுடன் பிறந்தவை அல்ல... உங்களுக்குப் போடப்பட்டவை...'

'இல்லை... இவைகளுடன்தான் நாங்கள் பிறந்தோம். இவை இல்லாமல் எங்களால் இருக்க முடியாது. எங்களை ஏமாற்றப் பொய்யா சொல்லுகிறீர்கள்...?'

'உங்களுக்கு எது பொய் எது நிஜமென்று தெரியாது. உங்களுடைய உண்மையான தோற்றம் எதுவென்று உங்களுக்குத் தெரியுமா...?

'எதிரே தெரியும், அழகிய கறுப்பு உருவம்'

'அது பொய். பயம் உங்கள் காலையும், கையையும் கட்டிப் போட்டிருக்கிறது. உத்தரத்திலிருந்து தெரியும் பொய் விளம்பரம், உண்மையைத் திரித்துக் காட்டுகிறது. நீங்கள் யார் என்று உங்களுக்குப் புலப்படுத்த நாங்கள் வந்திருக்கிறோம்.'

'எங்களுக்கு உங்கள் அறிவுரை தேவையில்லை. இதுவே எங்கள் சொர்க்கம்.'

'சரி... உங்களில் ஒருவனை விடுவிக்கிறோம். அவன் எங்களுடன் வரட்டும். அவன் எது பொய், எது நிஜம் என்று எங்களுடன் வந்து, உணர்ந்து சொல்வான். என்ன சொல்லுகிறீர்கள்..?'

மௌனம்.

'சொல்லுங்கள்... சரியா...?'

மௌனம்.

'எங்களுடன் வரத் தயாராக இல்லையா?'

'எங்கள் வாழ்க்கையை விட்டு எதற்காக வர வேண்டும்? தினந்தோறும் எங்கள் வாயில் உணவு ஊட்டப்படுகிறது. அவ்வப்பொழுது பழம், சங்கிலிகள் மாற்றப்பட்டு, புதுச் சங்கிலிகள் பூட்டப்படுகின்றன. எங்களுக்கு வேறு என்ன வேண்டும்...?'

'சூரிய ஒளி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்...?'

'காற்று என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்...?'

'விண்ணில் பறக்கும் புள்ளினங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்...?'

'கண்ணுக்குத் தெரியும் தூரம் வரை பரந்து கிடக்கும் பச்சைப் பசும் புல் தரையில் புரண்டு கொண்டே போவது பற்றி உங்களுக்குத் தெரியுமா?'

'அப்படியென்றால்...?'

'அப்படியென்றால், உங்களில் ஒருவனை அனுப்புங்கள்... அவன் புரிந்து கொண்டு வந்து உங்களுக்கும் சொல்வான்.

மௌனம்.

அவர்களிலொருவன் முன் வந்தான். 'என்னை அழைத்துப் போங்கள். நான் வருகிறேன்.'

அவன் தளைகள் அகற்றப்பட்டன. அவன் அவர்களுடன் திரைக்கு அப்பால் சென்றான்.

அவனால் நடக்க முடியவில்லை தடுமாறி விழுந்தான். அவனைக் கைத் தாங்கலாக அழைத்துச் சென்றார்கள். அவள் கண்ணுக்கு இருட்டு பழகியிருந்தது. ஆனால் நடக்கத்தான் முடியவில்லை. அவன் கண்ணின் மூலம் வழிகாட்ட, அவர்கள் அவனைத் தாங்கிக் கொண்டு மெதுவாக நடந்து சென்றார்கள்.

குகைக்கு வெளியே வந்ததும், அவன் குரலை எழுப்பிக் கத்தினான்.

'இது என்ன சிறைக் கூடம்..?'

'இது சிறை இல்லை, வெளி.... சுதந்திரம்'

'இது என்ன கண்ணைக் குத்துகிறது..?'

'சூரிய ஒளி...'

அவன் கண்களை மூடிக்கொண்டான்.

'அந்த விளக்கை அணையுங்கள்..'

'அணைக்க முடியாது. இதுதான் இயற்கை...'

'என் குகையில் தெரியும் இருட்டுதான் எனக்கு வெளிச்சம்...'

'அப்படி நீ பழகி விட்டாய்...'

'என் முடி ஏன் இப்படிப் பறக்கிறது...?'

‘காற்று’

‘என் குகையில் வீசுவதுதான் காற்று..’

‘அது காற்றில்லை. புழுக்கம்..’

‘என்னால் பார்க்க முடியவில்லையே....’

‘கொஞ்சம் கொஞ்சமாய் கண்களைத் திறந்து பார்.’

‘என் கை கால்கள் அசைகின்றன. பயமாக இருக்கிறது..’

‘இதுதான் இயற்கை. கை கால்களை அசைக்க முடியுமென்பதுதான் உன் பலம். உன்னால் நடக்க முடியும். ஓட முடியும்.’

‘தளைகள் தாம் இயற்கை’

‘இல்லை. அவை தேவதையின் சாபம்.’

‘என்னால் கழுத்தைத் திருப்பி உங்களைப் பார்க்க முடிகிறது.’

‘இதுதான் இயற்கை’.

‘நீங்கள் நிழலாகத் தெரிகிறீர்கள்.’

‘ உன் கண், வெளிச்சத்துடன் இன்னும் பழகவில்லை. பழகிய பிறகு நீ காணும் எங்கள் உருவந்தான் இயற்கை.’

‘அப்படியென்றால்...?’

‘நீ நிஜத்தைப் பார்ப்பாய்...?’

‘மேலே தெரிவது என்ன?’

‘ஆகாயம்.’

‘இவை...?’

‘மலர்கள்....’

‘எவ்வளவு சின்ன உருவம்’. எத்தனை வேகமாக ஓடுகின்றன.. அவை...?’

‘குழந்தைகள்’

‘இவை... ?’

‘வண்ணத்துப் பூச்சிகள்...’



‘இவை....?’

‘பறவைகள்... பறக்கின்றன....’

என்னால் பறக்க முடியுமா?

‘முடியும்...’

‘குகைக்கு வெளியே வந்தால் நன்றாகத் தான் இருக்கிறது...’,

‘கண் தெரிகிறதா?’

‘தெரிகிறது.’

‘அதோ பார்...’

‘கண் கூசுகிறது.’

‘அதுதான் சூரியன்...’

‘நன்றாக இருக்கிறது.’

‘மனிதனுக்கு இவை எல்லாம் வேண்டும்.’

‘குகையில் தெரியும் இருட்டு...?’

‘செயற்கை’

‘குகையைக் கட்டியது யார்...?’

‘நீங்கள்...’

‘எங்களுக்கு விலங்கிட்டது யார்...?’

‘நீங்கள்’

‘புரியவில்லை...’

‘அவரவர்களுக்கு அவர்கள் தாம் விலங்கிடுகிறார்கள்.’

‘தேவதையின் சாபம் என்றால்...?’

‘நீங்களே குகையைக் கட்டிக் கொண்டு, குறுக்குச் சுவர் எழுப்பி, கையிலும் காலிலும் விலங்கிட்டுக் கொள்வதுதான் தேவதையின் சாபம்..’

‘தேவதை யார்...?’

‘நீங்கள் பயப்படுவதற்காக நீங்களே உருவாக்கிக் கொண்ட பொய்க் கடவுள்..’

அவன் திரும்பினான்.

கண்களை இடுக்கிக் கொண்டு ஆகாயத்தைப் பார்த்தான். காற்றைச் சுவாசித்தான். காற்றில் பறந்த கேசத்தைக் கையினால் அடக்கிக் கொண்டான்.

மலர்களின் நறுமணம்.

திடீரென்று வானம் இருண்டது.

மழை பெய்தது.

மழை நனைவது அவனுக்கு ஒரு சுகமான அநுபவமாக இருந்தது.

அப்பொழுது மற்றவர்கள், மழையில் நனைந்தவாறு, பாடினார்கள்.

அவனும் அவர்களுடன் பாடினான்.

பாட்டு முடிந்ததும், அவன் சொன்னான்.’ ‘குகைக்குள் செல்வோம்.!

‘எதற்கு?’

‘மற்றவர்களையும் அழைத்து வர...’

எல்லாரும் சந்தோஷத்துடன் குகைக்குள் சென்றார்கள்.

• கவிஞர் இளந்தேவன்



# நடுப்பகற் கனவுகள்

தெருக்கள் கூட
கனவு கண் டிருக்கும்
நடுப் பகல் நேரம்

கட்டட மரங்களின்
கூடுக ளுக்குள்
பதுங்கி விட்ட
மனிதப் பறவைகள்
பாதித் துயிலில்
மயங்கு கின்றன!

தாழில் லாத
விழிகளின் கதவுகள்
தாங்க ளாகவே
மூடத் தொடங்கின!

வெப்ப வெள்ளத்தில்
மிதந்த வீதிகள்
மலைப்பாம் புகளாய்
நெளிந்து கிடந்தன!

கோடைக் காலத்து
நெருப்புக் கதிரவன்
ஊரடங்குச் சட்டம்
இயற்றிவிட் டானா?

காற்றுக் கழுதை
எங்கே போனது?
உண்ட மயக்கம்
அதற்கும் உண்டா?

எதிர்வீட் டரசி
யசோதை அம்மாள்

நக்கிப் போட்ட
வாழை இலையில்.



ஓவியம் : கோபுலு

சோற்றுப் பருக்கையைத்
தேடிக் களைத்த

சோம்பேறி நாயும்
சுருண்டு படுத்தது!

அல்லும் பகலும்
அலறத் தவறா
அம்புஜத் தம்மாள்
சவலைகள் கூட

குரல்நாண் களுக்குச்
சிறுவிடுப்பு' அளித்துக்
கொஞ்சம் ரேழியில்
விழுந்து கிடந்தன!

அவற்றின் கனவுகள்
கொஞ்சம் கலைந்தால்
ஆசியாக் கண்டமே
தூள் தூளாகலாம்!

ஈர்ப்பு விதியை
இயம்பி விழுந்த
ஐசக் நியூட்டனின்
ஆப்பிள் பழத்தை

மாடி வீட்டு
மானிட பர்வதம்
திரவ மாக்கித்
தீர்த்து விட்டபின்

விகார ஏப்பம்
வெளியே வந்தது!
உள்ளே போன
'சரக்கு களுக்கு'
உப்பிய வயிறு
தரும்ர சீ(து) அது!

மொழுக்கை யாய்விட்ட
விரல்களால் பற்றித்
தகரக் குவளையின்
ரசத்து வண்டலை,

உறிஞ்சிக் குடிக்கும்
தொழுநோய்க் காரனின்
உதடுகள் எழுப்பும்
ஓசையி னாலே,

பிணத்தைப் போலக்
கனத்துக் கிடந்த

சூனியம் கொஞ்சம்
சோம்பல் முறித்தது!

கணநே ரம்தான்
அதன்பின் சூனிய
ஆட்சி தொடர்ந்தது!

சன்னல் வழியே
காட்சி யளிக்கும்
சாலை யோரத்து

நாய்கள் இரண்டைப்
பார்த்துக் கொண்டோர்
பையன் இருந்தான்!

'அல்வழிப் புணர்ச்சி'யை
விளக்கிக்கொண் டிருந்தார்
அந்த வகுப்புத்
தமிழா சிரியர்!

அரையே அரைக்கால்
நிர்வா ணத்தில்

ஆடும் அழகியின்
சதைக்கோ ளங்களைக்
காட்டும் போஸ்டரைக்
காலையில் தின்றதால்,

கோனார் வைத்த
பருத்திக் கொட்டையும்
குமட்டிட, தலையை
வெளியே நீட்டி,

இகத்தை வெறுத்தோர்
எருமை மாடு,
'பரத்தை' விரும்பிப்
படுத்துக் கிடந்தது!

அடுக்களைப் படியில்
அம்மா தூங்கிட,
அடுத்த வீட்டுப்
பாஸ்கர னுக்குச்

சைகைக ளாலே
செய்திகள் உணர்த்தும்
சரஸ்வதி தூங்கா
திருப்பதைப் போல,

பன்னீர்ப் பூக்கள்
தூங்கா திருந்து
பகலவ னோடு
பலகதை பேசும்!

மரங்கள் அப்போது
கண்ட கனவில்
மருமகன் சூரியன்
வரவே இல்லை!

நடுப்பகற் கனவுகள்
கலைகிற நேரம்

வீதிகள் என்னும்
நகர நரம்புகள்
விதவித ஓசையால்
விம்மிப் புடைக்கலாம்!

அதுவரை,
வேலை யற்ற
கவிஞனைப் போலே,
வீதியில் நின்று
கனவுகள் காணும்
வேப்ப மரங்களே!
அமர்ந்தா லென்ன?

• • •





# போணி

மண்ணெண்ணெய் தீர்ந்துபோய் நாலு நாட்களாகிவிட்டன. காஸ் ‘இப்பவோ, அப்பவோ’ என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது. கெரசினை வாங்காமல் இருந்து, காஸும் தீர்ந்து, விருந்தாளியும் வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம்.... நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை வேறு.

வழக்கமாய்த் தோட்டக்காரனை சைக்கிளில் கடைத்தெருவுக்கு அனுப்பி தேவைப்பட்டதை அவள் வாங்கிவரச் சொல்வாள். சகலைக்குக் காய்ச்சல் என்று இரண்டு நாள் லீவு வாங்கிக்கொண்டு போனவன், வாரம் ஒன்றாயிற்று. ஆளையே காணோம்.

டிரைவரைக் கார் எடுக்கச் சொல்லி டின் சகிதம் புறப்பட்டாள்.

அந்தக் கடைத்தெருவுக்குப் போவது என்பது அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காத சமாச்சாரம்.

அது என்ன ஜனங்கள்! நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில்! கும்பல் கும்பலாய்... சாரி சாரியாய்... ஒவ்வொரு கடை முன்னாலும் பிதுங்கி வழியும் மனிதக் கூட்டம்.... பாதிப்பேர்கள் வேலையாய், மீதிப்பேர்கள் வெட்டி முறித்துக் கொண்டு... வம்பளத்துக் கொண்டு...

கார் அந்தத் தெருவில் போக எப்போதுமே ரொம்ப கஷ்டப்படும். காய்கறி, தேங்காய் இறக்கும் லாரிகள், கட்டை வண்டிகள், சைக்கிள் ரிக்ஷாக்கள், சைக்கிள்கள், பாதசாரிகள், கூலிக்காரர்கள்... எதிரும் புதிருமாய் வந்த தெருவை. இரவு இல்லை, பகல் இல்லை என்று சதா நிரப்பிக் கொண்டிருப்பார்கள். இத்தனைக்கும் அது ஒன்வே டிராபிக் ரோடு!

□ சிவசங்கரி

*ஓவியம்* : மாருதி

அந்தத் தெருவில் மீன் மார்க்கெட்டும், காய்கறி மார்க்கெட்டும் அடுத்தடுத்து இருந்தன. காய்கறி, பழம் வாங்கவேண்டுமென்றால் சைவர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டுதான் மார்க்கெட்டுக்குள் பிரவேசிக்க முடியும்.

பிளாட்பாரம் என்று ஒரு ஒழுங்கு இல்லாத அந்தத் தெருவை, இரண்டு பக்கமும் கடைகள் அடைத்துக் கொண்டு நின்றன.

கடலைக்கடை, வெற்றிலைக்கடை, அரிசியை அம்பாரமாய்க் கொட்டிக் கொண்டு விற்கும் கடை, தேங்காய் மண்டி, புகையிலை, களிப்பாக்குக் கடை, வெல்ல மண்டி... என்று நானாவிதமான கடைகளுக்கு நடுவில், நாலு கடைகளுக்கு ஒரு காபி கிளப் வேறு.



காய்கறி மார்க்கெட்டைத் தாண்டி, கிடைத்த இடத்தில் வண்டியை எப்படியோ நிறுத்தினான் டிரைவர்.

“டின்னை எடுத்துட்டுப்போயி அந்தக் கடையிலே ஒரு டின் கெரஸின் வாங்கிட்டு வா” என்று பணித்தாள் அவள்.

அவன் போனான்.

கெரஸின் கடையில் கூட்டம் நெரிவது அவளுக்குத் தெரிந்தது. இன்னும் குறைந்தபட்சம் கால் மணியாவது ஆகும் டிரைவர் திரும்ப.

காலை வெயில் சுள்ளென்று பின்பக்கக் கண்ணாடி வழியாக முதுகில் உறைத்தது. பலாப்பழ சீஸன் ஆரம்பமாகி விட்டதால் ஈக்களின் தொல்லை சகிக்க முடியாமல் இருந்தது.

பின்னிருக்கையில் சாய்ந்துகொண்டு கண்களைச் சுற்றிலும் ஓட்டினாள்.

அவளுக்கு நேர் எதிரில் வாழைப்பழ மண்டி. பச்சைப் பசேலென்று பூவன் தார்கள் வரிசையாய் கொலு விருந்தன. பழுத்த பழங்களை ‘குடப்பு’ எடுத்து இன்னொரு பக்கமாய் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். ரொம்பப் பழுத்துப்போன சில பழங்களை – அழுகிப் போனவற்றை – ஒரு கூடைக்காரி மொத்தமாக விலை பேசிக்கொண்டிருந்தாள். அழுகின பழங்கள் மேல் நூற்றுக்கணக்கில் ஈக்கூட்டம்.

இத்தனை அழுகலை எடுத்துப்போய் என்ன வியாபாரம் செய்யப் போகிறாள் இந்தக் கிழவி?

அருகில் இருந்தது பட்டாணிக்கடை. மூக்கில் சளி வழிய அம்மணமாய் நின்றிருந்த குழந்தைகள் இரண்டு, கடலை வாங்கிக் கொறிப்பவர்கள் சொத்தை என்று தரையில் விசிறுவதைப் பொறுக்கிப் பொறுக்கித் தின்றன.

மாட்டுவண்டி ஒன்று இழுத்துப் பிடித்துக்கொண்டு எதிர்பக்கம் வந்தது. வரிசையாய் சைக்கிள் நிறுத்தப்பட்டி ருந்ததால் அந்த வண்டி போக இடமில்லை.

‘ஹை... ஹை! ட்ரூ... ட்ரூ!” என மாடுகளை இழுத்து நிறுத்தின வண்டிக்காரன், ‘சைக்கிளெ கொஞ்சம் அப்பால நகத்து சாமீ....” என்று வந்து போகும் ஆண்மகன்களை யெல்லாம் கெஞ்சிப் பார்த்தான்.

ம்ஹூம். ஒருத்தரும் காதில் வாங்கவேயில்லை. வண்டிக்காரன் கீழே இறங்கி ஒவ்வொரு சைக்கிளாகப் பாதை ஓரமாய் நகர்த்தத் தொடங்கினான்.

இந்தப் பக்கத்தில் சரக்கை இறக்கி முடித்துவிட்ட லாரிக்காரனுக்கு அதற்குள் அவசரம் ‘பாம், பாம்’ என விடாமல் ஹாரனை அடித்து, “வண்டியை நகத்துய்யா!” எனக் கத்தியது அவளுக்குத் தலைவேதனையாய் இருந்தது.

‘யோவ் வண்டிக்காரரே! இன்னா, நடுரோட்டிலே வண்டிய நிறுத்திட்டு? எடுய்யா!” ஜன்னல் வழியாகத் தலையை விட்டு லாரி டிரைவர் மீண்டும் கத்தி ஆர்ப்பரித்தான்.

‘ஒனக்குத்தான் அவசரமாய்யா? எனக்குந்தான்! பாதை விடாம சைக்கிளெ நிறுத்திடறானுங்க!’ வண்டிக்காரன் வைதுகொண்டே சீர் செய்த பாதை வழியாய் வண்டியைக் கிளப்பிக்கொண்டு போனான், லாரியும் தாண்டியது.

சீ! என்ன கூட்டம்! என்ன கலாட்டா! அவளுக்கு வியர்த்து, கசகசத்து எரிச்சல் மூண்டது.

என்ன பண்ணுகிறான் இந்த டிரைவர்?

திரும்பிப் பார்த்தாள்.

கடையில் யாருடனோ அவன் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருப்பது புரிந்தது.

எட்டி கார் ஹாரனை சப்தித்தாள்.

டிரைவர் வந்தான்.

"என்னப்பா இவ்வளவு நாழி?"

"நேத்து வந்த சரக்கு தீர்ந்து போச்சாம். புதுசு வந்திருக்கு. எடுத்து ஊத்தறாங்க... கும்பல் இருக்கு..."

"சரி... சரி.. சுருக்க வா. இங்க அவியுது!"

அவன் மறுபடியும் போனான்.

அவள் பார்வையைத் தனக்கு இடப்பக்கமாய் ஓட்டினாள்.

காபி கிளப், புகையிலை மண்டி, வெல்ல மண்டி, வெல்ல மண்டி வாசலில் அச்சு அச்சாய் கறுப்பு வெல்லக் குவியல்.

இந்தப் பக்கம் வெள்ளைப் பூண்டைக் கொட்டி வைத்துக் கூறு கட்டி விற்றுக் கொண்டிருந்தனர் இருவர். ஆண் வியாபாரத்தைக் கவனித்தால், பெண் பூண்டைப் புடைத்து சுத்தம் செய்து கூறு கட்டினாள். காற்றில் பூண்டுத் தோல் பறந்து வந்து ஜன்னல் வழியாய் அவள் மடிமேல் விழுந்தது. புகையிலை நெடி வேறு.

ஜன்னலை மூடினாள்.

அப்போதுதான் அந்தப் பெண்மணி கூடையுடன் அவள் வண்டிக்கருகில் வந்து உட்கார்ந்தாள். கதவைத்



திறந்தால் அவள் மேல் இடிக்கும். அத்தனை நெருக்கத்தில் அமர்ந்தாள்.

சாணி பூசின கூடையை சாக்கு போட்டு மூடியிருந்தாள்.

மொணமொணவென்று எதையோ முணுமுணுத்த வண்ணம் சாக்கை எடுத்துத் தரையில் பரப்பினாள். கூடையில் இருந்த கொய்யாப்பழங்களை அதில் கொட்டி, பெரிசு சிறிசு எனப் பிரிக்க முற்பட்டாள்.

நாட்டுக் கொய்யாப்பழங்கள், சற்றே நீளமாய், கிளிப் பச்சையாய் இருந்தன. இன்னும் நன்றாகப் பழுக்கவில்லை.

அந்தப் பெண்மணிக்கு என்ன வயசு இருக்கும்? அவளுக்குக் கணிக்கத் தெரியவில்லை. அழுக்கான மெலிந்த உடம்பு, சாயம் போன புடவை, ஜாக்கெட் இல்லாத வெற்று மேனி, அள்ளிச் செருகின செம்பட்டைத் தலைமுடி. மூக்கில் ஒரு சிவப்புக் கல் பித்தளை மூக்குத்தி, கழுத்தில் கறுத்துப்போன மஞ்சள் கயிறு, வாயில் வெற்றிலை.

'காலையில கழுத்தை அறுக்கன்னு இந்தச் சனியன் இருக்குது! எளுந்து பொளுதோட வேலைக்குக் கெளம்பினா தேவலை... தானும் கிளம்பாது, என்னையும் உடாது! பளத்தைப் பொளுதோட வாங்கிக் கடை போட்டா, விக்கும்! வெயிலு கொளுத்தத் தொடங்கிடுச்சு... இன்னா வியாபாரம் ஆவப் போவுதோ!'' இப்போது கொய்யாப் பழக்காரி பேசினது அவளுக்குத் தெளிவாய்க் கேட்டது.



"இன்னா ஆண்டாளு, இன்னிக்குக் கொய்யாப்பளம் பிடிச்சிருக்கியா? இளநீ புடிக்கப் போறேன்னே... இன்னா விஸயம்?''

புகையிலை மண்டிப் பையன் ஒருத்தன் அவளிடம் நெருங்கி வந்து பேச்சுக் கொடுத்தான்.

"ஆங், இளநீ யாபாரம் பண்ணி நா கீய்ச்சேன்! போவியா! நேத்து அது இருக்கற பணத்தையெல்லாம் கொண்டுபோய் குடிச்சிட்டு வந்திடுச்சி... காலையிலே எளுந்து ஒரே சண்டை! என்னாத்தை நான் இளநீ புடிக்கறது! துட்டு வாணாம்?''

"அப்ப இன்னிக்கு எங்காசைத் திருப்பமாட்டேன்னு சொல்லு!''

கொய்யாப்பழக்காரி பதில் ஏதும் பேசவில்லை.

இவனிடம் கடன் வாங்கியிருக்கிறாளா?

"சரி, சரி... ரெண்டு பளம் கொடு, நா போகணும்!''

"இன்னும் போணி ஆவலையே! நீ ஒங்கடைக்கிப் போ... நா அப்பால கொணாந்து தாரேன்...'

"அட? இன்னாம்மே டபாய்க்கிறே? எங்காசு குடு. நா போரேன்....''

தான் வகையாக மாட்டிக்கொண்டிருப்பது பழக்காரிக்குப் புரிய, இரண்டு பழங்களை எடுத்து அவன் கையில் போட்டாள்.

பழத்தை நகத்தால் விண்டு சுவைத்தான் அவன். உள்ளே பழம் சிகப்பாய் இருந்தது.

"இந்தா, போயிலை...'' அவன் எழுந்து போகுமுன் ஒரு சின்ன காம்புப் புகையிலையை அவள் மடியில் போட்டுவிட்டுப் போனான்.

அவன் தலை மறைந்த பிறகு இவள் மொணமொணத்தாள்.

"பெரிய பொவயலை கொடுத்திட்டாரு! பைசா பெறாத பொவயலை கொடுத்திட்டு இருவது பைசா பளம் தின்னுட்டுப் போறதைப் பாரு... தூ! இன்னும் போணியே ஆவலை, அதுக்குள்ளாற இவனுக்கு ஆயிப்போச்சி! அவன் பேதிலே போக!'' அவள் காறித் துப்பினாள்.

டிரைவர் வந்துவிட்டான், டிக்கியில் டின்னை வைத்துவிட்டு முன்னால் ஏற வந்தான்.

அவளுக்குத் திடீரென்று இந்தக் கொய்யாப் பழக்காரி யாரிடம் போணி செய்கிறாள் என்று பார்க்க ஆவலுண்டானது.

''வீட்டிலே முட்டை இல்லே போலிருக்குது. போய் ஆறு வாங்கிட்டு வாயேன்...'' பணத்தைக் கொடுத்து டிரைவரை மீண்டும் அனுப்பினாள்.

கொய்யாப் பழக்காரி இப்போது கடையை நன்றாய்-பரத்திவிட்டாள்.

ஒரு கிழவன் வந்தான். கூடவே... பேரனா? ''தாத்தா.... கொய்யாப்பளம்!'' என்று பையன் சிணுங்க, கிழவன் குந்தி உட்கார்ந்து பழக்காரியிடம் பேரம் பேசினான்.

''ஓலை கட்டின பளம்... ரூபாய்க்கு ஆறு! ஒரே விலை!'' அவள் கராறாய்ப் பேசினாள்.

''அங்கங்க பத்து கொடுக்கறாங்க! இன்னா நீ!''

''அப்ப அங்கியே போய் வாங்கிக்க! இங்க ஒரே விலை... ஏளு வரும்!''

கிழவன் ஒன்பது பழம் பொறுக்கிப் பையில் போட்டு ஒரு ரூபாயை நீட்டினான்.

கொய்யாப்பழக்காரிக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஏளு பளம்தான்னு நா சொல்றேன்... ஒம்பது எடுத்தா எப்படி? போடுய்யா கீளே!'' கையை நீட்டி பழங்கள் கொண்ட பையைப் பிடித்தாள்.

''அடப்போம்மே! ஒன் பளம் இல்லாட்டா வேற கெடைக்காதா என்ன? வாடா தம்பி!'' ரோஷம் வந்து பழங்களைக் கொட்டிவிட்டுக் கிழவன் கிளம்பிவிட்டான்.

போணி ஆவதற்குமுன் அபசகுணம் மாதிரி ஆகிறதே என்று கூடைக்காரிக்கும் கோபமான கோபம்.

முட்டைகளுடன் டிரைவர் வந்துவிட்டான்.

''போணி பண்ணத் துப்பில்லாததுங்கள்ளாம் கடைக்கு வந்திடுதுங்க... மானங்கெட்டதுங்க!'' அவள் ஆக்ரோஷமாக வசை பாடுகையில் ஒரு இளைஞன் அவளிடம் வந்து நின்றான்.

போணி ஆகப் போகிறதா? என்ன சொல்லி டிரைவரை நிறுத்தி வைக்கலாம்?

''பச்சை மொளகாய், இஞ்சி இல்லேன்னாங்க... போய் இருபது காசுக்கு வாங்கி வா!''

டிரைவருக்கு நினைத்துநினைத்து அவள் வேலை சொல்வது கோபத்தை எழுப்பியது. திறந்த கதவைப் படீரென ஓங்கிச் சாத்திவிட்டுப் போனான்.

''என்னம்மா, பழம் எப்படி?''

கூடைக்காரி இன்னும் கோபம் தணியாத நிலையிலேயே இருக்கிறாள். ''ரூபாய்க்கு ஆறு! வேணும்னா கை வை!''

''எட்டு வருமாம்மா?'' என்று கேட்டுக்கொண்டே அந்த இளைஞன் பழங்களில் கையை வைக்கவும் அவள் சீறினாள்.

''தொடதய்யா! வெலையக் கேக்க வேண்டியீது. பழங்களைப் புரட்ட வேண்டியது. அப்புறம் வேணாங்கறது! காசை வெச்சிட்டுத் தொடு! இன்னும் போணி ஆவலை.... அதுக்குள்ளாற தொடாதேனா புரியாது?''

கொஞ்சம் 'டீக்'காக உடுத்தி, படித்தவன் மாதிரி தோற்றமளித்த இளைஞனுக்கு முகத்தில் அறைந்தாற்போல ஆகிவிட்டது. ''வார்த்தையை அளந்து பேசும்மா! விலை கொடுக்காமலா உன் பழத்தை எடுக்கப்போறேன்? மரியாதை இல்லாத பேச்சு எங்கிட்டே வாணாம்! ஆமாம்!'' கையை உதறிக்கொண்டு எழுந்து நடந்து போனான்.

அந்த வாடிக்கையும் போய்விட்டது. இவள் எப்போது போணி பண்ணி, எப்போது வியாபாரத்தை முடிக்கப் போகிறாள்?

அவளுக்குப் பாவமாக இருந்தது.

பச்சை மிளகாய் வாங்கிக்கொண்டு வந்த டிரைவர் அவளிடம் பேசாமலேயே இருக்கையில் அமர்ந்து, ''வீட்டுக்குத்தானே?'' என்றும் கேட்டுவிட்டு வண்டியைக் கிளப்பிவிட்டான்.

கூடைக்காரி உரத்த குரலில் யாரையோ 'பேமானிப்பசங்க! ராஸ்கோல்!'' என்று திட்டுவது அவளுக்குக் கேட்டது.

யாரைத் திட்டுகிறாள்?

அவள் குடிகாரக் கணவனை?

கடன் கொடுத்த புகையிலைப் பையனை?

போணி செய்யாமல் போன நபர்களை?

கூடைக்காரிக்கு எப்போது போணி ஆகும் என்ற கவலை அவள் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

# என்னைச் செதுக்கிய சிற்பிகள்

• தி.க. சிவசங்கரன்



ஒரு தமிழன் என்ற முறையிலும், 77 வயதான எழுத்தாளன் என்ற அளவிலும், 52 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்த் திறனாய்வுத்துறையில் இயங்கி வருபவன் என்ற வகையிலும், எல்லாவற்றுக்கும் மேலாக, ஓர் இந்தியன் என்ற நிலையிலும், என்னைச் செதுக்கிய சிற்பிகள் பட்டியல் வெகு நீளமானது! உலகளாவியது!...

எனினும், அவர்களில் நால்வர் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவர்கள் யார்?

1. மகாகவி பாரதியார்
2. புரட்சிக்கவி பாரதிதாசன்
3. 'மணிக்கொடி' எனும் மறுமலர்ச்சி இதழின் மூலவர் வ.ரா. (வ.ராமசாமி)
4. 'ஜனசக்தி' எனும் பொதுவுடமை இதழின் ஆசிரியர் - தோழர் ப.ஜீவானந்தம்.



இந்த நால்வரின் வாழ்வும் பணிகளும், தத்துவமும் நடைமுறையும், இன்றளவும் எனக்குக் கலங்கரை விளக்கமாய் வழிகாட்டுகின்றன.







1925 மார்ச்சு 30இல், திருநெல்வேலியில் பிறந்த நான், மிக இளம் வயது முதல் (9-10 வயதுப் பருவத்தில்) தேசவிடுதலை இயக்கத்தால் ஈர்க்கப்பெற்றேன். அதற்கான விதைகளை விதைத்தவர், மகாகவி பாரதியார்! மிக முக்கியமாக, அவரது தேசிய கீதங்கள்!

அப்போது, காந்தியடிகளின் தலைமையில், இந்திய நாடெங்கும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கு எதிரான நமது மக்களின் சுதந்திரப் போராட்டம், காட்டுத் தீ போலப் பரவிய காலம்! வீட்டுக்கு வீடு, விடுதலை வேட்கை மூண்டெழுந்த காலம்! நாட்டின் சகல பகுதி மக்களும், அடிமைத் தளைகளை அறுத்தெறியத் திரண்டு நின்ற காலம்! மகாகவி பாரதி, 1921-இல் அமரர் ஆகி விட்டாலும், 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரம் தலைமையில், நெல்லை மாவட்டத்தில், அதன் தலைநகரான நெல்லையில் விடுதலை வேள்வியில், அலை அலையாக, அறப்போராட்டங்களில் திரள் திரளாக, தேச பக்தர்கள் ஈடுபட்டுச் சிறைகளை நிரப்பிய காலம்! புரட்சி வீரன் பகத்சிங்கும், அவரது தோழர்களும், தூக்கு மேடையில் தமது இன்னுயிரை ஈந்து, தியாகத் திருவிளக்குகளாக ஒளி வீசிய காலம்! அது மிகக் கொந்தளிப்பான காலம்!

இந்தக் காலகட்டத்தில், எங்கள் வீதி வழியே பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டு, தேசபக்தர்கள் ஊர்வலமாக அணி வகுத்துச் செல்வர். அவர்களது வீறுமிக்க பாடல்கள் ஒவ்வொன்றும், என் இளம் இதயத்தில், இனம் புரியாத எழுச்சியையும் கிளர்ச்சியையும் தூண்டிவிட்டன. அன்று முதல், பாரதி பாடல்களைப் பயின்றேன். பள்ளி வாழ்க்கையிலும், கல்லூரி வாழ்க்கையிலும், பாரதியின் எழுத்துக்களையும் இயக்கத்தையும் மேன்மேலும் நூல்கள் வாயிலாகவும், சொற்பொழிவுகள் - கூட்டங்கள் வாயிலாகவும், அறியத் தொடங்கினேன். அந்தக் கல்வி இன்றளவும் தொடர்கிறது! இனியும் தொடரும்!

'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் பாரதி தத்துவத்தின் - வாழ்க்கை நெறியின் மகத்துவத்தைத் தமிழ் மக்களுக்குத் தமது வாழ்நாள் எல்லாம் வலியுறுத்தியவர்கள், பாரதிதாசனும், வ.ரா.வும், ஜீவாவும். எனவே தான், என்னைச் செதுக்கிய சிற்பிகளின் முன்னணி வரிசையில் அவர்கள் இடம் பெற்றுள்ளனர். இம்மூவரது பேச்சும், எழுத்தும், வாழ்வும், பணிகளும் இவர்கள் மகாகவியின் மெய்யான வழித்தோன்றல்கள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

1941-ஆம் ஆண்டில் கல்லூரியில் அடியெடுத்து வைத்தபோது, பாரதிதாசன், வ.ரா. ஆகியோரின் படைப்புக்களுடன் எனக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. 1947-ஆம் ஆண்டு அக்டோபர் 13-இல் எட்டயபுரத்தில் பாரதிமணி மண்டபத் திறப்பு விழாவில், "பாரதிவழி" எனும் தலைப்பில் ஜீவா நிகழ்த்திய ஒரு மணி நேரச் சொற்பொழிவைக் கேட்ட பிறகு, அவரது சீடர்களில் ஒருவனாகி விட்டேன்! 'ஜனசக்தி' ஆசிரியர் என்ற அளவில் மட்டுமின்றி, பாரதியின் புரட்சிகரத் தத்துவத்தை, அருமை பெருமைகளைத் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் பரப்பிய ஜீவாவை நேசித்தது போலவே, நேரடிப் பழக்கம் இல்லாவிட்டாலும், 'மணிக்கொடி' ஆசிரியர் வ.ரா.வின் 'மகாகவி பாரதியார்' என்னும் வாழ்க்கை வரலாறும், அவரது கட்டுரைகளும், பிற படைப்புக்களும், இன்றளவும் எனக்கு உத்வேகம் ஊட்டி வருகின்றன. வ.ரா.வின் 'மழையும் புயலும்', 'நடைச்சித்திரம்' மற்றும் பல நூல்களை, 1941-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிப் படித்தேன். அவரது 'சுந்தரி', 'கோதைத்தீவு', 'தமிழ்ப் பெரியார்கள்' எனும் படைப்புகள், மிகவும் குறிப்பிடத்தக்கன. தமிழும், தமிழ் மக்களும், தமிழ்நாடும் எல்லாவகையிலும் மறுமலர்ச்சி பெற வேண்டும், பாரதி பாதையில் தமிழகத்தில் ஒரு புது யுகத்தைக் காண வேண்டும் எனும் சிந்தனையின் வரி வடிவங்களே, வ.ரா.வின் எழுத்துக்கள் எனலாம். (வ.ரா.தோற்றம் 1889 மறைவு 1951)

1941-ஆம் ஆண்டில், பாரதிதாசன் கவிதைகள் முதற்தொகுப்பை விலைக்கு வாங்கினேன். அத்தொகுப்பில் உள்ள ஒவ்வொரு கவிதையும், "சொல்புதிது, பொருள் புதிது, சுவை புதிது" எனும் பாரதியின் மணி மொழிக்குச் சான்றாக விளங்குகின்றன. பின்னர்





பாரதிதாசன் கவிதைகளின் இதர தொகுப்புக்களையும் ஆவலுடன் படித்தேன். "அழகின் சிரிப்பு', 'குடும்ப விளக்கு', 'பாண்டியன் பரிசு' முதலிய நூல்கள் அவரது படைப்பாற்றலின் சிறப்புக்குச் சான்றாகும்.

*"எங்கள் வாழ்வும்*
*எங்கள் வளமும்*
*மங்காத தமிழ் என்று*
*சங்கே முழங்கு!"*

என்னும் பாரதிதாசனின் வரிகள் தமிழ் நெஞ்சம் படைத்த ஒவ்வொரு தமிழனின் இதய ஒலியாகும். தன்மானம், பகுத்தறிவு, சமநீதி, சமுதாய முன்னேற்றம், மொழிப் பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று இவற்றின் தலை சிறந்த அடை யாளமாக விளங்கிய பாரதிதாசன், 29.4.1891-இல் தோன்றி, 21.4.1964 -இல் மறைந்தார். 73 ஆண்டுகள் நம்மிடையே வாழ்ந்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

பாரதிதாசனின் ஆளுமை, பன்முகம் கொண்டது. எனினும், புதுமைப்பித்தன் கூறியது போல, "மகாகவி பாரதி நமக்கு விட்டுச் சென்ற மிக முக்கிய சொத்துக்களில் ஒன்று, பாரதிதாசன்" என்பதில் எள் அளவும் ஐயமில்லை. பாரதிதாசன் ஆளுமையைப்பற்றி, இன்னும் ஆழமான, விரிவான, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அமைந்த ஆய்வுகள் தேவை. "தமிழ்த் தேசியத்தின் தலைசிறந்த புரட்சிக்கவி" என்று அவரை வருணித்தால், அதில் தவறில்லை.

தோழர் ஜீவாவைப்பற்றி - அவரது பன்முகச் சாதனைகள் பற்றி விரிவாக எழுத இங்கு இடமில்லை. எனினும், பாரதி, பாரதிதாசன் மரபை, மார்க்சியக் கண்ணோட்டத்தில் வளர்த் தெடுத்த தமிழகப் பொது உடமை இயக்கத் தலைவர், உன்னதமான சர்வதேசியவாதி தமிழ் அறிஞர் என்று தயங்காமல் குறிப்பிடலாம். மணிவிழாக் காணுமுன்னர் 18.1.1963-இல் மறைந்தார். கவிஞர், 'ஜனசக்தி' ஆசிரியர் ஜீவா... அவரைப் பாரதிதாசன் சொற்களில், இவ்வாறு வருணிக்கலாம்.

*''புதுநெறி காட்டிய புலவன்;*
*புதிய அறம் பாடவந்த*
*அறிஞன் - நாட்டிற்*
*படரும் சாதிப் படைக்கு*
*மருந்து!*
*மண்டும் மதங்கள் அண்டா*
*நெருப்பவன்;*
*அயலார் எதிர்ப்புக்*
*கணையா விளக்கவன்!''*

மகாகவி பாரதியைப் பற்றி, 1946-இல் திருச்சி வானொலியில் பாரதிதாசன் பாடிய இவ்வரிகள், பாரதியின் வழியைத் தமிழகத்தில் தமது இறுதி மூச்சுவரை பரப்புவதில் முனைப்புடன் ஈடுபட்ட புரட்சிப் புயல் ஜீவாவுக்கும் பொருந்தும்...

பாரதியும், பாரதிதாசனும், வ.ரா.வும், ஜீவாவும் என்னைச் செதுக்கிய சிற்பிகள் மட்டும் அல்லர். தமிழகத்தில் எண்ணற்ற படைப்பாளிகளை, கவிஞர்களை, கலைஞர்களை, கலை இலக்கிய ரசிகர்களை, திறனாய்வாளர்களை, கல்வி யாளர்களை, பொதுவாழ்வுத் தொண்டர்களைச் செதுக்கிய சிற்பிகளும் ஆவர்.

இந்த நால்வரின் படைப்புகளில் மிகச் சிறந்த அழகியல், சமுதாய அறிவியல், அறவியல் ஆகிய அம்சங்கள், இணைந்து பிணைந் துள்ளன. எனவே, இவர்களின் வாழ்வும் பணியும், தாம் என்றென்றும் போற்றத்தக்கன, பின்பற்றத்தக்கன.

நுகர்வுக் கலாச்சார மோகமும், சாதிவெறி, மதவெறி, மொழிவெறி, இனவெறி, அதிகார வெறி மற்றும் பல கயமைப்பண்புகளும், போக்குகளும் தமிழகத்திலும் இந்தியாவிலும் மேலோங்கி நிற்கும் இவ்வேளையில், நாட்டின் சுதந்திரத்திற்கும், இறையாண் மைக்கும், பல்வேறு வடிவங்களில் அபாயம் சூழ்ந்துள்ள இச்சமயத்தில், பாரதி - பாரதிதாசன் - வ.ரா. -ஜீவா ஆகியோரின் புரட்சிகரச் சிந்தனைகளும், தன்னலமற்ற தமிழ்த் தொண்டும், உலகு தழுவிய மனித நேயமும், மனிதகுல முன்னேற்ற



இலட்சியங்களும், புவியெங்கும் பரந்து கிடக்கும் எட்டுக்கோடித் தமிழ் மக்களுக்கு, ஒரு புதிய விடியலைத்தரும் என்பது உறுதி.



# புகழ் வேட்டை

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும்' இந் நல்லுலகத்தைப் பண்டுதொட்டு ஆண்டவர் மூவேந்தர் எனப்படுவர். சேர, சோழ, பாண்டியர் என்று கூறப்பெறும் இவர்களைப் பற்றிப் பண்டை இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. இம் மூவரும் சேர்ந்து ஆட்சி புரிந்த இடத்தின் பரப்புத்தான் யாது என்று நினைக்கிறீர்கள்? வடக்கே வேங்கடமலை (தற்பொழுது திருப்பதி என்று கூறும் மலையே) தெற்கே கன்னியாகுமரி; மேற்கும் கிழக்கும் கடல்கள், வடக்கிலிருந்து தெற்கே ஏறக்குறைய 800 கிலோ மீட்டர்; கிழக்கிலிருந்து மேற்கே அகன்ற இடத்தில் 650 கிலோ மீட்டர், குறுகிய இடத்தில் சில அடிகள் (குமரி முனையில்). இந்த அளவு குறுகியநிலத்தை ஆட்சி செய்தவர் மூவர். 'மண்திணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர், முரசு முழங்கு தானை மூவர்' (புறம் 35) என்ற புறப்பாடல் இதற்குச் சான்று. இந்த அளவுடைய நாட்டை மூவர் ஆட்சி செய்தாலும், இவர்கள் ஒவ்வொருவரும் தத்தமைக் கூறிக்கொள்ளும் பொழுது பேரரசர் களாகவே (சக்கரவர்த்திகள்) கூறிக்கொண்டனர். இவ்வரசர்கள் ஒரோவழி இதை மறந்திருப்பினும்,உழை இருப்போர், அவர்கட்கு நினைவூட்டிக்கொண்டே இருந்தனர். மேலே கூறப்பெற்ற பாடலின் அடுத்த அடியே போதுமானது 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை' வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் பாடிய பாடலாகும். அது, 'முரசு முழங்கு தானை மூவருள்ளும் அரசெனப் படுவது நினதே பெரும!' என்று கூறிய புலவர் பெருமான் இன்னும் ஒருபடி மேலே சென்று, 'நாடு எனப்படுவது நினதே' (35) என்றும் கூறிவிடுகிறார். தமிழ்நாட்டை மூவர் ஆட்சி செய்தாலும், 'அரசன் ' என்று கூறினால் சோழனைத் தான் குறிக்குமாம்! நாடு என்று கூறினால், 'சோழ நாட்டை' த்தான் குறிக்குமாம்!

இன்னுஞ் சில சந்தர்ப்பங்களில் இவர்கள் ஆளும் பகுதிகளை 'உலகம்' என்று கூடக் குறிப்பிட்டனர். 'பிரமனார்' என்ற புலவர் 'பொதுமை சுட்டிய மூவர் உலகமும், பொதுமை இன்றி ஆண்டிசினோர்க்கும்' (புறம் 357) என்று கூறிய அடிகள் ஆழ்ந்து நோக்கற்குரியவை. உலகம் என்ற சொல்லால் நாட்டின் ஒரு பகுதியைச் சுட்டிக்கூறுதல் அக்கால மரபுதான். ''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்று தொல்காப்பியம் கூறுகிறது என்றாலும் 'மூவர் உலகம்' என்று புறப்பாடல் புலவர் கூறும் பொழுது, அவர் இவர்களுடைய நாட்டின் பரப்பை ஓரளவு மிகுதிப்படுத்தியே கூறுகிறார் என்பது விளங்கும். ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் இம்மூவருள் வலிமை பெற்ற ஒருவன் ஏனைய இருவரையும் அடக்கி ஆளுதலும் உண்டு. இன்னும் கூறப்போனால், இவர்களுள் ஒவ்வொருவனும் ஏனையோரை அடிப்படுத்தலையே தன் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டிருந்தான். 'பிரமனார்' 357 ஆம் பாடலில் 'பொதுமை இன்றி ஆண்டிசினோர்க்கும்' என்று கூறுவது இவ்வாறு

□ பேரா. அ.ச. ஞானசம்பந்தன்

ஒரோவழி ஏனைய இருவரையும் வெற்றி கண்ட ஒருவனையே குறிக்கிறது.

கரிகாற் பெருவளத்தான் போன்ற ஒரு சிலர் தமிழ்நாட்டின் ,எல்லையைத் தாண்டிச் சென்று, பிற நாடுகளிலும் வெற்றிகண்டார்களாயினும், பெரும்பான்மையான தமிழ் மன்னர்கள் வெற்றிகண்டது பிற தமிழ் மன்னர்களையே யாம். தமிழனை மற்றொரு தமிழன் போரிட்டுத் தொலைப்பதைப் பெருவெற்றியாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். அந்நாளில் பெரும்பான்மை-யான தமிழர். சில சந்தர்ப்பங்களில் இவர்களுடைய போர் அவ்வளவில் நின்றுவிடாமல், யாதொரு தீங்கும் புரியாத மக்களையும் வருத்தத் தொடங்கிற்று. வெல்லப்பட்டவர் நாட்டை (தமிழ்நாட்டின் மற்றொரு பகுதிதான்) அழித்து நெருப்பூட்டல் ஒரு வழக்கம்

" கரும்பு அல்லது காடு அறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நல்நாடு ஒள் எரி ஊட்டினை" (புறம் 16)

(கரும்பு விளையும் விளை நிலங்களை எல்லாம் நெருப் பூட்டினாய்) என வரும் அடிகள் நம் சிந்தனையைக் கிளறாமல் இருக்க முடியாது. இவ்வாறு இவர்கள் வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடும் பொழுதுகூட, தோற்ற வரைப் பற்றி நினைத்த தில்லையா? அவர்களும் தம்மைப் போன்ற மொழி பேசும் நாகரிகம் உடையவர் என்ற எண்ணம் இவ்வெற்றி வீரர்கட்குத் தோன்றி இராதா? போரில்லாத நாட்கள் மிகவும் குறைவு என்று கூறத்தக்க முறையில் போரிட்டு மடியக் காரணம் யாது? படை வைத்திருந்தமையின் வாளாவிருக்க முடியாமல் ஓயாது போரிட்டனரா? புறப்பாடல்களை ஒருமுறை புரட்டினவருங்கூட ஓர் உண்மையை அறியாமல் இருத்தல் முடியாது. ஏனைய எத்துணைக் காரணங்கள் இருப்பினும், இவர்கள் ஓயாமல் பூசலிட்டதற்குத் தலையாய காரணம் ஒன்று உண்டு. மனித மனத்தின் ஆழத்தில் காணப்பெறும் இரண்டு உணர்ச்சிகளே இதன் காரணம் என்று நினைய வேண்டியுள்ளது. இயற்கையாகத் தோன்றும் வெறுப்பு உணர்ச்சி ஒன்று. ஏனையது புகழ் ஈட்டவேண்டும் என்று தோன்றும் உணர்ச்சி. இவை இரண்டும் கூடின விடத்து விளைவது போரேயன்றி, வேறு யாதாக இருத்தல் இயலும்?



ஓவியம் : மாருதி

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீ இத் தாம் மாய்ந் தனரே"
(புறம் 165)

(நிலைபேறில்லாத இந்த உலகில் புகழை நிலைநாட்டிப் பலர் மாய்ந்தனர்)

**போரிடுதல் ஒன்றுதானா புகழை வளர்க்கும்? இது தவிர இவ்வரசர் பெருமக்கள் செய்யத்தக்க நற்செயல்கள் வேறு இல்லையா?**

"சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்று இதழ் அலரின் நிரை கண்டு அன்ன
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணும் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப..." (புறம் 27)

(தாமரையின் மலர்களைப் போலப் பலரும் ஒன்றாகவே காட்சியளிக்கும் இவ்வுலகில், பிறரால் பாடப்பெறும் சிறப்புடையோர் சிலரே! பலர் பிறரால் புகழப்படாமல் இறந்து போகின்றனர். புலவரால் புகழ் பெறும் சிறப்புடையோர் வானுலகமும் பெறுவர்)

இத்தமிழருடைய புகழ்ப் பைத்தியம் மிகவும் அழகாக இருந்தது என்பதைக் காட்ட நூற்றுக்கணக்கான உதாரணங்கள் தர இயலும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று" (குறள் 236)

என்று குறளாசிரியர் கட்டளை இடுமுன்பே இம்மக்கள் தம் வாணாளில் பெறவேண்டிய ஒரு குறிக்கோளாக இதனைக் கொண்டிருந்தனர் என்பதை நன்கு அறிய முடிகிறது. இலக்கணமும் இதற்குப் பெரியதோர் இடந்தந்து, பாடாண் திணை என்றதொரு திணையே வகுத்துவிட்டது.

மனிதனாகப் பிறந்தவன் புகழ்ஈட்டியே தீரவேண்டும் என்றால், அதற்குரிய வழிகள் யாவை என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? வழிகள் பலவாக இருக்கலாம். எந்த வழியை மேற்கொண்டால் புகழ்பேசுகிறவர்கள் எளிமையாகப் புகழ்வார்கள்? அந்த வழியே சிறந்த வழி என்று நினைத்திருத்தல் கூடும் அக்கால மக்கள். மேலும், புகழ் ஈட்டும் வழிமூலமாகவே தம்முடைய மனக்கருத்தையும் முற்றுப்பெறச் செய்யக்கூடுமாயின், அது மிகவும் நலமானதாகப் பட்டிருக்கும். இயற்கையாக மனத்தில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன்மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது, யாரை வெறுக்கிறோமோ அவர் மேல் போர் தொடுத்து வெற்றிகாண முடிகிறது. இரண்டாவது, அவ்வாறு பெறும் வெற்றி பிறர் புகழவும் காரணமாகிறது. இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன்பெறக் கூடுமாயின், வன்மை மிக்க அரசர்கள் போர் என்ற வழியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அந்த அரசர்கள் புரியும் இந்தப் போர்களைத் தம்முடைய நாட்டு, மக்களின் நலத்திற்காகவே செய்ததாகவும் கூறினர். அம்மக்களும் இதனை நம்பினர்.

பிறருடைய நாட்டின்மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது. தற்காப்புச் செய்யுமுறையில் போரிடுதல் அன்றியும், பிறர்மேல் படைகொண்டு வலுப்போருக்குப் போதலும் அறமெனவே கருதப்பெற்றது. புகழ் வேட்டையாடப் பிறருடைய நிலத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாகக் கொண்டனர் அற்றை நாள் தமிழர். எவ்வளவு பெரிய அரசனும் இதற்கு விலக்காமாறு இல்லை. மேலும், ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டுவிட்டால் அது குடிப்பழக்கம்போல் ஆகிவிடும். அவ்வெற்றி தந்த வெறி மேலும் மேலும் போர் செய்யத்தூண்டும். தாம் இவ்வாறு போர் செய்து அதனால் பெறுவதாகக் கருதிய புகழ் உண்மையானதா என்று ஆராய அவர்கள் முற்படவில்லை.

அரசராகத் தாம் பிறந்ததே போர் செய்யத்தான் என்று கூடப் பலர் கருதிவிட்டனர். இத்தகைய ஒரு நிலையில் அறிவுடைப் பெருமக்கள் சிலர் மனத்திலாதல் ஓர் ஐயம் தோன்றி இருத்தல் வேண்டும். கேவலம் போரிடுதல் ஒன்றுதானா புகழை வளர்க்கும்? இது தவிர இவ்வரசர் பெருமக்கள் செய்யத்தக்க நற்செயல்கள் வேறு இல்லையா? இவ்வாறு சிலர் தம்மைத்தாமே

கேட்டுக்கொண்டு பெற்ற விடைகளும் புறப்பாடல் முதலியவற்றில் காணக் கிடக்கின்றன. மாங்குடி மருதனார் என்ற புலவர் தம்முடைய அரசனுக்குண்டான போர்வெறியைத் தணிக்க மதுரைக் காஞ்சி என்றதொரு நூலையே (அவ்வளவு பெரியபாடல் அது) இயற்றினார் என்றால், பழந்தமிழர் போர் வெறி என்ற பாலைவனத்தில் இஃது ஒரு நீர் ஊற்றுப் போன்று காணப்படுகிறது. 782 வரிகளையுடைய அப்பாடலில், அப் புலவர், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுக்கு நல்லதோர் அறிவுரை வழங்குகிறார்.

**"பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந்து ஏத்த**
**விலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**மணங்கமழ் தேறல் மடுப்பநாளும்**
**மகிழ்ந்து இனிது உறைமதி பெரும**
**வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே"**

(மதுரைக் காஞ்சி 778-82)

(உனக்கிருக்கும் வாழ்நாள் அளவுடையதாகலின் நல்லமுறையில் உண்டு உடுத்து மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக)

இதே புலவர் இதே மன்னனைப் பாடும் புறப்பாட்டு ஒன்றில் இன்னும் ஒருபடிமேலே செல்கிறார்.

**"ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**தண் கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து**
**ஆங்கினது ஒழுகுமதி பெரும ஆங்கது**
**வல்லுநர் வாழ்ந்தோர் என்ப...."** (புறம் 24)

(இவ்வாறு, இன்புற்று வாழ்வதே வாழ்க்கை எனப்படும் என்று அவர் கூறும் பொழுதுதான், இவ்வாறு செய்யாதவர்களுடைய வாழ்வு எவ்வளவு பயனற்றது என்பதையும் அறிய முடிகிறது.)

போர் செய்தலையே தம் வாணாளின் குறிக்கோளாகக் கொண்ட இம்மன்னர்கள் புகழடைவதற்கு மேற்கொண்ட வழி சற்று விந்தையானதே. இதனைக் காட்டிலும் வேறு வழியில் வாழ்வதால் நல்லதொரு புகழை அடையமுடியும் என இவர்கள் ஏனோ நினைக்கவில்லை. ஆனால், இப்பேரரசர்கள் வாழ்ந்த அதே காலத்தில் சில சிற்றரசர்களும் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்க்கையில் மேற்கொண்ட குறிக்கோள் முற்றிலும் வேறானதாகக் காணப்படுகிறது. கடை எழு வள்ளல்களைப் பற்றியும் இப்புறப்பாடல் முதலியன பேசுகின்றன. அவர்களும் புகழ்படைத்தவர்களாகவே உள்ளனர். என்றாலும், என்ன வேற்றுமை? புகழ் என்ற ஒன்றை அடைய முற்றிலும் வேறுபட்ட இரு வழிகளைக் கையாண்டுள்ளனர். யாருடைய வழி சிறந்தது? போர் வெறி கொண்டு நாட்டிற்கு நன்மை என்ற பெயரால் தமிழர்களுடைய குருதியைத் தமிழ் மண்ணில் ஆறாகப் பெருகவிட்டுத் தம்முடைய மக்களும் தோற்ற மக்களும் ஒருசேர அவதிப்படச் செய்த இப்போர் வெறியர்களும் புகழடைந்து விட்டதாகச் செறுக்குற்றிருந்தனர். பிறருக்குத் தீங்கு புரிவதைக் கனவிலும் கருதாதவர்களாய் வாழ்ந்த அவ்வள்ளல்களும் புகழ்பெற்றனர். அறிவின் துணை கொண்டு புகழ் தேட முயன்ற இப்போர் வெறியர்கள் எங்கே? உணர்வின் துணைகொண்டு கொடை என்ற சிறப்பால் புகழ்படைத்த வள்ளல்கள் எங்கே? இவ்விரு சாராரும் பெற்றது ஒரே புகழ்தான் என்றாலும், இருவரும் கையாண்ட வழிகள்

**அறிவின் துணை கொண்டு புகழ் தேட முயன்ற இப்போர் வெறியர்கள் எங்கே? உணர்வின் துணைகொண்டு கொடை என்ற சிறப்பால் புகழ்படைத்த வள்ளல்கள் எங்கே?**

எவ்வளவு மாறானவை? அடையும் பயன் ஒன்றேயாயினும், மேற்கொள்ளும் வழி வேறுபாட்டால் இருவரும் இருவேறு துருவங்கட்குச் சென்றுவிட்டனர்.

அறிவு வழி மேற்கொண்ட இவர்கள் புகழ் சிறந்ததா? அன்றி, அன்புவழி மேற்கொண்ட அவர்கள் புகழ் சிறந்ததா? அறிவு அறிவு என்று கூவி, அறிவிற்கு வணக்கம் செலுத்தும் தற்காலத் தமிழ்நாடு ஒருவேளை இப்போர் வெறியர்களைப் பாராட்ட முன்வரலாம். ஆனால், உண்மையில் இவர்கள் புகழ் நிலைநின்றதா? இது நன்கு ஆராயற்பாலது.



# குமாரவனம்

தாகத்தால் தொண்டை வறண்டது. எச்சில் கூட்டி விழுங்குவதும் வறண்ட உதடுகளை நாக்கால் நனைத்துக் கொள்வதுமாக இருந்தான் இளன். குதிரையும் கடும் சோர்வின் காரணமாக மெதுவாக நடந்தது. சுற்றியும் வனப் பறவைகளின் ஒலியும் காற்றில் மரக்கிளைகள் உரசிக் கொள்கிற சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தன. எங்கோ ஒரு நீர்நிலை இருப்பது போல மின்னும். கண்கள் கூசும் அளவுக்கு நீர் அலைகள் நெளிவது போலத் தெரியும். சட்டென ஒரு நம்பிக்கை நெஞ்சில் துளிர்க்கும். உடல் வலியையும் அசதியையும் பொருட்படுத்தாமல் சில கணங்கள் வேக வேகமாக நடப்பான். எவ்வளவு தொலைவு நடந்தாலும் அந்த நீர்நிலையை அவனால் நெருங்க முடிவதில்லை. கண்பார்வையிலிருந்து அந்த நீர்நிலை திடுமென மறைந்துவிடும். மறுகணமே அளவுக்கு அதிகமான சோர்வு அவனை அழுத்தும்.

சட்டென வானில் சில கொக்குகள் பறப்பதைப் பார்த்தான். அவனுக்குள் மீண்டும் நம்பிக்கை சுரந்தது. கண்டிப்பாக அங்கு ஏதாவது குளமோ அல்லது ஏரியோ இருக்கக் கூடும் என நினைத்தான். எதிரில் நாலைந்து பெண்கள் நடந்து வந்தார்கள். குளித்து வரும் அடையாளம் அவர்களிடம் தென்பட்டது. சட்டென அவன் நம்பிக்கை மேலும் வலுப்பட்டது. அந்த நீர்நிலையின் இடத்தைப் பற்றி அவர்களிடம் கேட்க நினைத்தான். அந்தப் பெண்கள் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்து வேகவேகமாக அவனைக் கடந்து போன விதம் ஆச்சரியத்தைத் தந்தது. சலிப்புடன் தொடர்ந்து நடந்தான்.

முதலில் அடர்ந்த தோப்பொன்று தென்பட்டது. நுழைந்ததுமே குளிர்ந்த காற்றை உணர்ந்தான். உடல் சோர்வுக்கு அக்காற்று இதமாக இருந்தது. தோலாடைகளுடன் இரண்டு பெண்கள் மீண்டும் தென்பட்டார்கள். வேகமாக அவர்கள் கடந்துவிடும் முன்னால், அவர்கள் முன்னால், அவசரம் அவசரமாகச் சென்று "இங்கே குளம் எங்கே இருக்கிறது?" என்று கேட்டான். அப்பெண்கள் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் பார்வை அச்சத்தில் தத்தளித்தது. சட்டென அப்பார்வை ஒரு ஆணின் பார்வை போலத் தெரிந்தது. மறுகணமே தன் பிழைக்காகத் தன்னை நொந்து கொண்டான்.

*ஓவியம்* : வேதா

"இங்கே குளம் எங்கே இருக்கிறது?" இளன் மறுபடியும் கேட்டான். "இந்தப் பாதை முடியும் இடத்தில்".

உடனே அந்தப் பெண்கள் கிளம்பிப் போய்விட்டார்கள். "இரண்டு நாட்களாகத் தொடர் பயணம். குதிரையும் நானும் களைத்துப் போய்விட்டோம். எப்படியோ எங்கோ வழிதவறி விட்டது" என்று அவன் சொன்ன சொற்களை அவர்கள் காது கொடுத்துக் கேட்கவில்லை. சில மான்கள் சட்டென ஒரு பாதையிலிருந்து வெளிப்பட்டு பாதையைக் கடந்து மறுதிசையில் ஓடின. அப்போதுதான் சற்றே தள்ளி மரத்தடியில் சில நடுவயதுப் பெண்கள் சுள்ளிகள் சேகரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவர்கள் அவனையோ அக்குதிரையையோ திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அப்பெண்கள் தற்செயலாகவாவது அவன் பக்கம் திரும்பிப் பார்க்கக் கூடும் எனச் சில கணங்கள் தொடர்ந்து அங்கேயே நின்றிருந்தான். வனத்தில் யாரையுமே எதிர்கொள்ளாததைப் போல அவர்கள் தம் வேலையில் மூழ்கியிருந்தார்கள். சலிப்புடன் குதிரையின் கடிவாளத்தை இழுத்தபடி குளத்தை நோக்கி நடந்தான்.

நாலாபுறமும் விழுதுகள் இறங்கிய ஆலமரத்தின் அடியில் ஒரு குடில் தென்பட்டது. குடிலின் ஓரமாய் அழகான பூந்தோட்டம் தெரிந்தது. மறுபக்கம் திண்ணையில் ஒரு இளநங்கை முயல் குட்டிகளுக்குத் தழையை ஊட்டியபடியிருந்தாள். அந்தக் குடில் அழகான தவச்சாலை போலிருந்தது. எந்தக் கணமும் குடிலுக்குள்ளிருந்து வெண்தாடியுடன் ஒரு முனிவர் வெளிப்படக் கூடும் என்று நினைத்தான்.

சாலையில் இருபக்கங்களிலும் மரங்கள் அடர்ந்திருந்தன. இதமாக



□ பாவண்ணன்

வீசிய காற்று உடலைத் தழுவியதும் களைப்பு குறைந்த மாதிரி இருந்தது. எங்கு பார்த்தாலும். விதம்விதமான பறவைகள். ஒரு கிளையில் உட்கார்வதும் சில கணங்களுக்குப் பிறகு இறகுகளைப் படபடவென்று அடித்தபடி பறந்து மேலெழுவதும் வேகவேகமாகத் தரையில் இறங்கி அப்பாவி போல நாலுபுறமும் பார்த்துக் கீச்கீச்சென்று சத்தமிட்டன. நின்று அப்பறவைகளின் பாடலைக் கேட்க வேண்டும் போல இருந்தது. தண்ணீருக்கான தவிப்பு முன்னோக்கித் தள்ளியது. தண்ணீரை நினைத்ததுமே நெஞ்சு உலர்ந்தது. எச்சிலை மறுபடியும் கூட்டி விழுங்கினான்.

சட்டென்று புதரின் இடைவெளி யிலிருந்து ஏழெட்டுப் பெண்கள் வெளிப்பட்டார்கள். எல்லோருமே இடுப்பில் குடம் சுமந்திருந்தார்கள். வெற்றுக் குடங்கள். அவனைத் தாண்டி அதே திசையில் வேக வேகமாக நடந்ததைப் பார்த்த பிறகுதான் அவர்களும் குளத்துக்குத் தான் செல்கிறார்கள் போலும் என்று நினைத்தான். அவர்கள் அவனைக் கடந்த தருணத்தில் இனிய பூமணமொன்று கமழ்ந்தது. இதுவரை அறியாத் பூமணம். காலமெல்லாம் அந்த வாசத்தை நுகர்ந்தபடி இருக்கலாம் போலிருந்தது. அந்த வாசம் தன்னைவிட்டுத் தள்ளிப் போவதை பெரும் வேதனையாக உணர்ந்தான். அவர்களில் யாருமே ஏறிட்டுக் கூடப் பார்க்காமல் போனது ஏமாற்றத்தை யளித்தது.

குளத்தை நெருங்க நெருங்கக் குளிர்ந்த காற்று வீசியதை உணர்ந்தான். இனிய சாரல் போலிருந்தது காற்று. ஒரு பெரிய வெள்ளித்தட்டு போல வெயிலில் குளம் தகதகத்தது. துணியொன்று காற்றில் அலையலையாய் நெளிவதைப் போல அலைப்பரப்பு நெளிந்தது.

அவன் வேகமாக நடக்கத் தொடங்கினான். குளத்துத் தண்ணீரைக் கண்டதும் அவன் ஆவல் அதிகரித்தது. குதிரை அவனுக்கு இணையாக நடந்தது. பக்கவாட்டில் ஒரு பெண் கோடாலியால் விறகு பிளப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். இன்னொரு பக்கம் ஏழெட்டுப் பெண்கள் சேர்ந்து ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஒரு பெண் மண்ணைக் குழைத்துக் கொண்டிருந்தாள். மற்றொரு பெண் சுவரெழுப்பிக் கொண்டிருந்தாள். குடிசைக்கு மேல் வேய கிளைகளை அளவாக நறுக்கியபடி இருந்தாள் இன்னொருத்தி. தொலைவில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தாள் ஒரு மூதாட்டி. மற்றொரு பக்கத்தில் நிழலில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர் இளம்பெண்கள். அவர்கள் மாற்றி மாற்றி வீசிக் கொண்டிருந்த பந்து அந்தரத்திலேயே அலைபாய்வது போலிருந்தது. அவர்கள் அழகு அவனைச் சுண்டியிழுத்தது. ஒருகணம் தாகத்தை மறந்து அவர்களை உற்றுப் பார்த்தான். அவனது இருப்பால் சிறிதும் பாதிக்கப்படாதவர்களைப் போல அவர்கள் சுதந்திரமாக ஆடிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சிரிப்பும் துள்ளலும் அவனைப் படுத்தின.



கரையை நெருங்கினான். ஏராளமான கொக்குகள் பறந்தவண்ணமும் கூரையின் மீது இறங்கிய வண்ணமும் இருந்தன. எங்கெங்கும் ஏராளமான பெண்கள் குளித்தபடியும் விளை யாடியபடியும் இருந்தார்கள். பார்த்த இடமெங்கும் பெண் களைக் கண்டு அதிசயப்பட்டுப் போனான். தொலைவில் சில யானைகள் தெரிந்தன. அவற்றின் துதிக்கைகளைத் தடவியபடி பெண்கள் வந்தார்கள். அவற்றின் பிளிறலில் கொக்குகள் அஞ்சி வேறுபக்கம் பறந்தன. உடனே அந்தப் பெண்கள் அதட்டினார்கள். மறுகணமே அந்த யானைகள் அடங்கின. உப்பிய வயிற்றை ஆட்டிக் கொண்டு அவன் பின்னால் நடந்தன. குளத்தில் இறங்கித் தண்ணீர் குடித்தன.

எங்கெங்கும் பெண்களைப் பார்த்ததும் அவனுக்குள் குழப்பமும் அச்சமும் உருவாகின. நிகழ்பவை அனைத்தும் ஒருகணம் கனவோ எனத் தோன்றியது. வனத்துக்குள் நுழைந்த கணத்திலிருந்து பார்த்ததையும் பார்த்தவர்களையும் அவன் மனம் மீண்டும் அசைபோட்டது. அந்தக் கணம் வரை ஒரு ஆணைக் கூடத் தான் சந்திக்கவில்லை என்று நினைத்ததும் உடல்முழுக்க ஏதோ ஒரு பீதி பரவியது. இதயத்துடிப்பு அதிகரித்தது. உண்மையிலேயே அவர்கள் பெண்கள்தாமா அல்லது பெண்கள் உருவத்தில் இருக்கிற ஆண்களோ என்று தோன்றியது. திரும்பி உற்றுப் பார்த்தான். உண்மையிலேயே பெண்கள். அடர்ந்த செறிவான கருங்கூந்தல். செழிப்பான உடல்வாகு. சிரித்தபடி அவர்கள்

**"உண்மையைத்தான் சொல்கிறேன். குமார வனத்துக்குள் நுழையும் யாரும் மறுகணமே பெண்ணாகி விடுவார்கள். குமாரவனத்தில் ருத்ரனைத் தவிர எல்லாரும் பெண்கள்தாம்"**

தமக்குள் பேசிய உரையாடல்களின் குரல்கள் பெண்களின் குரல்களாகவே இருந்தன.

"அடியே மைத்ரி, பந்து எங்கே?" என்று ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் கேட்டாள். அந்த இளம்பெண் இன்னொரு பெண்ணின் கூடையில் ஒளித்து வைத்திருந்த பந்தைக் கொண்டுவந்து தந்தாள். ஒளித்து வைத்த பெண் அவளைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள். அதற்குள் இன்னொருத்தி ஓடிவந்து அப்பந்தைத் தட்டிவிட்டாள். உருண்டோடும் பந்தைப் பிடிக்க வேறொருத்தி ஓடினாள். அவள் பின்புறம் அவன் மனத்தைச் சஞ்சலத்துக்குள்ளாக்கியது. ஏக்கத்துடனும் அச்சத்துடனும் அவர்களைக் கடந்தான்.

குளம் மிகுந்த ஆரவாரமாகக் கிடந்தது. பல பெண்கள் குளத்துக்குள் இறங்கி ஆடிக் கொண்டிருந்தார்கள். அத்தனை பெண்கள் ஒருசேரச் சேர்ந்து குளிக்கிற காட்சியை அவன் வாழ்நாளிலேயே பார்த்ததில்லை. ஒவ்வொரு கணமும் 'வன் தடுமாற்றம் கூடுதலாகிக் கொண்டிருந்தது.

அந்த வனத்தை அவனால் புரிந்து கொள்ளவே இயலவில்லை. தனது இருப்பிடத்திலிருந்து சற்றே தொலைவில் இருக்கிற இடத்தில் எங்கெங்கும் பெண்களே நிறைந்த இப்படியொரு வனம் இருப்பது புதிய சங்கதியாக இருந்தது. தன் வனத்திலிருப்ப வர்களுக்கு இது தெரியாத சங்கதியா அல்லது தெரிந்தும் தன்னிடம் மறைத்துவிட்டார்களா என்று குழம்பினான். ஏதோ ஒரு கனவு கண்டதைப் போலிருந்தது. மெலிந்தும் உயர்ந்தும் குள்ளமாகவும் பருமனாகவும் பலவிதமான பெண்களே எங்கெங்கும் நிறைந்திருந்தார்கள். மரத்தடியில் பெண். குளக் கரையில் பெண். குடிசையில் பெண். பசுக்களை மேய்த்தபடியும் பெண். புதிராகவும் பீதியாகவும் உணர்ந்தான். தண்ணீரை அருந்திவிட்டு உடனே அந்த இடத்திலிருந்து நகர்ந்து விட வேண்டும் என்று உள்ளூர விரும்பினான். ஆனால் எங்கும் நகர்ந்துவிடாதபடி நிலத்தில் அழுத்தமாய் அவன் கால்கள் பதிந்திருக்க, கண்கள் பெண்கள் நடுவே அலைமோதிக் கிடந்தன.

கரையை நெருங்கினான். கரையோரம் ஒரு தென்னை விழுந்து கிடந்தது. அதில் உட்கார்ந்திருந்த பத்துப் பதினைந்து பெண்கள் கால்களைத் தண்ணீரில் தொங்க விட்டிருந்தார்கள். கைகளால் தண்ணீரை அள்ளி ஒருவர் மீது ஒருவர் அடித்துக் கொண்டிருந் தார்கள். நொடிக்கு நொடி அவர்கள் சிரிப்பொலி அதிகரித்தபடி இருந்தது. குளத்தில் கால் வைத்ததும் குளுமையில் உடல் சிலிர்த்தது. கரையோரத்தில் இருந்த ஒருத்தி "என்ன வேண்டும்?" என்று கேட்டாள். அக்குரலின் இனிமை அவனை மேலும் தடுமாற வைத்தது. அத்தனை இனிய பெண்குரலை அவன் அதுவரை கேட்டதே இல்லை. அவன் நாக்குக் குழற "தாகம். தண்ணீர் குடிக்கலாமா?" என்று கேட்டான். கூடவே குளத்துத் தண்ணீரைக் குடிக்க இந்தப் பெண்களின் அனுமதி எதற்கு என்கிற எண்ணமும் ஓடியது.

வாளிப்பான உடல்வாகு கொண்ட அப்பெண் "குடிக்கலாமே" என்று உடனேயே பதில் சொன்னாள். அவள் பதிலில் பரிவு தெரிந்தது. மறைமுகமாக கேலியும் கிண்டலும் பொதிந்திருப்பதாகவும் தோன்றியது. தண்ணீர் குடிக்காமல் அவள் முகத்தையே பார்த்தபடி நின்றிருந்தான் அவன். அதற்குள் தாகம் எடுத்தால் . தண்ணீர் குடிக்கத்தான் வேண்டும் என்று மறுபடியும் ஒருமுறை சொன்னாள் அப்பெண். அவள் உதடுகளின் அசைவையே அவன் உற்றுப் பார்த்தபடி இருந்தான். அவன் தடுமாறிக் கொண்டிருக்கும் தருணத்தில் குளத்தில் இறங்கிய குதிரை தாகம் தீருமட்டும் தண்ணீர் குடித்துவிட்டு நிமிர்ந்து நிம்மதியாக மூச்சுவிட்டது.

"என் பெயர் இளன். பக்கத்து வனத்தில் சிராத்த தேவனின் மகன். குதிரையேறிச் சுற்றும் போது வழி தவறி விட்டதில் நிறைய அலைந்துவிட்டேன்"

அப்பெண்கள் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். எதுவும் பேச்சில்லை. அவன் குனிந்து வேட்கை தீர தண்ணீரை அள்ளிக் குடித்தான். அத்தண்ணீரின் சுவை ஆச்சரியமாக இருந்தது. அதுவரை அப்படி ஒரு சுவையான தண்ணீரை தான் குடித்ததே இல்லை என நினைத்துக் கொண்டான்.

அம்மா என்று மூச்சு வாங்க எழுந்து அப்பெண்களைப் பார்த்தான். அவர்கள் அப்போதும் எதுவும் பேசவில்லை. மெதுவாகக் கரையேறி மரத்தடியில் உட்கார்ந் தான். அதன் நிழல் களைப்புக்கு இதமாக இருந்தது. தலைக்கு மேல் அண்ணாந்து பார்த்தான். கிளைகளுக்கிடையே கட்டப்பட்ட பரண்களில் பெண்கள் உட்கார்ந்து கதைபேசிக் கொண்டி ருப்பது தெரிந்தது. இன்னொரு பக்கத்தில் விழுதுகளில் ஊஞ்சல் கட்டி ஆடிக் கொண்டிருந்தார்கள் வேறு சில பெண்கள்.

பார்வையைச் சட்டெனத் தாழ்த்தினான் இளன். அவனை ஏதோ கலவர உணர்வு அரிக்கத் தொடங்கியது. திடுமென ஒரு தேர் ஓடிவரும் சத்தம் கேட்டது. மெல்ல புழுதிமண்டலம் எழுந்து வானை நோக்கி சுருண்டு சுருண்டு எழுந்தது. குதிரைகளின் குளம்பொலிச் சத்தம் நெருங்க நெருங்க அவன் இதயத்துடிப்பு அதிகரித்தது. எழுந்து ஓட வேண்டும் போல இருந்தது. அதே கணத்தில் அசையவிடாமல் செய்தது ஓர் ஈர்ப்பு. புழுதி பறக்க ஓடிவந்த தேர் குளக்கரையில் நின்றதும் சுற்றிலும் ஆடிக் கொண்டிருந்த பெண்கள் "பார்வதி பார்வதி" என்று சொல்வது கேட்டது. தேரில் பார்வதியைச் சுற்றி உட்கார்ந்திருந்த பெண்கள் வேகமாக இறங்கி அவள் இறங்கத் துணைபுரிந்தனர். அப்போதுதான் தேரோட்டியைக் கவனித்தான் இளன். அவளும் பெண். மேல்மூச்சு வாங்கியபடி குதிரையின் கடிவா ளத்தைப் பிடித்தபடி நின்றிருந்தாள் அவள்.

அவள் குளத்தில் இறங்கினாள். ஒருமுறை குளத்தைச் சுற்றிப் பார்த்தாள். மறுபக்கம் யானையைக் குளிப்பாட்டியபடியிருந்த பெண்கள் எல்லாரும் எழுந்து கரைக்கு வந்தார்கள். அங்கு நின்றிருந்த எல்லாப் பெண்களும் தன்னையே பார்ப்பதாகத் தோன்றியது இளனுக்கு. அந்த எண்ணம் ஒருவிதப் பதற்றத்தைத் தந்தது.

சட்டென எழுந்து குதிரையை நடக்கவிட்டுத் தொடர்ந்தான். அவனுக்கு எல்லாமே குழப்பமாகவும் கனவு போலவும் தோன்றியது. யாரிடமாவது மனம் விட்டுப் பேச வேண்டும் போல இருந்தது. சுற்றிலும் எங்கு பார்த்தாலும் பெண்கள். சுறுசுறுப்பாக ஏதாவது வேலை செய்தபடி இருந்தார்கள். அல்லது தமக்குள் சந்தோஷமாகச் சிரித்தபடி களியாட்டத்தில் மூழ்கியிருந்தார்கள்.



சிறிது தொலைவில் மானோடு தன்னந்தனியாக ஒரு பெண் ஆடிக் கொண்டிருந்தாள். அவளை நெருங்கிக் கேட்கலாம் என்று தோன்றியது. அவள் முகம் ஏதோ ஒரு விதத்தில் அவனுக்கு நம்பிக்கையளிக்கும் விதமாக இருந்தது. உடனே அவளை நோக்கி நடந்தான். மெலிந்த உருவம். சுருள்முடி. வட்டமுகம். தளிர்நிறக் கன்னங்கள் செழுமையாக இருந்தன. சற்றே பெரிய கண்கள். அவளை நெருங்கி "வணக்கம்" என்றான். தன் குரல் வித்தியாசமாக ஒலித்த விதம் அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவள் சற்றே கலவரத்துக் குள்ளானவளாக நிமிர்ந்து "என்ன வேண்டும்?" என்பது போலப் பார்த்தாள்.

"இப்போது தேரில் போனது இந்த வனத்தின் அரசியா?" தடுமாறிக் கேட்டான் இளன்.

"ஆமாம்" என்றாள். அவள் கண்கள் அவனை ஊடுருவின. அந்த வெளிச்சம் அவனை மேலும் மேலும் பதற வைத்தபடி இருந்தது.

"பார்வதி என்றார்களே? அப்படியென்றால்...?"

"ருத்ரனின் மனைவி பார்வதி. இந்தக் குமாரவனத்துப் பேரரசி"

"இதன் பெயர் குமாரவனமா?"

"ஆமாம்"

"நான் பக்கத்து வனத்தைச் சேர்ந்தவன். திசைமாறி இங்கு வந்துவிட்டேன். இங்கிருந்து எப்படி வெளியே செல்வது என்று சொல்ல முடியுமா? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது"

"வெளியே செல்வதா, நல்ல கதை. இங்கிருப்பவர்கள் பெரும்பாலோர் திசைமாறிவந்து அகப்பட்டவர்கள்தாம். ஒருமுறை உள்ளே வந்தவர்கள் மறுமுறை வெளியே செல்வது அரிது..."

"ஐயையோ..." அலறினான் இளன். "நான் எப்படியாவது வெளியேற வேண்டுமே. எனக்கு உதவ மாட்டாயா நீ...?" அழாத குறையாக கெஞ்சினான்.

"உதவியா? உனக்கு உதவும் வழி எனக்குத் தெரிந்திருந்தால் நான் ஏன் இன்னும் இங்கிருக்கிறேன்" அவள் கசந்த சிரிப்புடன் சொன்னாள்.

இளனுக்கு மூச்சே நின்றதைப் போல இருந்தது. "அப்படியென்றால் என் கதி...?"

"இங்கிருக்கும் எல்லாருக்கும் என்ன கதியோ அதே கதிதான் உனக்கும். குமாரவனத்துப் பெண்களின் கூட்டத்தில் நீயும் ஒருத்தியாக இருந்து காலம் தள்ளலாம்" அவள் நிதானமாகவும் குறும்பாகவும் சொன்னாள். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"பெண்ணே, என்ன சொல்கிறாய் நீ...?" கிட்டத்தட்ட அலறினான் இளன்.

"உண்மையைத்தான் சொல்கிறேன். குமார வனத்துக்குள் நுழையும் யாரும் மறுகணமே பெண்ணாகி விடுவார்கள். குமாரவனத்தில் ருத்ரனைத் தவிர எல்லாரும் பெண்கள்தாம்"

"நீ சொல்வதெல்லாம் நிஜம்தானா? என்னால் நம்பவே முடியவில்லையே"

"உன்னிடம் நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்? இன்னும் நீ உன் உடம்பைப் பார்த்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஒருமுறை உன்னை நீயே பார்"

நெருப்பு தீண்டிய மாதிரி இருந்தது. அதிர்ச்சியில் அவன் உடல் தூக்கி வாரிப்போட்டது. சட்டெனத் தனது முகத்தைத் தொட்டுப் பார்த்தான். மழமழப்பான கன்னங்களும் மெலிந்த உதடுகளும் அவனுக்கே அருவருப்பைத் தந்தன: தனது முகமா இது என அதிர்ச்சி கொண்டான். "ஐயோ" என்று தலையில் கைவைத்தான். சட்டென தலைப்பாகை அவிழ இடுப்புவரை நீண்டு விழுந்தது கூந்தல். ஆடைக்குள் தட்தட்டென்று மார்புகள் அதிர்வதை உணர்ந்தான்.

பீதியில் அவன் அலறினான். எப்படி மீள்வது என்று புரியாமல் ஒருகணம் உறைந்து நின்றான். மறுகணமே "பெண்ணே, இதன் சாப விமோசனம் உனக்குத் தெரியாதா? தயவுசெய்து சொல். இனி எப்போதும் குமாரவனத்தின் பக்கம் தலைவைத்துக் கூடப் படுக்க மாட்டேன். தயவுசெய்து விமோசனம் சொல்" என்று ஆவேசத்துடன் கெஞ்சினான். அதற்குள் ஏழெட்டு பெண்கள் அங்கே கூடிவிட்டார்கள். "சத்தியமாகச் சொல்கிறேன். நான் குமாரவனத்துக்குள் வந்தது தெரியாமல் செய்த பிழை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இங்கிருந்து வெளியேற வழி காட்டுங்கள்" எல்லாரையும் பார்த்துக் கைகூப்பி வேண்டினான்.

"இரு இரு" என்றாள் ஒருத்தி. "இந்தக் குமாரவனத்துக்குள் எங்கள் சொந்த முடிவு என்பதே எதுவும் இல்லை. ருத்ரனே எல்லாக் கட்டளையும் பிறப்பிக்கிறவன். ருத்ரனே மூலம். ருத்ரனே வழி. ருத்ரனே வாழ்க்கை. ருத்ரன் கொடுத்த சாபத்தை ருத்ரனாலேயே மாற்றியமைக்க முடியாது என்பதை நீ அறிய மாட்டாயா?"

இளனுக்கு அங்கிருந்து எப்படித் தப்பிப்பது என்று புரியாமல் குழப்பமாக இருந்தது. குழப்பம் பெரும்பாரமாக தலையை அழுத்த சோர்ந்து உட்கார்ந்தான். அழுதான். தன் எதிர்காலம் ஒரு பெரும் கேள்விக் குறியாக மாறியதை நினைத்து அச்சத்துக்குள்ளானான். சட்டென ஒரு கணத்தில் தன் உடல் ஒரு பெண்ணுக்குரியதைப் போல குலுங்கியதை உணர்ந்து கூசினான்.

ருத்ரனே மூலம்.
ருத்ரனே வழி.
ருத்ரனே வாழ்க்கை.
ருத்ரன் கொடுத்த
சாபத்தை ருத்ரனாலேயே
மாற்றியமைக்க முடியாது
என்பதை நீ அறிய
மாட்டாயா?"

☐ சா. கந்தசாமி

# நிறவேற்றுமை

"உங்களுக்குப் பிடித்தமான ஒருவரைப் பற்றி அது பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை எழுத வேண்டும்'' என்று சமூகவியல்துறை ஆசிரியையான புனிதா வெங்கடேசன் தன் வகுப்பு மாணவர்களிடம் கூறினாள்.

"டீச்சர் நாளைக்குத்தானே"•

"இல்ல, இல்ல. இப்பொழுதே"

"அப்படியா, டீச்சர்"

''ஆமாம்'' என்றபடி மாணவர்களை ஒரு பார்வை பார்த்தாள். மாணவர்கள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"பெரிய தலைவர்களைப் பற்றி எல்லாம் எழுதனுமென்று ஒன்னும் இல்ல. வீட்டில இருக்கிற அம்மா, அத்தை, பாட்டி - இப்படி யாரைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம்"

"அத்தை, பாட்டி, அம்மா எல்லாம் பெரிய பெரிய தலைவர்களுக்கு மேல டீச்சர்" என்றான் வசந்தகுமார்.

புனிதா வெங்கடேசன் அவனைப் பார்த்து தலையசைத்து புன்னகைபூத்தாள். வகுப்பில் இறுக்கம் தளர்ந்தது.

"இப்படியொரு யோசனை வர்றதுதான் பெரிசு. இப்படித்தான் சுயமா சிந்தித்துப் பார்க்கனும்'' என்றவள் ஓரடி முன்னே எடுத்து வைத்து", அப்புறம் யாரும் கட்டுரையில் பெயர் எழுத வேண்டாம். நம்பர் போட்டுக்கிட்டு யார் எழுதியது என்று தெரியாமல் மார்க் போடப் போறேன்".

"பெயர் எழுதாவிட்டால் என்ன டீச்சர். கையெழுத்த வச்சி கண்டுபிடிக்க மாட்டீங்க" என்றான் மணிகண்டன்.

"ஓ! அப்படி ஒன்னு இருக்குது இல்ல. நான் மறந்துட்டேன்" என்று சிரித்த புனிதா வெங்கடேசன், "சரி, பத்தாம் வகுப்பு ரஞ்சிதம் டீச்சரை படித்து மார்க்குப் போட சொல்லுகிறேன்" என்றாள்.

"தமிழ் டீச்சர் தானே. வேணாம் டீச்சர். மார்க்கே போட மாட்டாங்க. அதற்கு நீங்க பரவாயில்ல டீச்சர்" என்று நான்கைந்து குரல்கள் வகுப்பின் பல பக்கங்களிலும் இருந்து வந்தன.

"உஷ்... இப்படி எல்லாம் பேசக்கூடாது" என்று மேசையைத் தட்டி வகுப்பை அமைதி படுத்தினாள்.

"கட்டுரை எழுத சொல்லுறதே, உங்களுக்கு மனசிலே யார் இருக்கிறார் என்பதையும், அதை எப்படி எழுத்தில் கோர்வையாகக் கொண்டு வருகிறீர்கள் என்பதைப் பார்ப்பதுந்தான் வேறு ஒன்னும் இல்லை".



மாணவர்கள் தலையசைத்தார்கள்.

"அதனால், பயப்படாமல் மனசுல என்ன வருதோ அதை நேரா எழுதினால் போதும்"

"டீச்சர், வீட்டில் இருக்கிற நாய், பூனை, பச்சைக்கிளி-பற்றி எல்லாம் எழுதலாமா டீச்சர்" என்று எழுந்தான் கார்வேந்தன்.

"இல்ல .... இல்ல். மனிதர்களைப் பற்றித்தான் எழுதனும். இதுதான் முதலிலேயே சொன்னேனே."

" எனக்குப் பூனையைப் பற்றி எழுதனுமென்னு ஆசை டீச்சர்"

" அடுத்த கட்டுரை பூனை, நாய் .. அப்புறம் பச்சைக்கிளி, மயில்" என்றாள்.

அவன் திருப்தியுற்றது மாதிரி உட்கார்ந்தான். மாணவர்கள் குனிந்து நோட்டுப்புத்தகத்தை எடுத்து மேசை மீது வைத்துக்கொண்டார்கள். சிலரின் மனத்தில் யாரைப் பற்றி எழுதுவது என்பது தீர்மானமாகிவிட்டது மாதிரியும், இன்னும் சிலரின் மனத்தில் முடிவு ஆகாதது மாதிரியும், முகத்திலேயே தெரிந்தது. அவள் தலையை அசைத்துக் கொண்டு கடிகாரத்தைப் பார்த்தாள். மாணவர்கள் தங்களுக் குள்ளே மெதுவாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

"நேரம் ஆகுது. இனிமேல் பேச்சு இல்லை. பதினைந்து நிமிடம். ஒன்பது முப்பதுக்குக் கட்டுரை மேசை மீது வந்துவிடனும். அதுதான் விதிமுறை. ஒன்பது முப்பதுக்கு அப்புறம் வர

கட்டுரைக்கு போட்டியில் இட மில்லை'' என்று மேசையை ஒரு தட்டுத் தட்டினாள்.

மாணவர்கள் அவசர அவசர மாகக் கட்டுரை எழுத ஆரம்பித் தார்கள். அவள் தலையை ஒரு முறை அப்படியும் இப்படியுமாக அசைத்துக் கொண்டாள். பத்தாம் வகுப்பு படிக்கும்போது தெய்வநாயகிதான் அவளுக்கு வகுப்பு ஆசிரியை. கண்டிப்பு நிறைந்த டீச்சர் என்று பெயர். எல்லா மாணவிகளும் பயந்து கொண்டிருந்தார்கள். பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர். அதுவும் இரண்டாவது திருமணம். அதோடு கழுத்தில் நகை, தலையில் பூ என்று ஒன்றும் வைத்துக் கொள்வதில்லை. வெள்ளிக்கிழமை, சுதந்திரதினம், குடியரசு, நவராத்திரி - என்று எதற்கும் பட்டுப்புடவை கட்டிக் கொண்டு வருவதில்லை. இது எல்லாவற்றையும்விட பேச்சிலும், செயலிலும் தனியாக இருந்தார். பாடம் நடத்துவதோடு பொது விஷயங்களைப்பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தார். அப்புறம் அதைப்பற்றி எழுத தூண்டிக் கொண்டு இருந்தார்.

''படித்தது, மனப்பாடம் பண்ணியது ஒன்றையும் கட்டுரையில் எழுதக்கூடாது. சுயமாக மனத்தில் தோன்றுகிறதையே எழுத வேண்டும்'' என்றார். அப்படி அவர் சொன்னதும், ஒருவர்க்கும் ஒன்றும் புரியவில்லை. என்ன எழுதுவது என்று ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டி ருந்தார்கள். பயம் முகத்தில் ஏறி இருந்தது.

தெய்வநாயகி டீச்சர், ''சொந்தமாக எழுதுவது முதல்ல ரொம்ப கஷ்டம் மாதிரி இருக்கும். ஆனால் இரண்டு வரி எழுதியதும், பக்கம் பக்கமாக எழுத வரும்'' என்றபடி சிரித்தார்.

''அது எப்படி டீச்சர்?'' என்று கேட்டாள் இவள்.

''அது அப்படித்தான். உனக்குப் பிடிச்சது யார் அப்பாவா? அம்மாவா?''

**''இதுதான் கட்டுரை. மனசில என்ன இருக்கிறதோ அதை நேரா எழுதனும். கொஞ்சம் ஜோடனை செய்து எழுதினால் கதை அவ்வளவுதான்'' என்றாள் டீச்சர்.**

''அத்தை டீச்சர்''

தெய்வநாயகி இவள் பக்கம் வந்து, ''அத்தையா என்று கேட்டார்''.

இவள் சந்தோஷமாகத் தலை யசைத்தாள்.

''அத்தையைப் பிடிக்கக் காரணம் இருக்குமே. அதைச் சொல்லு.

இவள் டீச்சரையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''மனசில என்ன தோணுதோ அதை தைரியமாகச் சொல்லு. அதுதான் வேணும்''.

'எனக்குப் பெயர் வைத்ததே எங்க அத்தைதான் டீச்சர். நான் பிறந்ததும் அப்பா ஜோசியம் பார்த்துட்டு நட்சத்திரபடி மகாலட்சுமின்னு பெயர் வைக்கலாமென்னு சொன்னாங் களாம். அம்மாவுக்கும், தாத்தா வுக்கும்கூட அதில் விருப்பமாம். ஆனால் அத்தை பெண்ணே புனிதம். அதுவும் நம்ப வீட்டில் முதன் முதலாகப் பிறந்து இருக்கிற பெண்ணுக்கு புனிதா என்று பெயர் இருக்கட்டும் என்று சொன்னாங் களாம். வீட்டில் பெயர் பற்றி பெரிய விவாதம். மிலிட்டரியில் இருந்து வந்த பெரியமாமா, புனிதா - என்கிற பெயர் நல்லாதானே இருக்கிறது. அதோடு புதுமையாகவும் இருக்கிறது. அதுவே இருக்கட்டும் என்றார் களாம். அதனால் அத்தை வைத்த புனிதா என்ற பெயர் எனக்கு நிலைத்து விட்டது' என்றாள்.

''மகாலட்சுமி'' என்று கடைசி பெஞ்சியில் இருந்து ஈஸ்வரி அழைத்தாள்.

புனிதா அவள் பக்கம் திரும்பிப் பார்த்து புன் சிரிப்பு சிரித்தாள்.

''உஷ்.... ஈஸ்வரி'' என்று தெய்வநாயகி அவளை அதட்டினார்.

இவள் திடீரென்று பயந்தது போல கைகளை மார்போடு கட்டிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

தெய்வநாயகி இவள் பக்கமாக வந்து, ''உம் அப்புறம் ... என்ன... சொல்லும்மா?'' என்றாள்.

''இல்ல டீச்சர்''

''நீ ரொம்ப நல்லா சொல்லுற.. தைரியமா சொல்லு. மாமா என்ன பண்ணுறாங்க''

''மாமா இல்ல டீச்சர். அத்தைக்குக் கல்யாணமான ரெண்டாவது வருஷமே மாமா ஸ்கூட்டர்

ஆக்ஸிடெண்டில இறந்துட்டாங்க. அதில் இருந்து அத்தை எங்களோட தான் இருக்கிறாங்க டீச்சர்'' சொல்லும் போதே குரல் அடைத்துக் கொண்டு வந்தது. அவசர அவசரமாக உட்கார்ந்து கைக்குட்டையை எடுத்துக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

“கேட்கவே ரொம்ப கஷ்டமாக இருக்கிறது புனிதா'' என்றபடி தெய்வநாயகி இவள் தோள் மீது கை வைத்தார்.

இவள் நிமிர்ந்து பார்த்தாள்.

“அத்தை மாதிரி தைரியமா இருக்கணும்; அழக்கூடாது" என்றார்.

“அத்தை ரொம்ப தைரியசாலி டீச்சர். நீங்க ஒரு வாட்டி அத்தைய பார்த்தீங்கன்னா தெரியும்''

“நான் அடுத்த வாரம் வரேம்மா''

“அப்படியா?'' வியப்போடு கேட்டாள்.

“வெள்ளிக்கிழமை உன்கூட வர்றேன்''

“வாங்க டீச்சர். அத்தை உங்கள பார்த்தால் ரொம்ப சந்தோஷப்படுவாங்க. நான் உங்கள பத்தி நிறைய சொல்லி இருக்கிறேன்''

“என்ன பத்தி சொல்லிக்க என்ன இருக்கு? அத்தைகிட்ட உன்ன மாதிரி நானும் கற்றுக் கொள்ள நிறைய விஷயம் இருக்கும்மா''

புனிதா டீச்சரையே பார்த்தபடி இருந்தாள்.

“வெள்ளிக்கிழமை. அத்தைகிட்ட ஒருவார்த்தை சொல்லி வச்சிடு. பள்ளிக்கூடம் விட்டதும், நேரா நம்ப போறோம்''

இவள் சந்தோஷத்தோடு தலையசைத்தாள்.

“இதுதான் கட்டுரை. மனசில என்ன இருக்கிறதோ அதை நேரா எழுதனும். கொஞ்சம் ஜோடனை செய்து எழுதினால் கதை. அவ்வளவுதான்'' என்றாள் டீச்சர்.

புனிதா தலைகுனிந்து கொண்டு எழுத ஆரம்பித்தாள். எழுத எழுத அத்தை புதிது புதிதாக தோன்றிக்கொண்டே இருந்தாள். மனத்தில் சந்தோஷம் பொங்கிக் கொண்டு வந்தது. தலையை அசைத்துக் கொண்டு எழுதியபடி இருந்தாள். மணி அடித்தது. மாணவிகள் எழுதி முடித்த கட்டுரையை டீச்சரிடம் கொண்டு போய்க் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவள் கடைசியாகக் கட்டுரையைக் கொடுத்துவிட்டு “இன்னும் முடிக்கல டீச்சர்'' என்றாள்.

“பரவாயில்லை. ஆனால் வாழ்க்கையில் எதுவும் முடியறது இல்ல. வசதி மாதிரி முடித்துக் கொள்கிறோம் அவ்வளவுதான்'' என்றபடி அவள் கட்டுரையை முன்னே வைத்து கட்டி எடுத்துக் கொண்டு சென்றார் தெய்வநாயகி.

கட்டுரைகளை தலைமையாசிரியை அமிர்தம் வின்செட் திருத்தினாள். புனிதாவிற்கு மூன்றாம் பரிசு கிடைத்தது. அவள் சந்தோஷப்பட்டாள். ஆனால் தெய்வநாயகிக்குக் கொஞ்சம் வருத்தம். அவள் கையைப் பிடித்துக் கொண்டு. “நீ எழுது. உனக்கு எழுத வருது'' என்றார்.

“அத்தையும் சொன்னாங்க டீச்சர்''

“அத்தை சொன்னா சரியா இருக்கும்''

அப்படியே இருந்ததாகவே அவளுக்குத் தோன்றியது. கல்லூரி படிப்பு முடிந்ததும், அம்மா கல்யாணம் செய்து வைக்க விரும்பினாள்.

‘சின்ன பொண்ணுதானே. இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும். அதுக்குள்ளே டீச்சர் ட்ரெயினிங் படிக்கட்டும்’ என்று அத்தை சொன்னதும், அம்மாவிற்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டு அத்தையோடு சண்டை... சண்டை என்றால், ஒரு வாரம் போல பேச்சுவார்த்தை இல்லை.

‘நம்ம வீட்டு பொண்ண வேலைக்கு அனுப்பற வீட்டிற்கு கொடுக்கறது இல்லை என்று அம்மா சொல்லிக் கொண்டே இருந்தாள், பெண் கேட்டு வந்த இரண்டொரு இடங்களும் அம்மாவிற்கே சரியாகப் படவில்லை,. எனவே டீச்சர் ட்ரெயினிங் சேர முடிந்தது. அதில் அத்தையைவிட இவளுக்குத்தான் சந்தோஷம்.

‘அத்தை, நீங்க ஜெயிச்சிட்டீங்க’ என்றாள். அத்தைப் பதறிப்போய், அவள் கையைப் பிடித்துக் கொண்டு.‘உஷ்... இப்படி எல்லாம் பேசக்கூடாது - அம்மா இஷ்டப்பட்டதால்தான் உன்னால ட்ரெயினிங்கில சேர முடிந்தது’ என்றார்.

“ இல்ல அத்தை''

“ அம்மாவைப் பத்தி உனக்கு தெரியல''

“ நிஜமாவா அத்தை''

அத்தை அவள் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு தோட்டத்திற்கு வந்தார் கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய மாமரம். மாமரத்தில் இருந்து குயில் கூவியது. மாமரத்தை நிமிர்ந்து பார்த்தாள். அத்தை இவளையே பார்த்தபடி இருந்தார்.

“ அத்தை குயில்'' என்றாள்.

இப்ப குயில் கூவிக் கொண்டிருந்த பூவரசு மரத்தடியில் தான் வெங்கடேசனை சந்தித்தாள். சாதாரண சிநேகிதம் மாதிரி தொடங்கியது. அவன் பேச்சு, நடவடிக்கையால் காதலாகிவிட்டது. ஒன்னற வருஷம் முழுவதும்

ஒருவர்க்கு ஒருவர் தெரியப்படுத்திக் கொள்ளவே இல்லை.

அப்புறம் ட்ரெயினிங் முடித்து பிரிந்து செல்லும் போது வெங்கடேசன் கைகளைப் பிடித்துக் கொண்டு சீக்கிரம் வீட்டில் பேசு என்றான். வீட்டில் பேசு என்றால் யாரிடம் பேசுவது? அத்தை யிடந்தான் பேசமுடியும். காது கொடுத்துக் கேட்கத் தெரியும். அம்மாவிடம் சொன்னால் பெரிதாகக் கத்துவாள். தரையில் விழுந்து புரண்டு இதற்குத்தான் நீ படிக்கவே போக வேண்டாம் என்றேன். என்று புலம்புவாள். அப்பாவிடம் பேசமுடியாது. அப்பாவிற்கு பெரும்பாலும் வீடு இருப்பதே தெரிவதில்லை. கட்சி வேலை தான். கட்சியில் பொதுக்குழு உறுப்பினர். தேர்தல் வருவதால் ஓடியாடி வேலைசெய்து கொண்டு இருந்தார்.

அப்பா பெங்களூரில் இருந்து ஒரு பெண்ணை அழைத்து வந்து திருவான்மீயூரில் குடி வைத்து இருப்பதாகவும் தொண்டர்களை அங்கேதான் சந்திப்பதாகவும் ஒரு பத்திரிகை எழுதியிருந்தது. அதைப் படித்துவிட்டு அம்மா ஒரு வாரம் வரையில் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

வீட்டில் பழைய அமைதி.சிரிப்பு. சேர்ந்து பேசுவது எல்லாம் நின்று போய்விட்டது. . அத்தை தன்னுடைய அறையில் ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். அம்மாவிற்கு ரத்த அழுத்தம் கூடிவிட்டது. மருத்துவமனைக்குப் போய்விட்டு வந்து கட்டிலில் படுத்துக் கிடந்தாள்.

அப்பா எப்பொழுதாவது வருவார். ஐந்து நிமிடம் இப்படியும் அப்படி நடப்பார். யாரிடமும் ஒன்றும் பேசுவதில்லை. அப்புறம் என்னவோ முணுமுணுத்துக் கொண்டு போனார்.

அத்தையும்,அம்மாவும் பழைய மாதிரி பேசிக் கொள்வதில்லை. அநேகமாக ஒருவரை இன்னொருவர் பார்ப்பது கூட குறைந்து கொண்டு வந்தது. ஒரே வீட்டில் இருந்தாலுங் கூட, ஏதோ கண்காணாத இடத்தில் இருப்பது மாதிரி இருந்தார்கள்.

கோவூரில் குலதெய்வமான வால்முனிக்கு பூசை போட்ட போதுதான் கொஞ்சநேரம்



அம்மாவும் அத்தையும் சேர்ந்து இருந்தார்கள். ஆனால் பழைய மாதிரி பேச்சு இல்லை.சேர்ந்து இருப்பது மாதிரி காட்டிக் கொண்டு ஒதுங்கி இருந்தார்கள். ஐந்தாண்டு களுக்கு முன்னால் வால்முனிக்கு பூசை போட்ட போது இருந்த கலகலப்பும் சந்தோஷமும் இல்லை. வாணவேடிக்கை, கூத்து, கரகம், மயிலாட்டம் எல்லாம் இருந்தது. ஆனால் என்னவோ குறை இருப்பது மாதிரியும் இருந்தது. இவள் அத்தைக்குப் பின்னால் நின்று கூத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு பிரஞ்சுக்காரி, கூத்தை வீடியோவில் படம் பிடித்தபடி இருந்தாள். இவள் கூத்தையும், கூத்தைப் படம் பிடிக்கும் பெண்ணையும் பார்த்தபடி இருந்தாள். திடீரென்று கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. கூட்டம் ஒரு பக்கமாக ஒதுங்க அப்பா சுமோ காரில் வந்து இறங்கினார். வால்முனிக்கு நேராக கைக்கட்டிக் கொண்டு ஐந்து நிமிஷம் போல கண்களை மூடிக்கொண்டு நின்றார். பூசாரி முனியாண்டித் தேவர் கற்பூர ஆராதனையை அப்பா முன்னே நீட்டினார். கையை கற்பூரத்தில் காட்டி கண்களில் ஒற்றிக் கொண்டு சுமோவில் ஏறினார். அப்பாவோடு பாதி கூட்டம் போய்விட்டது.

அப்புறம் அம்மா காரின் முன்னே ஏறி உட்கார்ந்தாள். அவளும் அத்தையும் பின்னால் உட்கார்ந்து கொண்டார்கள். வீட்டிற்கு வரும் வரையில் ஒரு பேச்சும் இல்லை. அது மட்டும் இல்லை. எப்பொழுதும் சர்வ சாதாரணமாக உள்கட்டைத் தாண்டி வெளியில் ஹாலுக்கு வந்து அப்பாவிடம் பேசும் அத்தை வெளியில் வருவதே இல்லை.

ஒரு நாள் தஞ்சாவூர் அத்தை, மலேசியாவில் இருக்கும் தன் பெரிய மகனுக்கு பெண் கேட்டு வந்து போனாள். பெரிய அத்தை, அத்தைக்கு அக்கா. மாமா வக்கீல். மகன் மலேசியாவில் இஞ்சினீயர் என்று சொன்னாள். அவனை இரண்டொரு தடவைகள் பார்த்து இருக்கிறாள். சிவப்பாக உயரமாக இருப்பான். அம்மாவும் பெரிய அத்தையும் பேசிக்கொண்டு இருந்தார்கள். அந்தப் பேச்சில் இரண்டு பேர்க்கும் சந்தோஷம் இருப்பது மாதிரி தெரிந்தது. அவள் பயந்து போய் அத்தை கையைப் பிடித்துக் கொண்டாள். நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தாள்.

“அப்பா வரட்டும். நான் பேசுறேன்” என்றாள் அத்தை. அவளுக்கு மனதில் நிம்மதி ஏற்பட்டது.

நான்கு நாட்கள் கழித்து அப்பா மைசூரில் இருந்து வந்தார். மத்தியான சாப்பாட்டிற்கு நீடூர் அப்துல் கரீம் வான்கோழி பிரியாணி போட்டு கொண்டு வந்தார். இறா வறுவல், சுறா புட்டு அப்பா சாப்பிட்டு விட்டு படுத்துத் தூங்கினார். இரண்டு மாதத்திற்கு அப்புறம் அப்பா வீட்டில் தங்குவது மாதிரி இருந்தது.

நான்கு மணிக்கு அப்பா தனியாக ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தார். அத்தை டீ போட்டுக் கொண்டு போய் கொடுத்தார். அப்பா நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு டீயை வாங்கி குடிக்க ஆரம்பித்தார். அத்தை ஊஞ்சல் கம்பியைப் பிடித்துக் கொண்டே, “தம்பி நம்ப புனிதா....” என்று ஆரம்பித்து, மெது மெதுவாக அவள் கல்யாணத்தைப் பற்றி சொன்னார்.

அப்பா திடீரென்று எழுந்தார். அத்தையை ஒரு முறை முறைத்தார்.

உனக்கு அறிவு இருக்கா... உம்.. இதுக்கெல்லாம் நீ தான் காரணம். உன் புருஷன் குடிச்சிட்டு ஸ்கூட்டர்ல போய் லாரியில மோதி செத்தானே, அன்னைக்கே உன்னை வீட்டைவிட்டு விரட்டி இருக்கனும்; ஐயோ பாவமென்று உனக்கு இடம் கொடுத்தேன் பார்... அதற்கு...

“அது வந்து தம்பி”

அப்பரவின் கோபம் தலைக்கு மேலே ஏறியது. கையில் இருந்த டீயை அத்தை மூஞ்சியில் வீசி அடித்தார். அத்தை திரும்பி அப்பாவை ஒரு பார்வை பார்த்தார்.

“இரண்டு பேரும் ஒழுங்கா இருங்க. இல்லாவிட்டால் வெட்டி துண்டா போட்டுடுவேன்” என்று கத்தினார்.

அத்தை முந்தானையை எடுத்து மூஞ்சியில் இருந்து வந்த டீயைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

அம்மா உள்ளே இருந்து வெளியில் வந்தார். துக்கம் தொண்டையை அடைக்க, “எல்லாம் உங்க தங்கச்சி கொடுக்கற தைரியந்தான். மானம் போகுது” என்றாள்.

“அடி செருப்பால” அப்பா ஊஞ்சலை எட்டி உதைத்தார். அம்மா பயந்துபோய் பின்னால் திரும்பினாள்.

“காதல் கீதல்ன்னு இந்த வீட்டில ஏதாவது நடந்துச்சி. அப்புறம் கொலைதான் விழும்” என்றபடி குனிந்து அப்பா இடது காலைப் பிடித்துக் கொண்டார். நொண்டியபடி வந்து காரில் ஏறினார். கார் திருவான்மியூருக்கு சென்றது. அப்பா கோபம் கொண்டால், நேராக தன் சிநேகிதி பெங்களூர் லட்சுமி வீட்டிற்குத்தான் செல்வார். கடற்கரையையொட்டி பெரிய வீடு. இரண்டு வருஷத்திற்கு முன்னால்தான் கட்டியது. ஒரு பேப்பரில் அப்பா படமும், சிநேகிதி லட்சுமி படமும் சேர்ந்து வந்திருந்தது. அந்த லட்சுமியைப் பார்க்க வேண்டும் போல ஓர் ஆசை திடீரென்று வந்தது. அத்தையிடம் சொல்லலாமா என்று நினைத்தாள். என்ன பைத்தியக்காரத்தனமான ஆசை என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

இரண்டு வாரங்கள் கழித்து பூஞ்சோலை தியாகராஜ குருக்கள் ஜோதிடம் பார்க்க வந்தார். அம்மா அப்பா சாதகம், அவள் சாதகம், தம்பி சாதகம் - எல்லாவற்றையும் முன்னே எடுத்து வைத்தாள். ஒவ்வொன்றையும் புரட்டிப் பார்த்துக் கொண்டே வந்த ஜோதிடர், அவள் சாதகத்தை உன்னிப்பாகப் பார்த்தார். அப்புறம் சந்தோஷமாகத் தலையசைத்துக் கொண்டு, “பொண்ணுக்கு கல்யாணம் வந்துவிட்டதே” என்றார்.

அம்மா திரும்பி அத்தையைப் பார்த்தார். அத்தை தியாகராஜ குருக்களையே பார்த்தபடி இருந்தார். அம்மா தலையசைத்தாள்.

“பொண்ணுக்கு கல்யாணராசி. மூனுமாதத்திற்குள் கல்யாணம். தவற விட்டால், நாலு வருஷம் போகனும்.”

“மாப்பிள்ளை”

அவர் மறுபடியும் சாதகத்தைப் பார்த்தார். சிலேட்டில் கணக்குப் போட்டார். மேல் துண்டை நன்றாக இழுத்துவிட்டுக் கொண்டு அம்மாவைப் பார்த்து, “வெளிநாட்டு மாப்பிள்ளை. அமிர்த யோகம்” என்றார்.

அத்தை எழுந்து உள்ளே சென்றார். ஒரே வீட்டில் இருந்தாலும் அம்மாவும் அத்தையும் தனித்தனியாக இருந்தார்கள். நானும் அத்தையும் பேசுவது கூட அம்மாவிற்குப் பிடிக்கவில்லை. அதனால் அத்தை தனியாக ஒதுங்கிக் கொண்டு வந்தார். அப்பா வீட்டிற்கு வருவது குறைந்தது. டிரைவர் வந்து அப்பா பெட்டியை ஒருநாள் எடுத்துக்கொண்டு போனான். அப்பொழுது அம்மா வீட்டில் இல்லை. நாகாத்தம்மன் கோயிலுக்குப் போய் இருந்தார். திரும்பி வந்ததும் தம்பிதான் சொன்னான். அம்மா சுவரில் முட்டிக் கொண்டு அழுதாள்.

அவள் தன் அறையில் உட்கார்ந்து பழைய டைரியில் தன் வீட்டைப்பற்றி எழுத ஆரம்பித்தாள். எழுத எழுத ஒவ்வொரு சம்பவமும், ஒவ்வொரு சொல்லும் இன்னொரு விதமாக இருப்பது மாதிரி இருந்தது. எழுத முடியவில்லை. யோசிக்க ஆரம்பித்தாள். அம்மா அத்தையோடு சிநேகிதமாக

இருந்தது எல்லாம் பொய்யா? அப்பா அத்தையை இத்தனை நாளும் வைத்து பராமரித்தது எல்லாம் என்ன? இத்தனை நாட்களாக நடந்தது எல்லாம் நாடகமா? இப்பொழுது நடப்பது நாடகமா? அத்தை இந்த வீட்டை விட்டு எங்கே போக முடியும்? அவர்க்கு இந்த உலகத்தில் யார் இருக்கிறார்கள்? ஐம்பத்தொரு வயது முடிந்து விட்டது. கல்யாணமாகி மூன்று ஆண்டுகள் கணவர் வீட்டில் இருந்தார். ஐம்பத்தொன்றில் மூன்று போனால் - நாற்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த வீடு அன்னிய வீடாகப் போய்விடுமா? அவளுக்கு அப்புறம் எழுத வேண்டிய மாதிரி இல்லை. யோசிக் காமல் இருப்பதுதான் நல்லது மாதிரி இருந்தது. ஆனால் மனசு கேட்பதில்லை. அது யோசித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு என்ன செய்வது?

புனிதா ஒரு நாள், அத்தையிடம் சொல்லிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியில் வந்தாள். கடம்பூர் ரிஜிஸ்தர் அலுவலகத்தில் பதிவுத் திருமணம் செய்து கொண்டு, வெங்கடேசன் கையைப் பிடித்துக் கொண்டு விசாகப்பட்டினம் புறப்பட்டு சென்றாள். அவள் சென்ற எட்டு மணி நேரங்கழித்துத்தான், அம்மாவிற்கு விஷயந் தெரிந்தது. அதை அப்பாவிற்குத் தெரியப்படுத்த ஒரு மணி நேரம் பிடித்தது. அவர் பெங்களூரில் இருந்தார். கேள்விப்பட்டதும், ஒரு கணம் ஆடிப்போய் விட்டார். ஒன்றுமே பேசவில்லை. டெலிபோனை கீழே வைக்கும் சப்தம் மட்டும் கேட்டது. அம்மாவிற்குத் தன் குடும்பத்தில் இடி விழுந்துவிட்டது மாதிரி இருந்தது. எல்லோருடைய கோபமும் அத்தை மீது திரும்பியது. அத்தைதான் இதற்கெல்லாம் மூல காரணம் என்று நினைத்தார்கள்.

அப்பா பெங்களூரில் இருந்து வந்ததும் அத்தையை கூப்பிட்டு விசாரித்து இருக்கிறார். அத்தை பதில் ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக நின்று கொண்டு இருக்கவும் அப்பாவிற்குக் கோபம் வந்துவிட்டது. பளீர் என்று கன்னத்தில் அறைவிட்டு இருக்கிறார். அத்தை சுருண்டு கீழே விழுந்தார்.

**நாற்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த வீடு அன்னிய வீடாகப் போய்விடுமா? அவளுக்கு அப்புறம் எழுத வேண்டிய மாதிரி இல்லை. யோசிக்காமல் இருப்பதுதான் நல்லது மாதிரி இருந்தது. ஆனால் மனசு கேட்பதில்லை. அது யோசித்துக் கொண்டே இருக்கிறது. அதற்கு என்ன செய்வது?**

மண்டையில் நல்ல அடி. அடுத்த நாள் வரையில் பேச்சு வரவில்லை. பாத்ரூமில் தவறி விழுந்துவிட்டார் என்று டாக்டரிடம் கொண்டு போய் காட்டினார்கள். டாக்டர் மருத்துவமனையில் சேர்க்கச் சொன்னார். பதினைந்தாவது நாள் அத்தை இறந்து போனார். தம்பிதான் தகவல் அனுப்பினான். அது என்னவோ கொலை மாதிரிதான் இருந்தது. அப்பா அடியில் அத்தை செய்து இருப்பார்களா? இல்லை, ஏதாவது விஷம் சாப்பிட்டு செத்துப் போய் இருப்பார்களா? ஆனால் அப்பா, அத்தையை மன்னிக்கவே இல்லை.

அத்தை செத்த ஒரு மாதம் கழித்து, வீட்டில் மாட்டியிருந்த போட்டோவை எடுத்து அம்மா மூஞ்சியில் அடித்து இருக்கிறார். அம்மாவிற்குக் கோபம் வந்து விட்டது.

“உங்க தங்கச்சியை அடிச்சி கொன்னது மாதிரி, என்னையும் அடிச்சிக் கொன்னுட்டு புது பொண்டாட்டியோட ஜாலியா இருங்க அதுக்குத்தானே இது எல்லாம் -” என்று கத்தி இருக்கிறாள்.

அப்பா அம்மாவை நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியில் சென்றார்.

கடிகாரத்தில் மணி அடித்தது. புனிதா தலைநிமிர்ந்து வகுப்பைப் பார்த்தாள். ஒவ்வொரு மாணவராக எழுதிய கட்டுரையைக் கொண்டு வந்து மேசை மீது வைத்தார்கள்.

கடைசியாக வந்த வசந்தகுமார் கொஞ்சம் தயங்கியபடியே கட்டுரையை நீட்டினான்.

“என்ன?”

“இன்னும் முடிக்கல டீச்சர்”

“உலகத்தில் எதுவும் முடியறது இல்லை” என்றபடி அவனிடமிருந்து கட்டுரையை வாங்கிப் பார்த்தாள். என் அத்தை என்று தொடங்கி இருந்தான். ஒரு முறை தலையை அசைத்துக் கொண்டு அவசர அவசரமாக மற்ற கட்டுரைகளோடு வைத்துக்கட்டி எடுத்துக் கொண்டு சென்றாள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் 1 | மாதச் சந்தா ரூ. 2 | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. 3 | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. 4 | கூடுதல் தொகை (3+4) ரூ. 5 | அரசு தள்ளுபடி* ரூ. 6 | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. 7 |
|---|---|---|---|---|---|---|
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்ஃபிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

'பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

தமிழரசு

பதிவு எண். M. 8676

Licence No. G/TN/CPMG/190,WPP-130

